# நட்சத்திர சிந்தாமணி

## பாகம் II

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

சரசுவதி மகால் நூலக வெளியீட்டு எண். 466

# நட்சத்திர சிந்தாமணி

நட்சத்திரங்களைப் பற்றி அனைத்துச்

செய்திகளும் அடங்கிய ஒரு கலைக்களஞ்சியம்

## இரண்டாம் பாகம்

[உத்திரம் முதல் பூராடம் முடிய]

விளக்கி உரை வளம் தந்து பதிப்பித்தவர்

பன்மொழிப் புலவர் ஜோதிஷ பானு பேராசிரியர்

Dr. **புலிப்பாணி சுந்தரவரதாச்சாரியார்**

*சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்*

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூல் நிலையம்**

2007

விலை ரூ. 150 – 00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : நட்சத்திர சிந்தாமணி - பாகம் II |
| பதிப்பாசிரியர் | : புலிப்பாணி சுந்தரவரதாச்சாரியார் |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண். | : 466 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : நவம்பர், 2007 |
| தாள் | : 14. 2 கி. கி. சேஷசாயி |
| நூல் அளவு | : 21 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 372 |
| படிகள் | : 1000 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : சரசுவதி மகால் நூலக அச்சகம் |
| புத்தகக்கட்டு | : ராப்பர் |
| பொருள் | : சோதிடம் |
| விலை | : 150 - 00 |

# வெளியீட்டாளர் முகவுரை

பன்மொழிச் சுவடிகளைத் தன்னகத்தே கொண்டு தனிச் சிறப்புடன் விளங்கும் தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம், எண்ணற்ற இலக்கிய நூல்களையும், இலக்கண நூல்களையும், சோதிட நூல்களையும், மருத்துவ நூல்களையும், புராண நூல்களையும் பதிப்பித்து வெளியிடும் பணியை இடையறாது ஆற்றிவருகிறது.

நமது முன்னோர்கள் வானியலில் ஏற்படும் கிரகங்களின் அமைப்புகளையும் அவைகளில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு மனிதவர்க்கத்தின் முக்காலங்களைப் பற்றியும் அறிந்து கூறும் ஆற்றலைப் பெற்றிருந்தனர். மனித சமுதாயத்தின் ஏற்ற தாழ்வுகளை அவர்களது ஜாதகங்களைக் கொண்டும் அளவிட்டுக் கூறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருப்பது சோதிட சாஸ்திரமாகும்.

சிலம்புக்கும், மணிமேகலைக்கும் பின் வந்த இலக்கியங்களிலும், மலைபடுகடாம், அகநானூறு, புறநானூறு போன்ற பதினெண்மேல்கணக்கு, கீழ்க்கணக்கு ஆகிய சங்க இலக்கியம், தனிப்பாடல் முதலியவற்றிலும் 27 நட்சத்திரங்களின் பெயர்களும், பலன் முதலியவையும் பல்கி வருவதைக் காணலாம். அவ்வகையில் நட்சத்திர சிந்தாமணி முதல் பாகம் அசுவினி முதல் பூரம் நட்சத்திரம் வரையிலான பகுதி முன்பே வெளியிடப்பட்டுள்ளது.தற்சமயம் உத்திரம் முதல் பூராடம் வரையிலான நட்சத்திரங்கள் அடங்கிய இரண்டாம் பாகம் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்படுகிறது.

மரண கண்டிகை, நட்சத்திர மாலை, நட்சத்திர பாதபலன், நட்சத்திர நிகண்டு போன்றவைகளில் இருந்து அரிய கருத்துக்களை ஒருங்கே தொகுத்து **நட்சத்திர சிந்தாமணி பாகம் 2** என்னும் பெயரில் இந்நூலை நமது நூலக சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் ஜோதிஷபானு முனைவர் புலிப்பாணி சுந்தரவரதாச்சாரியார் அவர்கள் மிகவும் சிறப்பாக பதிப்பித்துள்ளார்கள். சோதிட ஆர்வலர்களின் பயன்கருதி பிறமொழி நூல்களில் இருந்தும் சில குறிப்புக்களை எடுத்தாண்டுள்ளார் இப்பதிப்பாசிரியர் என்பது சிறப்பானதொரு அம்சமாகும். அன்னாரின் முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

இத்தகைய அரிய நூல்களை நன்முறையில் வெளிக்கொணர நிதியுதவி நல்கும் மைய அரசுக்கு என் நன்றி. இந்நூலை வெளிக்கொணர முயற்சிகள் மேற்கொண்ட சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் பொறுப்பு வகிக்கும் திரு. சாமி. சிவஞானம், எம். ஏ., அவர்களுக்கும், நூலகக் கணினிப் பிரிவினருக்கும் மற்றும் இந்நூல் நன்முறையில் வெளிவர துணைநின்ற அனைவருக்கும் என் நன்றி.

**சா. விஜயராஜ் குமார்**, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
*5-11-2007*

❋❋❋

# நட்சத்திர சிந்தாமணி

## உத்திரம் முதல் பூராடம் முடிய

### *ஆசிரியர் முகவுரை*

எல்லாம் வல்ல என் தாய்க்கடவுளின் அருளால் நட்சத்திர சிந்தாமணி முதல் பாகம் பூரம் நட்சத்திரம் வரையிலான பகுதி வாசகர்கள் கைகளில் தவழ்ந்துள்ளது.

பல மூலங்களிலிருந்து நூற்றுக்கணக்கான விஷயங்களை இவற்றில் தொகுத்துள்ளது வெளிப்படை. இது ஒரு நட்சத்திரங்களைப் பற்றிய கலைக் களஞ்சியம் என்றே சொல்லலாம்.

இந்த இரண்டாம் பகுதியில் உத்திரம் முதல் பூராடம் வரையிலான நட்சத்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து ஜோதிஷ ரத்னாகரம், நாரதீயம் ஸ்ரீ தத்துவநிதி, விதி விலக்குகளுடனும் நட்சத்திர சிந்தாமணி போன்ற நூல்களிலிருந்து 27 நட்சத்திரங்களைப் பற்றிய அனைத்து செய்திகளும் திரட்டித் தந்துள்ளேன்.

இதை அடுத்து 27 நட்சத்திரங்களைப் பற்றிய பொது செய்திகள் பலவற்றை ஏறக்குறைய 130 விஷயங்களை திரட்டிக் கொடுத்துள்ளேன்.

இவற்றில் மூல நட்சத்திரம், ஆயில்யம், கேட்டை போன்ற பெண்களுக்கு ஆகாது என்று சொல்லப்பட்ட நட்சத்திரங்களைப் பற்றிய செய்திகளையும் விதி விலக்குகளையும் அமிருத கடிகை, விஷகடிகை நவக்கிரக நட்சத்திர லப்தை லத்தாபலன் (உதைப்பு) இன்னும் இது போன்ற பல விஷயங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இதையும் தொடர்ந்து 27 நட்சத்திரங்களுக்கும் உரிய தானம் காரகங்கள் முதலியவையும் தனியாகக் கொடுத்துள்ளேன். இன்னும் எவ்வளவோ விஷயங்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இவையெல்லாம் சுவடிகளில் இல்லாவிட்டாலும் பயன் கருதி என் சொந்த குறிப்பேடுகள், பிற மொழி நூல்கள் முதலியவற்றில் இருந்து தொகுத்துக் கொடுத்துள்ளேன்.

ஏறக்குறைய 1995 முதல் இன்றைய வரை 6, 7 ஆண்டுகள் இதற்காக உழைத்து சிறிது சிறிதாகச் சேர்த்து எழுதவேண்டி வந்தது.

இவ்வளவுக்கும் அவ்வப்பொழுது எனக்கு ஊக்கமளித்து வந்து இன்றளவும் என் உழுவலன்பராகத் திகழும் மஹாலின் முன்னாள் வெளியீட்டுத் துறைத் தலைவர் திரு இ. பஞ்சநாதன், எம், ஏ., எம். லிட் அவர்களுக்கு நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன்.

மேலும் மஹாலின் தற்போதைய நிருவாக அலுவலர் பணியில் உள்ள திருமதி ராமதிலகம் அவர்கள் இப்பதிப்பு செம்மையாக நடக்க அவ்வப்பொழுது இதன் முன்னேற்றத்தைப் பற்றி உசாவி ஆவன செய்து வந்தார். அவருக்கு என் நன்றி உரித்து. பதிப்புலகில், தமிழிலும் மட்டுமல்லாமல் வேறு எம்மொழியிலும் ஏறக்குறைய 1200 பக்கங்கள் வருமளவுக்கு நட்சத்திரங்களைப் பற்றி ஒரு பெரு நூல் இதுவரை எழுதப்படவில்லை என்பது தெளிவு.

இப்படி ஒரு முயற்சி வெற்றிபெறச் செய்த என் தாய்க்கடவுளின் திருவருளை எண்ணி மிகவும் மகிழ்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக இவையெல்லாம் எனக்குக் கிட்டும்படி செய்த என் ஞான ஆசான் சென்னை வித்துவான் குப்புசாம் ஆச்சாரி அவர்களை நன்றியுடன் வணங்கி அவருடைய திருவடிகளுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்.

குற்றங்கள் நீக்கி குறையற்று வாசித்தல்
கற்றறிந்த வல்லோர் கடன்

அன்பன்
ஜோதிஷ சூடாமணி
மந்திரமூர்த்தி வாஸ்து சாஸ்திர மார்த்தாண்ட
பேராசிரியர் **Dr. புலிப்பாணி சுந்தரவரதாச்சாரியார்**
Flat C, 32, ஹிந்தி பிரச்சார சபை தெரு
தி. நகர், சென்னை - 600017
தொ. பே. 24347702
10 - 2 - 2004

## பொருளடக்கம்

**அத்தியாயம் 16 உத்திர நட்சத்திரம்** பக்கம் 1

உத்திரம் நட்சத்திரப் பெயர்கள்

1. பொதுப்பலன்
2. பிற செய்திகள்
3. பிறந்தவர் பலன்கள்
4. பிறர் மதப்படி பிறந்தவர் பலன்கள்
5. பிற நூல்களில் உள்ள செய்திகள்
6. சாந்தி
7. இதர சாதனங்கள்
8. உத்திர நட்சத்திரத்தில் கோள்கள் நின்ற பலன்
    1. சூரியன் நின்ற பலன்
    2. சந்திரன் நின்ற பலன்
    3. செவ்வாய் நின்ற பலன்
    4. புதன் நின்ற பலன்
    5. குரு நின்ற பலன்
    6. சுக்கிரன் நின்ற பலன்
    7. சனி நின்ற பலன்
    8. ராகு நின்ற பலன்
9. உத்திரத்தில் நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்
    1. உத்திரத்தில் நின்ற சூரியனை
        1. சந்திரன் பார்த்த பலன்
        2. செவ்வாய் பார்த்த பலன்
        3. புதன் பார்த்த பலன்
        4. குரு பார்த்த பலன்
        5. சுக்கிரன் பார்த்த பலன்
        6. சனி பார்த்த பலன்

2. உத்திரத்தில் நின்ற சந்திரனை

1. சூரியன் பார்த்த பலன்
2. செவ்வாய் பார்த்த பலன்
3. புதன் பார்த்த பலன்
4. குரு பார்த்த பலன்
5. சுக்கிரன் பார்த்த பலன்
6. சனி பார்த்த பலன்

3. உத்திரத்தில் நின்ற செவ்வாயை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் பார்த்த பலன்
3. புதன் பார்த்த பலன்
4. குரு பார்த்த பலன்
5. சுக்கிரன் பார்த்த பலன்
6. சனி பார்த்த பலன்

4. உத்திரத்தில் நின்ற புதனை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் பார்த்த பலன்
3. செவ்வாய் பார்த்த பலன்
4. குரு பார்த்த பலன்
5. சுக்கிரன் பார்த்த பலன்
6. சனி பார்த்த பலன்

5. உத்திரத்தில் நின்ற குருவை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் பார்த்த பலன்
3. செவ்வாய் பார்த்த பலன்
4. புதன் பார்த்த பலன்
5. சுக்கிரன் பார்த்த பலன்
6. சனி பார்த்த பலன்

6. உத்திரத்தில் நின்ற சுக்கிரனை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் பார்த்த பலன்
3. செவ்வாய் பார்த்த பலன்

4. புதன் பார்த்த பலன்

5. குரு பார்த்த பலன்

6. சனி பார்த்த பலன்

7. உத்திரத்தில் நின்ற சனியை

1. சூரியன் பார்த்த பலன்

2. சந்திரன் பார்த்த பலன்

3. செவ்வாய் பார்த்த பலன்

4. புதன் பார்த்த பலன்

5. குரு பார்த்த பலன்

6. சுக்கிரன் பார்த்த பலன்

10. உத்திரம் நட்சத்திர விம் சோத்திரி தசைகள்

11. உத்திரம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன.

12. உத்திரம் நட்சத்திர பாத பலன்

உத்திர நட்சத்திர முதல் பாதபலன்

13. உத்திரம் நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்

2. சந்திரன் நின்ற பலன்

3. செவ்வாய் நின்ற பலன்

4. புதன் நின்ற பலன்

5. குரு நின்ற பலன்

6. சுக்கிரன் நின்ற பலன்

7. சனி நின்ற பலன்

8. ராகு நின்ற பலன்

9. கேது நின்ற பலன்

14. உத்திரம் நட்சத்திர முதல் பாதத்தின் கால சக்கர தசை

உத்திரம் நட்சத்திர 2ம் பாத பலன்

உத்திரம் நட்சத்திர 2ம் பாதத்தில்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

15. உத்திரம் நட்சத்திர 2ஆம் பாதத்தின் கால சக்கிர தசை முதலியவை

16. உத்திரம் நட்சத்திர 3ஆம் பாத பலன்

17. உத்திரம் நட்சத்திர 3ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

18. உத்திரம் நட்சத்திர 3ஆம் பாதத்தில் கால சக்கிர தசை

19. உத்திரம் நட்சத்திர 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்

20. உத்திரம் நட்சத்திர 4ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

உத்திரம் 1ஆம் பாத கர்ம விபாக பலன்
உத்திரம் 2ஆம் பாத கர்ம விபாக பலன்
உத்தரம் 3ஆம் பாத கர்ம விபாக பலன்
உத்திரம் 4ஆம் பாத கர்ம விபாக பலன்

**அத்தியாயம் 17 கன்னி ராசி பொதுக் குணங்கள்** **32**

**அத்தியாயம் 18 அஸ்தம் நட்சத்திரம்** **36**

அஸ்த நட்சத்திரப் பெயர்கள்

1. பொதுப்பலன்
2. பிற செய்திகள்
3. பிறந்தவர்கள் பலன்கள்
4. பிறர் மதப்படி பிறந்தவர் பலன்கள்
5. பிற நூல்களின் உள்ள செய்திகள்
6. சாந்தி
7. இதர சாதரங்கள்
8. அஸ்தம் நட்சத்திரத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,

4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ..
8. ராகு ,,

9. அஸ்தத்தில் நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்

1. அஸ்தத்தில் நின்ற சூரியனை
   1. சந்திரன் பார்த்த பலன்
   2. செவ்வாய் ,,
   3. புதன் ,,
   4. குரு ,,
   5. சுக்கிரன் ,,
   6. சனி ,,
2. அஸ்தத்தில் நின்ற சந்திரனை
   1. சூரியன் பார்த்த பலன்
   2. செவ்வாய் ,,
   3. புதன் ,,
   4. குரு ,,
   5. சுக்கிரன் ,,
   6. சனி ,,
3. அஸ்தத்தில் நின்ற செவ்வாயை
   1. சூரியன் பார்த்த பலன்
   2. சந்திரன் ,,
   3. புதன் ,,
   4. குரு ,,
   5. சுக்கிரன் ,,
   6. சனி ,,
4. அஸ்தத்தில் நின்ற புதனை
   1. சூரியன் பார்த்த பலன்
   2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,
4. குரு ,,
5. சுக்கிரன் ,,
6. சனி ,,

5. அஸ்தத்தில் நின்ற குருவை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. சுக்கிரன் ,,
6. சனி ,,

6. அஸ்தத்தில் நின்ற சுக்கிரனை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சனி ,,

7. அஸ்தத்தில் நின்ற சனியை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,

10. அஸ்தம் நட்சத்திர விம் சோத்திரி தசைகள்

11. அஸ்தம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன

12. அஸ்தம் நட்சத்திர பாத பலன் நட்சத்திர முதல் பாத பலன்

13. அஸ்தம் நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3, செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

14. அஸ்தம் நட்சத்திர 2ஆம் பாதத்தின் கால சக்கிர தசை

அஸ்த நட்சத்திரம் 2ம் பாதத்தில்

அஸ்த நட்சத்திரம் 2ஆம் பாதத்தில்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6 சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

15. அஸ்தம் நட்சத்திர 2ஆம் பாதத்தின் கால சக்கர தசை முதலியவை

16. அஸ்தம் நட்சத்திர 3ஆம் பாத பலன்

17. அஸ்தம் நட்சத்திர 3ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,

6 சுக்கிரன் நின்ற பலன்

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

18. அஸ்தம் நட்சத்திர 3 ஆம் பாதத்தின் கால சக்கர தசை

19. அஸ்தம் நட்சத்திர 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்

20. அஸ்தம் நட்சத்திர 4ஆம் பாதத்தில் கோள்கள் நின் பலன்

1. சூரியன் நின்ற பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

அஸ்தம் 1ஆம் பாத கர்ம விபாக பலன்

அஸ்தம் 2ஆம் பாத கர்ம விபாக பலன்

அஸ்தம் 3ஆம் பாத கர்ம விபாக பலன்

அஸ்தம் 4ஆம் பாத கர்ம விபாக பலன்

**அத்தியாயம் 19 சித்திரை நட்சத்திரம் 73**

சித்திரை நட்சத்திர பெயர்கள்

1. பொதுப்பலன்

2. பிற செய்திகள்

3. பிறந்தவர் பலன்கள்

4. பிறர் மதப்படி பிறந்தவர்கள் பலன்கள்

5. பிற நூல்களில் உள்ள செய்திகள்

6. சாந்தி

7. இதர சாதரங்கள்

8. சித்திரை நட்சத்திரத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6 சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,

9. சித்திரையில் நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்

1. சித்திரையில் நின்ற சூரியனை

1. சந்திரன் பார்த்த பலன்
2. செவ்வாய் ,,
3. புதன் ,,
4. குரு ,,
5. சுக்கிரன் ,,
6. சனி ,,

2. சித்திரையில் நின்ற சந்திரனை

1. சூரியன் பார்த்த பலன்
2. செவ்வாய் ,,
3. புதன் ,,
4. குரு ,,
5. சுக்கிரன் ,,
6. சனி ,,

3. சித்திரையில் நின்ற செவ்வாயை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. புதன் | ,, |
| 4. குரு | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

4. சித்திரையில் நின்ற புதனை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. செவ்வாய் | ,, |
| 4. குரு | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

5. சித்திரையில் நின்ற குருவை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. செவ்வாய் | ,, |
| 4. புதன் | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

6. சித்திரையில் நின்ற சுக்கிரனை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. செவ்வாய் | ,, |
| 4. புதன் | ,, |
| 5. குரு | ,, |
| 6. சனி | ,, |

7. சித்திரையில் நின்ற சனியை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,

10. சித்திரை நட்சத்திர விம்சோத்திரி தசைகள்

11. சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன

12. சித்திரை நட்சத்திர பாத பலன் நட்சத்திர முதல் பாத பலன்

13. சித்திரை நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

14. சித்திரை நட்சத்திர முதல் பாதத்தின் கால சக்கர தசை

சித்திரை நட்சத்திர 2 ஆம் பாத பலன்

சித்திரை நட்சத்திரத்தில் 2ஆம் பாதத்தில்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

15. சித்திரை நட்சத்திர 2ஆம் பாதத்தின் கால சக்கிர தசை முதலியவை

16. சித்திரை நட்சத்திர 3ஆம் பாத பலன்

17. சித்திரை நட்சத்திர 3ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

18. சித்திரை நட்சத்திர 3ஆம் பாதத்தின் கால சக்கர தசை

19. சித்திரை நட்சத்திர 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்

20. சித்திரை நட்சத்திர 4ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

சித்திரை 1ஆம் பாத கர்ம விபாக பலன்

சித்திரை 2ஆம் பாத கர்ம விபாக பலன்

சித்திரை 3ஆம் பாத கர்ம விபாக பலன்

சித்திரை 4ஆம் பாத கர்ம விபாக பலன்

**அத்தியாயம் 20 துலா ராசி (லக்னம்) 102**

**அத்தியாயம் 21 சுவாதி நட்சத்திரம் 107**

சுவாதி நட்சத்திர பெயர்கள்

1. பொதுப்பலன்

2. பிற செய்திகள்

3. பிறந்தவர் பலன்கள்

4. பிறந்தவர் பிற மதப்படி

5. பிற நூல்களில் உள்ள செய்திகள்

6. சாந்தி

7. இதர சாதரங்கள்

8. சுவாதி நட்சத்திரத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. சுவாதியில் நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்

1. சுவாதியில் நின்ற சூரியனை

| | |
|---|---|
| 1. சந்திரன் | பார்த்த பலன் |
| 2. செவ்வாய் | ,, |
| 3. புதன் | ,, |
| 4. குரு | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

2. சித்திரையில் நின்ற சந்திரனை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. செவ்வாய் | ,, |
| 3. புதன் | ,, |
| 4. குரு | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

3. சுவாதியில் நின்ற செவ்வாயை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. புதன் | ,, |
| 4. குரு | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

4. சுவாதியில் நின்ற புதனை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. செவ்வாய் | ,, |
| 4. குரு | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

5. சுவாதியில் நின்ற குருவை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. செவ்வாய் | ,, |
| 4. புதன் | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

6. சுவாதியில் நின்ற சுக்கிரனை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. செவ்வாய் | ,, |
| 4. புதன் | ,, |
| 5. குரு | ,, |
| 6. சனி | ,, |

7. சுவாதியில் நின்ற சனியை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. செவ்வாய் | ,, |
| 4. புதன் | ,, |
| 5. குரு | ,, |
| 6. சுக்கிரன் | ,, |

10. சுவாதி நட்சத்திர விம்சோத்திரி தசைகள்

11. சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன

12. சுவாதி நட்சத்திர பாத பலன்

நட்சத்திர முதல் பாத பலன்

13. சுவாதி நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

14. சுவாதி நட்சத்திரம் முதல் பாதத்தின் கால சக்கர தசை

சுவாதி நட்சத்திரம் 2ஆம் பாத பலன்

சுவாதி நட்சத்திரம் 2ஆம் பாதத்தில்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

15. சுவாதி நட்சத்திரம் 2ஆம் பாதத்தின் கால சக்கர தசை முதலியவை

16. சுவாதி நட்சத்திரம் 3ஆம் பாத பலன்

17. சுவாதி நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,

4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,
18. சுவாதி நட்சத்திரம் 3ஆம் பாதத்தின் கால சக்கர தசை
19. சுவாதி நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்
20. சுவாதி நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்
1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,
சுவாதி 1ஆம் பாத கர்ம விபாக பலன்
சுவாதி 2ஆம் பாத கர்ம விபாக பலன்
சுவாதி 3ஆம் பாத கர்ம விபாக பலன்
சுவாதி 4ஆம் பாத கர்ம விபாக பலன்
**அத்தியாயம் 22 விசாக நட்சத்திரம்** **133**
விசாகம் நட்சத்திரம் பெயர்கள்
1. பொதுப்பலன்
2. பிற செய்திகள்
3. பிறந்தவர் பலன்கள்

4. பிறர் மதப்படி பிறந்தவர் பலன்கள்

5. பிற நூல்களில் உள்ள செய்திகள்

6. சாந்தி

7. இதர சாதனங்கள்

8. விசாகம் நட்சத்திரத்தில் கோள்கள் நின்ற பலன்

  1. சூரியன் நின்ற பலன்
  2. சந்திரன் ,,
  3. செவ்வாய் ,,
  4. புதன் ,,
  5. குரு ,,
  6. சுக்கிரன் ,,
  7. சனி ,,
  8. ராகு ,,

9. விசாகத்தில் நின்ற கோள்கள் மற்ற கோள்கள் பார்த்த பலன்

  1. விசாகத்தில் நின்ற சூரியனை
     1. சந்திரன் பார்த்த பலன்
     2. செவ்வாய் ,,
     3. புதன் ,,
     4. குரு ,,
     5. சுக்கிரன் ,,
     6. சனி ,,
  2. விசாகத்தில் நின்ற சந்திரனை
     1. சூரியன் பார்த்த பலன்
     2. செவ்வாய் ,,
     3. புதன் ,,
     4. குரு ,,
     5. சுக்கிரன் ,,
     6. சனி ,,

3. விசாகத்தில் நின்ற செவ்வாயை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் ,,
3. புதன் ,,
4. குரு ,,
5. சுக்கிரன் ,,
6. சனி ,,

4. விசாகத்தில் நின்ற புதனை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. குரு ,,
5. சுக்கிரன் ,,
6. சனி ,,

5. விசாகத்தில் நின்ற குருவை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. சுக்கிரன் ,,
6. சனி ,,

6. விசாகத்தில் நின்ற சுக்கிரனை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சனி ,,

7. விசாகத்தில் நின்ற சனியை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,

10. விசாகம் நட்சத்திர விம் சோத்திரி தசைகள்

11. விசாகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன

12. விசாகம் நட்சத்திர பாத பலன் நட்சத்திர முதல் பாத பலன்

13. விசாகம் நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

14. விசாகம் நட்சத்திர முதல் பாதத்தின் கால சக்கர தசை

விசாகம் நட்சத்திர 2ஆம் பாத பலன்

விசாகம் நட்சத்திர 2ஆம் பாதத்தில்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,

6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

15. விசாகம் நட்சத்திர 2ஆம் பாதத்தின் கால சுக்கிர தசை முதலியவை

16. விசாகம் நட்சத்திர 3ஆம் பாத பலன்

17. விசாகம் நட்சத்திர 3ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

18. விசாகம் நட்சத்திரம் 3ஆம் பாதத்தின் கால சக்கர தசை

19. விசாகம் நட்சத்திர 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்

20. விசாகம் நட்சத்திர 4ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

*விசாகம் 1ஆம் பாத கர்ம விபாக பலன்*

*விசாகம் 2ஆம் பாத கர்ம விபாக பலன்*

*விசாகம் 3ஆம் பாத கர்ம விபாக பலன்*

*விசாகம் 4ஆம் பாத கர்ம விபாக பலன்*

**அத்தியாயம் 23 விருச்சிக ராசி மற்றும் லக்னம் 168**

**அத்தியாயம் 24 அனுஷ நட்சத்திரப் பெயர்கள் 173**

*1. பொதுப்பலன்*

*2. பிற செய்திகள்*

*3. பிறந்தவர் பலன்கள்*

*4. பிறர் மதப்படி பிறந்தவர் பலன்கள்*

*5. பிற செய்தி நூல்கள்*

*6. சாந்தி*

*7. இதர சாதரங்கள்*

*8. அனுஷம் நட்சத்திர கோள்கள் நின்ற பலன்*

*1. சூரியன் நின்ற பலன்*

*2. சந்திரன் ,,*

*3. செவ்வாய் ,,*

*4. புதன் ,,*

*5. குரு ,,*

*6. சுக்கிரன் ,,*

*7. சனி ,,*

*8. ராகு ,,*

*9. அனுஷத்தில் நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்*

*1. அனுஷத்தில் நின்ற சூரியனை*

*1. சந்திரன் பார்த்த பலன்*

*2. செவ்வாய் ,,*

*3. புதன் ,,*

*4. குரு ,,*

*5. சுக்கிரன் ,,*

*6. சனி ,,*

2. அனுஷத்தில் நின்ற சந்திரனை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. செவ்வாய் | ,, |
| 3. புதன் | ,, |
| 4. குரு | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

3. அனுஷத்தில் நின்ற செவ்வாயை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. புதன் | ,, |
| 4. குரு | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

4. அனுஷத்தில் நின்ற புதனை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. செவ்வாய் | ,, |
| 4. குரு | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

5. அனுஷத்தில் நின்ற குருவை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. புதன் | ,, |
| 4. குரு | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

6 அனுஷத்தில் நின்ற சுக்கிரனை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சனி ,,

7. அனுஷத்தில் நின்ற சனியை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,

10. அனுஷ நட்சத்திர விம்சோத்திர தசைகள்

11. அனுஷம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன

12. அனுஷம் நட்சத்திர பாத பலன்

அனுஷம் நட்சத்திர முதல் பாத பலன்

13. அனுஷம் நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

14. அனுஷம் நட்சத்திர முதல் பாதத்தின் கால சக்கர தசை

அனுஷம் நட்சத்திர 2ஆம் பாத பலன்

அனுஷம் நட்சத்திரம் 2ஆம் பாதத்தில்

1. சூரியன் நின்ற பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

15. அனுஷம் நட்சத்திரம் 2ஆம் பாதத்தின் கால சக்கிர தசை முதலியவை

16. அனுஷம் நட்சத்திரம் 3ஆம் பாத பலன்

17. அனுஷம் நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

18. அனுஷம் நட்சத்திர 3ஆம் பாதத்தின் கால சக்கர தசை
19. அனுஷம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்
அனுஷம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில்கோள்கள் நின்ற பலன்
1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,
அனுஷம் 1ஆம் பாத கர்ம விபாக பலன்
அனுஷம் 2ஆம் பாத கர்ம விபாக பலன்
அனுஷம் 3ஆம் பாத கர்ம விபாக பலன்
அனுஷம் 4ஆம் பாத கர்ம விபாக பலன்
**அத்தியாயம் 25 கேட்டை நட்சத்திரம் 208**
கேட்டை நட்சத்திரப் பெயர்கள்
1. பொதுப் பலன்
2. பிற செய்திகள்
3. பிறந்தவர் பலன்கள்
4. பிறர் மதப்படி பிறந்தவர் பலன்கள்
5. பிற நூல்களில் உள்ள செய்திகள்
6. சாந்தி
7. இதர சாதரங்கள்
நட்சத்திரம் C

8. கேட்டை நட்சத்திரத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,

9. கேட்டையில் நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்

1. கேட்டையில் நின்ற சூரியனை

1. சந்திரன் பார்த்த பலன்
2. செவ்வாய் ,,
3. புதன் ,,
4. குரு ,,
5. சுக்கிரன் ,,
6. சனி ,,

2. கேட்டையில் நின்ற சந்திரனை

1. சூரியன் பார்த்த பலன்
2. செவ்வாய் ,,

3. புதன் ,,

4. குரு ,,

5. சுக்கிரன் ,,

6. சனி ,,

3. கேட்டையில் நின்ற செவ்வாயை

1. சூரியன் பார்த்த பலன்

2. சந்திரன் ,,

3. புதன் ,,

4. குரு ,,

5. சுக்கிரன் ,,

6. சனி ,,

4. கேட்டையில் நின்ற புதனை

1. சூரியன் பார்த்த பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. குரு ,,

5. சுக்கிரன் ,,

6. சனி ,,

5. கேட்டையில் நின்ற குருவை

1. சூரியன் பார்த்த பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. சுக்கிரன் ,,

6. சனி ,,

6. கேட்டையில் நின்ற சுக்கிரனை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. செவ்வாய் | ,, |
| 4. புதன் | ,, |
| 5. குரு | ,, |
| 6. சனி | ,, |

7. கேட்டையில் நின்ற சனியை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. செவ்வாய் | ,, |
| 4. புதன் | ,, |
| 5. குரு | ,, |
| 6. சுக்கிரன் | ,, |

10. கேட்டை நட்சத்திர விம்சோத்திரி தசைகள்

11. கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன

12. கேட்டை நட்சத்திர பாத பலன் நட்சத்திர முதல் பாத பலன்

13. கேட்டை நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

| | |
|---|---|
| 1. சூரியன் | நின்ற பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. செவ்வாய் | ,, |
| 4. புதன் | ,, |

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

14. கேட்டை நட்சத்திர முதல் பாதத்தின் கால சக்கர தசை

15. கேட்டை நட்சத்திர 2ஆம் பாத பலன்

கேட்டை நட்சத்திரம் 2ஆம் பாதத்தில்

1. சூரியன் நின்ற பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

16. கேட்டை நட்சத்திர 2ஆம் பாதத்தின் கால சக்கர தசை முதலியவை

17. கேட்டை நட்சத்திர 3ஆம் பாத பலன்

18. கேட்டை நட்சத்திர 3ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

19. கேட்டை நட்சத்திர 3ஆம் பாதத்தின் கால சக்கர தசை

20. கேட்டை நட்சத்திர 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்

21. கேட்டை நட்சத்திர 4ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

கேட்டை 1ஆம் பாத கர்ம விபாக பலன்

கேட்டை 2ஆம் பாத கர்ம விபாக பலன்

கேட்டை 3ஆம் பாத கர்ம விபாக பலன்

கேட்டை 4ஆம் பாத கர்ம விபாக பலன்

**அத்தியாயம் 26 தனுசு ராசி பொதுக்குணங்கள்** **246**

**அத்தியாயம் 27 மூலம் நட்சத்திரப் பெயர்கள்** **251**

*1. பொதுப்பலன்*

*2. பிற செய்திகள்*

*3. பிறந்தவர் பலன்கள்*

*4. பிறர் மதப்படி பிறந்தவர் பலன்கள்*

*5. பிற செய்தி நூல்கள்*

*6. சாந்தி*

*7. இதர சாதரங்கள்*

*8. மூலம் நட்சத்திரத்தில் கோள்கள் நின்ற பலன்*

- *1. சூரியன் நின்ற பலன்*
- *2. சந்திரன் ,,*
- *3. செவ்வாய் ,,*
- *4. புதன் ,,*
- *5. குரு ,,*
- *6. சுக்கிரன் ,,*
- *7. சனி ,,*
- *8. ராகு ,,*

*9. மூலத்தில் நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்*

- *1. மூலத்தில் நின்ற சூரியனை*
  - *1. சந்திரன் பார்த்த பலன்*
  - *2. செவ்வாய் ,,*
  - *3. புதன் ,,*
  - *4. குரு ,,*
  - *5. சுக்கிரன் ,,*
  - *6. சனி ,,*

2. மூலத்தில் நின்ற சந்திரனை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. செவ்வாய் | ,, |
| 3. புதன் | ,, |
| 4. குரு | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

3. மூலத்தில் நின்ற செவ்வாயை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. புதன் | ,, |
| 4. குரு | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

4. மூலத்தில் நின்ற புதனை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. செவ்வாய் | ,, |
| 4. குரு | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

5. மூலத்தில் நின்ற குருவை

| | |
|---|---|
| 1. சூரியன் | பார்த்த பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. செவ்வாய் | ,, |
| 4. புதன் | ,, |
| 5. சுக்கிரன் | ,, |
| 6. சனி | ,, |

6. மூலத்தில் நின்ற சுக்கிரனை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சனி ,,

7. மூலத்தில் நின்ற சனியை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,

10. மூல நட்சத்திர விம்சோத்திரி தசைகள்

11. மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன.

12. மூலம் நட்சத்திர பாத பலன்

மூலம் நட்சத்திர முதல் பாத பலன்

13. மூலம் நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

14. மூலம் நட்சத்திரம் முதல் பாதத்தின் கால சக்கர தசை

மூலம் நட்சத்திரம் 2ஆம் பாத பலன்

மூலம் நட்சத்திரம் 2ஆம் பாதத்தில்

1. சூரியன் நின்ற பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

15. மூலம் நட்சத்திர 2ஆம் பாதத்தின் கால சக்கர தசை முதலியவை

16. மூலம் நட்சத்திர 3ஆம் பாத பலன்

17. மூலம் நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

18. மூலம் நட்சத்திர 3ஆம் பாதத்தின் கால சக்கர தசை

19. மூலம் நட்சத்திர 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்

20. மூலம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

| | |
|---|---|
| 1. சூரியன் | நின்ற பலன் |
| 2. சந்திரன் | ,, |
| 3. செவ்வாய் | ,, |
| 4. புதன் | ,, |
| 5. குரு | ,, |
| 6. சுக்கிரன் | ,, |
| 7. சனி | ,, |
| 8. ராகு | ,, |
| 9. கேது | ,, |

மூலம் 1ஆம் பாத கர்ம விபாக பலன்

மூலம் 2ஆம் பாத கர்ம விபாக பலன்

மூலம் 3ஆம் பாத கர்ம விபாக பலன்

மூலம் 4ஆம் பாத கர்ம விபாக பலன்

**அத்தியாயம் 28 பூராடம் நட்சத்திரம்** 288

பூராடம் நட்சத்திரப் பெயர்கள்

1. பொதுப்பலன்

2. பிற செய்திகள்

3. பிறந்தவர் பலன்கள்

4. பிறர் மதப்படி பிறந்தவர் பலன்கள்

5. பிற நூல்களில் உள்ள செய்திகள்

6. சாந்தி

7. இதர சாதரங்கள்

8. பூராட நட்சத்திரத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,

9. பூராடத்தில் நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்

1. பூராடத்தில் நின்ற சூரியனை
    1. சந்திரன் பார்த்த பலன்
    2. செவ்வாய் ,,
    3. புதன் ,,
    4. குரு ,,
    5. சுக்கிரன் ,,
    6. சனி ,,
2. பூராடத்தில் நின்ற சந்திரனை
    1. சூரியன் பார்த்த பலன்
    2. செவ்வாய் ,,
    3. புதன் ,,
    4. குரு ,,

5. சுக்கிரன் ,,

6. சனி ,,

3. பூராடத்தில் நின்ற செவ்வாயை

1. சூரியன் பார்த்த பலன்

2. சந்திரன் ,,

3. புதன் ,,

4. குரு ,,

5. சுக்கிரன் ,,

6. சனி ,,

4. பூராடத்தில் நின்ற புதனை

1. சூரியன் பார்த்த பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. குரு ,,

5. சுக்கிரன் ,,

6. சனி ,,

5. பூராடத்தில் நின்ற குருவை

1. சூரியன் பார்த்த பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. சுக்கிரன் ,,

6. சனி ,,

6. பூராடத்தில் நின்ற சுக்கிரனை

1. சூரியன் பார்த்த பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சனி ,,

7. பூராடத்தில் நின்ற சனியை

1. சூரியன் பார்த்த பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

10. பூராடம் நட்சத்திர விம்சோத்தரி தசைகள்

11. பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன

12. பூராடம் நட்சத்திர பாத பலன் நட்சத்திர முதல் பாத பலன்

13. பூராட நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்

2. சந்திரன் ,,

3. செவ்வாய் ,,

4. புதன் ,,

5. குரு ,,

6. சுக்கிரன் ,,

7. சனி ,,

8. ராகு ,,

9. கேது ,,

14. பூராடம் நட்சத்திர முதல் பாதத்தின் கால சக்கர தசை

பூராடம் நட்சத்திர 2ஆம் பாத பலன்

பூராட நட்சத்திரம் 2ஆம் பாதத்தில்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

15. பூராடம் நட்சத்திரம் 2ஆம் பாதத்தின் கால சுக்கிர தசை முதலியவை

16. பூராடம் நட்சத்திரம் 3ஆம் பாத பலன்

17. பூராடம் நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

18. பூராடம் நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் கால சக்கர தசை

19. பூராடம் நட்சத்திர 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்

20. பூராடம் நட்சத்திர 4ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் ,,
3. செவ்வாய் ,,
4. புதன் ,,
5. குரு ,,
6. சுக்கிரன் ,,
7. சனி ,,
8. ராகு ,,
9. கேது ,,

பூராடம் 1ஆம் பாத கர்ம விபாக பலன்
பூராடம் 2ஆம் பாத கர்ம விபாக பலன்
பூராடம் 3ஆம் பாத கர்ம விபாக பலன்
பூராடம் 4ஆம் பாத கர்ம விபாக பலன்

**அத்தியாயம் 29 மகர லக்னம்** 320

❋❋❋

# நட்சத்திர சிந்தாமணி

## இரண்டாம் பாகம்

## அத்தியாயம் - 16

### உத்திரம் நட்சத்திரம்

இது 12வது நட்சத்திரம். ராசி மண்டலத்தில் 146 பாகை. 40 முதல் 160 பாகை வரையுள்ள பகுதியில் பரவியுள்ளது. இதன் முதல் பாதம் சிம்ம ராசியிலும் மீதி 3 பாதங்கள் கன்னி ராசியிலும் உள்ளது.

| | |
|---|---|
| வடமொழிப் பெயர் | - உத்தரப் பல்குனி |
| தமிழ்ப் பெயர் | - உத்திரம் |
| அரபுப்பெயர் | - அஸ்ஸராப் |
| சீனப்பெயர் | - சியூ SIEU |
| கிரேக்கப் பெயர் | - லியோனிஸ் LIONIS |

பூர நட்சத்திரத்தைப்போல இதுவும் 2 நட்சத்திரங்களால் ஆனது. இதுவும் கட்டில் கால் போல் வடிவமைப்பு உள்ளது. இந்த நட்சத்திரத்தின் அர்யமான் 12 ஆதித்தர்களில் ஒருவன். இவர்கள் யாவரும் அதிதியின் மைந்தர்கள். அதிதி சூரியனுக்கும் தாயாவாள்.

**மரண கண்டி சுவடி எண் 1500 சொல்லும் உத்திர நட்சத்திரப் பலன்:**

அழகிய நடைய னாகும் அரிவையர் தனையர் பேணும்
பழியது பார்த்து வாழும் பாவங்கள் செய்ய மாட்டான்
உறவரைச் சேர்த்து வாழும் உத்தமர் தம்மைக் காக்கும்
மொழிபெறு மேனியாகும் உத்தர நாளி னானே. 112

(சுவடி எண். 1500)

**(இதன் பொருள்)** இவன் அழகாக நடக்கவல்லவன், பெண்களை (மனைவி முதலானோரை) பாதுகாப்பான். உழுபவர்கள் விவசாயிகள் தங்கியிருக்கும் இடத்தில் அவர்களுடன் ஒத்து வாழ்பவன். பிறர் எடுத்து பேசுகின்ற அளவுக்கு வடிவழகன் இவன். இவையே உத்தர நட்சத்திரத்தில் பிறந்தவன் குணங்களாகும்.

இன்னானுக்குத் தெய்வம் ஆதித்தன். சாதி பிரதிலோமன் அல்லது பிராமணன். கோத்திரம் வசிஷ்டன். யோனி - எருது, பட்சி - மரங்கொத்திக்குருவி அல்லது வான்கோழி, விருட்சம் - பலாமரம் அல்லது எருக்கு, ராசி - கன்னி, மனித கணம், வாரம் - புதன் கிழமை.

புரட்டாசி மாதம் சூனியம். 18 நாழிகைக்குமேல் 4 நாழிகை விஷம். வெதுப்பு தோன்றில் 7 நாளில் விடும். விடாதபோது நெய்யாலே ஓமம் பண்ணுவது, 7 நாளில் தானம் எள்ளுடன் சொர்ணதானம் பண்ண வும். மூன்று நாளில் தீரும்.

இந்நாளில் விவாகம் பண்ண, பொன் பூண, முடி சூட, வாழை வைக்க, கோடி புதுத்துணி உடுக்க நன்று. பெண் இந்த நாளில் திரண்டால் 2 பிள்ளை பெறுவாள். யாத்திரைக்குப்பால் குடித்து வழி போகவும்.

இவன் சரீரமும் கண்ணும் அழகியவன். சத்திய வாசகன். தெய்வ வசீகரமுடையவன். இவன் சொல்லை எல்லோரும் நம்புவார்கள். இவனுக்கு வீடு கிழக்கு தெற்கு வாசல் விடுவது.

**தமிழ் ஜாதக அலங்காரத்தில் சொல்லிய உத்திர நக்ஷத்திரப் பலன்:**

**கையாக உரையான்முன் கை வலியன் வித்தைஉளன்**
**அழகரங்கண் வாயுமுள்ளான்**
**மையார் கண்ணார் நேயன் முன்கோபி மறுமுக மார்பு**
**அதனில் உள்ளான்**

பொய்யாத ஆரன் நீர் ஆடுவான் சிறுபசியன்
பொறுத்தும் பத்தி
ஒய்யார நடை தருமன் ஞானவான் ஆகும் உத்தி
ரத்தினானே. 113

**(இதன் பொருள்)** உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவன் இதமாக பேசுபவன். முன்னங்கையில் பலமுள்ளவன். கல்வியுள்ளவன், அழகுள்ள கண்களும் வாயுமுள்லவன். பெண்கள் சிநேகிதன், முன்கோபி. முகம், மார்பு இந்த இடங்களில் மச்சம் உள்ளவன். உண்மையான வீரன். நீர் விளையாட்டில் பிரியமுள்ளவன். அடிக்கடி பசியுள்ளவன். தெய்வ பக்தியுள்ளவன். அழகாக நடப்பவன். தருமம் செய்பவனும் ஞானவானும் ஆவான் என்பதாம்.

**யவன ஜாதகப்படி**

இவன் சத்துருக்களை வெல்பவன். சுகமுள்ளவன். ஐஸ்வர்யத்தை அனுபவிப்பவன். எந்த காலத்திலும் பெண்களிடம் இச்சையுள்ளவன். சாஸ்த்திரங்களை அறிந்தவன். யதார்த்தத்தில் பிரியமுள்ளவன். நல்ல பண்டிதனுமாவான்.

**பிருஹத் ஜாதகம்**

சர்வஜனப்பிரியன். வித்தையால் கிடைக்கப்பெற்ற தனம் உள்ளவன். யோகவான், துக்கமில்லாதவனும் ஆவான் என்பதாம்.

## பெண்கள்

உத்திர நட்சத்திரத்தில் பிறந்த பெண்கள் பற்றி வடமொழி ஸ்திரீ ஜாதகம் சொல்லுவது

உத்திரநட்சத்திரத்தில் பிறந்தவள் ஸ்திர புத்தியுடையவள், பணம் உள்ளவள், பணிவுள்ளவள். தன் காரியங்களையும் வீட்டுக் காரியங்களையும் ஒழுங்காகச் செய்பவள். கெட்டப் பழக்கம், நடத்தை இல்லாதவள். நோயற்ற சரீரம் உள்ளவள்.

### வேறு நூல்:

பணம் சேர்ப்பதில் வல்லவள். சிறிது பலஹீனமுள்ளவள். தர்ம புத்தி உள்ளவள் என்பர்.

தமிழ் மதன நூல் வாக்கியம்: இவள் தெய்வ தத்துவ லக்ஷணத்தைச் சேர்ந்தவள்.

**சித்திர ரூப மாக சிறுசிவப் புடைய மேனி**
**பத்திரம் சிறுத்துக் காம பதத்தின்மேல் மறு உண்டாகும்**
**கொத்தவிழ் குழலி கொண்ட கோள்விடாள் குணமும் குற்றம்**
**உத்தமப் பகுதி ஆயும் உத்திர நாளி னாளே! 114**

உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவள் சித்திரம் எழுதி வைத்தது போன்ற அழகிய வடிவமுடையவள். இளஞ் சிவப்பு நிறமுடைய அழகிய மேனியுடையவள். அழகாகவும் சிறியதாகவும் உள்ள அவளுடைய காம பதமான அல்குலின் மேல் ஒரு பக்கம் மச்சம் உள்ளவள். கொத்தான மலர்கள் அணிந்த கூந்தலுடைய இவள், தான் கொண்ட கொள்கையை விடாதவள். எந்த விஷயத்திலும் உத்தமம் எது அதாவது குணம் எது குற்றம் எது என்று ஆராய்ந்து தெளியும் திறமையுள்ளவள் என்பதாம்.

### பிறவேறு நூல் செய்திகள் (நட்சத்திரம் பொது)

தேவ குருவான குருபகவான் பிறந்த நட்சத்திரம் இது. குல நட்சத்திர வகையைச் சேர்ந்தது. கம்பு அல்லது குச்சி வடிவமுடையது.

இவன் தன்மானம் கௌரவமுள்ளவன். மிகவும் திறமை உள்ளவன். காம இச்சை அதிகம். உடலில் உஷ்ணம் அதிகம். அதாவது தேக காங்கை உள்ளவன். தன் கஷ்டங்களையும் கவனிக்காமல் பலருக்கும் உதவக் கூடியவர்கள். தன்னடக்கம் உள்ளவர்.

இது குல நட்சத்திரம் ஆகையால் இவர்களுக்கு எதிர்ப்பு அதிகம் இராது.

சூரியனைச் சுற்றி இந்த நாளன்று வட்டம் காணப்பட்டால் நல்ல மழை உண்டாகும்.

பும்சவனம், சீமந்தம், உபநயனம், புது பதவி ஏற்றல், நடனம், இசை பயில, வேதாரம்பம் பண்ணவும் உகந்த நாள்.

பல நோய்கள் இருந்தாலும் 80 வயது வரை வாழ முடியும்.

கரும்பு, நெல், வரகு, சோளம் போன்ற தானியம் பயிர் செய்ய நன்று. தென்னை பயிரிடலாம். நீடித்து செயல்பட வேண்டிய காரியம் திட்டங்களை இதில் தொடங்கலாம்.

இந்த நட்சத்திரம் 2 நட்சத்திரங்களைக் கொண்டது. மார்ச் மாதம் இரவு நள்ளிரவில் இதை வானத்தில் காணலாம்.

இவர்கள் சர்வஜனப்பிரியர். தன் கல்வி சுய முயற்சியால் சம்பாதித்து வாழ்பவர். இவர்களுக்கு மனோ வியாதிகள் இல்லை. கலவைப்படமாட்டார்கள்.

இவர்கள் வீட்டின் முன் அரளிச்செடி வைத்து வளர்ப்பதும் நல்லது. இதில் பிறந்தவர்கள் சிவப்பு மேனியுடையவர்களாக இருப்பார்கள். இதில் பிறந்தவர்கள் பெரும்பாலும் பிதுர் வழி சொத்துக்களன்றி தன் சொந்த முயற்சியால் சொத்து சம்பாதிப்பார். ஆடம்பர பொருட்கள் நிறைய இருக்கும். பெரிய குடும்பமாக அமையும். ஆலயத் திருப்பணிகள் செய்வர். இது பெண் நட்சத்திரம் பார்சுவநாடி, மேல் நோக்கு நட்சத்திரம். தென் திசையைச் சேர்ந்தது. தென் மேற்கு திக்கான நிருதி மூலையும் இதற்கு ஆதிக்கம் உண்டு. வியாழன் சனியில் உத்தர நட்சத்திரம் மரண யோகமாகும்.

உத்திரம் 1ம் பாதம் தாய்க்கு தோஷம் என்பர். இவர்களுக்கு 65 முதல் 75 வரை ஆயுள் நீடிக்கலாம்.

உதாரகுணம் சுர்யமா தேவதை, ருது சங்கமனம், நாம கரணம், அன்ன பிராசனம் அட்சரம், வித்தியாரம்பம், விவாஹம், கிராமப் பிரவேசம், வாஸ்து பூஜை, அபிஷேகம், மாடு வாங்குதல், பௌஷ்டிகம் இவை செய்ய நன்று, வஸ்திராபரணம் தரிக்க மகா ஸித்தி. ஞாயிறில் சித்தயோகம். சதுர்த்தி சேர்ந்தால் மரணயோகம், வெள்ளியில் கலகம்.

**சாந்தி**

க்ருஸ்ரம், எள், தேன், உளுந்து, கடுகு, நெல், வெல்லம், ஹோமதிரவியம், எள், தேன், வெல்லம் சேர்த்து வைவேத்யம், சாவித்திரி மந்திரம் 108 தடவை. அதனாலேயே சூரியனுக்கு பலி. இதில் மாதம் பிறந்தால் தான்யம் பெருகும்.

## உத்திர நட்சத்திரம் பாத பலன்

### தமிழ் ஜாதகலங்காரம் பாடல்

கண்டன மிருது வசனன்நற் கீர்த்துகி
கண்ணியன் தீரன் இங்கிதனாம்
கருதிய கிளைஞர் மேல் விருப்புடையான்
காணு முத்திர முதல் கால்
கொண்டிடும் காமி தரித்திரன் ஊனன்
கோதுறும் சஞ்சல சித்தன்
கூறிய சித்த யாக னாகும்
குலவிய இருபதத் துதித்தோன்
அண்டிடும் பிலுக்கன் பழுதிலா உரையான்
ஆக்களை மேய்த்திடு மவனாம்
ஆன ஆசாரம் ஆனதாம் மூன்றில்

ஆகிய பிறப்பை யுடைய வனே
வண்டனாம் நன்றி மறந்திடான் பிறரை
மதித்திடான் தூஷண மறைவன்
வாலிபந் தன்னில் தாய் மறித் திடுவாள்
வழங்குவர் நான்கெனப் பெரியோர். 115

*(இதன் பொருள்)* உத்திரம் நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவன்தான் பழகுபவரிடத்தில் இனிமையாகப் பேசுபவன். மேன்மையுள்ளவன். குற்றமில்லாதவன். பரிசுத்த மனதுடையவன். தன் சகோதரிகளின் மேல் பிரியமுள்ளவன்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன் அறிவில்லாதவன், தரித்திரன், சரீரத்தில் ஊனமுள்ளவன். எக்காலத்திலும் நீங்காத சஞ்சலமுள்ளவன். பிச்சை எடுத்துச் சீவிப்பவனும் ஆவான் என்று சொல்லுக.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் தன்கைப் பொருளைப் பிறருக்கு இம்மியும் கொடாதவன். தான் சொன்ன சொற்களை மறுபடியும் மாற்றிப் பேசுபவன். பசுமாடுகளை மேய்ப்பவன். ஆசாரம் சுத்தம் வாய்ந்தவனும் ஆவான் என்று சொல்லுக.

நான்காம் பாதத்திற் பிறந்தவன் அசுத்தமுள்ளவன், பிறர் செய் நன்றி மறக்காதவன். மறு உபசாரம் செய்பவனும், அன்னிய ஜனங்களை மதிக்காதவன். தூஷண வார்த்தைகளை விடுபவனும் வாலிப வயதில் தாய் மரிப்பளென்றும் கூறுக.

**ஜாதக சார தீபத்தில் உத்திரம் பாத பலன்கள்**

முதல் பாதத்தில் பிறந்தவன் பண்டிதன்

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன் உலகையாளும் அரசன்

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் எல்லா முயற்சிகளிலும் வெற்றியடைவான்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன் கருமசீலன்

*சுவடி எண். 1500*

## மரணகண்டிகை கூறும் நட்சத்திர பாத பலன்

### முதல் பாதம்

மாந்துளிர் போலும் மேனி மனதுடன் கல்வி கற்கும்
ஏந்திய குலத்துக் கெல்லாம் இசைந்ததோர் ராச னாகும்
வாய்ந்த பின் நடக்க மாட்டான் கனங்குழை யார்க்கு நல்லான்
சேர்ந்தவர்க் கன்ப னாகும் செய்ய பொற் காலி னானே. 116

*(இ-ள்.)* உத்திரம் முதற்பாகத்தில் பிறந்த குருவின் அங்கிஷத்தினன். மாந்துளிர் போல சிவந்த பளபளக்கும் தேகமுடையவன். நன்றாக மனத்துடன் ஈடுபட்டு கல்வி கற்பான். காலத்தில் தன் குலத்திற்கே நாயகனாய் திகழ்வான். காரியமானபின் பிறரிடம் தேவையின்றி நடந்து அலைய மாட்டான். பெண்களுக்கு நல்லவனாக நடந்து கொள்வான். தன்னை அண்டினவர்களுக்கு எல்லாம் அன்பாக நடந்து கொள்வான் என்பதாம்.

**இதற்குக் கால சக்கர தசை**

| | | |
|---|---|---|
| 1. மீன குரு | 10 வருடம் | |
| 2. கும்ப சனி | 4 | ,, |
| 3. மகரச் சனி | 4 | ,, |
| 4. தனுசு குரு | 10 | ,, |
| 5. விருச்சிக செவ்வாய் | 7 | ,, |
| 6. துலாம் வெள்ளி | 16 | ,, |
| 7. கன்னி புதன் | 9 | , |
| 8. சிங்க ஆதித்தன் | 5 | ,, |
| 9. கடக சந்திரன் | 21 | ,, |
| ஆக வயது | 86 | ,, |

### இரண்டாம் பாதம்

ஊனம துடையனாகும் உறவொடு பகையும் எண்ணான்
மானம துடையனாகும் மனம்பொறுத் தறிய மாட்டான்
மேனியும் உருவும் நல்லான் மிக்கதோர் அறிவும் பேணும்
கானகம் திரிந்து வாழும் காரியங் கிஷத்தி னானே. 117

*(இ-ள்.)* இவன் உடலில் ஏதாவது ஊனமிருக்கும். தன் உறவினர்களோடு பகை கொள்ளமாட்டான். இவன் உருவமும் உடல் நிறமும் அழகும் சிவப்பும் உள்ளவன். தன் அறிவை மிகுதியும் வளர்த்துக் கொள்வான். தன்மானமுள்ளவன். மனதில் சகிப்புத் தன்மை குறைவு. காடுகளில் திரிந்து வாழும் இவன் உத்திரம் இரண்டாம் பாதத்தில் சனியின் அங்கிஷத்தில் பிறந்தவனாவான் என்பதாம்.

**இதற்குக் காலசக்கர தசை**

| | | |
|---|---|---|
| மிதுன புதன் | 9 வருடம் | |
| ரிஷப வெள்ளி | 16 | ,, |
| மேஷச்செவ்வாய் | 7 | ,, |
| மகர சனி | 4 | ,, |
| கும்ப சனி | 4 | ,, |
| மீன வியாழன் | 10 | ,, |
| தனுசு வியாழன் | 7 | ,, |
| துலாம் வெள்ளி | 16 | ,, |
| விருச்சிகச் செவ்வாய் | 7 | ,, |
| **ஆக வயது** | 83 | ,, |

## உத்திரம் 3ம் பாதம்

யாரையும் அறிந்துபேணும் அரும்பொருள் சாலஅற்பன்
சீரிய செய்ய வேண்டான் சிதைவதே செய்வதெல்லாம்
வாரிய பொய்கள் சொல்வான் மனம்பிறர்க் கறிய ஒண்ணான்
காரிய குசல னாகும் காரியங் கிஷத்தி னானே. 118

*(இ-ள்.) உத்திரம் 3ம் பாதத்தில் பிறந்த சனியின் அங்கிஷத்தில் பிறந்த இவன், எல்லோரையும் அவர் அவர் தகுதி அறிந்து போற்றுவான். பணம் விஷயத்தில் அற்பபுத்தி யுடையவன். நல்ல உயர்ந்த காரியங்களை செய்ய மனம் வராது. எல்லாம் அறைகுறை காரியங்களே. இவன் மனதை பிறரால் அறிய முடியாது. தன் காரியங்களை செய்து முடிப்பதில் புத்திசாலி என்பதாம்.*

**இதற்குக் கால சக்கர தசை**

| | | |
|---|---|---|
| *மிதுன புதன்* | *9 வருடம்* | |
| *கடக சந்திரன்* | *21* | ,, |
| *சிங்க ஆதித்தன்* | *5* | ,, |
| *கன்னி புதன்* | *9* | ,, |
| *துலாம் வெள்ளி* | *16* | ,, |
| *விருச்சிக செவ்வாய்* | *7* | ,, |
| *மீன வியாழன்* | *10* | ,, |
| *மகர சனி* | *4* | ,, |
| *கும்பச் சனி* | *4* | ,, |
| *ஆக வயது* | *85* | ,, |

*சுவடி எண். 1500*

**உத்திரம் 4ம் பாத பலன்**

சிறிதே என்றும் பொய்சொல்லான் சிவந்த கண்ணன் செறிகுழலான்
அறிவு மிகவும் பெருங்குணத்தான் அடைந்தோர்க் கன்பன் அழகியனாம்
பொறிசேர் மைந்தன் மனையாளைப் பொருளாய் எண்ணான் புகழ் விளங்கும்
வெறிசேர் குழலின் மடமாதே வியாழன் காலிற் பிறந்தானே. 119

*(இ-ள்.) ஒரு சிறிய பொய் கூட சொல்லமாட்டான். இவன் சிவந்த கண்களுள்ளவன். நெருங்கிய அடர்த்தியான தலை மயிர் உள்ளவன். தன்னை அண்டியவர்களிடம் அன்பாக நடந்து கொள்வான். அறிவுடையவன். நல்ல பண்புள்ளவன். சுறுசுறுப்பாக செயல்படுபவன். புகழ் பெற்றவன். மணம் வீசும் கூந்தலையுடைய இளம் பெண்ணே! உத்திரம் நான்காம் பாதத்தில் பிறந்த இவன் குருவின் அங்கிஷத்தில் பிறந்தவனாவான் என்பதாம்.*

***இதற்குக் கால சக்கர தசை***

| | | |
|---|---|---|
| *தனுசு வியாழன்* | *10* | *வருடம்* |
| *விருச்சிகச் செவ்வாய்* | *7* | *,,* |
| *துலாம் சுக்கிரன்* | *16* | *,,* |
| *கடகச் சந்திரன்* | *21* | *,,* |
| *மிதுன புதன்* | *9* | *,,* |
| *ரிஷப வெள்ளி* | *16* | *,,* |
| *கன்னி புதன்* | *9* | *,,* |
| *சிங்க ஆதித்தன்* | *5* | *,,* |
| *மேஷச் செவ்வாய்* | *7* | *,,* |
| *ஆக வயது* | *100* | *,,* |

## கர்ம விபாகம் வடமொழி கூறும் உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பூர்வகர்ம வரலாறும் சாந்தி முறைகளும்

### உத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம வரலாறு மற்றும் சாந்தி முறை

**சிவபெருமான் சொல்லுகிறார்:**

அயோத்யா நகரில் ஒரு வைசியன் வசித்து வந்தான். அவன் தன் கர்மத்தில் நழுவாமல் இந்திரியங்களை அடக்கி விஷ்ணு பக்தனாகவும் பிராம்மணர்களுக்கு சேவை செய்பவனாகவும் இருந்தான். இவனுக்கு பதிவிரதையான சுந்தரி என்ற மனைவி இருந்தாள். இவனுக்கு ஒரு வேதவித்தான பிராம்மண நண்பன் இருந்தான்.

இந்த அந்தணன் தான் தினமும் சம்பாதித்த பொன் பொருளை வைஸ்யனிடமே கொடுத்து வைத்திருந்தான். இவன் காசி யாத்திரை போனான். கங்கையில் நீராடும் போது இறந்து போனான். இந்த வைசியன் அந்த பிராமணனின் பொன்பொருள் முழுவதையும் அனுபவித்துச் செலவு செய்து அயோத்தியான புண்ணிய க்ஷேத்திரத்தில் மனைவியுடன் உயிர் நீத்தான். ஹே! விசாலாக்ஷி இந்த வைஸியன் 15 யுகங்கள் வரையான நீண்ட காலம் வரை மனோகரமான சுவர்க்கத்தில் உயர்ந்த போகங்களை அனுபவித்தான்.

புண்ணியம் தீர்ந்த பின் பூவுலகில் உத்தம குலத்தில் மனிதப் பிறவியைப் பெற்றான்.

இவன் செல்வம் நிறைந்தவனாகவும் விஷ்ணு பக்தனாகவும் இருந்தான். இவன் முற் பிறவியில் பிராமணனின் பொருளை அனுபவித்த பாவத்தால் இந்த பிறவியில் இவனுக்குப் புத்திரப் பிராப்தி ஏற்படவில்லை. நடுவில் இவனுக்குப் பலநோய்களும் உண்டாயின.

இதற்கு சாந்தி என்னவென்றால் முதலில் மனம் இலயித்து ஒரு முறை ஹரிவம்ச புராணம் பாராயணம் அல்லது சிரவணம் செய்ய வேண்டும். அதன் பின் தன் செல்வத்தில் 6ல் ஒரு பங்கை உரியவருக்கு புண்ய காரியங்களில் செலவு செய்ய வேண்டும். அதன் பின் காயத்திரி மந்திரத்தை ஒரு லக்ஷம் முறை ஜபம் செய்ய அல்லது செய்விக்க வேண்டும்.

அதில் 10ல் ஒரு பங்கு ஹோமம், தர்பணம் மார்ஜனம் முதலியவை செய்விக்க வேண்டும். அதன் பின் புத்தாடை ஆபரணங்களால் அலங்கரித்த 10 வண்ணம் கொண்ட பசு ஒன்றை உரியவருக்குத் தானம் செய்ய வேண்டும். அதன் பின் உத்தம பிராமணனுக்குப் பூதானம் செய்ய வேண்டும். அதன் பின் தன் மனைவியுடன் சூரிய நாராயண விரதம் செய்ய வேண்டும்.

அதன் பின் தேங்காயினுள்ளும் ஒரு கும்பத்திலும் நவரத்தினங்களை நிறைத்து கங்கை நீரில் நின்று கொண்டு தானம் பண்ண வேண்டும். அதன் பின் பிராமணனுக்கு தட்சணை கொடுக்க வேண்டும். அதன் பின் மனம் மற்றும் இந்திரியங்களை அடக்கி படுக்கை தலையணையும் தானம் செய்ய வேண்டும். இதனால் இவன் நோயெல்லாம் தீர்ந்து புத்திரப் பேறும் அடைகிறான்.

## உத்திரம் 2ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம பலனும் சாந்தியும்

**சிவபெருமான் சொல்லுகிறார்.**

முன்பு ஒரு காலத்தில் புருஷோத்தமபுரி என்றொரு நகரம் இருந்தது. அங்கு ஒரு பொற்கொல்லன், அவன் தன் தொழிலில் கண்ணாக நன்கு திறமையுடன் பொன் வேலை செய்து வந்தான்.

மிகுந்த பெரிய பணக்காரனானான். வேதத்திற்கு புறம்பான நெறியில் இருந்த ஒரு பிராமணன் நண்பனாக இருந்தான். அவன் 400 தோலா எடையில் பொன்மாலை ஒன்று செய்யும்படி கொடுத்தான். ஏ! அழகியே, அந்த அந்தணனுக்கு பொற்கொல்லன் மாலை செய்து கொடுக்கவே இல்லை. அவனும் வயதாகி இறந்துவிட்டான். அதன் பின்அவனும் தானும் மனைவி குழந்தைகளுடன் இறந்து போனான். அவன் செய்த பாவத்திற்காக மஹாகடாயம் என்ற நகரத்தில் ஒரு யுக காலம்வரை எமதர்மன் தண்டித்தான். அதன் பின் புலியாகப் பிறந்தான்.

அதன் பின் காகமாகப் பிறந்தான். திரும்பவும் நரகத்தில் தள்ளப்பட்டான். அதன்பின் ஒரு புண்ணிய ஸ்தலத்தில் மனிதனாகப் பிறந்தான். போன பிறவியில் பிராம்மணனுக்கு பொன்மாலை செய்து கொடுக்காமல் ஏமாற்றிய பாவத்தால் இவனுக்கு இப்பிறவியில் புத்திரன் இல்லை. அவன் மனைவிக்கு கற்பம் கலைந்து போயிற்று. குழந்தையும் பிறந்து இறந்தது. இதனால் ஒரு குழந்தைப் பெற்றுப் பறி கொடுத்த காகவந்த்யை எனப்பட்டாள். அதற்கு சாந்தியைச் சொல்லுகிறேன் கேள். முதலில் தன் வீட்டில் உள்ள பொருளின் 6ல் ஒரு பாகத்தைத் தானம் செய்ய வேண்டும். பிறகு நியமம் தவறாமல் ஒரு லட்சம் முறை காயத்திரி மந்திரத்தை ஜெபம் செய்விக்கவேண்டும். அதன்பின் சிரத்தையுடன் ஹரிவம்ச புராணம் பாராயணம் செய்விக்க வேண்டும். அதன் பின் முறைப்படி கோதானம் செய்ய வேண்டும். சிவபூஜையும் செய்யவேண்டும். அதன் பின் சந்தேகம் இன்றி நல்ல ஆண் குழந்தை பிறக்கும். அவனுடைய நோயெல்லாம் தீர்ந்துவிடும்.

## உத்திரம் நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் முற்பிறவி விளைவும் சாந்தி பரிகாரமும்.

**சிவபெருமான் சொல்லுகிறார்:**

வெகுகாலத்திற்கு முன் பட்டணம் என்ற நகரம் இருந்தது. அங்கு ஒரு எண்ணை வாணியன் இருந்தான். இவன் பெரிய பணக்காரனாகவும் இருந்தான். இவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். அதில் மூத்த மனைவியை வாணியன் விஷம் வைத்துக்கொன்று விட்டான். இரண்டாவது மனைவி தருமம் தவறாத பதிவிரதையாக இருந்தாள்.

வெகுநாள் சென்று வாணியன் இறந்தான். இவன்எமதர்மராஜன் ஆணையால் கடாஹம் என்ற பயங்கர நரகத்தில் அங்கு நெடுங்காலம் பலவகை துன்பங்களை அனுவபித்தான் 30 ஆயிரம் வருடங்கள்வரை அங்கு தண்டனை அனுபவித்தான்.

அதன் பின் பாம்பாகப் பிறவி எடுத்தான். அதன் பின் கழுதையாகவும் கோழியாகவும் பிறந்தான். அதன் பின் மனித பிறவியை அடைந்தான். இந்தப் பிறவியில் இவன் பணக்காரனாகவும் ஞானவானாகவும் இருந்தான். இதன் பின் இவன் துரதிஷ்ட வசத்தால் கங்கையில் மூழ்கி இறந்தான்.

கங்கை நீரில் மூழ்கி இறந்ததால் அவன் பணக்காரனாகப் பிறந்தான். ஆனால் இதற்கு முன்னொரு ஜென்மத்தில் தன் முதல் மனைவிக்கு விஷம் வைத்ததால், இவனுக்குப் பல நோய்கள் பற்றிக்கொண்டன. இவன் மனைவிக்கும் பல துன்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன.

இவன் பாவத்திற்கு சாந்தி முறைகளைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. தன் சொத்தின் 8ல் ஒரு பங்கை புண்ணிய காரியங்களில் செலவழிக்க வேண்டும். அதன் பின்

காயத்திரி மந்திரத்தை ஒரு காரியங்களில் செலவழிக்க வேண்டும். அதன் பின் காயத்திரி மந்திரத்தை ஒரு லக்ஷம் முறை ஜெபம் செய்விக்க வேண்டும். அதன் பின் அதில் 10ல் ஒரு பங்கு ஹோமம் தர்ப்பணம், மார்ச்சனம் முதலியவை செய்விக்க வேண்டும். இதன் பின் த்ரயம்பக மந்திரத்தை ஒரு லட்ச முறை ஜபம்செய்விக்க வேண்டும். அதன்பின் கிரஹண சமயத்தில் தன் மனைவியுடன் விரதம் இருந்து பத்து வண்ணமுள்ள பசு ஒன்றை தானம் செய்ய வேண்டும். பின்பு ரத்னங்கள் நிறைந்த ஒரு கலசத்துடன் தானம் பண்ண வேண்டும். அதன் பின் வைகாசி மாசி மாதம் விடியற்காலைகளில் நேரத்தில் புண்ணிய நீராட வேண்டும். அதன்பின் எள்ளுடன் ஒரு பசுவையும் தானம் பண்ண வேண்டும். இப்படி செய்வதால் அவன் பாவங்கள் நசிக்கின்றன. அதன் பின் அவனுக்கு பெண்களே பெற்ற அவன் மனைவி பிள்ளைக் குழந்தையைப் பெறுகிறாள். அதுவும் தீர்க்காயுள் உள்ளதாக இருக்கும்.

## உத்திர நட்சத்திரத்தின் 4ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம பாவத்திற்கு சாந்தி முறைகள்.

**சிவபெருமான் சொல்லுகிறார்.**

முன்பொரு காலத்தில் கயா நகரத்தில் ஒரு பிராமணன் இருந்தான். அவன் வேத மார்க்கத்தைப் புறக்கணித்து திருடியும் பிழைத்து வந்தான். வேசியர் தொடர்பால் சுகம் அனுபவித்து வந்தான். பலரிடமும் தானமும் வாங்கி வந்தான். இப்படியே பூரா ஆயுளையும் கழித்தான்.

இந்த பாவத்திற்காக எமதர்மன் கடாஹம் என்ற நரகத்தில் தள்ளி 3 லட்சம் வருடம் வரை தண்டித்தான். அதன் பின் சாணுன்ரம் குலத்தில் பிறந்தான். பிராமணன் அதன்பின் பிரேதம் என்ற பிசாசாக அலைந்தான். அதன் பின் பூனையாக பிறந்தான். அதன் பின் பால்கு என்ற புண்ய க்ஷேத்திரத்தில் இறந்து போனான்.

அதன் பின், தான் மத்திய தேசத்தில் மனிதப் பிறவி பெற்றான். இவன் முன் செய்த பாவங்கள் பயனாய் அவனுக்குப் பெண் குழந்தைகளே பிறந்தன. அவன் மனைவி உடலில் எப்பொழுதும் காய்ச்சல் அடித்துக்கொண்டிருந்தது. எப்பொழுதும் துன்பமே அனுபவித்து வந்தான். இதற்கு சாந்தி முறை கேட்பாயாக!

இவன் முதலில் விஷ்ணுவின் கேசவ மூர்த்தியை பூசிக்க வேண்டும். சாதுக்களை சேவை செய்ய வேண்டும். பிராமணர்களுக்குத் தானமும் போஜனமும் செய்விக்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் கன்றுடன் பசுவை உத்தம பிராமணர்களுக்குத் தானம் பண்ண வேண்டும். விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணமும் ஹரிவம்ச புராணமும் பாராயணம் செய்விக்க வேண்டும். இதனால் இவன் பூர்வ பாவங்கள் தீரும். இவனுக்கு தீர்க்காயுளுள்ள ஆண் சந்ததி பல கட்டாயம் ஏற்படும்.

## இவனுக்குத் தோன்றும் நோய் கண்டம் முதலியன

இவன் பிறந்த ஆண்டில் ஆதித்தன் தசையில் தத்து, 9 வயதில் நாய்க்கடியால் கண்டம், 17 வயதில் வெதுப்பும் (சுரம்) வயிற்று நோயும், 23 வயதில் ஜல கண்டம், 27 வயதில் சுரம் காய்ச்சல் பெண்களாலும் (கலகம் நோய்) 30 வயதில் வயிற்று நோயால் விஷத்தால், இராஜபயம், 38 வயதில் மீண்டும் ராஜாங்கத்தால் பயம். 40 வயதில் சுரம், வயிற்று நோய், 55 வயதில் ஆயுதம் தாக்கிக் கண்டம், 60 வயதில் ஒற்றைத் தலைவலி மற்றும் நாற்கால் மிருகத்தால், சனியால் 72 வயதில் சுரம் வாதம் இவற்றால். 81 வயதில் வெதுப்பும் சுரமும், 86 வயது சென்று சித்திரை மாதம் பூர்வபட்ச சதுர்த்தசியும், சோம வாரமும் உத்திர நட்சத்திரமும் 3 நாழிகைக்கு வெதுப்பு தோன்றி இறைவனடி சேர்வான்.

நட்சத்திரம் 2

**இவன் பிறந்தபோது லக்னம்**

சூரியன் சாரமானால் - சீமான்

சந்திரன் சாரமானால் - தனவான்

செவ்வாய் சாரமானால் - சேவகன்

புதன் உதயமாகில் - அரசன் (M.L.A., M.P. மந்திரி)

சுக்கிரன் உதயமாகில் சத்துரு ஜெயம்

ராகு உதயமாகில் - கோளன் மூர்க்கன்

கேது உதயமாகில் - சோம்பல், ஊர் சுற்றி

சனி உதயமாகில் - கள்ளன், கடைப்பட்ட மனிதன்

இதில் சுரம் தோன்றில் 16 நாழிகையில் விடும். விடாதிருந்தால் நெய்யினால் ஓமம் செய்து தயிர் சோறு பலியிடவும். (படைக்கவும்)

ஊர் வழி போகில் பால் குடித்துப் போவது இந்த நட்சத்திரம். 1ம் கால் மாதா பிதா தோஷம் 2ம் கால் மாதா தோஷம்.

**உத்திர நட்சத்திர மகா திசைகள்**

| | | |
|---|---|---|
| சூரியன் | 6 வருடம் | |
| சந்திரன் | 10 | ,, |
| செவ்வாய் | 7 | ,, |
| ராகு | 18 | ,, |
| குரு | 16 | ,, |
| சனி | 19 | ,, |
| புதன் | 17 | ,, |
| கேது | 7 | ,, |
| சுக்கிரன் | 20 | ,, |
| ஆக வயது | 120 | ,, |

## பிறர் மதப்படி உத்திரம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்கள்

### பொதுப்பலன் - ஆண்கள்

பொதுவாக உயரமாகவும், பருமனாகவும் இருப்பான். நீண்ட மூக்கும், பெரிய முகமும் கொண்டவன். கழுத்தின் வலது பக்கத்தில் கறுப்பு மச்சம் இருக்கும்.

### குணநலன்கள்

வாழ்க்கை சந்தோஷமயமாய் இருக்கும். இவன் பல விதங்களில் அதிர்ஷ்டத்தை உடையவன். சுத்தமான நடவடிக்கையும், பழக்க வழக்கங்களும் கொண்டவன். தான் செய்யும் எல்லா வேலைகளிலும் உண்மையாக செயல்படுவான். மதக் கோட்பாடுகளிலும் பற்றுள்ளவன். பொது ஜன சேவைக்காக நற்பெயரை பெறுவான்.

கோபக்கார மனிதன். தேவையான பொறுமையோ சகிப்புத் தன்மையோ இல்லாதவன். கோபம் வந்துவிட்டால் இவனை அடக்குவது மகா கடினம். கைமிஞ்சி போன பிறகு தன்னுடைய வெளிப்பாட்டைக் குறித்து வருத்தப்படுவான். இருந்தாலும் தன்னுடைய தவறை எதன் பொருட்டும் ஒப்புக்கொள்ளமாட்டான். அவன் செய்தது தவறுதான் என்று நிரூபித்துக் காட்டினாலும் அதை ஒத்துக்கொள்ளாது தான் செய்ததுதான் சரியென்று கூறுவான்.

இவன் செய்யும் காரியங்களுக்கு சரியான காரணம் இருக்கும். மிகவும் சாதுர்யமானவன்.

### கல்வி-தொழில்

சுதந்திரத் தன்மை உடையவன். பலவித பொறுப்பு களை ஏற்றுக்கொண்டு. அவற்றை பழுதில்லாமல் சிறந்த முறையில் செய்து முடிப்பான். இவன் பிறரை ஏமாற்ற மாட்டான். பிறரும் இவனை ஏமாற்றுவதை விரும்ப மாட்டான். பொது ஜன தொடர்பு உள்ள வேலைகளில்

பிரகாசிப்பான். இவனுடைய இயல்பான, பிறருடன் நல்ல முறையில் பழகும் பண்பே இவனுடைய வெற்றிக்கு காரணமாக அமையும். பொது ஜனத் தொடர்பான விவகாரங்கள் மூலம் நிறைய சம்பாதிப்பான். பிறருடைய வேலைகளில் காட்டும் உண்மையை தன் சொந்த வேலையில் காட்டமாட்டான். ஒரு முறை ஒரு முடிவு எடுத்துவிட்டால், அந்த முடிவை யாராலும் மாற்ற முடியாது. பிறவியிலேயே ஏற்பட்ட கடினமாக உழைக்கும் தன்மையால் ஒரு நல்ல ஸ்தானத்தை எட்டுவான். ஒரு ஆசிரியர் எழுத்தாளர் அல்லது விஞ்ஞானத் துறையில் ஆராய்ச்சியாளன் போன்ற வேலைக்கு மிகவும் பொருத்தமானவன். சிலர் டியூஷன் சொல்லித் தருவதின் மூலம் அதிகப்படியான சம்பாதனை பெறுவர்.

32 வயது வரை வாழ்க்கை இருள்மயமாக இருக்கும். அதன் பிறகு 38 வயதுவரை கொஞ்சமாக முன்னேற்றம் ஏற்படும். 38 வயதுக்கு மேல் வேகமாக முன்னேற்றம் ஏற்பட்டு இவனுடைய ஆசைகள் பூர்த்தியாகும். அதன் பின் 62 வயது வரை வாழ்க்கை அமைதியாக ஆனந்தமாக இருக்கும். தன்னுடைய 50வது வயதுகளில் செல்வமும் புகழும் பெறும் அதிர்ஷ்டசாலியாக இருப்பான். தன் முயற்சியால் சுயமாக சம்பாதித்த சொத்துக்களே இருக்கும். கணிதம் அல்லது எஞ்ஜினியரிங்கில் வல்லவன். வான இயல், சோதிடம் இவற்றிலும் கூட சிறந்தவன். விளம்பரத் தொழிலில் சிறந்த வெற்றியைக் காண்பான்.

**குடும்ப வாழ்க்கை**

திருமண வாழ்க்கை ஏறக்குறைய நல்ல விதத்திலேயே அமையும். தன் குடும்ப வாழ்க்கையில் நல்ல திருப்தியை காண்பான். சுக்கிரன் புதனுடன் சேர்ந்தாலோ அல்லது பார்த்தாலோ, இவனுக்கு இரண்டு திருமணம் ஏற்படலாம். இவன் மனைவி சிறந்த முறையில் குடும்பத்தை நடத்திச் செல்வாள்.

**ஆரோக்யம்**

பொதுவாக நல்ல ஆரோக்யத்தை உடையவன். உடல் வலி, பல் வியாதி, வயிற்றில் வாயு தங்குதல் போன்ற சிறு சிறு வியாதிகள் இவனை அணுகக்கூடும். செவ்வாய் கெட்டிருந்தால், லிவர், குடல் இவற்றில் கோளாறுகள் தோன்றும்.

**பொதுத்தன்மை - பெண்கள்**

அநேகமான ஆண்களுக்குச் சொல்லப்பட்ட பலன்களே பெண்களுக்கும் பொருந்தும். இதுவன்றி

**உடல் தோற்றம்**

நடுத்தர உயரம். மிருதுவான உடல், மாநிறம் சற்று பெரிதான மூக்கு. இவ்வாறு உடல் தோற்றம் காணப்படும். சிலருக்கு விசித்திரமான அடையாளக்குறி கருப்பு மச்சம் போல் முகத்தில் காணப்படும்.

**குண நலன்கள்**

அமைதியான, எளிமையான, குணத்தைக் கொண்டவன். ஒருவருடன் ஏற்படும் விரோதத்தை பல வருடங்களுக்கு மறக்க மாட்டாள். எப்போதும் சந்தோஷமாக காணப்படுவாள். ஒரு சட்டதிட்டமான கொள்கை உடையவள்.

**கல்வி-தொழில்**

இயற்கையிலேயே விஞ்ஞானத்தின் பின் புலமும், கணிதத்தில் சிறப்பு ஞானமும் பெற்றவள். ஆதலால் இவள், டீச்சர், லெக்சரர், அல்லது நிர்வாகம் போன்ற உத்தியோகங்களுக்கு பொறுத்தமானவள். ஆஸ்பத்திரி சுகாரத்துறை போன்றவற்றிலும் சம்பந்தப்பட்டிருப்பாள். சிறந்த மாடலாகவோ அல்லது நடிகையாகவோ பணம் சம்பாதிப்பாள்.

## குடும்ப வாழ்க்கை

கணவன், மக்களிடமிருந்து அதிக சந்தோஷத்தை அனுபவிப்பாள்.வீட்டு வேலைகளை நிர்வாகம் செய்வதில் கெட்டிக்காரி. இவள் கணவன் சுமாரான பணக்காரனாக இருப்பான். இவள் தன்னுடைய ஆடம்பரமாக இருக்கும் ஆசையை கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அண்டை வீட்டுப் பெண்கள் ஆடம்பரமாக இருப்பதைப் பார்த்து பொறாமைப்பட நேரும். அவர்கள் இவளுடைய கணவன் வீட்டு உறவினர்களுடன் சேர்ந்துகொண்டு இவள் வாழ்க்கையில் சில எதிர்பாராத சிக்கல்களை உருவாக்குவார்கள்.

## ஆரோக்யம்

நல்ல உடல் ஆரோக்கியம் உள்ளவள். மாதவிடாய்க் கோளாறுகள், அதிக உபத்திரவம் தராத ஆஸ்துமா, கடுமையான தலைவலி ஆகியவை இவளை பிடிக்கக்கூடும்.

உத்திரத்தில் ஒரு பெண் ருதுவானால் அவள் பாக்கியசாலி, எல்லோரும் இவளை விரும்புவர். நண்பர்கள் குழாத்தின் தலைவியாக இருப்பாள். சிறப்பான செயல்களில் ஈடுபடுவாள். குழந்தை பாக்கியமும் உண்டு.

## உத்திரத்தில் உள்ள கோள்களை இதர கோள்கள் பார்த்த பலன்

### சூரியன்

உத்திரத்தில் உள்ள சூரியன், சந்திரன் முதல் சனி வரை பார்த்த பலன்களை அறிய திருவாதிரைக்கு சொல்லப்பட்ட பலன்களைப் பார்க்கவும்.

### சந்திரன்

உத்திரத்தில் உள்ள சந்திரனை மற்ற கிரகங்கள் பார்த்த பார்வையின் பலன் அறிய திருவாதிரை நட்சத்திரத்திற்கு சொல்லப்பட்ட பார்வையின் பலன்களை காணவும்.

**செவ்வாய் முதல் சனி வரை**

உத்திரத்தில் நின்ற செவ்வாய் முதல் சனி வரையிலான கிரகங்களை மற்ற கிரகங்கள் பார்த்த பார்வையின் பலனை அறிய, திருவாதிரைக்கு சொல்லப்பட்ட பார்வையின் பலன்களை பார்க்கவும்.

**உத்திரத்தின் பாதங்களில் நின்ற கோள்களின் பலன்**

**உத்திரம் 1ம் பாதத்தில் சூரியன் நின்ற பலன்**

சூரியன் இதில் இருந்து, பூரட்டாதி லக்னமாக அமையுமானால், ஜாதகனுடைய சகோதரனுக்கு மரணம் சம்பவிக்கும். ஜாதகன் அதிக உற்சாகமுடையவன். வாயாடி, மூர்க்கம் நிறைந்தவன், உயர்ந்ததாக எதையும் அடையவேண்டும் என்ற ஆசை உடையவனாதலால் கீழ்ப்படியும் வேலைகளில் இருக்க மாட்டான். ஓரளவு பொஸிஷன். அந்தஸ்து உள்ள வேலையில் இருப்பான்.

**உத்திரம் 1ல் சந்திரன் நின்ற பலன்**

தைரியமானவன், கர்வம் நிறைந்தவன். ஆனால் தன் தாயிடம் கீழ்ப்படிவான். உயர்ந்த அல்லது அகலமான கன்னம் உடையவன். இதிலேயே லக்னமும் அமைந்து சனியும் இங்கிருந்தால், ஜாதகன் தன் குழந்தைப் பருவத்திலேயே தாயையும் சகோதரியையும் இழந்து விடுவான். ஏராளமாகவும் சம்பாதிப்பான். ஏராளமாகவும் இழக்கவும் செய்வான்.

**உத்திரம் 1ல் உள்ள செவ்வாய் தரும் பலன்**

இந்த செவ்வாய்க்கு சேர்க்கை, பார்வை பிற கிரங்களிடமிருந்து ஏற்படாதிருந்தால், ஜாதகன் ஒரு ஏழை. எதையும் பொறுத்துக் கொள்ளும் தன்மை உடையவன். காடுகளை தன் பிரயாண ஸ்தலமாகக் கொள்வான். நல்ல மனைவியையும், ஓரிரு குழந்தைகளையும் கொண்ட சிறுகுடும்பத்தை உடையவன்.

லக்னம் சதயத்தில் அமைந்து, இங்கு சனியும் செவ்வாயும் இருந்தால் அந்த பெண் ஜாதகி விதவை ஆவாள். அவள், விபசாரியாகவும் சம்பாதிப்பாள்.

### உத்திரம் 1ல் உள்ள புதன் தரும் பலன்

அரசாங்க ஸ்தாபனத்தில் அக்கவுண்டன்ட் அல்லது பைனான்ஸ் எக்ஸிகூடிவ் ஆக இருப்பான். வான இயல், சோதிடம் இவற்றில் அறிவுள்ளவன். சந்திரன் இவனைப் பார்த்தால் சிலர் கெமிக்கல் எஞ்ஜினீயராக இருப்பார்.

### உத்திரம் 1ல் உள்ள குரு தரும் பலன்

லக்னம் பூசத்தில் அமைந்து, இங்கு குரு, செவ்வாய், சனி மூவரும் இருந்தால் அத்துடன் ராகுவும் ஹஸ்தத்தில் இருந்தால் ஜாதகன் சகோதரனுக்கு ஆபத்து ஏற்படும். ஜாதகன் ஸ்பெகுலேஷன் தொழிலில் ஈடுபடுவான்.

### உத்திரம் 1ல் சுக்கிரன் தரும் பலன்

ஆண்கள், பெண்கள் மூலமாக செல்வத்தை அடைவார்கள். அழகிய மனைவியும், ஓரிரு குழந்தைகளும் உள்ளவன். நிதானமானவன். கருணை உள்ளவன். பிறருக்கு உதவியாக இருப்பான்.

### உத்திரம் 1ல் சனி தரும் பலன்

லக்னம் இதில் அமைந்து, சந்திரனும் ராகுவும் உத்திரட்டாதியில் இருந்து செவ்வாயும் கேதுவும் அஸ்தத்தில் இருந்தால் ஜாதகனின் 7வது வயதிற்குள் இவன் தாய் தன் 3வது குழந்தையை பிரசவிக்கும்போது மரிப்பாள். இவனுக்கு ஒரே ஒரு சகோதரன் உண்டு. மேல் சொல்லப்பட்ட கிரக அடைவுகளுடன் சுக்கிரனும் ரோகிணியில் இருந்தால் இவன் சகோதரன் அயல் நாட்டில் செட்டில் ஆவான். அவன் மூலம் ஜாதகனுக்கு பெருத்த ஆதாயம் ஏற்படும்.

**உத்திரம் 1ல் உள்ள ராகு தரும் பலன்**

கழுத்தில் கருப்புநிற மச்சம் இருக்கும். ஏழை, அநியாயக்காரன், பிறருடைய செல்வத்தையும், சொத்தையும் திருடுவான். ஒரு விபத்தின் மூலம் உயிர் விட நேரும்.

**உத்திரம் 1ல் உள்ள கேது தரும் பலன்**

இந்த கேது சற்று நல்ல பலன்களை தரக்கூடியவன். நல்ல திருமண வாழ்க்கையும், ஆரோக்கியத்தையும், செல்வத்தையும் ஜாதகனுக்கு அளிப்பான். பெண் பிள்ளைகளாகவே பிறக்கும். ஆஸ்துமா, லங்ஸ் அல்லது கல்லீரல் கோளாறுகள் இவனை பீடிக்கலாம்.

**உத்திரம் 2ல் உள்ள சூரியன் தரும் பலன்கள்**

சிறந்த எழுத்தாளனும், தத்துவவாதியுமாக இருப்பான். பெண் ஜாதகிக்கு, லக்னம் உத்திரட்டாதியில் அமைந்து சூரியனும் உத்திரம் 2ல் இருந்தால், இவள் பல நல்ல பண்புகள் பெற்றிருந்தாலும் பிடிவாதகாரியாக இருப்பாள். தன் கணவனிடம் அன்பு செலுத்த மாட்டாள். சிலருக்கு கணவனிடமிருந்து பிரிவோ அல்லது டைவர்ஸோ பெற்று வாழ நேரும்.

**உத்திரம் 2ல் உள்ள சந்திரன் தரும் பலன்**

பலவகையான மனநிலை உடையவன், அழகன். அதிக பெண்களை பெறுவான். பல பெண்களுக்குப் பிறகு ஒரே ஒரு மகன் பிறப்பான். ஏகமாக நஷ்டங்கள் ஏற்படும். மத நம்பிக்கையும், தரும குணமும் உடையவன். சூழ்நிலையில் மாற்றத்தை எப்போதும் விரும்புவான். அஜீரணம் மற்றும் ஈரல் கோளாறுகள் உள்ளவன். பிளாக் மேஜிக் போன்ற மறைவான, ரகசிய விஞ்ஞானங்களில் ஆர்வம் உடையவன்.

**உத்திரம் 2ல் உள்ள செவ்வாய் தரும் பலன்**

இங்குள்ள செவ்வாயுடன், லக்னமும் உத்திரட்டாதியில் அமைந்தால் பெண்ணாகப் பிறந்தவள் தன் 30வது வயதில் விதவையாவாள். ஜாதகன் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் டாக்டர் அல்லது சர்ஜன் அல்லது பார்மஸிஸ்டாக இருப்பார்கள்.

**உத்திரம் 2ல் உள்ள புதன் தரும் பலன்**

அக்கவுண்ட அல்லது பைனான்ஸ் எக்ஸ்கூடிவ் அல்லது வணிகம், பொருளாதாரத்தில் ஆசிரியனாக இருப்பான். மதசம்பந்தமான புத்தகங்கள் எழுதி பொருளீட்டுவான். சிவில் எஞ்ஜீனீயர் அல்லது பில்டிங் காண்ட்ராக்டராகவும் இருக்கலாம்.

**உத்திரம் 2ல் உள்ள குரு தரும் பலன்**

இந்த இடத்தில் லக்னமும் அமைந்து, ரேவதியில் உள்ள ராகுவும் இங்கிருந்தால் இடதுகையில் பர்த்மார்க் இருக்கும். ஜாதகன் இலக்கிய சம்பந்தமானவைகளால் சம்பாதிப்பான். ஸ்பெகுலேஷன் மூலமும் வருமானம் வரும். குடல் வியாதிகளை அனுபவிப்பான்.

**உத்திரம் 2ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

ராகு ரேவதியில் இருந்து, லக்கனமும் இங்கு அமைய நேர்ந்தால் இடது காதில் அல்லது உடலில் அடையாளக் குறி ஏதாவது இருக்கும் இவனுடைய நிதி நிலைமை எப்போதும் நெருக்கடியாக இருக்கும். இவனுடைய மனைவியின் முட்டாள் தனத்தால் இவன் குடும்ப வாழ்க்கையில் எந்த சந்தோஷத்தையும் பெற முடியாது. விவசாயியாகவோ அல்லது மருந்துகள் விற்கும் பிஸினஸ்ஸிலோ தன்னை ஈடுபடுத்திக் கொள்வான்.

**உத்திரம் 2ல் சனி தரும் பலன்**

லக்னமும் உத்திரட்டாதியில் இருந்து சனியுடன் உத்திரம் 2ல் இருந்தால் ஜாதகர் பெண்ணானால் பேரழகியாக

இருப்பாள். 25 வயதுக்குப் பிறகு தலைமுடி நிறம் மாறி இவளுடைய தோற்றத்தை முழுவதுமாக மாற்றிவிடும். அதனால் இவள் திருமணம் 22 வயதுக்குள் முடித்துவிட வேண்டும். இல்லாவிட்டால் நரை விழுந்த முடியால் இவளது திருமணம் நடக்காமலேயே போய் விடும்.

**உத்திரம் 2ல் ராகு தரும் பலன்**

வாழ்க்கையில் எதையாவது அடைய வேண்டும் என்கின்ற தீவிர ஆசையை உடையவன். நிலையான கொள்கையும், எதையும் முறைப்படி செம்மையாக செய்யும் குணமும் உடையவன். ஸ்பெகுலேஷன் சட்ட விரோத நடவடிக்கைகள் மூலம் நிறைய சம்பாதிப்பான். குடும்ப வாழ்க்கை நல்ல விதமாக அமையாது.

**உத்திரம் 2ல் கேது தரும் பலன்**

பழிவாங்கும் குணம் உண்டு. தன் மனைவி மூலம் ஏராளமான செல்வத்தை அடைவான். ஆனால் மனைவியின் ஆயுள் குறைவு.

**உத்திரம் 3ல் நின்ற சூரியன் தரும் பலன்**

பெண்ணைப் போன்ற நளினமான உடல்வாகு பெற்றவன். ஒரு கவிஞனாகவோ, பெயிண்டராகவோ இருக்கலாம். தன்னுடைய கூச்ச சுபாவத்தால் பொது ஜனத் தொடர்பான காரியங்களை நடத்துவதில் கஷ்டத்தை உணர்வான். தந்தையிடம் பக்தி விசுவாசம் உடையவன். எல்லோரிடமும் பணவுடன் நடந்துகொள்வான்.

**உத்திரம் 3ல் உள்ள சந்திரன் தரும் பலன்**

கவர்ச்சிப் பொலிவு கொண்டவன். அனேக பெண் குழந்தைகள் உள்ளவன். தன் சகோதரர்களுடன் நல்ல உறவு இருக்காது. தன் வேலைகளில் சமர்த்தன். பேராசைக்காரன் இல்லை. வேத சாஸ்திர விஷயங்களில் தீவிர ஆர்வமுள்ளவன். தான் இருக்கும் தொழிலில் 40 வயதிற்கு மேல் புகழ் பெறுவான்.

**உத்திரம் 3ல் உள்ள செவ்வாய் தரும் பலன்**

இந்த செவ்வாயுடன், லக்னமும் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் இருந்தால், பெண்ணானால் தன் 44ம் வயதில் விதவையாவாள். ஆணானால் தன் 40வது வயதில் மனைவியை இழப்பான். இந்த ஜாதகர்கள் தங்கள் தங்கள் வழியில் வெற்றியை அடைவதற்கு மிகவும் கடினமாக போராட வேண்டியிருக்கும்.

**உத்திரம் 3ல் உள்ள புதன் தரும் பலன்**

பல உயர்ந்த குணங்களைக் கொண்டவன். நன்கு படித்தவன். தாராளமானவன். ஹோட்டல் அல்லது டூரிஸம் தொடர்பான தொழிலில் வேலையில் இருப்பான். புதனை சந்திரன் பார்த்தால் கெமிக்கல் எஞ்ஜினியர். புதனை செவ்வாய் பார்த்தால் சிவில் எஞ்சினியராக இருப்பான்.

**சுக்கிரன் 3ல் தரும் குரு பலன்**

குரு இதில் இருக்கும்போது செவ்வாய், சனி, ராகு, சூரியன் ஆகிய நால்வரும் திருஓண நட்சத்திரத்திலிருந்தால் ஜாதகனுடைய மகன்களுக்கு அபாயம் ஏற்படும்.

இது லக்னமாக அமைந்து, புதனும் குருவும் கூட உத்திரம் 3ல் இருந்து, செவ்வாய் திருஓணத்திலும் சந்திரன் பூசத்திலும் அமைந்த பெண் ஜாதகி ஏழைக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் ஒரு பெரிய பணக்காரனை கணவனாக அடைவாள் என்பது உறுதி.

**உத்திரம் 3ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

இந்த சுக்கிரனுடன், செவ்வாய் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் அமைந்திருந்தால் ஜாதகனின் மனைவி இறந்து விடுவாள். பெண் குழந்தைகள் அதிகமிருக்கும். இரண்டாவது திருமணம் செய்து கொள்ளமாட்டான். இருந்தாலும் இதர பெண்களுடன் ரகசியத் தொடர்பு வைத்திருப்பான்.

**உத்திரம் 3ல் உள்ள சனி தரும் பலன்**

லக்னமும் உத்திரட்டாதியில் இருந்து இந்த சனி இங்கிருந்தால் பெண் ஜாதகியின் கணவன் நிரந்தர நோயாளியாக இருப்பான். ஜாதகன் அக்கல்டிஸத்திலும் மறைந்த புராதனக்கலைகளை ஆராய்ச்சி செய்வதிலும் ஆர்வம் மிகுந்தவன்.

**உத்திரம் 3ல் உள்ள ராகு தரும் பலன்**

பொதுவாக காலம் கடந்தே திருமணம் நடைபெறும். நிறைய பொருள் நஷ்டம் அடையும். அதிக SEXல் ஈடுபடுவான். அதனால் வியாதிகளையும் அடைவான்.

**உத்திரம் 3ல் உள்ள கேது தரும் பலன்**

நன்கு படித்தவன். அக்கல்டிஸம், ஜோதிடம், அஸ்ட்ரானமி முதலியவைகளில் விருப்பம் உள்ளவன். கிளர்க், டைபிஸ்ட், ஸ்டெனோ போன்ற உத்தியோகத்தில் இருப்பான். 40வது வயதில் தன் உத்தியோகத்தில் எதிர்பாராத உயர்வை அடைவான்.

**உத்திரம் 4ல் உள்ள சூரியன் தரும் பலன்**

சூரியனுடன் சந்திரனும் உத்திரம் 4ல் இருந்து பாபிகளால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் தன் உறவினர்கள் கையில் சிக்கிப் பலவித சிக்கல்களில் மூழ்குவான். சிலசமயம் அவர்களால் இவன் உயிருக்கே ஆபத்து ஏற்படும்.

**உத்திரம் 4ல் உள்ள சந்திரன் தரும் பலன்**

ஜாதகன் பாக்கியசாலி, செல்வந்தன். அதிக பணத்துக்கு ஆசைப்படாதவன். தனக்கு உள்ள சிறிய லாப ஆதாயத்திலேயே திருப்தி அடைபவன்.

உத்திரம் 4ல் லக்னம் அமைந்து செவ்வாயும் சுக்கிரனும் உடன் இருந்து, சந்திரனும் இதில் இருந்தால் ஜாதகன் உடலில் ஒரு விசித்திரமான அடையாளக்குறி அல்லது வெட்டுக்காய தழும்பு அல்லது மச்சம் இருக்கும்.

### உத்திரம் 4ல் உள்ள செவ்வாய் தரும் பலன்

அவசரக்காரன். பிடிவாதக்காரனும் கூட. நரம்புத் தளர்ச்சியால் வருந்துவான். இதில் உள்ள செவ்வாயை சனி பார்த்தால் ஜாதகன் மனக்கோளாறு, கான்சர் அல்லது ஹிஸ்டீரியா நோயால் கஷ்டப்படுவான். குடும்பத்திலும் சந்தோஷம் என்பது இராது.

### உத்திரம் 4ல் உள்ள புதன் தரும் பலன்

நல்ல வருமானம் உள்ளவன். ஆரம்பத்தில் அக்கவுண்டன்ட் அல்லது பைனான்ஸ் எக்ஸிகூடிவ் ஆக இருந்து தன் 45வது வயதில் அந்த வேலையைத் துறந்து வேறு வேலையில் சேருவான். அனேகமாக ஜோதிடனாகவோ, மத சம்பந்தமான புத்தகங்கள் எழுதும் எழுதத்தாளனாகவோ, மாறுவான்.

### உத்திரம் 4ல் உள்ள குரு தரும் பலன்

அரசியலில் மேல் இடத்தைப் பெறுவான். உலகத்து வாழ்விற்குத் தேவையான பொருள்கள் அனைத்தும் உடையவன். பெரும் புகழ் அடைவான். நல்ல குழந்தைகளும், நண்பர்களையும் உடையவன். ஜாண்டிஸ் அல்லது இருதய கோளாறு இருக்கும்.

### உத்திரம் 4ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்

சுக்கிரன் இங்கிருக்கும் பலன் நல்லதும் கெட்டதும் கலந்ததாக இருக்கும். இதுதான் பலன் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. சிலர் உயர்ந்த பொசிசனை அடைவார்கள். இவர்கள் வாழ்க்கையும் ஒற்றுமையாக, சந்தோஷமாக கழியும். சிலர் தன் மனைவியிடம் அகப்பட்டுக் கஷ்டப் படுவார்கள். ஏழையாகவும் இருப்பார்கள்.

### உத்திரம் 4ல் உள்ள சனி தரும் பலன்

வராஹமிஹிரரின் கூற்றுப்படி ஜாதகன் புத்திர பாக்யம் இல்லாதவன். ஏழை. வாழ்க்கையில் சந்தோஷமில்லாதவன்.

ஏதாவது பொருட்களை அல்லது ஜனங்களை காப்பாற்றும் அதிகாரியாக இருப்பான். முக்கியமான அல்லது முதன்மையானவனாக இருப்பான். தீயவர் கூட்டத்திற்கு தலைவனாக இருப்பான்.

**உத்திரம் 4ல் உள்ள ராகு தரும் பலன்**

நாணயமில்லாதவனாகவும், வறுமையில் வாடுபவனாகவும் இருப்பான். தன்னுடைய தாய் மாமனுக்கு அதிக தொந்தரவுகள் கொடுப்பான். அல்லது அவனுக்கு ஆபத்தை விளைவிப்பான். இவன் பயங்கரமான ஆக்ஸிடண்டில் சிக்கி உடலின் ஏதாவது அங்கத்தை இழப்பான்.

**உத்திரம் 4ல் உள்ள கேது தரும்** பலன்

இவனுக்கு அடிக்கடி ஆக்ஸிடண்ட் ஆகும் சந்தர்ப்பம் ஏற்படுமாதலால், இவன் வாகனங்களை ஓட்டவே கூடாது. அரசாங்க உத்தியோகம் ஏற்படும். இதர கிரகங்களால் இந்த கேது கெட்டிருந்தால் ஜாதகன் தான் செய்யும் வேலையை விட்டு, ஏதாவது பிஸினஸ் ஆரம்பித்து அதில் நஷ்டத்தையும் அடைவான்.

**குறிப்பு:**

உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் எந்த காரணத்தைக் கொண்டும், சித்திரை, விசாகம், பூரட்டாதி, புனர்பூசம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுடன் எவ்வித உறவோ, தொடர்போ, கொடுக்கல் வாங்கலோ வைத்துக் கொள்ளக்கூடாது.

## அத்தியாயம் 17

## கன்னி ராசி பொதுகுணங்கள்

சாலவே நல்லனாகும் தந்தையாய் தம்மைப்பேணும்
பாலனாங் காலந்தன்னில் பரிந்து போய் வந்து நிற்கும்
சீலமும் அறிந்து வாழும் சிறப்புடன் இனிது பேசும்
காலிலே மறுஉண் டென்றும் கன்னியின் ராசிதானே 120 (சுவடி 1500)

***சுவடி எண் 1500 மரண கண்டிகை***

கன்னி ராசியில் பிறந்த இவன் மிகவும் நல்லவன் ஆவான். தன் தாய் தந்தையரை அக்கரையுடன் பாதுகாத்து போற்றுவான். இளமையில் கொஞ்சம் கஷ்டப்படுவான். நல்ல ஒழுக்கம் உள்ளவன். சிறப்பாக இனிமையாக பேசும் பேச்சாற்றல் உள்ளவன். இவன் கால் பாதத்தில் ஏதாவது மச்சம் அல்லது மறு இருக்கும் என்பதாம்.

இது 6வது ராசி. பெண் ராசி உபய ராசி. அதனால் எந்நிலைக்கும் தன்னை சரி செய்து கொள்ளும் தன்மை உண்டு. பஞ்ச பூதத்தில் மண், பூமி. அதனால் பொறுமையும் செயல் திறனும் அனுபவமும் உண்டு. கன்னிப்பெண் கையில் நெல் அல்லது கோதுமைப் பயிர் தாங்கிய உருவம். இவள் வாலைப் பெண் கடவுளின் வடிவம். கிருஸ்தவர்களின் புனித மேரியும் இவளே. கையில் தானியக் கதிர் உலக ரக்ஷகத்திற்கு உணவளிக்கும் தாய்மையைக் குறிக்கும். ஆனால் கன்னிமை உண்டு.

நல்ல நிர்ணயத் திறன், தேர்வுத் திறன், விமர்சனத்திறன் முடிவெடுத்தல் ஒரு விஷயத்தைப் பற்றி தெளிந்த சரியான அபிப்பிராயம் கூறல் எல்லாம் இந்த ராசிக்காரர்களுக்கு உண்டு. பார்க்கப் போனால் காலச்சக்கரமான ராசி மண்டலத்தினை இழுத்து நல்வழிப்படுத்தும் நீலவேணிக் குதிரையே இந்த கன்னிராசி என்று சொல்லலாம்.

**உருவம்**

மெல்லிய ஆனால் கவர்ச்சியுள்ள உயர்ந்த உருவம் பார்த்தவர் இவரைப் படிப்பாளி, வாழ்க்கை வழிகாட்டி என்று உடனே புரிந்து கொள்ள வைக்கும் சதுர விசாலமான மேட்டு நெற்றியுள்ள உருவம். முகத்தில் கண், உதடு, மூக்குகள் அழகைக் குறிக்காவிட்டாலும் அசிங்கமாக இல்லாமல் அமையும். விரைந்த நடை நடப்பதில் உழைப்பு சிரமம் இருப்பது போல் தோன்றும். இந்த ராசி பெண்கள் பெண் ராசியாயினும் அழகிகள் அல்லர். ஆனால் கன்னி ராசியாகையால் பல குழந்தைகள் பிறந்த பின்னும் கன்னியுடன் கட்டுக் குலையாத உடல் வலிவு உள்ளவர்கள். ஆனால் கன்னி ராசியின், முன்னால் சொன்ன அறிவியல் திறன் கொண்ட இந்த பெண்கள், வாழ்க்கையில் கணவனுக்கு மற்றவர்களை காட்டிலும் அதிகம் உதவக் கூடியவர்கள்.

**காதல் கல்யாணம்**

இவர்கள் லட்சியக் காதலர்கள்தான். ஆனால் காம இச்சை அதிகம். அதைப் பூர்த்தி செய்யும் உடல் கட்டுள்ளவர்களே. ஆணாயினும் பெண்ணாயினும் இவர்கள் அன்பை நிரந்தரமாக நிலைத்து வைத்துக்கொள்ள முடியும். அழகைப் பெரிதாக எதிர்பார்க்காவிட்டாலும் அன்பையும் அதே சமயத்தில் பாலுணர்வையும் தீர்த்து வைக்க முடிந்தவர்களா என்றே எதிர்பார்ப்பர். இதில் எளிதில் களைத்துவிடும் பெண்கள் "கன்னி" கணவன்மார்களின் அன்பை இழக்க நேரிடும். லட்சிய மக்களைப் போற்றி வளர்த்தால் கற்பு என்றாம் இந்த ஆண் பெண்கள் லக்ஷணம் இவர்களின் தாம்பத்திய திருப்தி சரியாக அமைந்து விட்டால் மணவாழ்க்கை வாடாத கற்பகச் சோலையாகும்.

**தொழில்**

அறிவுத்திறன் பற்றி எத்தொழிலும் ஏற்கும் ஆடிட்டர், இஞ்ஜினியர் கப்பல் துறை அலுவலர் சனி பார்வையானால் தொழிற்சாலை அலுவலர், 10ம் வீடு மிதுனம், அதிபதி புதனே, ஆகையால் அதற்கு சொல்லிய தொழில்கள் எல்லாம் ஏற்கும்.

ஜோதிட, எண்கலை பண்டிதர், மந்திர விற்பன்னர், வர்த்தக இயல் மேற்பார்வைத் திறனுடையவர், புள்ளி விவரம், கணிதம் வான சஸ்திரம் இவற்றில் நிபுணர், போதகர். இன்ஸ்யூரன்ஸ், சட்டத்துறை உதவியாளர், வங்கித்தொழிலர், கமிஷன் ஏஜன்ஸ், கீழ் நிலையில் அச்சகத் தொழிலாளர், பெயிண்டர் முதலிய தொழில் செய்பவர்.

*அதிர்ஷ்ட எண்கள்: 5, 3 சில சமயங்களில் 6*

*அதிர்ஷ்ட நிறம்: பச்சை, சாம்பல் நிறம்*

*அதிர்ஷ்ட நாள்: புதன், வியாழன், சனி*

*அதிர்ஷ்ட ரத்னம்: மரகதம், கனக மஞ்சள், புஷ்பராகம், சனி நன்கு அமையப்பெற்றவர்களுக்கு நீலம்*

*கன்னி லக்னமாக வந்தால் அதன் பலன் தருமவான். பின்னிரக்கமுள்ளவன். ஆசாரமுடையவன். நல்ல நடத்தையுடையவன். சுயகாரியபரன். மனோவஞ்சகன். பிறரால் தொழில்தனம் பேறுடையோன். ஜனப்பிரியன் ஹிதமஹிதம் இரண்டு செய்பவன். பின் வயதில் அதிக தனம் சம்பாதித்தலுடையவன். 5-8-9-10-18-19 இந்த வயதுகளில் நெருப்பு, பேதி, ஜ்வரம், வைசூரி இவைகளால் பீடை. சுபக்கிரக பார்வையுண்டாகில் 77 வயதுக்குக் குறையாமலிருப்பான். இந்த லக்னத்துக்கு சுக்கிரனும் சனியும் சுபர்கள். சந்திரன், செவ்வாய், வியாழன் இவர்கள் பாபிகள். புதனும் , சுக்கிரனும் யோககாரகர். இவர்கள் இருவரும் கூடியிருந்தால் பிரபலயோகம். சந்திரன், செவ்வாய், வியாழன் மாரகர்கள். சுக்கிரன் த்வீதீயாதிபதியாயிருந்தாலும் கொல்லான். மாரகஸ்தானமாகிய 2, 3, 7, 8, 12ல் இருந்தால் மாரகசமானமாகிய கண்டத்தைக் கொடுப்பார்கள்.*

**ஸத்தியாசார்ய மதப்படி கன்னி லக்னத்தில் பிறந்தவர்களின் பலன்**

**ப்ரியவாதி, அல்பகாந்திமான், நீண்ட கை கால்களை உடையவன், புண்ய பாபங்களுள்ளவன். பூசிக்கவுரிய**

சரீரமுள்ளவன், வர்ணமுள்ளவன், தனவான், உலோபி, பந்துக்களிடம் ஸ்நேகமுடையவன், அதிக பெண் சந்ததிகளுடையவன். உடன்பிறந்தாரிடம் கலகம் செய்பவன். தர்மத்தில் பிரியமுள்ளவன். குறைந்த வருமானமுள்ளவன். புத்தியுடன் கார்யத்தைச் செய்யக்கூடியவன். நாற்கால் ஜீவன், ஆயுதம், பித்தரோகம் சுற்றத்தார்களின் விரஹம், மலையிலிருந்து விழுதல், சருக்கு முதலியவைகளால் மரணம் சம்பவிக்கலாம்.

**இந்த லக்னத்திற்கு நல்லவர்கள் கெட்டவர்கள்**

செவ்வாய் 3, 8க்குடையவன், அசுபன், பிரபலமாரகன்

சந்திரன் 11க்குடையவன் அசுபன்

சூரியன் 12க்குடையவன் சமப்பலன் தருவான்

சுக்ரன் பாப சம்பந்தம் பெறவில்லை என்றால் 2ம் அதிபன் மாரகராயினும் கூட சுபபலன் தருவான்

புதன் கேந்திராதிபதி என்ற வகையில் சுபன். இவனுக்கு அவ்வளவாக கேந்திராதிபத்ய தோஷம் இல்லை.

குரு 4, 7க்குடையவன். 7ம் அதிபதி என்ற வகையில் மாரகம் செய்ய வல்லான்.

சனி 5, 6க்குடையவன். அசுபனே.

**சுபயோகங்கள்**

1 சூரியன் + புதன்

2 சூரியன் + சுக்ரன்

3 புதன் + சுக்ரன்

சூரியன் விரயாதிபதியாயினும் 11, 9, 2 இந்த அதிபதி யாருடன் சேர்ந்தாலும் நிறைந்த தனம் சேரும் தருவான். 5ம் சனி நலமாயினும் விவாஹம் தாமதம்.

# அத்தியாயம் 13

## ஹஸ்தம் நட்சத்திரம்

இது 13வது நட்சத்திரம். இராசி மண்டலத்தில் 160 பாகை முதல் 173 பாகை. 20 பாகை வரை பரப்பளவாக உள்ளது:

| | |
|---|---|
| தமிழ்ப்பெயர் | அத்தம் |
| வடமொழிப்பெயர் | ஹஸ்தம் |
| அரபுப்பெயர் | AL (AUWA) அல்அவுவா (குலைக்கும் நாய்) |
| கிரேக்கப்பெயர் | கோர்வி |
| சீனப்பெயர் | சின் |

இது ஐந்து நட்சத்திரக் கூட்டங்களாலானது. இதன் அதிதேவதை ஆதித்தன். அதிதியின் பிள்ளைகளான 12 ஆதித்தர்களில் ஒருவன்

***சுவடி எண் 1500 மரண கண்டிகை சொல்லும் ஹஸ்த நட்சத்திரப் பலன்***

மெத்த நல் நடையனாகும் வெகுளிய துடையனாகும்
சித்தம துடையனாகும் சிறுகுடி யானனாகும் உத்தம
குணத்த னாகும் உறுதியை இனிதாய் உன்னும் அத்தன்நல்
லறமே செய்யும் அத்தநாள் தோன்றினானே! (சுவடி எண் 1500)

(இதன் பொருள்) அத்த நட்சத்திரத்தில் பிறந்தவன் மெதுவாக ஒயிலாக (STYLE) ஆக நடப்பவன். இவனுக்குச் சித்தம் அதாவது மனம் ஒரு நிலையில் தன் வசப்பட்டு அலைபாயாமல் நிற்கும். இவன் குடும்பம் சிறியதாகவே இருக்கும். இவன் உத்தமகுணங்கள் உள்ளவனாக இருப்பான். ஒரே நிலையான நிர்ணயம், உறுதி. இந்த குணங்களை சிறப்பாக எண்ணி அவற்றில் சுற்றி உள்ளவர்களின் தலைவனாக இவன் விளங்குவான். இவையே அத்த நட்சத்திரத்தில் பிறந்தவனின் தன்மையாகும்.

இன்னாளுக்குத் தெய்வம் ஆதித்தன் பூதமம் (தேயு) சுவடியில் அக்கினி என்று உள்ளது. கோத்திரம் அகத்தியன், யோனி - எருமை,பட்சி - பருந்து, விருட்சம்-அத்திமரம், தெய்வகணம், இராசி கன்னி-வாரம்-புதன், நாள்-பெண் நாள்.இது ஐந்து உடுக்கூட்டத்தாலான மனிதன் கைத்தலம் போன்று இருக்கும். இதனால்தான் ஹஸ்தம்-கை என்ற பெயர் பெற்றது. இதில் வருடம் பிறக்கில் காந்தல் அதாவது அவ்வாண்டு வெயில் கடுமையாக இருக்கும். புரட்டாசி மாதம் பகை. ஆனி மாதம் இதில் 4 நாழிகை விட-கடிகை, இதில் நோய் தோன்றினால் 4 நாட்களில் தீரும். விடாதபோது, நெய்யிலே ஓமம் செய்யவும். 3 நாளில் தீரும். சனி கூடில் மரண யோகம், ஞாயிறு கூடில் அமிர்தயோகம். இன்னாளில் விவாகம் செய்ய, பொன் பூண, புதுவஸ்திரம் உடுக்க (கோடி உடுக்க) பாடா வாரிப் பயிரிட நன்று. பெண் திரளில் புத்திரனைப் பெற்றாலும் வாழ்வு குன்றும் ஓங்காது. இதில் பிறந்த பெண் கற்புக்கு அருந்ததிக்கு சமமானவள். தெய்வத்திற்கும் குருமார்களுக்கும் நல்லவன் அழகுடையவன். பரிவுடையவன், வார்த்தையில் வல்லவன். ஆயுதம் பிடிக்கும் தீரன். இவனுக்கு மார்பு அகன்று புறவடி உயர்ந்திருக்கும். புத்திமான், உலகில் புகழுடன் விளங்குவான். (எல்லோரிடமும்) விருப்பமுடையவன். வித்தை கற்று வல்லவன். நீராடுதலில் அதிகப்பிரியம் உள்ளவன். சிறுபசியாளன். (அதிகம் உண்ணான்) பலரையும் ரட்சிப்பவன். நட்பு கொள்வான். கோபித்தவுடனே சினம் ஆறுபவன். ராஜப்பிரதாபமுடையவன்.

**பெண்கள்**

இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண்கள் பற்றி வடமொழி ஸ்திரீ ஜாதகப்படி ஹஸ்த நட்சத்திரத்தில் பிறந்த பெண் அழகிய கைகள் கண்கள் உள்ளவள், காதுகளும் அழகானவை.

பொறுமையுள்ளவள், ஒழுக்கமுள்ள பணக்காரி. பலவழிமுறைகள் தெரிந்தவள். அவள் உடலழகில் ஒரு மினுமினுப்பும் ஒளியும் பளிச்சிடும் சுகமுடையவள். அவள் அழகைப் பார்த்தாலே மனதிற்கு மகிழ்ச்சியும் நிறைவும் ஏற்படும்.

**வேறு நூல் படி**

தியாக புத்தியுள்ளவள். ஆனால் உயர்ந்த ஒழுக்கமில்லாத சராசரிப்பெண். கூர்மையான புத்தியும் கோபக்காரியும் ஆவாள். திடமான எண்ணம் இதன் ஆசையை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்ற நிச்சய புத்தி. இவற்றை அபகரிக்கும் புத்தியுள்ளவள். தன் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளும் சாமர்த்தியசாலி என்பதாம்.

**சங்கராசாரியார் மதன நூல் கூறும் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவள் குணம்**

அத்த நாளில் பிறந்த பெண் முனிதத்துவத்தில் பிறந்தவளாகும்.

புளிப்புடன் உண்ணவேண்டும் புனிதங்கள் பலவும் பேசும்
நனிப்படும் செல்வி நல்லாள் நளினமொட் டனைய கொங்கை
தளர்பட வளர்ந்திட் டொல்கிச் சாரரி யுற்ற கண்ணாள்
அளிப்படப் பெருமை பேசும் அத்த நாள் பிறந்துளாளே. 121

அத்த நட்சத்திரத்தில் பிறந்த பெண் புளிப்பான உணவுகளை உண்ணுவதில் பிரியம் உள்ளவள். புனிதமான பல விஷயங்களையே பேசுவாள். செல்வமும் நற்குணமும் உள்ளவள். தாமரை மொட்டுபோல் தளராத கொங்கைகள் உள்ளவள். தள தளவென தளிர்த்து அசைந்து ஒயிலாக நடக்கும் அழகிய உருவ அமைப்புள்ளவள். சிவந்த அரிஅரியான இரேகைகள் படர்ந்த கண்கள் உள்ளவள். இரக்கமுடன் பேசுபவள். இவளே அத்த நட்சத்திரத்தில் பிறந்தவளாவாள்.

**பிறநூல் செய்திகள் - பொதுச் செய்திகள் - அஸ்தம்**

எல்லா சுப காரியங்களுக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நட்சத்திரமாகும். கறுப்பு வண்ணம். பேரும் புகழும் பெற்று கடைசி காலத்தில் சுகமாகவும் நிம்மதியாகவும் வாழ்வார்கள். தீர்க்க சிந்தனையுடையவர்கள். நிறைய சந்ததியுண்டு. பெண்களிடையே வசீகர நாயகர். எதிரிகளை வெற்றி கொள்வதில் வல்லவர். இடையூறுகளை எல்லாம் கடந்து நிற்பவர். விடாமுயற்சி அதிகம்.

இந்த நட்சத்திரம் கைபோன்றது. கைகளே மனிதனின். சிறந்த கருவி. எனவே எந்த செயலையும் நன்கு திறம்படச் செய்வார்கள். இவர்கள் செய்யும் எந்த முயற்சியும் நீடித்துப் பலன் தருவதாகும். அவர்கள் சொந்த நலனுக்காக முயற்சிகள் அவ்வளவு சிறக்காது.

இந்த நட்சத்திரத்தில் தான் ஸ்ரீராம குமாரர்கள் லவகுசர்கள் பிறந்தனர். மத்திம வயதுவரை கஷ்டம். அதன்பின் பிற்பாதி காலத்தில் சந்தோஷம், நிம்மதியுடன் வாழ்வார்கள்.

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தகப்பனுக்கு அதிர்ஷ்டம் உண்டு. இந்த நட்சத்திரத்தில் சூரிய சஞ்சாரத்தின்போது, சாமான் விலைகள் குறையும். முன்னர் சொன்ன சுபங்களுக்கு மட்டும் இன்றி சீமந்தம், வித்யாரம்பம், வேதாரம்பம் இவைகளுக்கும் நல்லது. வாணிபம் தொடங்கினால் நிறையலாபம் உண்டு. மந்தர உபதேசத்திற்கும் ஏற்றது. அதிகாரிகள் எனப்படும் பெரும் புள்ளிகளைச் சந்திக்க உகந்தது. கிரஹப்பிரவேசத்திற்கு நல்லது. பயிர்த்தொழில், சிற்பம் பயில. பயணம் இவற்றிற்கும் நல்லது.

இந்த நட்சத்திரத்தை ஏப்ரல் மாதம் நள்ளிரவில் விண்ணில் காணலாம்.

இவர்கள் அசகாய சூரர், எதற்கும் தயக்கம் இராது. தைரியசாலிகள். பலர் சிறுவயதில் நிறைய பொருள் சம்பாதிப்பவர்கள், ஹஸ்தம் என்றால் கை. எனவே இவர்கள் எதிலும் கைராசிக்காரர்கள், மிருகம் எருமை என்பது தாழ்மை குறிக்காமல் இவர்களின் அளவு கடந்த பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் தான் குறிக்கும். 4, 60 வயது கடந்தால் நெடுங்காலம் வாழ்பவர்கள்.

இதை பஞ்சதாரை என்று சொல்லப்படும் (5 நட்சத்திரம்). ஆண் குறுக்குப் பார்வையுள்ளவன். ஸவிதா தேவதை. ஞாயிறு சித்தயோகம் சப்தமியில் மரணயோகம். ஞாயிறு, வெள்ளிகளில் அதில் விருத்தி. ஆனால் சதுர்த்தி சேர்ந்தால் 2 நாளிலும் மரண யோகம். புதனில் ஆனந்த யோகம். ஸ்ரார்த்தம், தேவதா பிரதிஷ்டை இவற்றிற்கும் நன்று. திரவியம் கொடுக்க சேனாதிபதி நியமனம், பசுவாங்க நன்று. முதல் பாதம் தின மிருத்யு எனப்படும். இந்திரதனுசு தெரிந்தால் 21 நாளில் மழை. சுரம் கண்டால் மரணம் அல்லது பிராணபயம் எனவும் சொல்லப்படும். 13 நாள் பீடை நீடிக்கும். அப்பம் நைவேத்யம். சிவந்த கரவீர புஷ்பாம் பூஜை தசாங்க தூபம் "ந் துத்யம் ஜாத வேதசம" என்ற மந்திர பிரயோகம். தயிரும் நெய்யும் திரவியம் சாவித்திரி மந்திரத்தால் ஹோமம். சந்தனம் புஷ்பம் பலி 15 நாளைக்குள் சுகம். இதில் மாதம் பிறந்தால் பயிர் விளைவு மத்திமம்.

**நட்சத்திரப் பலன்**

**தமிழ் ஜாதகாலங்காரம் சொல்லும் இந்த ஹஸ்த நட்சத்திரத்தில் பிறப்பவர் பலன்.**

**வன்புறுதா மதன் கல்வி மான் அற்ப பசியன் மனு வணங்க வாழ்வான்**
**இன்பமுறும் குறிப்புடையன் சூரன் அழகியன்கடினன் இனியயுக்தி**
**பின்வயதில் தனமுடையான் சிலுகன்மார் பகலன்பின் புறங்கால் நல்லோன்**
**அன்புடன் நீர் ஆடல்குரு பத்தியுளன் தருமன் அத்தத்தினானே. 122**

(இ-ள்) ஹஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவன் கடினமான தாமச குணமுள்ளவன். கல்வியுடையவன். குறைந்த பசியுள்ளவன். மக்கள் வணங்கும் படியான வாழ்க்கை யுடையவன். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பவன். வீரமுள்ளவன். அழகுடையவன், கடின சுபாவமுள்ளவன். சாகசமுள்ளவன். நல்ல புத்தியுடையவன். பின் வயதில் செல்வமுடையவன். சண்டை செய்பவன், விசாலமான மார்புடையவன், பின்பக்கமும் புறங்காலும் அழகாயிருக்கப் பெற்றவன். பிரியத்துடன் நீர்விளையாடு பவன். குரு பக்தியுள்ளவன், தருமமுடையவனும் ஆவான்.

**யவன ஜாதகம்**

அத்த நட்சத்திரத்தில் பிறந்தவன், வித்தைகளை அறிந்தவன், நல்ல போகங்களை அனுபவிப்பவன். தனவான் சாகசம், பலாத்கார குணங்கள் உள்ளவன். பிறருக்கு உபகாரி சகலமும் அறிந்தவன்.

**பிருஹத் ஜாதகம்**

உற்சாகமுடையவன், துஷ்டத்தனமுடையவன். மத்ய பானப்பிரியம் உடையவன். தயை இல்லாதவன், திருட்டுத்தனமுடையவன் என்பதாகும்.

நட்சத்திரப் பாதவாரி பலன் ஜாதகாலங்காரம் (தமிழ்) கூறும் நட்சத்திரப்பாத பலன்

**பெரியதோர் கலகம் பண்ணுவித் திடுவான்**
**பேசிய பொய்யனாம் கர்வி**
**றிலுக்கனாசாரன் பகக்கள் தம் மிடத்தில்**
**பிரியனாம் அத்தத்தின் முதற்கால்**
**அரியதோர் குணவான் செய்தொழில றிவால்**
**ஆனதோர் வாலிபம் தன்னில்**
**அன்னைபோம் பாட்டொடு ஆடலிற் பிரியன்**
**அதியுரை யுடையனாம் இரண்டில்**

தரியலர் போலும் மனத்தினான் தந்தை
தானறும் சிறுவய ததனில்
தந்திரவாதி ரோகி வியாபாரி
சாற்றிடும் மூன்றதாம் காலோன்
உரியதன் நடையான் ஈகையான் நெடியான்
ஓதுசந் தோஷ வானாகும்
உசிதனாம் அன்னைக் கினியான் மெய்க் கீர்த்தி
உடையன் நாற்கால் பல னறியே! 123

இதன் பொருள்

***1 ஹஸ்தம் முதல் பாதத்தில் பிறந்தவன்***

பிரமாத கலகம் செய்வதில் சமர்த்தன், பொய் பேசுவதில் சமர்த்தன், தருமம் உள்ளவன், பசுக்களிடத்தில் பிரியமுடையவன்.

***2. இரண்டாம் பாதத்தில் பிறந்தவன்***

அருமையான உத்தம குணமுள்ளவன். பின்வரும் காரியங்களை முன்னறிந்து செய்பவன். இவன் வாலிபத்தில் தாயார் மரணம், ஆடல் பாடல் இசைகளில் வல்லவன். எக்காரியத்தையும் தீர்க்கமாகச் சிந்தித்தே செய்பவன். கூர்மையான புத்திசாலியுமாவான் என்பதாம்.

***3. மூன்றாம் பாதத்தில் பிறந்தவன்***

உத்தம குணமுள்ளவன், சிறு வயதில் தகப்பனுக்குக் கண்டம், எக்காரியத்தையும் தந்திரமாகச் செய்பவன், வியாதியுள்ளவன், வியாபாரத் தொழில் யுக்திகளை அறிந்தவன் ஆவான் என்பதேயாகும்.

***4. நாலாம் பாதத்தில் பிறந்தவன்***

நல்ல உத்தமர்களுடன் நட்பு கொள்பவன், தவறாத நன்னடத்தையுள்ளவன். ஈவு, இரக்கம் உள்ளவன்,

எப்பொழுதும் சந்தோஷத்துடன் இருப்பவன், முன்கோபத்துடன் பேசுபவன், உயர்பதவியை அடைபவன், தாயாருக்கு இனிமையானவன், கீர்த்தி வாய்ந்தவனும் ஆவான் என்பதாம்.

***ஜாதக சார தீபத்தில் சொல்லிய பாத பலன்***

1. ஹஸ்தம் முதல் பாதம் எப்பொழுதும் இளமையாக இருப்பான்.

2. இரண்டாம்பாதம் எப்பொழுதும் வீரனாக இருப்பவன், வாதம் பிரதிவாதம் பண்ணுவதில் வல்லவன்.

3. மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் எப்பொழுதும் ஏதாவது நோயால் அவதிப்பட்டுக்கொண்டிருப்பவன்.

4. நான்காம் பாதம் தன தான்யமுள்ளவன். பணக்காரன் என்பதாம்.

***சுவடி எண். 1500 மரண கண்டிகை கூறும் ஹஸ்த நட்சத்திர பாதபலன்***

***1. ஹஸ்தம் 1ம் பாத பலன்***

மறுகிய மனத்தின் பெண்மேல் மனமது சார நில்லான்
முறுகிய கொடுமை செய்யும் முதுகினில் மரவு முண்டாம்
குறுகிய சொல்வான் தன்மேல் குற்றமென்றதுவு மில்லாச்
செறிதரும் கூந்தல் பேணும் சேயினங் கிஷத்தினாலே. 123

இவன் எப்பொழுதும் குற்றமும் குறையுமே எண்ணும் மனமுடையவனாவான். பெண்களுக்குத் தன் மனம்பறி கொடாமல் அவர்களே தன்னைச் சார விரும்பும்படி நடப்பவன். எப்பொழுதும் ஏதாவது கொடுமையைச் செய்து கொண்டிருப்பான். இவன் முதுகில் சுழி இருக்கும். நெருங்கிய கரும் கூந்தல் பெற்ற தன் அழகிய மனைவியை என்றும் அக்கறையுடன் பாதுகாப்பான். இவனே அஸ்தம் நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவன்.

**முதல் பாதம் செவ்வாய் அங்கிஷத்தில் பிறந்தவனாவான்**

**இதற்குக் கால சக்கரத் தசை**

| | |
|---|---|
| மேஷச்செவ்வாய் | 7 வருடம் |
| ரிஷப வெள்ளி | 16 ,, |
| மிதுன புதன் | 9 ,, |
| கடக சந்திரன் | 21 ,, |
| சிங்க ஆதித்தன் | 5 ,, |
| கன்னி புதன் | 9 ,, |
| துலாம் சுக்கிரன் | 6 ,, |
| விருச்சிகச் செவ்வாய் | 7 ,, |
| தனுசு வியாழன் | 10 ,, |
| ஆக வயது | 100 ,, |

**ஹஸ்த நக்ஷத்திரம் 2ம் பாத பலன்**

தெள்ளியன் தியாகி நல்லான் சேயிழை யாரைப் பேணும்
ஒள்ளிய கண்ணினாள் மேல் ஒண்பொருள் சார நில்லான்
பள்ளியும் பலவும் கற்கும் பாக்கிய முடையனாகும்
வெள்ளியங் கிஷத்தில் வந்த விருப்புடைக் காளைதானே. 124

(இதன்பொருள்) ஹஸ்தம் 2ம் பாதத்தில் பிறந்தவன் தெளிவான சிந்தையுள்ளவன். தியாக புத்தி உடையவன். பல அழகிய பெண்களைக் காப்பாற்றுவான். (அவர்களுடன் வாழ்வான்) ஆனால் அழகிய கண்கள் உள்ள பெண்களிடத்தில் (மனைவி முதலியவர், பணம் பொருள் எதுவும் எதிர்பார்க்க மாட்டான். பல பள்ளிக்கூடங்களில் (பள்ளி, கல்லூரி) கற்று உயர்ந்த கல்வியைப் பெறுவான். இவன் பாக்கியசாலியும் ஆவான். இவனே வெள்ளி அங்கிஷத்தில் பிறந்தவனாகும் என்பதாம்.

**இதற்குக் காலச்சக்கரதசைகள்**

| | |
|---|---|
| மகரச் சனி | 4 வருடம் |
| கும்பச் சனி | 4 ,, |
| மீன வியாழன் | 10 ,, |

| | | |
|---|---|---|
| விருச்சிகச் செவ்வாய் | 7 | ,, |
| துலாம் வெள்ளி | 16 | ,, |
| கன்னி புதன் | 9 | ,, |
| கடகச் சந்திரன் | 21 | ,, |
| சிங்க ஆதித்தன் | 5 | ,, |
| மிதுன புதன் | 9 | ,, |
| ஆக வயது | 83 | ,, |

**ஹஸ்த நட்சத்திரம் 3ம் பாத பலன்**

**மேதையாம் அனங்கன் சால வேந்த ரால் விருப்பு முண்டாம்**
**மாதுமால் உருவு மாதம் மனம் பிறர்க் கறிய ஒண்ணான்**
**தாதுசேர் குழலினாள்மேல் தன்பொருள் சார நில்லான்**
**மீதுறு வலக்கை வல்லான் மிதுன அங் கிஷத்தி னானே. 125**

(இ-ள்.) ஹஸ்தம் 3ம் பாதத்தில் பிறந்தவன் அறிவாளி. மன்மதனைப்போல் மிகவும் அழகன். இவன் அரசர்களால், அல்லது அரசாங்கத்தால் மிகவும் விரும்பப்படுவான். பெண்கள் விரும்பும் அழகுடையவன். இவன் மனத்தைப் பிறர்க்கு அறிய ஒண்ணாது. மன ஆழம் உடையவன். பணத்திற்காக அழகிய மலரணிந்த கூந்தலுடையவரை தன் மனைவியின் கையை எதிர்பார்க்க மாட்டான். இவன் வலக்கையில் மிக வலிமையுள்ளவன். இவனே புதனங்கிஷத்தில் பிறந்தவன் என்பதாம்.

**இதற்குக் காலச்சக்கரத் தசை**

| | | |
|---|---|---|
| ரிஷப வெள்ளி | 16 வருடம் | |
| மேஷச் செவ்வாய் | 7 | ,, |
| மீன வியாழன் | 10 | ,, |
| கும்பச் சனி | 4 | ,, |
| மகரச் சனி | 4 | ,, |

| | | |
|---|---|---|
| தனுசு வியாழன் | 10 | ,, |
| விருச்சிகச் செவ்வாய் | 7 | ,, |
| துலாம் வெள்ளி | 16 | ,, |
| மிதுன புதன் | 9 | ,, |
| ஆக வயது | 83 | ,, |

**ஹஸ்த நட்சத்திர 4ம் பாத பலன்**

தலையது தடியனாந் தன்மனம் பெரியனாகும்
மலைதரும் வல்லபத்தன் வடிவுடன் சிறந்த மேனி
பலகலை நன்கு கற்பர் பாக்கிய முடையனாகும்
மலைபோல் வளர்ந்த தோளான் மதியவங் கிஷத்தினானே. 126

(இ-ள்) இவன் தலை பெரிதாயிருக்கும். இவன் தாராள பெருந்தன்மை வாய்ந்த மனமுடையவன். இவன் யாவரும் பிரமிக்கும்படி வல்லபம் அதாவது திறமையுடையுவன். இவன் வடிவழகன் சிவந்த பளபளக்கும். மேனி உடையவன். பல விதமான கலைகள் கல்வியும் நன்கு கற்பான். இவன் பாக்கியசாலியாவன். இவன் மலைபோல் அகன்றுயர்ந்த திரண்ட தோள்களை உடையவன். மதிய அங்கிஷத்தில் பிறந்தவன் என்பதாம்.

**இதற்குக் கால சக்கர தசை**

| | | |
|---|---|---|
| கடகச் சந்திரன் | 21 வருடம் | |
| சிங்க ஆதித்தன் | 5 | ,, |
| கன்னி புதன் | 9 | ,, |
| துலாம் சுக்கிரன் | 16 | ,, |
| விருச்சிகச் செவ்வாய் | 7 | ,, |
| தனுசு வியாழன் | 10 | ,, |
| மகர சனி | 4 | ,, |
| கும்பச் சனி | 4 | ,, |
| மீன வியாழன் | 10 | ,, |
| ஆக வயது | 86 | ,, |

**ஹஸ்த நட்சத்திர கர்ம விபாகம்**

**1ம் பாத கர்ம விபாகம்**

கர்ம விபாக வடமொழி நூலின் படி ஹஸ்த நட்சத்திரத்தில் பூர்வ புண்ய கர்ம சாந்தி பலன் ஹஸ்தம் முதல் பாதம் பூர்வ கர்ம வரலாறு மற்றும் சாந்தி முறை

**சிவபெருமான் சொல்லுகிறார்**

ஹேதேவி! முன்பு போஜகடம் என்ற ஊரில் ஒரு பொற்கொல்லன் வசித்து வந்தான். இவன் மனைவி மிகவும் துஷ்டகுணம் உள்ளவளாகவும் பிற ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் கெட்ட நடத்தையுள்ளவளாகவும் இருந்தாள். இந்த பொற்கொல்லன் இல்லத்துக்கு ஒரு பணக்கார வைசியன் வந்து சேர்ந்தான். இருவரும் நண்பர்கள் ஆயினர். தன் வியாபாரத் தொழிலுக்காக வைசியனிடம் 4000 தோலா தங்கம் கடன் வாங்கிக் கொண்டான். பொற்கொல்லனின் மனைவி அந்த வைசியனுடன் சினேகமாக இருந்து உடலுறவும் கொண்டு வந்தாள். இப்படி வெகு காலத்திற்குப் பின் அந்தப் பணக்கார வைசியன் இறந்து போனான். பொற்கொல்லனும் இறந்து போனான். வைசியனும் பொற்கொல்லனும் தாங்கள் செய்த பாவத்திற்காக ஒரு யுக காலம்வரை நரகத்தில் தள்ளப்பட்டனர். இதன் பின் அவர்களுக்கு நாய் பிறவி ஏற்பட்டது. அதன் பின் எருதாகவும் கடைசியில் மனிதப் பிறவி கிடைத்தது.

அதி பவித்திரமான அழகான நாட்டில் புத்திரனாகப் பிறந்து பெறும் பணக்காரனாகவும் ஆனான். பூர்வ ஜென்ம பாவத்தால் இவன் மனைவி விபச்சாரியானாள். ஒரு ஆண் குழந்தை பிறந்த பின் இவன் இறந்து போனான். வைசியன் உடலின் மிகவும் வலி தரும் நோய்கள் பற்றிக்கொண்டன.

இதற்கு சாந்தி முறை கூறுகிறேன் கேள். முதலில் இவன் சொத்தில் 8ல் ஒரு பங்கை தானம் செய்யவேண்டும். அதன் "ஜாத வேதஸே" என்ற மந்திரத்தை ஐந்தாயிரம் முறை ஜபம் செய்ய அல்லது செய்விக்க வேண்டும். அதன் பின் 100 அந்தணர்களுக்கு போஜனம் செய்விக்க வேண்டும். பின் 100 அந்தணர்களுக்கு போஜனம் செய்விக்கவேண்டும். அதன் பின் கோதானம் செய்ய வேண்டும். 44 தோலா தங்கத்தால் பகவானின் உருவ விக்கிரஹம் செய்விக்க வேண்டும். அதற்கு வஸ்திரம் முதலியவற்றால் அலங்கரித்து, அதன்பின் கீழ்சொன்ன நாம மந்திரங்களால் பூஜிக்க வேண்டும்.

*ஸ்ரீ விஷ்ணோ புண்டரீகாட்ச! புவனானாம்ச பாலக!*
*சிந்தனை ப்ரதியாம் தேவி கருஷாண போ!*

ஹே விஷ்ணு தாமரைக்கண்ணனே! உலகங்களை யெல்லாம் பரிபாலனம் செய்கிறவனே. சந்தனம் முதலியவற்றால் உன்னைப் போற்றுகின்றேன். ஏற்றுக்கொள்வீராக! சங்கு தரித்தவனே! வணக்கம். சக்கரதாரியே வணக்கம். கதாதாரியே, சார்ங்கம் என்ற வில்லை அழித்தவனே, கருட வாகனனே, நந்தனனே, சுநந்தனே ஐயனே, விஜயனே! உங்களுக்கு வணக்கம். ஹேவிஷ்ணு! சங்கு சக்கரம் தரித்தவனே. நான் செய்த பூர்வ பாரங்களை யெல்லாம் மன்னிப்பீராக. தயாநிதியே. என்று மன்றாடி வேண்ட வேண்டும். அதன்பின் தன் மனைவி சகிதம் அந்த மூர்த்தியை பிரதட்சணம் செய்ய வேண்டும். அதன்பின் பூஜித்த மூர்த்தியை அந்தணனுக்குத் தானம் செய்யவேண்டும். இப்படிச் செய்வதால் அவர்கள் பூர்வ ஜென்ம பாவங்கள் நாசமாகின்றன. இவன் நோய்கள்யெல்லாம் குணமாகும். நல்ல குழந்தைகள் பிறக்கும்.

**ஹஸ்த நட்சத்திரம் 2ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி முறையும்.**

**சிவபெருமான் சொல்லுகிறார்!**

வங்க தேசத்தில் கேசவபுரம் என்று ஒரு நகரம் இருந்தது. அங்கு கங்கன் என்ற புகழ் பெற்ற முடிதிருத்தும் தொழிலாளி இருந்தான். அவன் பணக்காரனாகவும் இருந்தான். பாக்கியசாலியாகவும் இருந்தான். அவன் தேவதைகளிடம் பக்தியுள்ளவனாகவும் இருந்தான். அவனுக்குப் பெரிய கண்களுள்ள லீலா என்ற மனைவி இருந்தாள். இவர்களுக்கு 2 ஆண் குழந்தைகள் பிறந்தனர். அந்த இரண்டு பேரில் ஒருவன் சூதாடியானான். இரண்டாமவன் திருடனாகவும் பரஸ்திரீ கமனனாகவும் இருந்தான். பெரியவனின் மனைவியோ அழகியாகவும் ஆனால் விபசாரியாகவும் இருந்தாள். அவள்தன் மாமனாரான அந்த மயிர் வினைஞனுடன் வாழ்ந்தும் வந்தாள். பலகாலம் சென்று அவன் இறந்து போனான். அவனுடைய மனைவியும் அவ னுடனேயே உடன் கட்டை ஏறி உயிர்த்தியாகம் செய்தாள். அவன் 10 ஆயிரம் ஆண்டுகள் சத்யலோகம் என்ற சுவர்க்கத்தில் சுகபோகம் அனுபவித்தான். புண்யம் தீர்ந்தபின் அவன் மனிதப்பிறவி எடுத்தான். இந்தப் பிறவியில் எல்லா செல்வம் இருந்தும் அவனுக்கு ஆண் சந்ததி இன்றி 5 பெண்களே பிறந்தனர். நோய்களால் பீடிக்கப் பட்டான்.

இதற்கு சாந்திமுறை சொல்கிறேன் கேள்! முதலில் தன் சொத்தில் 8ல் ஒரு பாகத்தை உரிய அந்தணர்களுக்குத் தானம் செய்யவேண்டும். அதன் பின் ஒரு லட்சம் முறை காயத்ரி ஜபம் பண்ண அல்லது செய்விக்கவேண்டும். அதில் 10ல் ஒரு பங்கு ஹோமம், தர்பணம், மார்ச்சனம் எல்லாம் செய்ய வேண்டும். அதன் பின் சாலை ஓரங்களில் குளம் கிணறுகள் வெட்ட வேண்டும். புண்ணிய இடங்களில் துளசி மாடங்கள்

வைத்து துளசி வளர்க்க வேண்டும். கத்தரிக்காயும், கிழங்குகளையும் உண்ணக்கூடாது. 10 வர்ணம் உள்ள பசுவைத் தானம் பண்ண வேண்டும். அதன்பின் ஹரிவம்ச புராணம் பாராயணம் செய்விக்க வேண்டும். இப்படிச் செய்வதால் அவன் பாவங்கள் தொலைகின்றன. ஆண் சந்ததி உண்டாகின்றன. இவன் நோய்கள் எல்லாம் தீருகின்றன.

**ஹஸ்த நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் பல கர்ம விளைவும் பரிகாரமும்**

தேவி! கௌசிகி என்ற நதியின் தெற்குக் கரையில் ஒரு கட்டில் பின்னுபவன் இருந்து வந்தான். அவன் விஷ்ணு பக்தியில் தீவிரமாகவும் இருந்தான். பயிர்த்தொழிலும் செய்து பிழைத்து வந்தான். அவன் நல்ல பணக்காரனாக இருந்தான். நிறைய பணம் இருந்தும் எள்ளளவுகூட தானம் செய்ய வில்லை. ஒரு நாள் இரவு அவனைப்புலி ஒன்று கொன்றுவிட்டது.

எமதூதர்கள் அவனை ரௌரவம் என்ற நரகத்தில் தள்ளினார்கள். 60 ஆயிரம் வருஷம் அந்த நரகத்தில் துக்க துன்பம் அனுபவித்தான். அதன் பின் பூனையாகவும் நரியாகவும் பிறவி எடுத்தான். அதன்பின் மனிதனாகப் பிறந்தான். இப்பொழுதும் பூர்வ ஜென்ம பாவத்தால் பெண் குழந்தையோ ஆண் குழந்தையோ இல்லை. பேதி நோயும் பற்றிக்கொண்டது. இவன் பாவத்திற்கு சாந்தி முறையைச் சொல்லுகிறேன். ஞாயிற்றுக் கிழமையன்று சூர்ய உபாசனை செய்ய வேண்டும். அதன்பின் காயத்திரி மந்திரத்தை ஒரு லட்சம் முறை ஜபம் செய்விக்க வேண்டும். மாதங்களில் பிரயாகையில் தூய நீராடவேண்டும். அதன்பின் பூதானம் பண்ண வேண்டும். பின் நன்கு அலங்கரித்த எருது பசு ஜோடியைத் தானம் செய்ய வேண்டும்.

அதன் பின் கும்பத்திலும் ஒரு தேங்காயிலும் நவரத்தினங்கள் நிறைத்து துளசி தளத்தை வைத்து உரிய அந்தணனுக்குத் தானம் செய்ய வேண்டும். கங்கையில் நடுவில் இருந்து தானம் செய்ய வேண்டும். அதன் பின் 40 தோலா தங்கத்தில் மாலை ஒன்று செய்து, அதைத் தூப தீபம் கொடுத்து பூஜை செய்து, அதன் பின் அதைத் தன் ஆசார்யனுக்குத் தானம் செய்ய வேண்டும். அதனால் இவன் பாபங்கள் தீர்ந்து இவன் நோய்களும் குணமாகின்றன. அவன் மனைவியும் நல்ல ஆண் குழந்தையைப் பெறுவாள். பொருளற்ற இவன் பணக்காரன் ஆகிறான். இப்படி நல்லதே ஏற்பட்டு சுகபோகமும் ஏற்படும்.

**ஹஸ்தம் 4ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம பலனும் சாந்தி முறையும்**

**சிவபெருமான் சொல்லுகிறார்.**

தேவி! ஹஸ்தினாபுரத்தில் கோவலன் என்ற பெயருடைய காயந்தன் இருந்தான். இவனுக்கு கமலா என்ற மனைவியுண்டு. அவன் கள் குடித்தும் பல வேசிகளுடன் சுகித்தும், அந்தணர் அறவோர்களைத் திட்டியும் வாழ்ந்து வந்தான். ஒரு சமயம் ஒரு பிராம்மணன் கங்கை ஜலத்துடன் இவன் இல்லம் வந்து உணவு யாசித்தான். காயந்தன் அவனை மிகவும் சினந்து ஏசினான். பிராம்மணன் மனம் மிகவும் துக்கித்தான். வருந்தினான். அன்று மாலை நெருங்கும் போது தன் விதியை நொந்து விஷம் குடித்து இறந்தான்.

காயந்தனும் ஆயுள் முடிந்தவுடன் இறந்தான். அவன் மனைவியோ அவனுடலுடன் உடன் கட்டையேறி உயிர் துறந்தாள்.

இவன் புண்ணியத்தால் இருவரும் சத்திய லோகத்தில் ஆயிரக் கணக்கான வருஷங்கள் அவர்த்த போகம் அனுபவித்தனர். புண்யம் குறைந்த பின் காயந்தன் தனதான்யம் நிறைந்த ஒரு பிராமண வம்சத்தில் (இவன்) பிறந்தான்.

இவனுக்குச் சிவந்த நிறமுள்ள அழகிய பார்க்க இனிமையான குணங்கள் நிறைந்த அன்புள்ள, ஞானமும் பாசமும் உள்ள பல ஆண் பிள்ளைகள் பிறந்தனர். முதல் இரண்டு பையன்களும் ஒழுக்க நெறியுள்ளவர்களாக திருமணமும் செய்துகொண்டனர். ஆனால் இவர்கள் தகப்பன் முற்பிறவியில் உணவுகேட்ட பிராமணன் நொந்து இறக்கக் காரணான பாவத்தால் இந்த இரண்டு பேர்களுக்கும் குஷ்ட ரோகம் பீடித்து விட்டது. அவர்கள் மனைவியர் கற்பம் சிதைந்து வந்தது. தேவி இப்பொழுது அதற்குச் சாந்தி பரிகாரம் சொல்லுகிறேன் கேட்பாயாக.

விஷ்ணோரராட் என்ற மந்திரத்தை ஒரு வருஷம் முறை ஜபம் செய்விக்க வேண்டும். தன் வீட்டில் உள்ள பொருளின் 6ல் ஒரு பாகத்தை உத்தம பிராமணர்களுக்குத் தானம் செய்ய வேண்டும். சாலை ஓரங்களில் கிணறு குளங்கள் வெட்ட வேண்டும். அதன் பின் வஸ்திரம் அணிவித்த கன்றுடன் கூடிய கபில நிறப் பசுவை உத்தம பிராம்மணனுக்குத் தானம் செய்ய வேண்டும். அதன் பின் முறைப்படி ஹரிவம்ச பாராயணம் செய்விக்க வேண்டும். காதால் கேட்க வேண்டும். இதனால் இவன் பிள்ளைகளின் பாவம் நாசமாகி புத்திரப் பேறு உண்டாகும். மனிதனுக்கு பாவத்தால் வரும் பேது சாவு ஏற்படுகிறது. இதனால் எல்லோருமே சாந்திசெய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது.

எல்லா மனிதர்களும் அந்த வகை சாந்தி செய்து கொள்ள வேண்டி இருக்கிறது என்பதாகும்.

**அஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குத் தோன்றும் பிணிகண்டம் முதலியன.**

**இவன் பிறந்த ஆண்டில் பிள்ளைப் பிணியால் தத்து 4 வயதில் வெதுப்பு 6 வயதில் உதர ரோகம் அக்கினிபயம் 7 வயதில் 4 கால் மிருகத்தால் 9 வயதில் நீரால், 13 வயதில்**

கண்நோயால், 16 வயதில் தானியத்தால் வெதுப்பால் 20 வயதில் சிலந்தியால், பெண்ணால் மருந்தீடு, 30 வயதில் சத்துருவால், 37 வயதில் நாற்கால் மிருகத்தால், 50 வயதில் ராசபயத்தால் 70 வயதில் வெதுப்பு மற்றும் புற்றுநோயால் 83 வயதில் மீண்டும் வெதுப்பு நோயால் கண்டம் நிகழலாம். இவை கடந்தால் 86 வயது சென்ற கார்த்திகை மாதம் அமர பட்சத்து பஞ்சமியும் வியாழக்கிழமையும் பெற்ற அஸ்த நட்சத்திரம் கடந்த 7-30 நாழிகையும் பெற்ற நேரத்தில் இறைவனடி சேர்வார். இவையும் கடந்தால் புரட்டாசி மாதம் வெள்ளிக்கிழமை பூர்வ பட்ச பிரதமை அத்த முதித்து மூன்று நாழிகை அளவில் மரணம்.

**இவன் பிறந்த லக்னம்**

| | |
|---|---|
| சூரியன் சரமாகில் | சீமானாம் |
| சந்திரன் சாரமாகில் | பட்டத்துக்குடையவன் |
| செவ்வாய் உதயமாகில் | சேவகன் |
| புதன் உதயமாகில் | வித்துவான் |
| குரு உதயமாகில் | ராஜபுருஷன் |
| வெள்ளி உதயமாகில் | ஸ்திரீ உடையவன், திருடன் |
| சனி உதயமாகில் | பூமி பலிதமுடையவன் |
| ராகு உதயமாகில் | பித்தனாவான் |
| கேது உதயமாகில் | புத்திசாலி |

இந்த நாளில் சுரந் தோன்றில் 4 நாழிகைக்கு மேல் விடும். விடாதிருந்தால் நெய்யினால் ஓமம், வேத மந்திரம் சொல்லி ஓமம் செய்து இதற்குச் சொன்ன மரத்தடியில் அல்லது நீர்க்கரையில் ஆதித்த தேவதையை நோக்கி தயிரும் சோறும் பலி இடவும்.

இந்நாளில் பிறந்தவன் நெல்லுதின்று ஊர் வழி போகவும்.

**இந்த நட்சத்திரத்திற்கு மகாதசை**

| | | |
|---|---|---|
| சந்திரன் மகாதசை | 10 | வருடம் |
| செவ்வாய் மகாதசை | 7 | ,, |
| ராகு மகாதசை | 18 | ,, |
| குருமகாதசை | 16 | ,, |
| சனி மகாதசை | 19 | ,, |
| புதன் மகாதசை | 17 | ,, |
| கேது மகாதசை | 7 | ,, |
| சுக்கிர மகாதசை | 20 | ,, |
| சூரிய மகாதசை | 6 | ,, |
| ஆக வயது | 120 | ,, |

அத்த நட்சத்திரத்தில் பிறந்த தோஷம் (சுவடி 1500)

| | |
|---|---|
| முதற்கால் | நல்லது |
| 2ம் கால் | பிதாவுக்கு அதிர்ஷ்டம் |
| 3ம்கால் | மாமனுக்குத் தோஷம் |
| 4ம்கால் | நல்லது |

**பிறர் மதப்படி ஹஸ்தம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்**

**பொதுப்பலன் - ஆண்கள்**

**உடல் தோற்றம்**

ஜாதகன் உயரமாக, கட்டுமஸ்தான உடல் கொண்டவன். உடல் அமைப்பை ஒப்பிடும்போது கைகள் சற்று குட்டையாக இருக்கும். கலப்பான நிறம் உடையவன். தோளுக்குக் கீழே அல்லது மேல்கையில் வடுத்தழும்பு இருக்கும்.

**குணநலன்கள்**

அமைதியாகத் தோன்றுவான். இவன் சிரிப்பில் எல்லோரையும் கவர்ந்து இழுக்கக் கூடிய காந்த சக்தி இருக்கும். இந்தப் பிறவி குணமானது, பிறர்மேல் ஒருவித வசீகரத்தைய/மாயத்தை ஏற்படுத்தி இவனைவிட்டுப் பிரிந்து போக முடியாத நிலையை ஏற்படுத்தும். பொது ஜனத்திடம் இருந்து , மிகச் சுலபமாக மரியாதையையும், கௌரவத்தையும் பெறுவான். பிரதிபலனை எதிர்பாராமல், கஷ்டத்தில் இருப்பவர்களுக்கு எப்போதும் உதவியாக இருப்பான். தன்னுடைய உயிர் போனாலும், பிறரை ஏமாற்ற விரும்பமாட்டான். இவ்வளவு நல்ல குணங்கள் இருந்தாலும், இவனுக்கு பிரதி பலனாகக் கிடைப்பது எதிர்ப்பும், கண்டனங்களும்தான்.

மற்ற நட்சத்திரங்களைப் போலல்லாமல், ஹஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வாழ்க்கை, உயர்வும் தாழ்வும் அதிகம் கொண்டதாக இருக்கும். ஒரு சமயம் டாப் பொஸிஷனுக்கு உயருவான். அடுத்த நிமிடம் கீழே வந்து விடுவான். இது உத்தியோகத் துறைக்கும்பொருந்தும். மனநிலைக்கும் பொருந்தும், அதிர்ஷ்டமும், துரதிர்ஷ்டமும் அடுத்தடுத்து முன்னறிவிப்பு இன்றி வரும். ஆதலால் இவனை நிரந்தர ஏழை என்றோ அல்லது நிரந்தர பணக்காரன் என்றோ பாகுபடுத்த முடியாது. இவன் ஒரு துறையில் நுழைந்து அதில் லட்சியத்தை அடையும் தருணத்தில் தோல்வி அங்கே காத்திருக்கும். அந்த தோல்வியிலிருந்து சுயமுயற்சியால் மீண்டுவர முயற்சிக்கும் போது, எதிர்பாராத வகையில் உதவி கிடைத்து விடும். அந்த வேலை சுமாரான வெற்றியை தேடித்தரும்.

இவனுடைய நேர்மையும், கடின உழைப்பும் இவனுக்கு எந்த வேலையிலும் வெற்றியின் உற்சாகத்தை, மகிழ்ச்சியைத் தர வேண்டும். ஆனால் இவனுக்கு கிடைக்கும் தோல்வியை பார்க்கும்போது ஏதோ ஒரு மறைமுக சாபத்தால் சபிக்கப்பட்டவன் போல் தோன்றுகிறது.

இவன் பிறருக்கு எந்தவித கஷ்டத்தையும் தரமாட்டான். இவனை யாராவது துன்பப்படுத்தினால் அவனை பழிவாங்கத் துடிப்பான். ஆனால் அதே சமயம், கடவுளிடம் சரணடைந்து அவர்களுக்குத் தண்டனை தரும்படி முறையிடுவான். அத்துடன் இவன் பழிவாங்கும் நினைவு கொஞ்சம் கொஞ்சமாக மனத்திலிருந்து மறைந்துவிடும்.

**கல்வி, உத்தியோகம்**

உத்தியோகத்தில் கண்டிப்புள்ளவனாக இருப்பான். சாதாரணமாக ஒருவருக்கு கீழ்ப்படிந்து உத்தியோகம் செய்வது இவனுக்கு ஒத்து வராது. பெரும்பாலான ஹஸ்த நட்சத்திரக்காரர்கள் பிஸினஸ் செய்வார்கள். அல்லது இண்டஸ்டிரியில் உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பார்கள். மிகச் சிலரே கீழ்ப்படிந்து வேலை செய்பவர்களாக இருக்கிறார்கள்.

இவர்கள் அதிக படிப்பில்லாவிட்டாலும், தங்களிடமுள்ள சிறிதளவு அறிவினால், எல்லாவற்றிலும் அருமையான ஞானத்தைப் பெற்றிருப்பார்கள். தனக்குப் பின்னால் யாரும் எந்த விஷயமும் இல்லை என்பதை உலகத்திற்குக் காட்டுவார்கள். பலதரப்பட்ட தகராறுகளையும் சுமுகமாக தீர்த்து வைக்கும் சக்தியை பெற்றுள்ளதால் இவர்கள் அட்வைசர் வேலைக்குப் பொறுத்தமானவர்கள். வெற்றியின் படியில் ஏறுவதற்கு முன்னால் இவன் பதவி பொறுப்புகளை ஏற்றுக்கொள்ல வேண்டி வரும்.

30 வயது வரை, எதிர்பாராத சூழ்நிலை மாற்றங்கள், வாழ்க்கையில் கல்வியில், உத்தியோகம் அல்லது பிஸினஸ்ஸில் ஏற்படும். 30லிருந்து 42 வயதுவரை இவனுக்கு பொன்னான காலம். வாழ்க்கையில் செட்டில் ஆவான். இவன் ஆயுள் 64க்கு மேலும் இருந்தால் குறிப்பிடத்தக்க அளவுக்கு செல்வமும், பிஸினஸில் எல்லா வகையிலும் ஆல்ரவுண்ட் சக்ஸஸ் ஏற்படும்.

### குடும்ப வாழ்க்கை

வேலை வெட்டி இல்லாத சோம்பேறித்தனமான குடும்ப வாழ்க்கை அமையும். எல்லாக் குடும்பங்களிலும் உள்ளது போல் அவ்வப்போது, சச்சரவுகள் இருக்கும். ஒரு குடும்பத் தலைவிக்குத் தேவையான எல்லாவித நல்ல குணங்களும் கூடியவளாக இவன் மனைவி இருப்பாள். சில ஹஸ்த நட்சத்திரக் காரர்களுக்கு அமையும் மனைவி தனது இளம் வயதில் ஹோமோ செக்சுவல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவளாக இருந்திருப்பாள்.

### ஆரோக்கியம்

கடுமையான இருமல் ஜலதோஷம், மூக்கிலிருந்து சளி ஒழுகுதல், அது இறுகி சளியாதல், ஆஸ்துமா அல்லது சைனஸ் போன்ற வியாதிகள் இவர்களை சுலபமாக பிடிக்கும்.

### பொதுப்பலன் - பெண்கள்

ஆண்களுக்குச் சொன்ன பலன்களில் பெரும்பான்மை யானவை பெண்களுக்கும் பொருந்தும்.

### உடல் தோற்றம்

மற்ற நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு மாறுபட்டு அவளுடைய கண்ணும் காதும் மிகமிக அழகாக இருக்கும்.

### குணம்

பெண்ணினத்துக்கே உரியதான வெட்கமும் கூச்ச சுபாவமும் இயற்கையிலே பெற்றவள். பெரியவர்களை மதித்து மரியாதை கொடுக்கும் அதே நேரத்தில் தன்னை பிறர் அடிமைபோல் நடத்துவதை விரும்பாதவள். தன்னுடைய எண்ணங்களை வெளியிட சிறிதும் தயங்கமாட்டாள். அதனால் ஏற்படும் விளைவுகளைப்பற்றியும் கவலைப்பட மாட்டாள். ஆதலால் உறவினர்களின் விரோதத்தையும்

சம்பாதித்துக் கொள்வாள். இவள் தன்னுடைய கருத்துக்களை வெளிப்படையாக சொல்வதைக் கட்டுப்படுத்திக் கொண்டால் வாழ்க்கையில் எந்தவித பிரச்சனையுமின்றி சந்தோஷமாக ஆயுள் உள்ளவரை இருக்கமுடியும்.

**கல்வியும் தொழிலும்**

பெரும்பாலான பெண்கள் தங்களுடைய பெற்றோர் அல்லது கணவன் நல்ல பணவசதி உள்ளவர்களாக இருப்பதால் உத்யோகத்துக்குச் செல்வதில்லை. ஏழை குடும்பத்தில் பிறந்த பெண்கள் விவசாயம் அல்லது கட்டிடத் தொழிலில் இருப்பவர்களாக காணப்படுகிறார்கள்.

**குடும்ப வாழ்க்கை**

ஒற்றுமையான, சந்தோஷமான வாழ்க்கையும், தன் கணவனின் நீண்ட ஆயுளும் இந்தப் பெண் அடைய விரும்பினால், இவள் மூல நட்சத்திரத்தில் பிறந்தவனை மணக்கக்கூடாது. அப்போது இவள் மணவாழ்வு சிறந்து காணப்படும். இவள் கணவன் அன்பானவனாகவும் செல்வந்தனாகவுமிருப்பான். தன் குழந்தைகளிடமிருந்து நல்ல ஆதாயத்தையும் சௌகர்யங்களையும் பெறுவாள். முதலில் ஆணும், பிறகு 2 பெண்களும் பிறப்பார்கள்.

**உடல் ஆரோக்கியம்**

பொதுவாக இவள் நல்ல ஆரோக்கியம் உடையவள். இருந்தாலும் தன் வயதான காலத்தில் BP ஆஸ்துமா, நரம்புகள் முறுக்கிக் கெள்ளுதல் போன்ற உபத்திரவங்கள் தோன்றும்.

**ஹஸ்த நட்சத்திரத்தில் நிற்கும் கோள்களை இதர கோள்கள் பார்த்த பலன்கள்**

**சூரியன்**

**ஹஸ்தத்தில் உள்ள சூரியனை சந்திரன் பார்த்த பலன்**

தன் சொந்த ஊரை விட்டு வெளியூர் சென்று ஜீவனம் நடத்துவான். ஆனால் அங்கு அதிகமான பணத்தை சம்பாதிக்க

முடியாது. இவனுடைய உறவினர்கள் அவனுக்கு கஷ்டத்தைத் தருவார்கள்.

**ஹஸ்தத்தில் உள்ள சூரியனை செவ்வாய் பார்த்த பலன்**

இவன் சோம்பேறி. இவன் எதிரிகள் இவனுக்கு பிரச்சனைகளை தோற்றுவிப்பார்கள்.

**ஹஸ்தத்தில் உள்ள சூரியனை புதன் பார்த்த பலன்**

இவன் அதிகமான சுகங்களையும் நன்மைகளையும் அனுபவிக்கமாட்டான். ஆனால் இவனுடைய பிள்ளைகள் அரசாங்கத்திடமிருந்து எல்லாவித சலுகைகளையும் உதவிகளையும் பெறுவார்கள்.

**ஹஸ்தத்தில் உள்ள சூரியனை குரு பார்த்த பலன்**

அக்கல்ட் சயன்ஸில் நிபுணத்துவம் பெற்றவன். சுதந்திரமாக இருக்க விரும்புவான். தன்னுடைய மனைவி மக்களிடம் அன்யோன்யமாக இருக்கமாட்டான்.

**ஹஸ்தத்தில் உள்ள சூரியனை சுக்கிரன் பார்த்த பலன்**

அனேகருடன் SEX தொடர்பு வைத்திருப்பான்

**சந்திரன்**

**ஹஸ்தத்தில் உள்ள சந்திரனை சூரியன் பார்த்த பலன்**

நன்றாக பழகுவான். நன்கு படித்தவன். ஏழை.

**ஹஸ்தத்தில் உள்ள சந்திரனை செவ்வாய் பார்த்த பலன்**

புத்தி கூர்மை உள்ள அறிவாளி. விஞ்ஞானத்தின் பிரிவுகளிலும் நிபுணன், செல்வந்தன்.

**ஹஸ்தத்தில் உள்ள சந்திரனை புதன் பார்த்த பலன்**

தன்னுடைய மேலதிகாரி அல்லது அரசாங்கத்திடமிருந்து நல்ல உதவிகளைப் பெறுவான்.

**ஹஸ்தத்தில் உள்ள சந்திரனை குரு பார்த்த பலன்**

கல்வியில், பெறும் திறமையினால் புகழ் பெறுவான்.

**ஹஸ்தத்தில் உள்ள சந்திரனை சுக்கிரன் பார்த்த பலன்**

மெடிகல் லைனில் தன் உத்தியோகத்தை அமைத்துக் கொள்வான்.

**ஹஸ்தத்தில் உள்ள சந்திரனை சனி பார்த்த பலன்**

மனைவி, செல்வம், வாழ்க்கை வசதிகள் எல்லாம் மறுக்கப்பட்டவன்.

**செவ்வாய்**

**ஹஸ்தத்தில் உள்ள செவ்வாயை சூரியன் பார்த்த பலன்**

நல்ல தைரியமும், செல்வமும் உடையவன். பிரயாணம் செய்வதில் ஆர்வம் உடையவன்.

**ஹஸ்தத்தில் உள்ள செவ்வாயை சந்திரன் பார்த்த பலன்**

செக்யூரிட்டி ஸ்தாபனம் அல்லது போலீஸ் டிபார்ட்மெண்டில் வேலை செய்பவன். அழகிய இளம் பெண்களின் தோழமையில் இன்பம் பெறுபவன்.

**ஹஸ்தத்தில் உள்ள செவ்வாயை புதன் பார்த்த பலன்**

கணிதத்தில் புலமை உடையவன். கவிஞனாகவும் இருக்கலாம். சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப பொய் பேசுவான்.

**ஹஸ்தத்தில் உள்ள செவ்வாயை குரு பார்த்த பலன்**

வெளிநாடு சென்று, ஆரம்ப காலத்தில் பல இன்னல்களை சமாளித்து தன் 40வது வயதில் நல்ல நிலையை அடைந்து சந்தோஷமாக வாழ்வான்.

**ஹஸ்தத்தில் உள்ள செவ்வாயை சுக்கிரன் பார்த்த பலன்**

செந்வந்தன். தன் பெரும்பான்மையான நேரத்தைப் பெண்களுடன் உல்லாசமாக இருப்பதில் செலவிடுவான்.

**ஹஸ்தத்தில் உள்ள செவ்வாயை சனி பார்த்த பலன்**

சோம்பேறி, தந்திரசாலி.

## புதன்

### ஹஸ்தத்தில் உள்ள புதனை சூரியன் பார்த்த பலன்

அரசாங்கத்திடமிருந்து பல சலுகைகளை அனுபவிப்பான். உயர்ந்த ஸ்தானத்தை அடைவான். உண்மையுள்ளவன்.

### ஹஸ்தத்தில் உள்ள புதனை சந்திரன் பார்த்த பலன்

ஓயாமல் பேசிக்கொண்டிருப்பான். ஆனாலும் அது போரடிக்காமல் இனிமையாக இருக்கும். கோபக்காரன். அரசாங்க உத்யோகத்தில் இருப்பான்.

### ஹஸ்தத்தில் உள்ள புதனை செவ்வாய் பார்த்த பலன்

கவர்ச்சிகரமானவன். எல்லா விஷயங்களையும் நன்கு அறிந்து தேர்ச்சி பெற்றவன்.

### ஹஸ்தத்தில் உள்ள புதனை குரு பார்த்த பலன்

புண்ணியவான், எல்லா பாக்யங்களும் பெற்றவன். தைரியமானவன். அரசன் அல்லது மந்திரிக்கு சமமாக உயர்வு பெறுவான்.

### ஹஸ்தத்தில் உள்ள புதனை சுக்கிரன் பார்த்த பலன்

தன்னுடைய முதலாளியின் பிரதிநிதியாக இருப்பான். எதிரிகள் இவனிடம் அகப்பட்டு தோல்வி அடைவார்கள். ஆற்றல் மிகுந்தவன்.

### ஹஸ்தத்தில் உள்ள புதனை சனி பார்த்த பலன்

ஜாதகன் கடின உழைப்பாளி, செய்யும் வேலைகளுக்கு உடனடியாக பலனைப் பெறுவான்.

## குரு

### ஹஸ்தத்தில் உள்ள குருவை சூரியன் பார்த்த பலன்

ஜாதகனுக்கு நல்ல மனைவி, சிறந்த குழந்தைகள் செல்வம் எல்லாம் நல்ல விதத்தில் அமையும். உறவினர்கள் இவனை மரியாதை செய்வார்கள்.

**ஹஸ்தத்தில் உள்ள குருவை சந்திரன் பார்த்த பலன்**

நல்ல பழக்க வழக்கமுடையவன், பல கிராமங்கள், ஊர்கள் அவனுடைய கவனிப்பில் இருக்கும். புகழ் பெறுவான்.

**ஹஸ்தத்தில் உள்ள குருவைச் செவ்வாய் பார்த்த பலன்**

ஜாதகன் டிபன்ஸில் சேருவான். பல தடைகளைக் கடந்து தன்னுடைய வேலையில் வெற்றி அடைந்து உயர்வடைவான்.

**ஹஸ்தத்தில் உள்ள குருவை புதன் பார்த்தல்**

ஆனந்தமான குடும்ப வாழ்க்கையை அனுபவிப்பான். இதமாகப் பேசுவான். ஜோதிடத்தில் வல்லவன்.

**ஹஸ்தத்தில் உள்ளகுருவை சுக்கிரன் பார்த்த பலன்**

ஜாதகன் ஏழை, பெண்களிடம் அகப்பட்டுக் கொண்டு பல இன்னல்களை அனுபவிப்பான்.

**ஹஸ்தத்தில் உள்ள குருவை சனி பார்த்த பலன்**

அரசாங்கத்திடமிருந்து பல சலுகைகளையும், ஆதாயங்களையும் பெறுவான். அரசியல் கட்சிகளின் வேலைகளை எடுத்துச் செய்வான்.

**சுக்கிரன்**

**ஹஸ்தத்தில் உள்ள சுக்கிரனை சூரியன் பார்த்த பலன்**

நாட்டின் பாதுகாப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அதில் உச்சகட்ட ஸ்தானத்தைப் பெறுவான்.

**ஹஸ்தத்தில் உள்ள சுக்கிரனை, சந்திரன் பார்த்த பலன்**

நல்ல அறுசுவை உணவு கிடைக்கும். சிறந்த ஆடை துணிமணிகளை உடுத்துவான். கருப்பு நிறம் உடையவன். இவன் முடி அடர்த்தியாக இருக்கும்.

**ஹஸ்தத்தில் உள்ள சுக்கிரனை செவ்வாய் பார்த்த பலன்**

எல்லா வகையிலும் அதிர்ஷ்டக்காரன்

**ஹஸ்தத்தில் உள்ள சுக்கிரனை செவ்வாய் பார்த்த பலன்**

செல்வந்தன், சிறந்த அறிவாளி, நன்கு படித்தவன்.

**ஹஸ்தத்தில் உள்ள சுக்கிரனை குரு பார்த்த பலன்**

உயர்ந்த கல்வித் தகுதியைப் பெறுவான். நிறைய வேலைக்காரர்களை உடையவன். ஆனால் இவன் குடும்ப வாழ்க்கை துன்பம் மிகுந்ததாக இருக்கும்.

**ஹஸ்தத்தில் உள்ள சுக்கிரனை சனி பார்த்த பலன்**

ஜாதகன் பல வழிகளிலும் ஏமாற்றப்படுவான். எல்லோரும் இவனைத் துன்பப் படுத்துவார்கள். மனவருத்தத்தைப் பெருக்குவார்கள். எப்போதும் துயரம் நிறைந்த மனநிலையில் காணப்படுவான்.

**சனி**

**ஹஸ்தத்தில் உள்ள சனியை சூரியன் பார்த்த பலன்**

இவன் வாழ்க்கையை நன்கு அனுபவிக்க முடியாது. எப்போதும் தீயவர் கூட்டத்தில் இருக்கப் பிரியப்படுவான்.

**ஹஸ்தத்தில் உள்ள சனியை சந்திரன் பார்த்த பலன்**

அழகான வசீரகமான தோற்றப் பொலிவு கொண்டவன். அரசாங்கத்திடமிருந்து அதிகாரமும் புகழும் இவனை வந்தடையும். பல பெண்களுக்கு இவன் அதிகாரியாக இருப்பான்.

**ஹஸ்தத்தில் உள்ள சனியை செவ்வாய் பார்த்த பலன்**

சிறந்த அறிவாளி, சாஸ்த்திரத்திலும், புராதன மற்றும் விஞ்ஞானத்தில் நிபுணத்வம் பெற்றவனாக இருப்பான்.

**ஹஸ்தத்தில் உள்ள சனியை புதன் பார்த்த பலன்**

சண்டையிடுவதில் வல்லவன். அறிவாளி. செல்வந்தன்.

**ஹஸ்தத்தில் உள்ள சனியை குரு பார்த்த பலன்**

தன்னுடைய முதலாளி அல்லது அரசாங்கத்தை நம்பி இருப்பவன். நல்ல குணங்களை உடையவன். செல்வந்தன். பொது ஜனங்கள் இவனுக்கு மரியாதை தருவார்கள்.

**ஹஸ்தத்தில் உள்ள சனியை சுக்கிரன் பார்த்த பலன்**

பொற்கொல்லராக இருக்கலாம். அல்லது பொன், பொன் ஆபரணங்கள் வாங்கி விற்கும் தொழிலில் இருப்பான்.

**ஹஸ்த நட்சத்திர கால்களில் கிரகங்கள் இருந்த பலன்**

**ஹஸ்தம் 1ம் பாதத்தில்**

**ஹஸ்தம் 1ல் சூரியன் இருந்த பலன்**

பெண்ணாக இருந்தால் 35 வயது வரை திருமணம் ஆகாது. இந்த சூரியனுடன் சுக்கிரனும் சேர்ந்து இருந்தால், ஆணாக இருந்தால் எஞ்ஜினீயர், காண்ட்ராக்டர் அல்லது கன்ஸல்டண்ட் ஆக தொழில் புரிவான். வயிறு அல்லது குடல் வியாதிகளால் பீடிக்கப்படுவான்.

**ஹஸ்தம் 1ல் சந்திரன் இருந்த பலன்**

இத்துடன் லக்னம் ரேவதியில் இருந்தால் பெண்ஜாதகி மகாலட்சுமி போன்ற அழகிய முகத்தோற்றமும், நல்ல ஆடை அணிகளும் உடையவள். இவள் பிறந்த வீட்டிலும் சரி, புகுந்த வீட்டிலும் சரி செல்வம் ஏராளமாக தாண்டவமாடும்.

**ஹஸ்தம் 1ல் செவ்வாய் இருந்த பலன்**

ஆரம்பத்தில் அரசாங்க அலுவலகத்தில் கிளார்க், டைபிஸ்ட், அக்கவுண்டன்ட் போன்ற வேலையில் அமர்வான். தன்னுடைய 35வது வயதில் நடுத்தரமான ஸ்தானத்தை எட்டிப் பிடிப்பான். குடலில் அல்சர் ஏற்பட்டு ஆபரேஷன் செய்ய நேரும்.

**ஹஸ்தம் 1ல் புதன் இருந்த பலன்**

இந்த புதனுடன் லக்னமும் அமைந்து, குரு, செவ்வாய், சூரியன் மூவரும் ரேவதியிலும், சனி பூசத்திலும், சுக்கிரன் பூராடத்திலும் இருந்தால் ஜாதகன் அரசன் அல்லது பிரஸிடண்ட் அல்லது பிரைம் மினிஸ்டராக ஆவது உறுதி. அத்துடன் உலகையே வெல்வான். புதன் மட்டும் இங்கிருந்தால் சுமாரான செல்வத்தையும் ஆரோக்யத்தையும் தருவான்.

**ஹஸ்தம் 1ல் குரு இருந்த பலன்**

இங்குள்ள குருவுடன், லக்னமும் ரேவதியில் அமைந்தால் பெண் ஜாதகி புண்ணியம் செய்தவள். மத வழக்கங்களைக் கடைப்பிடிப்பாள். தன் கணவனை நன்கு பராமரிப்பதுடன் அவனைத் தெய்வம்போல் மதித்து நடத்துவாள். பணக்காரி ஆவாள்.

ஆண் ஜாதகன் மேற்படி அமைப்பில் அரசாங்கத்தில் அக்கவுண்ட்ஸ் அல்லது பைனான்ஸ் எக்ஸிகூடிவ் ஆக உயர்ந்த பதவியில் இருப்பான்.

**ஹஸ்தம் 1ல் சுக்கிரன் இருந்த பலன்**

ஜாதகன் நல்ல ஆரோக்யத்துடன் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பான். இவனுக்கு இனிப்பு உணவு வகைகள் மிகவும் பிடிக்கும். அவைகளை உண்பதால் சர்க்கரை சம்பந்தமான வியாதிகள் தோன்றும். டைபிஸ்டாக உத்தியோகம் பார்ப்பான். அல்லது கெமிக்கல் மருந்து சம்பந்தப்பட்ட டீலராக இருப்பான். திருமண வாழ்வு சிறப்பாக அமையாது.

**ஹஸ்தம் 1ல் சனி இருந்த பலன்**

மலச்சிக்கலும், வயிறு உப்புசமும் ஏற்படும். உத்தியோகம் மூலம் அல்லது ரயில்வே அல்லது கடல் பொருள்களை கையாள்வதன் மூலம் வருமானம் அமையும்.

**ஹஸ்தம் 1ல் ராகு இருந்த பலன்**

நல்ல டெக்னிக்கல் படிப்பு அமையும். சனி இவனுடன் சேர்ந்தால் அவனுடைய உத்தியோகத்தில் 55வது வயதில் சரிவு ஏற்படும். நியாயமாக இவனுக்குக் கிடைக்க வேண்டிய பிரமோஷனும் காலாகாலத்தில் கிடைக்காது.

**ஹஸ்தம் 1ல் கேது இருந்த பலன்**

உண்ணும் உணவின் விஷத்தன்மையால் டயரியா ஏற்பட்டு கஷ்டப்படுவான், கிளார்க், டைப்பிஸ்ட், அக்கவுண்டன்ட் போன்ற வேலையில் இருப்பான். சுக்கிரனும் இங்கிருந்தால் ஜாதகன் பரம ஏழை, படிப்பு அறிவில்லாதவன். வீட்டு வேலைகள் செய்யும் வேலைக்காரனாக இருப்பான்.

**ஹஸ்தம் 2ல் சூரியன் தரும் பலன்**

ஜாதகன் கிளார்க் அல்லது அக்கவுண்டன்ட்டாக வேலை பார்ப்பான். டைபாய்டு, இருமல், ஜலதோஷம் இவைகளால் பீடிக்கப்படுவான். இந்த சூரியனுடன் சுக்கிரனும் இங்கு இருந்தால் இவன் அடிக்கடி நரம்பு தளர்ச்சி ஏற்பட்டு கஷ்டப்படுவான். இதற்குக் காரணம் இவன் மனைவிதான்.

**ஹஸ்தம் 2ல் உள்ள சந்திரன் தரும் பலன்**

இதில் செவ்வாய், சனி, ராகு, சூரியன் நால்வரும் ரேவதி நட்சத்திரத்தில் இருந்தால் அந்த பெண் விதவையாவாள்.

இவள் மார்பகத்திலும், குடலிலும் கோளாறுகள் ஏற்படும். ஆண் போதை தரும் மருந்துகளுக்கு அடிமையாவான். இவன் போதைப் பழக்கத்தை நிறுத்தாவிட்டால் TB அல்லது கான்ஸரினால் கஷ்டப்பட வேண்டியிருக்கும்.

**ஹஸ்தம் 2ல் உள்ள செவ்வாய் தரும் பலன்**

கடலுடன் சம்பந்தப்பட்ட வேலையில் இருப்பான். ஷிப்பிங் அல்லது நேவியில் பணி செய்யலாம். பெண்கள், நர்ஸிங், டாக்டர் அல்லது சர்ஜன் தொழிலில் இருப்பார்கள். நல்ல பிரைவேட் செகட்டரியாகக் கூட சிலர் வேலை பார்ப்பார்கள். பெண்களானால் மாதவிடாய்க் கோளாறினால் கஷ்டப்படுவார்கள். ஆண், பைல்ஸ், குதவாயில் எரிச்சல் முதலியவற்றால் துன்பப்படுவார்கள்.

**ஹஸ்தம் 2ல் உள்ள புதன் தரும் பலன்**

லக்னம் ரேவதியில் அமைந்திருந்தால் அந்த பெண்ணின் கணவனுக்கு பல மனைவியர் இருப்பார்கள். இவளுடைய கணவன் பலவேறு மத நிகழ்ச்சிகளை நடத்துபவனாகவும் இருப்பான். எப்படி இருந்தாலும் இவளுக்கு ஏராளமான சொத்து சுகம், செல்வம், மகிழ்ச்சி ஆடை ஆபரணங்கள் அழகு எல்லாம் பெற்று சுகமாக வாழ்வாள்.

**ஹஸ்தம் 2ல் உள்ள குரு தரும் பலன்**

கப்பல் கட்டும் தொழில் அல்லது நேவியில் பணிபுரிவான். பிஸினஸ் செய்தால் துணிவியாபாரம் அமையும். இந்த குருவை சுக்கிரன் பார்த்தால், டெக்ஸ்டைல் தொழிலதிபராக இருப்பான். ராகு இங்கிருந்து சுக்கிரனைப் பார்த்தால் டெக்ஸ்டைல் மில்லில் தொழிலாளியாக இருப்பான்.

**ஹஸ்தம் 2ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

இவனுக்கு இரண்டு மனைவியர் இருப்பர். இருந்தாலும் இந்த இருவரையும் விட மற்ற பெண்கள் மீது நாட்டம் செலுத்துவான். இவனை சனி பார்த்திருந்தால், டைவர்ஸ் அல்லது பிரிவு அல்லது மரணம் மூலம் முதல் மனைவியை இழப்பான்.

**ஹஸ்தம் 2ல் உள்ள சனி தரும் பலன்**

ல்கனம் பூரட்டாதியில் இருந்தால் பெண் ஜாதகியின் கணவன் நோய் வாய்ப்பட்டவன், ஆண் ஜாதகனின் மனைவிக்கு அடிக்கடி மாதவிடாய் கோளாறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும்.

**ஹஸ்தம் 2ல் உள்ள ராகு தரும் பலன்**

ஜாதகன் ட்ரான்ஸ்போர்ட் சம்பந்தம் உள்ள தொழிற்சாலையில் வேலை செய்பவன். இவன் அரசாங்கத்தில் ரெவின்யூ டிபார்ட்மெண்டில் வரி வசூலிக்கும் வேலை செய்து கொண்டு லஞ்சம் வாங்கி நிறைய பணம் சம்பாதிப்பவனாகவும் இருப்பான்.

**ஹஸ்தம் 2ல் உள்ள கேது தரும் பலன்**

இவனுக்கு ஞாபக சக்தி மிகவும் குறைவு. அடிக்கடி நரம்பு தளர்ச்சி வியாதிகள் ஏற்படும். பைல்ஸ், TB கான்ஸர் போன்ற வியாதிகள் தாக்கவும் சந்தர்ப்பம் உண்டு.

**ஹஸ்தம் 3ல் உள்ள சூரியன் தரும் பலன்**

இதில் சுக்கிரனும் இருந்தால் இந்த ஜாதகிக்கு 35 வயதில் தான் திருமணம் நடக்கும். ஆண் நல்ல படிப்பறிவு உள்ளவன். டீச்சராகவோ அல்லது மத பிரச்சாரம் செய்பவனாகவோ தொழில் செய்வான். வயிற்றுக் கோளாறினால் கஷ்டப்படுவான்.

**ஹஸ்தம் 3ல் உள்ள சந்திரன் தரும் பலன்கள்**

மரீன் எஞ்ஜினீயராக ஆவதற்கு இந்த அமைப்பு மிகவும் பொருத்தம். செவ்வாய் இவனுடன் சேர்ந்திருந்தால் வானிலை அறிவிப்பு மையத்தில் வேலை செய்வான். பைல்ஸ் தொந்தரவினால் ரத்தம் வெளியாகும் அல்லது குடலில் புண் ஏற்பட்டு அதனால் கூட ரத்தம் வெளிப்படும். பிஸினஸ்ஸாக இருந்தால், ஏஜன்ஸி பிசினஸ்ஸில் ஈடுபடுவான்.

**ஹஸ்தம் 3ல் உள்ள செவ்வாய் தரும் பலன்**

டைப்பிங் அல்லது பிரிண்டிங் சம்பந்தப்பட்டவைகளில் பணி புரிவான். சுக்கிரனும் கூட இருந்தால் டெக்ஸ்டைல் லைனில் தொழில் அமையும். ஆஸ்துமா, ப்ராங்கைடிஸ், பாரிசவாயு போன்ற வியாதிகள் இவனைத் தாக்கக்கூடும்.

**ஹஸ்தம் 3ல் உள்ள புதன் தரும் பலன்**

இந்த நிலை அக்கவுண்டன்ட் அல்லது பைனான்ஸ் எக்ஸிகூடிவ் வேலைகளுக்கு சிறந்தது. சூரியனும் இங்கு இருந்தால் ஜாதகன் சிறந்த ஜோதிடன். கட்டுரைகள் எழுதுவதாலும், ஜோதிடம் அல்லது மதசம்பந்தமான புத்தகங்கள் எழுதுவதாலும் நிறைய வருமானத்தை அடைவான்.

**ஹஸ்தம் 3ல் உள்ள குரு தரும் பலன்**

சிறந்த எஞ்ஜினியர் வேலைக்கும் கட்டிடக்கலை வல்லுனராக ஆவதற்கும் இந்த நிலை இருக்க வேண்டும். ஜாதகன் நல்ல மனைவி, ஆரோக்யம், செல்வத்துடன் வாழ்வான்.

**ஹஸ்தம் 3ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

ஜாதகன் துணி வியாபாரியாக இருப்பான் அல்லது டெக்ஸ்டைல் இண்டஸ்டிரியில் வேலை செய்பவனாக

இருப்பான். இனிப்பு உணவு வகைகளை அதிகமாக விரும்பி உண்பான். இருந்தாலும் இவனுக்கு 55 வயதுவரை சர்க்கரை தொடர்பான எந்த வியாதியும் அணுகாது.

**ஹஸ்தம் 3ல் உள்ள சனி தரும் பலன்**

டேப் வர்ம் போன்ற கிருமிகளால் ஏற்படும் வியாதிகள் ஜாதகனைத் தாக்கும். எழுத்தாளனாகவோ, புத்தக பதிப்பாளராகவோ பணம் சம்பாதிப்பான். தோல் பொருட்கள் வியாபாரத்தில் சம்பாதிப்பான்.

**ஹஸ்தம் 3ல் உள்ள ராகு தரும் பலன்**

இந்த நிலையில் லக்னம் சதயத்தில் இருந்தால் பெண் ஜாதகி அதிக காம இச்சை உடையவள். கணவனிடம் ஆசை அடங்காமல் பிற ஆண்களைத் தேடி வலிய உறவு கொள்வாள். அதனால் குடும்பத்தில் ஒரு கரும்புள்ளியாக இருப்பாள். ஆண்கள் தோல் தொடர்புள்ள வியாபாரத்தில் இருப்பார்கள்.

**ஹஸ்தம் 3ல் உள்ள கேது தரும் பலன்**

உயர்படிப்பு பெற்றவன். அரசாங்கத்தில் நல்ல அந்தஸ்தில் பணிபுரிவான். ஆரம்பத்தில் சிறிய வேலையிலேயே அமர்வான். செவ்வாயும் இதில் இருந்தால் திடீரென உயர்ந்த பொஸிசனை அடைவான். ஆனந்தமான குடும்ப வாழ்க்கையை நடத்துவான். இதில் செவ்வாய் இருந்தால் இவனுக்கு இரண்டு குழந்தைகள் தான் பிறக்கும்.

**ஹஸ்தம் 4ல் உள்ள சூரியன் தரும் பலன்**

மொழி பெயர்ப்பாளனாகவோ, எழுத்தாளனாகவோ தொழில் அமையும். இந்த சூரியனுக்கு எந்த கிரகத்தின் பார்வையும் இல்லை என்றால் இவன் போஸ்ட்மேன் ஆவான். வாயில் அல்லது வயிற்றில் புண்கள் தோன்றும்.

**ஹஸ்தம் 4ல் உள்ள சந்திரன் தரும் பலன்**

குருவும் இங்கு இருந்தால் ஜாதகனுக்கு கான்ஸர் வரலாம். இவன் புத்தகம் எழுதுபவனாக அல்லது புத்தகத்தை

பிரசுரம் செய்பவனாக இருப்பான். கெமிக்கல் அல்லது தண்ணீரால் செய்யப்படும் பொருட்கள் வியாபாரத்தில் இருக்கலாம்.

### ஹஸ்தம் 4ல் உள்ள செவ்வாய் தரும் பலன்

எப்பொழுதும் மனம் விழிப்புணர்ச்சியுடன் இருக்கும். குருவும் இங்கிருந்தால் இவன் பெரும் செல்வம் சேர்ப்பான். பப்ளிஷர், அக்கவுண்டன்ட் அல்லது பைனான்ஸிங் எக்ஸிகூடிவ் ஆக இருந்து நிறைய சம்பாதிப்பான்

### ஹஸ்தம் 4ல் உள்ள புதன் தரும் பலன்

இவன் உணவு உண்பதில் அக்கறை எடுத்துக் கொள்ளமாட்டான். நினைத்த வேளையில் நினைத்ததை உண்பான். அதனால் எதிர்பாராத சமயத்தில் குடல் அல்லது வயிற்றுக் கோளாறுகள் ஏற்பட்டு திண்டாடுவான். பப்ளிக் செக்டார் அல்லது கவர்மெண்டு வேலையில் டைபிஸ்ட், கிளார்க், அக்கவுண்டன்ட், பைனான்சிங் எக்ஸிகூடிவ் ஆக இருப்பான்.

### ஹஸ்தம் 4ல் உள்ள குரு தரும் பலன்

குடலில் ஏற்படும் புண்கள் அல்லது பைல்ஸினால் ரத்தம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். சிறந்த மெக்கானிக்கல் எஞ்சீனியர், ப்ரிண்டிங் அல்லது பப்ளிஷிங் தொழில் சம்பந்தப்பட்டிருப்பான்.

### ஹஸ்தம் 4ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்

குடிப்பழக்கம் உள்ளவன். அதனால் வயிறு பாதிக்கப்பட்டு ஆபரேஷன் செய்து கொள்வான். அதிகமான செக்ஸ் உறவில் ஈடுபட்டு அதனால் பால்வினை நோய் ஏற்பட்டு கஷ்டப்படுவான்.

### ஹஸ்தம் 4ல் உள்ள சனி தரும் பலன்

ஜாதகன் தந்திரசாலி, சுயநலக்காரன், போர்ஜரி, திருட்டு, கருப்பு மார்க்கட் இவைகளில் ஈடுபடுவான். டேப்வர்ம், ரவுண்ட வர்ம் போன்ற கிருமிகளால் ஏற்படும் வியாதியால்

பீடிக்கப்படுவான். சிலரிடம் சிறந்த கணிதப்புலமை காணப்படும். அந்த புலமையை நேர்மையான வழியில் உபயோகிக்க மாட்டான். அனுபவபூர்வமான ஆக்கப் பணிக்கு இந்த புலமை உபயோகப்படாது.

**ஹஸ்தம் 4ல் உள்ள ராகு தரும் பலன்**

இதில் ராகு இருப்பது நல்லதைத் தராது. ஜாதகன் தந்திரமானவன். முரட்டுத்தனம் உடையவன். திருடனாக இருப்பான். வாயில் பொய்யைத் தவிர வேறொன்றும் வராது. துன்பங்களைக் களைபவன். இப்படிப்பட்டவர்கள் பெரும் பாலும் கடைநிலை ஊழியர்களாக இருப்பார்கள். இவனைப் பெண் வியாதி கஷ்டப்படுத்தும்.

**ஹஸ்தம் 4ல் உள்ள கேது தரும் பலன்**

இந்த இடமும் கேதுவுக்கு சிறந்ததே. இவனுடன் குருவும் இங்கிருந்தால் பெரிய எழுத்தாளன் அல்லது பப்ளிஷர். அரசாங்க ஸ்தாபனத்தில் கணக்கு அல்லது பைனான்சிங் எக்ஸிகூடிவ் ஆக பணி புரிவன்.

**குறிப்பு:**

ஹஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள். சுவாதி, அனுஷம், மூலம், பரணி, புனர்பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடன் எந்த விதமான தொடர்பும் உறவும் வைத்துக்கொள்ளக் கூடாது.

## அத்தியாயம் 19

## சித்திரை நட்சத்திரம்

*இது ராசி மண்டலத்தில் 14வது நட்சத்திரம் . ராசி மண்டலத்தில் 173 பாகை 20 முதல் 186 பாகை 40 வரை பரவி உள்ளது.*

இதன்

| | |
|---|---|
| வடமொழிப்பெயர் | சித்ரா |
| தமிழ்ப்பெயர் | சித்திரை |
| அரபுப்பெயர் | அஸ்ஸிமத் |
| சீனப்பெயர் | கியோ |
| கிரேக்கப் பெயர் | வர்ஜினிஸ் அல்லது ஸ்பைகா |

சித்திரை என்றால் ஒளி வீசுவது என்று பொருள். சிலசமயம் விளக்கு போன்றும் சில சமயம் ஒளியுள்ள முத்து போன்றும் காணும். இதை இரவில் வானத்தில் பார்க்கலாம். இந்த நட்சத்திரத்தின் அதிதேவதை த்வஷ்டா அல்லது விஸ்வகர்மா என்னும் தேவதச்சன்.

இனி சுவடி 1500 சொல்லும் சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர் பலன் குணம்

கடுகவே நடக்க வல்லான் கண்டதோர் தானம் செய்யும்
மிடுக்குமாம் காலந்தன்னில் ஈன்றதாய் தந்தை பேணும்
துடி இடை மாதரோடு சுகங்களுர் சுகிக்க வல்லான்
திடமதாய் பேச வல்லான் சித்திரைநாளினானே. 128

(இ-ள்) சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவன் வேகமாக நடக்க வல்லவன். யாரைப் பார்த்தாலும் இரக்கமுடன் தானம் பண்ணுபவன். தன்னுடைய கஷ்ட காலத்திலும், தன் தாய் தந்தையர்க்கு உதவி செய்வான். காப்பாற்றுபவன். மெல்லிய இடையுடைய அழகிய பெண்களைச் சுகிப்பவன். நன்றாகவும் உறுதியாகவும் பேசும் பேச்சு வன்மையுள்ளவன் என்பதாம்.

இவனுக்குத் தெய்வம் சரஸ்வதி. சாதி - பிராமணன், பூதம் - பிரிதிவி, யோனி -புலி, பட்சி - கருடன், விருட்சம் - வில்வம், கணம் - ராட்சச கணம். முன்னரை - கன்னி ராசி பின்னரை - துலா ராசி, மாதம் - புரட்டாசி, கிழமை - புதன்.

புரட்டாசி மாதம் - சூனியம். இந்நாளில் 20 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம். ஆண்டு பிறக்கில் தானிய உற்பத்தி குறையும். இந்நாளில் வெதுப்பு தோன்றில் 8 நாளில் தீரும். இல்லையென்றால் அதற்குப் பரிகாரம் நெய்யால் ஓமம் பண்ணுவது. பெண் திரளில் வாழ்வு குன்றும், பிள்ளை பேற்றிழக்கும்.

இந்தநாள் சாந்தியாக பாலும் சோறும் பலி இடுவது. 2 நாளில் விடும். ஆயுள் விருத்தியுண்டாகும். பொன்பூண கோடியுடுக்க. வித்தை பயில நன்கு. இவன் பெண்ணிடம் பேச்சு கேட்கப் பொறுக்க மாட்டான். இந்நாளில் சனி கூடில் விஷ யோகம். திரயோதசி கூடில்-மரணயோகம். வியாழன் கூடில் கண்ட யோகம். பூர்வ பட்சத்தில் வில்லிடில் மழை பெய்யும். இவன் புறவடி உயர்ந்திருக்கும். பூசை முடிக்க வல்லான், இடுப்பில் தோளில் மச்சம் மரு உண்டு. நித்திரை குறைந்தவன். மனதில் ஞானியாய் இருப்பான். மார்பகன்றிருக்கும். யாத்திரைக்குக் கருப்பங்கட்டி தின்று வழி செல்வது நன்று.

### தமிழ் ஜாதகாலங்காரம் சொல்லும் சித்திரை நட்சத்திரம் பலன்

**பலமான சரீரவான் மார்பகலன் நடை கடியன் பரிந்து சொல்வான்**
**குலவிய நற்குணன் நடைநற் பிரியன்தா மதபுத்திக் குரிசில் நண்பன்**
**நிலைமை பெறும் திட வசனன் முகத்துறுநன் மறுஉ னன்நித்திரையும் அற்பன்**
**செலவு செயான் சவுரியவான் தூக்கம் உள்ளான் கோபிசித்திரையினானே. 129**

(இ-ள்) சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவன் பலவான். சரீரத்திண்மையுடையவன். இவன் அகலமான மார்பை யுடையவன். வேகமாக நடப்பவன் பரிவாகப் பேசுபவன். நற்குணவான் நன் நடத்தையில் பிரியமுடையவன். தாமச

குணமுடையவன். இராஜ பூஜிதன். திடமான வாக்குடையவன். இரவில் நித்திரை அற்பன். சிக்கனமுடையவன். வீரமுடையவன். பகலில் அதிகம் தூங்குபவன். கோபம் உள்ளவன். முகத்தில் மரு உள்ளவனும் ஆவான் என்பதாம்.

குறிப்பு: முதலில் நித்திரை அற்பன் என்றது இயல்பான இரவு தூக்கம் குறைவாக உள்ளவன் என்றும், இரண்டாவது தூக்கமுள்ளவன் என்றது பகல் தூக்கம் அதிகம் உள்ளவன் என்றும் கொள்ளப்பட்டது. இல்லையேல் மாறுபடக் கூறல் என்ற குற்றமாகும்.

**யவன ஜாதகம் சொல்லும் சித்திரை நட்சத்திரம் பலன்**

சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவன் சித்திர விசித்திர புஷ்பமாலை மற்றும் சுகந்த பரிமளப் பிரியன். நல்ல உடை அணிபவன். ரதி சாஸ்த்திரத்தில் அதாவது மன்மதக் கலையில் மிகவும் சமர்த்தன். தேஜசுடையவன். தனவான் போக முடையவன். பண்டிதனுமாவான் என்பதாம்.

**பிருஹத் ஜாதகம்**

விசித்திர மாலை புஷ்ப சுகந்தங்கள் அணிபவன், அழகிய கண்கள் உள்ளவன். அதிவேக நடையுள்ளவன் என்பதாம்.

## பெண்

**சித்திரையில் பிறந்த பெண்ணின் குணங்கள்**

**வடமொழி ஸ்திரீ ஜாதகம் சொல்லும் பலன்**

சித்திரை நட்சத்திரத்தில் பிறந்த பெண் அழகிய விசித்திரமான ஆபரணங்கள் அணிபவள். இந்த நட்சத்திரம் கிருஷ்ணபக்ஷம் சதுர்தசியில் வந்தால், இதில் பிறந்த பெண் விஷக்கன்னி எனப்படுவாள். இதுவே சுக்ல பக்ஷ சதுர்தசி சித்திரையில் பிறந்தால் அவள் தரித்திரம் உடையவள் ஆவாள். மற்றும் பாபம் உள்ளவளும் ஆவாள்.

*மற்ற நூல்*

சித்திரை நட்சத்திரத்தில் பிறந்த பெண் வெளிர் நிறமுள்ள ஆடைகளை அணிவதில் பிரியமுள்ளவள். அதிகம் பாசமுள்ளவள், தெய்வ நம்பிக்கையும் அதிகம் உள்ளவள்.

**சங்கராச்சாரியார் மதன நூல் சொல்லும் பலன்**

**இந்தப்பெண் இயக்கி தத்துவத்தைச் சார்ந்தவள்**

சிற்றிடைய முல்லை ஆம்பல் சிறுநுதல் பவளச் செவ்வாய்
கற்றவர்க்கன்பு செய்வாள்கைப்பொருள் கருணை இல்லை
உற்றவர்க் கின்பம் செய்வாள் உடலுறு கலவிக்கெல்லாம்
தேற்றியும் உடையாளாகும் சித்திரைநா ளினாளே. 130

(இ-ள்) சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவள் சிறிய இடையை உடைய அழகிய முல்லை மொட்டுக்கள் போன்ற பற்களும், ஆம்பல் மலர் போன்ற வாயுமுடைய பெரிதும் அழகுடையவள். கற்றவர்களை மதித்து நடப்பவள். ஆனால் தன்கைப்பொருளை யாருக்கும் தர மாட்டாள். கருமித்தனம் உள்ளவள். தன்னிடம் வருபவர்களிடம் பாசமாக இருப்பவள். நாயகன் எப்படியெல்லாம் ஆசைப்படுவானோ அதற்கு இடம் கொடுத்துக் கலவிக் காலத்தில் அவனைத் திருப்தி செய்யும் அளவுக்கு சளைக்காத உடல் வாகும் அவன் தன்னை மிகவும் அனுபவிக்கச் செய்யும் அளவுக்கு மனமுடையவளாகவும் ஆவாள் என்பதாம்.

**பிறநூல் செய்திகள்**

சித்திரை நட்சத்திரத்தில் பிள்ளைக்கு குழந்தை பிறந்தால் தகப்பனுக்கு ஆகாது என்று நம்பப்படுகிறது. சித்திரை அப்பன் தெருவிலே என்ற பழமொழியும் உண்டு. இது உண்மையில்லை. இதை வேறு விதமாகக் கூறுவதுமுண்டு. சித்திரை மாத சித்திரை நட்சத்திரத்தில் பிறந்த பிள்ளையால் தான் தந்தைக்கு ஆகாது என்பாரும் உண்டு.

சித்திரையில் ஆண் குழந்தை பிறந்தால், அதைப் பிறருக்குக் கொடுத்து விட்டு அதை மீண்டும் தவிட்டுக்கு வாங்கிக்கொள்ளும் பழக்கமும் உண்டு. ஜாதகம் தகப்பனுக்கு நன்றாக அமையுமானால் அந்தக் கவலையும் இல்லை. சித்திரை பற்றிய இந்த கொள்கைக்கு சாஸ்திரத்தில் ஆதாரம் இல்லை.

இது வெள்ளை நிறம் உடையது. ஒற்றை நட்சத்திரம். இதில் பிறந்தவர்களுக்கு உருவ அழகு அதிகமுண்டு. அதனால் இது சௌம்யதாரா என்று சொல்லப்படும்.

**இந்த நட்சத்திரத்தில் செய்யத் தக்கவை**

லேகியம் போன்ற மருந்துகள் செய்ய நன்று. உபநயனம், விவாகம், நாமகரணம், கர்ண வேதனம் போன்ற சுப காரியங்களை இதில் செய்யலாம். இசை, நாட்டியம், சாந்தி முகூர்த்தம் வேதாரம்பம், பயிர்த்தொழில் போன்றவற்றிற்கும் ஏற்ற நட்சத்திரம் இது.

இந்த நட்சத்திரம் கன்னி, துலாம் இரண்டு ராசிகளிலும் வருவதால் இது ஜித்ர நட்சத்திரம் அல்லது உடலற்ற நட்சத்திரம் எனப்படும்.

இது துருவ வகை உருவமும் 6 நட்சத்திரங்களும் கொண்டது என்று சிலர் கூறுவர். ஆயுள் பலம் மிகுந்தவர்கள் 75 வயது வரை தீர்க்காயுள் உண்டு. குவளை மலர் இவர்களுக்கு ராசியானது.

இதில் அன்னப் பிராசனம், க்ஷௌரம், புதுகோடியுடுத்தல், சிரார்த்தம் போன்ற இந்த காரியங்களையும் செய்யலாம்.

மாசி மாதம் வானவில் தோள்றினால் 10 நாளில் மழை பெய்யும்.

ஜுரம் வந்தால் 5 நாள் பீடை. கொழுக்கட்டை நைவேத்யம் ஜபா புஷ்பம் அல்லது செம்பருத்திப் பூவால் பூஜை, தசாங்கம் தூபம், சித்ரம் தேவானாம் என்ற மந்திரத்தால் பூஜை, ஜலம் நெய்கலந்து சித்ரான்னம் (வெண் பொங்கல்) இதனால் சாவித்திரி மந்திரத்தால் 108 தடவை ஹோமம் நெய் கலந்த பயறு நைவேத்யம் பலி, 7 தினம் முதல் 10நாளைக்குக் கஷ்டம் ரோகம் தீரும். இதில் மாதம் பிறந்தால் பயிர்கள் மத்திமம்.

### நட்சத்திர பாத பலன்

### தமிழ் ஜாதகாலங்காரம் சொல்லும் பாத பலன்

அறிந்திடாய் பொல்லாக் காரியம் பண்ண
அறிகுவன் நேத்திர ரோகி
ஆக்குவான் வியாக்யானம் சஞ்சாரி
ஆகிடும் சித்திரை முதற்கால்
பெறுத்தனி வசனன் தேகபோ ஷனையான்
பெரிமிடியனாம் நெடியோனாம்
பேணிய தபசி சஞ்சலன் என்றே
பேசுவார் மாசிலா இரண்டால்
செறிந்திடும் கீர்த்தி மான்பராக் கிரமன்
திடமுறும் வித்துவான் ஞானி
செப்பு நன் நடையோன் அறிவுடை யாளன்
திரிபத மதிலுதித் தோனாம்
எறிந்திடும் பகைவர் தமை வணங்கிடுதல்
இயல்புத்தி யான் சுய முள்ளான்
ஏதமற்றிடு நாற்கா லினுக் கென்றே
இயம்புவார் மேன்மை பெற்றோரே!.

(இ-ள்) சித்திரை முதல் பாதத்தில் பிறந்தவன், தீய காரியங்களைச் செய்பவனும், நேத்திர ரோகமுள்ளவனும், பல நூல்களுக்கு தன் பாண்டித்யத்தால் விளக்கமான உரைகள் எழுதுபவனும் ஆவான். சங்கீத ஞானம், தான் பாடும் திறமை உள்ளவன், பல தேசங்களுக்குச் சஞ்சாரம் செய்பவன் என்றும் சொல்ல வேண்டும்.

சத்திரை இரண்டாம் பாதத்தில் பிறந்தவன் நல்வாக்குவன்மையுடையவன். தன் தேக ஆரோக்யத்தை நன்கு போஷித்துப் பாதுகாப்பவன். அனேக கஷ்டம் தரித்திரம் இவற்றை அனுபவிப்பவன், அழகற்றவன், தூய்மையான மனம் உடைய சன்யாசியாக இருப்பவன். சஞ்சல புத்தி உடையவனும் ஆவான்.

சித்திரை மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் யாவரும் புகழத்தக்க கீர்த்தி உடையவன். பராக்கிரமம் உடையவன். வித்தைகள் பலவும் கற்றுத் தெளிந்தவன். ஞான மார்க்கங்களை அறிபவன். யாவரும் கொண்டாடும் நன்னடத்தை உடையவன். தியாகி, நல்லறிவு படைத்தவனும் ஆவான்.

சித்திரை 4ம் பாதத்தில் பிறந்தவன், தன்னை எதிர்க்கும் பகைவர்கள், அவர்களே தன்னைப் பார்த்து அஞ்சிப் பணியும் படி செய்பவன். தந்திரமுள்ளவன். தானே தன் அறிவை விருத்தி செய்து கொள்ளக்கூடியவனும் ஆவான் என்று சொல்லப்படும்.

**சித்திரை நட்சத்திர பாத பலன் ஜாதக சார தீபம் சொல்லும் பலன்**

முதல் பாதத்தில் பிறந்தவன் திருட்டுத் தொழிலுடையவன்.

2ம் பாதத்தில் பிறந்தவன் சித்திரம் தீட்டும் ஓவியன்

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் பரஸ்திரீ கமனம் செய்வபன், பிறர் மனைவியுடன் சேர்பவன்.

4ம் பாதத்தில் பிறந்தவன் துன்பங்களால் கஷ்டப்படுபவன்.

## சுவடி எண் 1500 மரண கண்டிகை கூறும் சித்திரை நட்சத்திர பாத பலன்

### முதல் பாதம்

நீளியன் செய்ய நல்லான் நிபுணனாம் கல்வி கற்கும்
மாளிகை மனையில் வாழும் மன்னரால் மகிழ்ச்சியுண்டாம்
வாளிசேர் கண்ணினான் மேல் வலதிசை மருங்கிலுள்ளான்
காளிசேர் வடிவு பேணும் கதிரவன் காலினானே! 132

*(இ-ள்.)* சித்திரை முதல் பாதத்தில் பிறந்தவன் நெடிய உயர்ந்த உருவமுள்ளவன். இவன் எதையும் நல்ல முறையில் செய்து முடிக்க வல்லவன்.

### இதற்குக் காலச் சக்கரம்

| | | |
|---|---|---|
| *விருச்சிகச் செவ்வாய்* | *7* | *வருடம்* |
| *துலாம் வெள்ளி* | *16* | ,, |
| *கன்னி புதன்* | *9* | ,, |
| *கடகச் சந்திரன்* | *21* | ,, |
| *சிங்க ஆதித்தன்* | *5* | ,, |
| *மிதுன புதன்* | *9* | ,, |
| *ரிஷப வெள்ளி* | *16* | ,, |
| *மேஷச் செவ்வாய்* | *7* | ,, |
| *மீன வியாழன்* | *10* | ,, |
| *ஆக வயது* | *100* | ,, |

### சித்திரை நட்சத்திரம் 2ம் பாத பலன் சுவடி எண் 1500

மந்திர மறைகள் கற்கும் மாதரால் அருளுமுண்டாம்
சுந்தரப் பலன்கள் சொல்லும் தோன்றவாய் இசைந்து தோன்றும்
அந்தரப் பொய்கள் சொல்லான் அரும் பொருள் நெருங்கி வாழ்வான்
புத்தியிற் பெரியனாவான் புனிதனங் கிஷத்தினானே. 133

சித்திரை 2ம் பாதத்தில் பிறந்தவன் வேதங்களையும் மந்திரங்களையும் நன்கு கற்றவன். இவனுக்கு மனைவி மூலமும் பிற பெண்களும் இவனுக்குப் பொருளாலும் மற்ற வகையில் உதவி செய்வார்கள். சம்பாதித்தற்கரிய நிறைய செல்வமுடையவனாவான். வெளிப்படையாக எந்த பொய்களையும் சொல்ல மாட்டான். இவன் நிறைந்த புத்திசாலியாவான். இவனே புதன் அங்கிஷத்தில் பிறந்தவனாவான் என்பதாம்.

**இதற்குக் கால சக்கர தசை**

| | | |
|---|---|---|
| கும்பச்சனி | 4 | வருடம் |
| மகரச்சனி | 4 | ,, |
| தனுசு வியாழன் | 10 | ,, |
| மேஷச் செவ்வாய் | 7 | ,, |
| ரிஷப வெள்ளி | 16 | ,, |
| மிதுன புதன் | 9 | ,, |
| கற்கடகச் சந்திரன் | 21 | ,, |
| சிங்க ஆதித்தன் | 5 | ,, |
| கன்னி புதன் | 9 | ,, |
| ஆக வயது | 85 | ,, |

**சுவடி எண் 1500 சித்திரை 3ம் பாத பலன்**

மார்பகன்று உயர்ந்திருக்கும் மதிமுக வடிஉண்டென்றும்
சீர்தறும் உண்டி பேணும் செறிதரும் கொடுங்கணாளன்
ஆதரவுடையனாகும் அறிவுடன் நன்கு கற்கும்
சார்வது மாதர் தன்பால் தரும் புகர் காலினானே! 134

சித்திரை 3ம் பாதத்தில் பிறந்தவன் மார்பு அகன்று இருப்பான். உயர்ந்த வடிவமுள்ளவன். இவன் முகம் சந்திரன் போன்று அழகாய் இருக்கும். அதில் மறு அல்லது மச்சமுண்டு. உணவை விரும்பி உண்பவன். இவன் கண்கள்

செருக்கமாகவும் குரூர பார்வையுடையவனாவான். இவனுக்குப் பலரது ஆதரவு உண்டு. நல்ல அறிவு புத்தியுடன் கவனமாகக் கல்வி கற்பான். பெண்களை, முக்கியமாக பெண்டாட்டி பக்கமாகவே சார்ந்திருப்பான். இவனே சுக்கிரன் அங்கிஷத்தில் பிறந்தவனாவான்.

**இதற்குக் காலச் சக்கர தசை**

| | | |
|---|---|---|
| துலாம் சுக்கிரன் | 16 | வருடம் |
| விருச்சிகச் செவ்வாய் | 7 | ,, |
| தனுசு வியாழன் | 10 | ,, |
| மகரச் சனி | 4 | ,, |
| கும்பச் சனி | 4 | ,, |
| மீன வியாழன் | 10 | ,, |
| மேஷச் செவ்வாய் | 7 | ,, |
| ரிஷப வெள்ளி | 16 | ,, |
| கன்னி புதன் | 9 | ,, |
| ஆக வயது | 83 | ,, |

**சுவடி எண் 1500 கூறும் சித்திரை 4ம் பாத பலன்**

வெட்டெனப் பேச வல்லான் வெகுளிமுன் உடையனாதம்
சிட்டரைச் சேர்ந்து வாழும் சிறுகுடியானனாகும்
பட்டயம் அணிந்த தோளான் படைக்கெல்லாம் தலைவனாகும்
எட்டுணையேனும் அஞ்சான் எரியின் அங்கிஷந்தானே! 135

(இ-ள்.) சித்திரை 4ம் பாதத்தில் பிறந்தவன், படபடப்புடன் வெட்டு ஒன்று துண்டு . இரண்டு என்னும்படியாக தெளிவாகப் பேச வல்லவன். நிறைய கோபமுள்ளவனாவான். உயர்ந்த சான்றோரைச் சேர்ந்து வாழ்பவன். சிறிய அழகிய குடும்பமுள்ளவனாவான். தோள்வளை என்னும் அணிகலன் அணிந்த தோள்களை உடைய வீரனாவான். சிறிதளவு கூட அஞ்ச மாட்டான். தைரியவான். இவனே செவ்வாய் அங்கிஷத்தில் பிறந்தவனாவான் என்பதாம்.

**இதற்குக் காலசக்கர தசை**

| | | |
|---|---|---|
| கடகச் சந்திரன் | 12 வருடம் | |
| சிங்க ஆதித்தன் | 5 | ,, |
| மிதுன புதன் | 9 | ,, |
| ரிஷப வெள்ளி | 16 | ,, |
| மேஷச் செவ்வாய் | 7 | ,, |
| மீன வியாழன் | 10 | ,, |
| கும்பச் சனி | 4 | ,, |
| மகரச் சனி | 4 | ,, |
| தனுசு வியாழன் | 10 | ,, |
| ஆக வயது | 86 | ,, |

கர்ம விபாகம் என்ற வடமொழி சொல்லும்.

**சித்திரை நட்சத்திரத்தில் 1ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்திகளும்**

**1ம் பாதம்**

**சிவபெருமான் சொல்லுகிறார்:** வடக்கே கயா என்ற நகரத்தில் தினமும் தீய மற்றும் பாபகாரியங்களையுமே செய்து வரும் ஒரு க்ஷத்திரியன் இருந்தான். அவன் மனைவி மிகவும் சஞ்சல புத்தியுடையவள். அவர்களுக்கு 2 ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. ஆனால் அவன் மனைவி கல்யாணம் ஆன நாட்களிலிருந்தே விபச்சாரியானாள். ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு எருமைக்கன்றைப் பலி கொடுத்து வந்தான்.இவன் ஆயுள் முடியம் போது பாம்பு கடித்து இறந்தான். எமதர்ம ராஜன் கொடிய நரகத்தில் தள்ளினான். 73000 ஆண்டுகள் இவன் நரக தண்டனை அனுபவித்தான். அதன்பின் மத்திய தேசத்தில் க்ஷத்திரியனாகப் பிறந்தான்.

பூர்வ ஜன்ம பாவத்தால் இந்த க்ஷத்திரியனுக்கு ஆண் பிள்ளைகள் பிறக்கவில்லை. பெண் குழந்தைகளே பிறந்தன.

அவையும் வயதுக்கு வரும்போது இறந்து போயின. பூர்வ ஜன்மத்தில் பல கொலைகள் பண்ணியதால் ஒவ்வொரு கொலைக்கும் ஒரு நோய் வீதம், இவனுக்கு பல பல நோய்கள் தோன்றின. தேவி! இதற்கு சாந்தி பரிகாரம் சொல்லுகிறேன் கேட்பாயாக!

முதலில் தன் வீட்டிலுள்ள பொன், பொருள், சொத்துக்களின் 8ல் ஒரு பாகத்தை உத்தமர்களுக்குத் தானம் தரவேண்டும். அதன்பின் கன்றுடன் கூடிய காராம் பசு ஒன்றை வஸ்திரம் அண்கலன்களுடன் அலங்கரித்து கொம்புகளில் பொன் பூண்களுடன் உத்தம அந்தணனுக்குதா தானம் பண்ண வேண்டும். அதன்பின் காயத்திரி ஜாத வேதசே என்ற மந்திரங்களை 10,000 முறை ஜபம் பண்ணவேண்டும். இதில் 10ல் ஒரு பங்கு தர்பணம் ஹோமம், மார்ச்சனம் இவற்றை முடிக்க வேண்டும். தன் வீட்டுக்கு வரும் சாலையில் 5 மரங்கள் கொண்ட ஒரு தோட்டத்தை அமைக்க வேண்டும். அரசமரம் முதலியவற்றையும் வைத்தாக வேண்டும். வேதமறிந்த அந்தணர்களுக்குப் போஜனம் முறைப்படி செய்விக்க வேண்டும். வேதமறிந்த அந்தணர்களுக்குப் போஜனம் முறைப்படி செய்விக்க வேண்டும். நாராயணன் விக்கிரகம் செய்து அதையும் முறைப்படி ஒரு உத்தம பிராமணருக்கு தானம் பண்ண வேண்டும்.

இப்படிச் செய்தால் இவர்கள் பாபம் முழுவதும் விலகி, குழந்தைகளும் பிறக்கும். இவர்கள் நோய்களும் முழுவதுமாக நீங்கி மகிழ்ச்சியாக வாழ்வார்கள் என்பதாம்.

**சித்திரை நட்சத்திரம் 2ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வகர்ம சாந்தி வருமாறு:**

**சிவபெருமான் சொல்லுகிறார்:** பிரியமான தேவி ஒன்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். பாபத்தின் பலனால்தான் ஒருவனுக்கு நோய்கள் வருகின்றன. புண்ணியத்தினால் தான் அவை குணமாகின்றன.

மத்தியதேசத்தில் சரயூ என்ற நதியின் கரையில் காலிபுரம் என்ற நகரத்தில் ஒரு பிராமணன் வசித்து வந்தான். இதே நகரத்தில் வேறு ஒரு நெறிகெட்ட தீய ஒழுக்கமுள்ள பிராமணனும் இருந்து வந்தான். இரண்டாமவன் குடிகாரன். குடி இல்லாமல் ஒரு நாள் கூட இருக்கமாட்டான். இவன் மனைவி தர்ம நெறி தவறாதவளாகவும், பதிவிரதையாகவும் இருந்தாள். இவள்பெயர் சுமணா என்பதாகும். இவள் கணவன் பரஸ்திரீகளுடன் சுகிப்பவன். சிறிது காலம் சென்ற இந்த துர்ப்பிராமணன் இறந்தான். இவன் மனைவி கணவனுடன் உடன்கட்டை ஏறி உயிர்துறந்தாள். முதல் பல காலம் வரை சுவர்க்கம் சுகம் அனுபவித்தாள்.அதன்பின் புண்யம் தீரவே ஒரு வசதியான நல்ல குடும்பத்தில் கணவன் மனைவியாகவே பிறந்தனர். மனைவியின் புண்யவசத்தால் பணம், வசதி நிறைந்திருந்தன. ஆனால் கணவனின் பாவத்தால் இவர்களுக்கு சிறுவயதிலிருந்தே பல நோய்கள் ஏற்பட்டன. இவர்களுக்கு குழந்தைகள் பிறக்கவில்லை.

இதற்குப் பரிஹாரம் வருமாறு: தன் வீட்டில் உள்ள சொத்தில் 6ல் ஒரு பங்கைத் தானம் பண்ணவேண்டும். காயத்ரி மூல மந்திரத்தை 3 லட்சம் முறை ஜெபம் செய்ய வேண்டும். இதில் 10ல் ஒரு பங்கு ஹோமம், அதில் 10ல் ஒரு பங்கு தர்ப்பணம். அதில் 10ல் ஒரு பங்கு மார்ஜனம் முதலியவை செய்யவேண்டும். அதன்பின் பகவான் கோவிந்த நாமாவை ஓத வேண்டும். விசாக கார்த்திகை மாதங்களில் தினமும் காலையில் ஸ்நானம் செய்ய வேண்டும். அதன்பின் கிருஷ்ண சதகம் கிரந்தம் பூர்ஜ மந்திரத்தில் எழுதி வைக்க வேண்டும். பின் தினமும் கிருஷ்ண நாமத்தை எழுத வேண்டும். பகவானின் விக்கிரஹத்தின் முன்னிலையில் பூஜை செய்ய வேண்டும். ஹரிவம்ச புராணம் பாராயணம் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் இவர்கள் பாவம் தீரும். இவர்கள் உடல் நலம் பெற்று நிம்மதி அடைவார்கள். பின்னால் இவர்களுக்கு நல்ல குழந்தைகள் ஏற்படும்.

**சித்திரை 3ம் பாதத்தில் பிறந்தவன் பரிகாரம்**

முன்பொரு காலத்தில் அயோத்யா நகரத்திற்கு தெற்கே மூன்று யோசனை தூரத்தில் சுதர்மபுரம் என்ற நகரமுண்டு. அங்கு ஒரு வைசியன் வாழ்ந்து வந்தான். இவன் தருமம் தவறாதவன். இவன் பணக்காரனாகவும் இருந்தான். இவன் பெயர் சதிதாசன் என்பதாம். தான்ய விக்கிரயம் வியாபாரம் செய்து வந்தான். இவனுக்கு வியாலாக்ஷி என்ற மனைவியுண்டு. இவர்களுக்கு நிறைய கால்நடைச் செல்வம் இருந்தது. இவன் எருமைக் கன்றுகளையும் ஆடுகளையும் கொன்று வந்தான்.

இவனிடம் ஒருநாள் இவன் பழங்கால மித்திரன் ஒருவன் வந்தான். இவன் நிறைய பணத்துடன் எருமை, பசு இவைகளை வாங்கி வந்தான். வைசியனின் மனைவி, அவனுடன் (நண்பனுடன்) கூடி ரமித்தாள்.

நெடுங்காலம் சென்ற பின் மனைவியும் இறந்தாள். நண்பனும் இறந்தான். அவனும் கங்கையில் மூழ்கி இறந்தான். முறை மீறிய வைசியனின் மனைவி தான் செய்த பாபத்தால் கர்தமம் என்ற நகரத்தில் 60 ஆயிரம் ஆண்டுகள் தண்டனை அனுபவித்தாள். அதன்பின் பாம்பாகப் பிறந்து கங்கையில் இறந்தாள். அதன் பின் மனித ஜன்மம் அடைந்தாள். நான்காம் வருணத்தவளாகப் பிறந்தாள். ஆனால் இவளுக்கு சந்ததி ஏற்படவில்லை. பிறர் செல்வத்தை முழுவதும் அனுபவித்த, பாவத்தால், இவளுக்கு நோய்கள் பற்றிக் கொண்டன. இவளுக்கு அதிகப் பெண் குழந்தைகள் ஏற்பட்டன. அடிக்கடி கருச்சிதைவு ஏற்பட்டது. தன் சொத்தின் 6ல் ஒரு பாகம் தானம் செய்யவேண்டும். பின் சாலையோரங்களில் சத்திரம், கிணறுகள் ஏற்படுத்த வேண்டும். சிவபூஜை முக்கியமாக இரவுகளில் செய்ய வேண்டும். ஒரு லட்சம் பாத்திவ (மண்) லிங்கங்களைப் பூஜிக்கவேண்டும். சிவ பஞ்சாக்ஷரம் எல்லாப் பாபங்களையும் போக்கும். இது எல்லா ஆசைகளையும் நிறைவேற்றித் தருவதாகும்.

அதன்பின் வைகுண்ட குண்டம் என்பதை அமைத்து ஹோமம் செய்து, எள் தானியம் முதலியவற்றுடன் ஹோமம் செய்ய வேண்டும். அதன் பின் சிவந்த நிறமுள்ள பசு ஒன்றை நல்லவனுக்குத் தானம் செய்ய வேண்டும்.

இப்படிச் செய்து முடித்தாலே இவன் கஷ்டங்கள் தீர்ந்து உடல் நலம் பெற்று இவர்களுக்கு புண்ணிய வசத்தால் அடுத்து குழந்தைகள் பிறந்து இதனால் இவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்.

### சித்திரை 4ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி பரிஹாரங்களும்

**சிவபெருமான் சொல்லுகிறார்:** இந்த புண்ணிய பூமியில் பிரதிஷ்டா என்ற நகரத்தில் வேதத்துக்குப் புறம்பாக நடந்து வந்த ஒரு பிராமணன் இருந்தான். இவன் தினமும் மது மாமிசம் முதலியவற்றை உண்டுவந்தான். மீன் சாப்பிடுவான். சூதாடுவான். இவனுக்குப் பாமா என்ற மனைவி உண்டு. இவளும் தன் கணவனை ஏமாற்றி வேறு புருஷர்களுடன் கூடி விபசாரம் பண்ணி வந்தாள். இவர்கள் அகஸ்மாத்தாக திடீரென்று கங்கையில் மூழ்கி இறந்தனர். கங்கையில் இறந்ததால் சுவர்க்கம் பெற்று அங்கு ஒரு கல்ப கோடி காலம் சுகம் அனுபவித்தனர். புண்ணியம் தீர்ந்தவுடன் ஒரு உத்தம பணக்கார குடும்பத்தில் மனிதப்பிறவியை அடைந்தான். அதே துஷ்ட மனைவி இந்த ஜென்மத்திலும் இவனுக்கு மனைவியாக வாய்த்தாள். பூர்வ ஜென்ம பாவத்தால் இவர்களுக்குச் சந்ததி ஏற்படவில்லை. பலவித வியாதிகளும் பற்றிக்கொண்டன. இதற்கு சாந்தி பரிஹாரம் வருமாறு.

முதலில் காயத்ரி மந்திரம் 1 லட்சம் முறை ஜபம் செய்விக்க வேண்டும். அதில் 10ல் ஒரு பங்கு ஹோமம், அதில் 10ல் ஒரு பங்கு மார்சனம், சூரிய வழிபாடு செய்ய வேண்டும். அதன் பின் முறைப்படி பிரயாகை சென்று மனைவியுடன்

நியமத்துடன் தினமும் திருமுழுக்காடவேண்டும். இதன்பின் இவன் பாபங்கள் நாசமாகின்றன. தன் பணத்தில் 6ல் ஒரு பாகத்தை உத்தம பிராமணனுக்குத்தானம் பண்ண வேண்டும். ஒவ்வொரு வருஷமும் கன்றுடன் கூடிய கறவை மாடு ஒன்றை தானம் செய்துவர வேண்டும். இதனால் இவர்கள் நோய் தீரும். நிச்சயம் இவர்களுக்கு நல்ல ஆண் பெண் குழந்தைகள் பிறக்கும்.

**சித்திரை நட்சத்திரத்தின் விம்சோத்தரி தசைகள் வருமாறு**

| | | |
|---|---|---|
| செவ்வாய் தசை | 7 வருடம் | |
| ராகு தசை | 18 | ,, |
| குருதசை | 16 | ,, |
| சனி தசை | 19 | ,, |
| புதன் தசை | 17 | ,, |
| கேது தசை | 7 | ,, |
| சுக்கிர தசை | 20 | ,, |
| சூரிய தசை | 6 | ,, |
| சந்திர தசை | 10 | ,, |
| ஆக வயது | 120 | ,, |

**இவனுக்கு ஏற்படும் நோய் கண்டம் முதலியவை.**

இவன் பிறந்த ஆண்டில் பிள்ளைப் பிணியால் கண்டம், 5 வயதில் வெதுப்பு சுரம், 12 வயதில் கண்நோய், நாய்க்கடியும், சிலந்தி நோயும், 20 வயதில் பெண்ணால் மருந்தீடு முதலியவற்றால் தொல்லை. 25 வயதில் கரு வியாதியால் 35 வயதில் ஆயுதம் தாக்கலால், 40 வயதில் ராசப்பிளவையால் 45 வயதில் தலை நோயால், 55 வயதில் சூலை நோயால், 67 வயதில் வாதத்தால் 70 வயதில் நீர்க்கண்டம், 83 வயதில் வயிற்று நோயால் சீரழிவும் அதன்பின் 100 வயது சென்று மாசி மாதம் பூர்வ பட்சத்து அஷ்டமியும் செவ்வாய்க்கிழமை சித்திரை நட்சத்திரமும் கூடிய நாளில் 15 நாழிகைக்கு மேல் இறைவனடி சேர்வார்.

**அடுத்து அவன் பிறந்த லக்னம்**

| | |
|---|---|
| சூரியன் சாரமாகில் | சீமானாம் |
| சந்திரன் சாரமாகில் | ராசாவாம் |
| செவ்வாய் சாரமாகில் | தரித்திரனாம் |
| புதன் சாரமாகில் | கல்வி உடையவன் |
| குரு சாரமாகில் | தரித்திரவானாம் |
| சுக்கிரன் சாரமாகில் | வாணிபன், வியாபாரி |
| சனி சாரமாகில் | திருடனாவான் |
| ராகு சாரமாகில் | மணியக்காரன் |
| கேது சாரமாகில் | கோளன் |

இதில் சுரம் தோன்றில் 7 நாளில் விடும், விடாதிருந்தால் பஞ்சவி சோறு பலியிட்டு விருட்சத்தில் தேவதையை நோக்கிப் பலி இடவும். இந்நாளில் ஊர்வழிப் போக நேரிட்டால் நல் வெண்ணை சாப்பிட்டுச் செல்லவும். சித்திரை நட்சத்திர பலன் முற்றும்.

**பிற மதப்படி சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்**

**பொதுப்பலன் - ஆண்கள்**

**உடலமைப்பு**

ஒல்லியான உருவத்தைப் பெற்றவன். சூரியன் அல்லது குரு சந்திரனைவிட அதிகபலன் பெற்று இருந்தால் சில சித்திரை நட்சத்திரக்காரர்கள் திடகாத்திரமும் உயரமும் அதற்கேற்ற பருமனும் கொண்டவர்களாக இருப்பார்கள். நூற்றுக்கணக்கான ஜனங்கள் இருக்கும் கூட்டத்தில் கூட இவனின் நடவடிக்கையினாலும், வெளிப்பாடுகளினாலும் சுலபமாக இவனை அடையாளம் கண்டுபிடித்து விடலாம்.

**குணநலன்கள்**

மிகுந்த அறிவாளி. கெட்டிக்காரன், அமைதியை விரும்புபவன். சந்திரனை சனி ஏழாம் பார்வையால் பார்த்தால் அல்லது சனி சந்திரனுடன் கூட இருந்தால் அந்த ஜாதகன் தந்திரசாலியாகவும் பிறரிடம் கருணையில்லாதவனாகவும் இருப்பான். தன் சுயநல லாபத்திற்காக எந்த காரியங்கள் வேண்டுமானாலும் செய்யத் தயங்க மாட்டான்.

இவனுக்கு கடவுள் தந்த ஒரு குணம் உண்டு. இதை கடவுளின் வெகுமதி என்று கூட கூறலாம். இவன் தரும் ஆலோசனை அல்லது கருத்தை அல்லது யோசனையை ஆரம்பத்தில் பைத்தியக் காரத்தனமானதாகத் தோன்றும். ஆனால் கடைசியில் அதே கருத்தை, யோசனையை அமல் படுத்துவார்கள். இது இவனுக்கு இயற்கையிலேயே அமைந்த கடவுள் தந்த வரப்பிரசாதம். ஆதலால் உள்ளுணர்வு அதிகம் தேவைப்படும். ஜோதிடத் தொழிலுக்கு இவன் பொருத்தமானவனாக இருப்பான்.

இவன் கனவுகளில் காணும் நிகழ்ச்சிகள் உண்மையிலேயே நடைமுறையில் நடப்பதாக அமைந்து விடும். சித்திரை நட்சத்திரக்காரர்களுக்கு இந்த மாதிரியான தெய்வீக சக்தி இயற்கையிலேயே அமைந்திருக்கும்.

இவன் பிறருடைய செண்டிமெண்டைப்பற்றிக் கவலைப்படமாட்டான். மற்றவர்களிடம் சுயநலவாதி யாகவும் நடந்துகொள்ள மாட்டான். இந்த மாதிரி சில பிடிவாதமான செய்கைகள் இவனிடம் சமூகத்தில் ஏழைப்பட்டவர் களிடம் இவனுடைய தொடர்பு சுமுகமாகவும் அன்பும் கருணையும் நிறைந்ததாக இருக்கும். பல சமயங்களில் இவனை கருமியாகவும், முரட்டுத்தனம் உடையவனாயும் பலர் தவறாக கணித்து விடுவார்கள். எந்த விஷயத்திலும் முன்யோசனையின்றி பட்டென்று பதில் அளித்துவிடும் குணம் உள்ளவன். தன்னுடைய கூற்றுக்கள் தவறென அறிந்து அவற்றை திருத்திக்கொள்ளுமுன் காலம் கடந்துவிடும்.

ஒவ்வொரு நிலையிலும் இவன் தன் எதிரிகளை எதிர்கொண்டு சமாளிக்க வேண்டியிருக்கும். ஆனால் இவன் அவர்களுடைய எந்த சதியிலிருந்தும் தப்பித்துக் கொள்ளும் சாமர்த்தியம் உள்ளவன். ஏழை எளிய மக்களுக்கு இவன் மனத்தில் தனியான இடம் உண்டு. இந்த ஏழை சமூகத்தின் உயர்வுக்கும் மேன்மைக்கும் தன்னுடைய பெரும் பான்மையான நேரத்தையும் சக்தியையும் செலவழிப்பான். ஆரம்பத்தில் ஏழைகளுக்காக செய்யும் பணிகளில் சுயநலம் இருக்காது. ஆனால் போகப்போக இவனுடைய செயல்கள் சுயநலமாக மாறிவிடும். சனி, செவ்வாயை ஏழாம் பார்வையாக பார்த்திருந்தால் இவனுடைய ஏழை முன்னேற்றப் பணிகள் நிச்சயமாக சுயநல ஆதாயத்திற்காகவே இருக்கும்.

**கல்வி-தொழில்**

வாழ்க்கையில் ஏற்படும் தடங்கல்கள் இவனுடைய முன்னேற்றத்தை ஒரு போதும் தடை செய்யாது. தன்னுடைய தைரியத்தினாலும், கடின உழைப்பாலும் அந்த தடைகளைக் கடந்து வெற்றி காண்பான். இவனுடைய 32 வயது வரையில் வாழ்க்கை வசதியுடையதாக அமையாது. வயது 33லிருந்து 55 வயது வரை இவனுடைய வாழ்க்கை பொன்னான காலமாக இருக்கும்.

எதிர்பாராத இடத்திலிருந்து, அதிக முயற்சி இல்லாமலேயே வேண்டிய உதவிகளும், வெகுமதிகளும் சுலபமாக இவனுக்குக் கிடைத்துவிடும். பல ஜாதகங்களை ஆராய்ந்ததில், இவர்களின் 22, 27, 30, 36, 39, 43, 48 வயதுகள் எல்லாவற்றிலும் கெட்டதாக இருப்பது தெரிகிறது. சூரியன் சந்திரனும் சித்திரை நட்சத்திரத்தில் இருந்தால், ஜாதகன் சிற்பியாகவோ, மெக்கானிக்காகவோ அல்லது ஒரு பாக்டரியில் தொழிலாளியாகவோ இருந்து வருமானம் பெறுவான். குரு சேர்ந்தால் அரசியல் வட்டத்தில் இருப்பான். புதன் சேர்ந்தால் எஞ்ஜினியர் அல்லது டெக்ஸ்டைல் டெக்னாலஜிஸ்டாக இருப்பான்.

குடும்ப வாழ்க்கை

ஒரு புறம் தன் பெற்றோர்களையும், உடன் பிறப்புக்களையும் மனதார நேசித்தாலும், மறுபுறம் அவர்களுடைய நடவடிக்கைகள் மீது சந்தேகம் கொள்வான். பெரும்பான்மையானவர்களுக்கு தங்கள் தந்தையின் அன்பு, பாசம், நன்மைகள் எதுவும் அனுபவிக்க முடியாது. தந்தை குடும்பத்தை விட்டுப் பிரிந்து தனித்து வாழ்க்கை நடத்துவதை சில கேசுகளில் பார்க்க முடிகிறது. சனியினால் சூரியன் கெட்டிருந்தால், ஜாதகனின் தந்தை அவனுடைய இளம் வயதிலேயே மரணமடைவார். எப்படி இருந்தாலும் ஜாதகன் தந்தையிடமிருந்து விலகியே இருப்பான். இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் தந்தை இவனிடமிருந்து விலகி இருந்தாலும் ஏதாவது ஒரு வழியில் பிரபலம் அல்லது புகழ் பெற்றிருப்பார். ஆதலால் ஜாதகன் தன் தாயிடம் மிகவும் ஒட்டுதலாயிருப்பான். தாய் மாமனிடமிருந்து உதவியும், பல ஆதாரங்களையும் பெறுவான்.

சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், பிறந்த ஊரிலே இருக்க மாட்டார்கள் என்று ஒரு சொல் வழக்கும் உண்டு. ஒன்று ஜாதகன் பிறந்த ஊரை விட்டு வெளியூரில் செட்டில் ஆகி வாழ்க்கை நடத்துவான். அல்லது இவன் பிறந்த வீடு விற்கப்பட்டு விடும் அல்லது இடிந்து அழிந்து விடும். அதாவது தன் சொந்த வீட்டிலிருந்து வெகு தொலைவில் வாழ்க்கை வசதிக்காக செட்டில் ஆகிவிடுவான்.

சாதாரணமாக, குடும்ப வாழ்க்கை சந்தோஷகரமானதாக அமையாது. திருமண வாழ்க்கை நிலையானதாக இருக்கும். ஆனால் கணவன் மனைவிக்குள் ஒற்றுமையும் சுமூகமும் இல்லாமல் அடிக்கடி சிறு, விஷயங்களுக்குக் கூட சச்சரவும் மோதல்களும் ஏற்படும். செவ்வாய் அல்லது சனி தனித்தனியாகவோ அல்லது சேர்ந்தோ அவிட்டம், சதயம் அல்லது பூச நட்சத்திரத்தில் இருந்தால் ஜாதகனின் மனைவி

இளம் வயதில் மரிப்பாள். சனியை குரு பார்த்தாலும், செவ்வாயை குரு பார்த்தாலும் அல்லது செவ்வாயை சூரியன் பார்த்தாலும் நல்ல பலன்களேற்படும். வாழ்க்கை அதிக சச்சரவு இல்லாமல் நடக்கும். இவனுடைய குழந்தைகள் புத்திசாலிகளாகவும் நல்ல பொஸிசனில் வசதியாக வாழ்பவர்களாகவும் இருப்பார்கள். இவன் அனேக பொறுப்புகளைசுமப்பவனாகவும் வாழ்க்கை முழுவதும் பல கண்டனங்களை சந்திப்பவனாகவும் இருப்பான்.

**ஆரோக்கியம்**

மூத்திரப்பையில் வீக்கம், மூளைசுரம், கிருமிகளால் உண்டாகும் வியாதிகள், வயிற்றில் கட்டி, அப்பெண்டிசிடிஸ் போன்ற வியாதிகள் இவர்களுக்கு ஏற்பட வாய்ப்பு உண்டு.

**பொதுப்பலன் - பெண்கள்**

***உடல் அமைப்பு***

பிறர்கண்டு பொறாமைப்படும் படியான வனப்பு மிக்க உடலைப்பெற்றவள். உயரமும் அதற்கேற்ற சதைப் பிடிப்பான பருமனும் கொண்டவள். இயற்கையாகவே கருகருவென்ற நீண்ட கூந்தலை உடையவள். ஆனால் நாகரீகமாக எண்ணி அதை குட்டையாக வெட்டி விட்டிருப்பாள்.

**குணநலன்கள்**

பிரச்சனைகள் உடையவள். அதிக சுதந்திரமாக இருக்கவேண்டும் என்ற ஆர்வத்தாலும், மரியாதையற்ற பழக்க வழக்கங்களினாலும், பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்குவாள். புகழ்ச்சியால் கர்வம் அடையாதவள். பேராசை உள்ளவள். சோம்பேறித்தனம் இருக்கும். பாபகாரியங்களைச் செய்வாள். மிகக் குறைந்த நண்பர்களே இவளுக்கு உண்டு.

**கல்வி - வருமானம்**

விஞ்ஞானப் பாடத்தில் இவளது கல்வி அமையும். இவள் நர்ஸ் அல்லது ஒரு மாடல் அல்லது சினிமா நடிகையாக இருக்கலாம். ஜாதகத்தில் கிரகங்கள் அனுகூலமான இடங்களில் அமையாமல் இருந்தால் விவசாயத்துறையில் இவளது தொழில் அமையும்.

**குடும்ப வாழ்க்கை**

இவளுடைய ஜாதகத்துக்குப் பொருத்தமான வரனை மணம் முடிக்காவிட்டால், இவள் கணவனிடம் இருந்து விவாகரத்தோ அல்லது கணவன் மரணம் அடையவோ நேரும். அப்படியும் எந்த விதத்திலாவது கணவனிடமிருந்து பிரிவு ஏற்படாமல் இருந்தால், இவளுக்கு கணவனிடமிருந்து எந்தவிதமான சுகமும் சந்தோஷமும் கிடைக்காது. சிலருக்கு குழந்தை பாக்யம் இல்லாமல் போகும். சந்தோஷமான வாழ்க்கை அமைய வேண்டுமானால் இவன் சில பரிகாரங்களைச் செய்ய வேண்டும்.

**ஆரோக்கியம்**

கருப்பை வீக்கம், மூளை சுரம், கடுமையான தலைவலி, வாயில் அல்லது வயிறு குடல்களில் புண்கள் போன்ற வியாதிகள் ஏற்பட ஏதுவுண்டு. சித்திரை நட்சத்திரத்தில் ஒரு பெண் ருதுவானால் அவள் உணர்ச்சிகள் வசப்பட்டவளாகவும், அமைதியும் அடக்கமும் உடையவளாகவும், வாழ்க்கையை ஆனந்தமாக அனுபவிப்பதில் நம்பிக்கை உள்ளவளாகவும் இருப்பாள்.

**சித்திரையில் இருந்த கோள்களை இதர கோள்கள் பார்த்த பலன்**

சூரியன் முதல் சனிவரை சித்திரை நட்சத்திரத்தில் இருந்து அவர்களை மற்ற கிரகங்கள் பார்த்த பலனை அறிய, மிருகசீரிஷ நட்சத்திரத்தில் சூரியன் முதல் சனி ஈராக இருந்து மற்ற கிரகங்கள் பார்த்த பலனைக் காண்க.

## சித்திரை நட்சத்திர பாதங்களில் கிரகங்கள் இருந்த பலன்

### சித்திரை 1ம் பாதத்தில் சூரியன் இருந்த பலன்

சிறந்த மெக்கானிக், மனைவியினிடத்தில் இவன் அடக்கம், செல்வந்தன், லக்னம் சுவாதி அல்லது விசாகம் அல்லது ஆயில்யத்தில் இருந்தால் பாலாரிஷ்டம் உடையவன். குரு பார்த்திருந்தால் பாலாரிஷ்ட தோஷம் கிடையாது. அப்படிப்பட்ட ஜாதகன் தன் தந்தையின் செல்வங்களை நிர்மூலம் ஆக்கிவிடுவான்.

### சித்திரை 1ம் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்

வளைந்த தோள்களும், கைகளும் உடையவன். இனிமையாகப் பேசுவான். உணர்ச்சி வசப்பட்டவன். இரண்டு பெண் குழந்தைகள் இருக்கும். பல கலைகளிலும் வல்லவன். சகோதரர்களுக்குள் அடிக்கடி சச்சரவுகள் தோன்றும். நாற்கால் பிராணிகள் அல்லது வேறு வகையில் ஆயுதத்தால் மரணம் சம்பவிக்கும்.

### சித்திரை 1ம் பாதத்தில் செவ்வாய் இருந்த பலன்

சூரியன், சந்திரன், குரு மூவரும் இந்த செவ்வாயுடன் சேர்ந்திருந்தால் அந்த குழந்தையின் முடிவு 5 வயதிற்குள் ஏற்படும். வயிற்றில் வாயு கோளாறுகள், டைப்பாய்டு அல்லது ஹெர்னியா போன்ற நோய்கள் தாக்கும் அபாயம் உண்டு.

### சித்திரை 1ம் பாதத்தில் புதன் இருந்த பலன்

பல புண்ணியங்களை பின்பலமாகக் கொண்டவன். அந்தப் புண்ணியங்கள் வாழ்க்கையில் சம்பவிக்கும் பல கெடுதல்களில் இருந்து அவனைக் காப்பாற்றும். இருந்தாலும், காஸ்ட்ரிக் அல்சர் அல்லது ஆஸ்துமாவினால் துன்பப்படுவான்.

**சித்திரை 1ம் பாதத்தில் குரு இருந்த பலன்**

இந்த குருவுடன், செவ்வாய், சனி, சந்திரன், மூவரும் சித்திரை 1ம் பாதத்தில் இருந்தால் அந்த குழந்தையின் ஆயுள் 5 வயது வரைதான். குரு மட்டும் இவ்வாறு இருந்தால் குடல் கோளாறுகள், ஜான்டிஸ், லீவர் அல்லது லங்ஸ் கெட்டுப்போதல் போன்ற நோய்கள் வாட்டி வதைக்கும். ஆனாலும் நீண்ட ஆயுளை உடையவன்.

**சித்திரை 1ம் பாதத்தில் சுக்கிரன் இருந்த பலன்**

சமூகத்தில் கடைநிலையில் இருப்பவர்களுக்கு விதிக்கப்பட்ட செயல்களைப் பின்பற்றுவான். நல்ல கல்வி இவனுக்குக் கிடைக்கும். ஆனால் அந்தக் கல்வியால் இவனுடைய 35 வயது வரை எந்த நன்மையான பலனும் கிடைக்காது.

**சித்திரை 1ம் பாதத்தில் சனி நின்ற பலன்**

இவனுக்கு, சனி, செவ்வாயின் பார்வை இருந்தால் தோல் வியாதிகள் உண்டாகும். சிறிதளவு செல்வமும், குறைந்த புத்திர பாக்கியமும் இருக்கும்.

**சித்திரை 1ம் பாதத்தில் ராகு இருந்த பலன்**

செவ்வாயும் இங்கு இடம் பெற்றிருந்தால் காதில் தொந்தரவுகள் ஏற்படும். பிறரிடம் கருணை இல்லாத அரக்கனாக கொடிய குணம் உள்ளவனாக இருப்பான்.

**சித்திரை 1ம் பாதத்தில் கேது இருந்த பலன்**

கேது மட்டும் இங்கு இருந்தால் ஆரோக்ய கெடுதல்கள் தீவிரமாக இருக்கும். இவன் பணத்தை அல்லது லாபங்களைத் தேடி அலைவான்.

**சித்திரை2ம் பாதத்தில் சூரியன் இருந்த பலன்**

டிரக்ஸ் கெமிக்கல், போதை தரும் மருந்துகள் இவற்றில் பிசினஸ் செய்வான். இந்த இடத்தில் லக்னமும் அமைந்தால் அவனுடைய ஆயுட்காலம் சந்தேகத்துக்குரியது. கான்ஸரினால் கஷ்டப்படுவான்.

**சித்திரை 2ம் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்**

உண்மையும், தரும குணமும் உள்ளவன். சொந்த ஊரைவிட்டு வெளியூரில் வசிப்பான். இரண்டு பெண்கள் உள்ளவன். பித்த சம்பந்தமான நோய்கள் தோன்றும். இதில் சூரியன் செவ்வாயுடன் லக்னமும் அமைந்தால் காக்கை வலிப்பால் கஷ்டப்படுவான். உடல் நிலையைப் பொறுத்தவரை 4ம் வயது வரை ஆபத்தானது.

**சித்திரை 2ம் பாதத்தில் செவ்வாய் இருந்த பலன்**

துயரமடைந்த வருத்தமான குரலில் பேசுவான். டிஸன்ட்ரி, காலரா அல்லது ஹெர்னியா போன்ற நோய்களுக்கு ஆளாவான். இதில் லக்னமும் அமைந்து சூரியன் ஏழாமிடத்தில் இருந்தால் அல்சர் ஏற்படும்.

**சித்திரை 2ம் பாதத்தில் புதன் இருந்த பலன்**

இவனுடைய காலம் கல்வி கற்பதிலும் செல்வம் சேர்ப்பதிலும் குறியாக இருப்பதில் கழியும். புண்ணியவான். மதக் கோட்பாடுகளை கடைபிடிப்பான். சந்தோஷமாக மணவாழ்க்கை அமையும். இவன் மனைவியும் வேலையில் நல்ல பொஸிஷனில் இருப்பாள். அடிக்கடி சுவாச சம்பந்தமான நோய்கள் வருத்தும். ஆனால் அது ஆஸ்துமா சம்பந்தப்பட்டது அல்ல. வயிற்றுப் போக்கும் ஏற்படும்.

**சித்திரை 2ம் பாதத்தில் குரு இருந்த பலன்**

நண்பர்கள் புடை சூழ இருப்பான். தன் நண்பர்களுக்காக ஏராளமான பணத்தை செலவழிப்பான். கடைசியில் அவனுடைய குடும்பம் பண பற்றாக்குறையால் திண்டாடும். ஜாண்டிஸ் அல்லது லிவர் பிராப்ளம் ஏற்படும்.

**சித்திரை 2ம் பாதத்தில் சுக்கிரன் இருந்த பலன்**

அழகான உருவம் கொண்டவன். நன்றாக படித்தறிந்தவன். குணவதியான மனைவியும், நன்மக்களையும் பெற்றவன். கிருமிகளால் ஏற்படும் வியாதிகள், டயரியா போன்ற நோய்களை உடையவன். வயிற்றுப் போக்கினால் குழந்தைப் பருவத்தில் மிகவும் கஷ்டப்படுவான்.

**சித்திரை 2ம் பாதத்தில் சனி இருந்த பலன்**

செவ்வாய், புதனுடன் லக்னமும் இதில் அமைந்தால் வாயில்

**சித்திரை 2ம் பாதத்தில் ராகு இருந்த பலன்**

பணக்காரனாகவும் தைரியம் உள்ளவனாகவும் இருப்பான். இவன் சட்டைப்பையில் எப்போதும் பணம் இருந்துகொண்டே இருக்கும். மணவாழ்க்கையில் இன்பம் காண்பது அரிது. இவன் பிற பெண்களுடன் செக்ஸ் அனுபவிப்பதே இதற்குக் காரணமாக இருக்கும்.

**சித்திரை 3ம் பாதத்தில் சூரியன் இருந்த பலன்**

பெண்ணைப் போன்ற உடல் அமைப்பு பெற்றவன். நல்ல படிப்பறிவு பெற்றவன். கடவுள் தொண்டு செய்பவனாகவோ அல்லது பூசாரியாகவோ இருப்பான்.

**சித்திரை 3ம் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்**

சாஸ்திரங்களை நன்றாக கற்றவன். அறிஞன், அமைதியாக பேசுபவன். வியாதிகளால் உடலில் எரிச்சல் ஏற்படும். கோபக்காரன். சிறிதளவு லாபம் கிடைத்தாலும் அதனால் திருப்தி அடைபவன். வாயு கபம் உள்ள உடலை உடையவன். இந்த இடத்து சந்திரன், ஆணானால் தந்தைக்கும், பெண் ஜாதகியானால் தாய்க்கும் கெடுதலை உண்டு பண்ணுவான்.

**சித்திரை 3ம் பாதத்தில் செவ்வாய் தரும் பலன்**

தன் சுய முயற்சியால் செல்வத்தை சம்பாதிப்பான். ஆனால் பிதுரார்ஜித சொத்துக்களை இழிவான பெண்களின்

சகவாசத்தால் அழித்து விடுவான். மூத்திரப்பையில் கற்கள், ஹெர்னியா அல்லது நெப்ரிடிஸ் போன்ற வியாதிகள் வரலாம்.

**சித்திரை 3ம் பாதத்தில் புதன் தரும் பலன்**

மெக்கானிக்கல் எஞ்ஜினீயரிங் துறையில் அதிக அளவு படித்தவன். சுமாரான அளவுக்கு செல்வம் சேர்ப்பான். இடுப்பு பிடிப்பு தலைவலி, ரத்தக் கோளாறுகள் போன்ற நோய்கள் ஏற்படலாம்.

**சித்திரை 3ம் பாதத்தில் குரு இருந்த பலன்**

நல்ல ஆரோக்கியமான உடலை உடையவன். மக்களிடையே பிரபலமானவன். குழந்தைப்பேறு, செல்வம் நண்பர்கள் எல்லாம் பெற்றவன். இவன் பெரும்பாலும், விஞ்ஞான அல்லது கல்வி ஸ்தாபனத்தில் ஊழியம் செய்வான்.

**சித்திரை 3ம் பாதத்தில் சுக்கிரன் இருந்த பலன்**

அரசாங்கத்தில் ஆளுபவர்களின் நன்மதிப்பைப் பெற்றவன். தன் குடும்பம் அல்லது சமூகத்தின் தலைவனாக இருப்பான். பணக்காரனாயும் இன்டெலக்சுவல் உடையவனாகவும் இருப்பான்.

**சித்திரை 3ம் பாதத்தில் சனி இருந்த பலன்**

லக்னம் பூராடத்தில் அமைந்து சந்திரன் அசுவதியில் இருந்தால் ஜாதகன் ஏராளமான செல்வம் உடையவன். அரசனுக்கு ஒப்பான அதிகாரம் பெற்றவன்.

**சித்திரை 3ம் பாதத்தில் ராகு இருந்த பலன்**

சனியும் செவ்வாயும் கூட இங்கிருந்தால் ஜாதகனுக்கு அல்சர் ஏற்பட்டு சிக்கலான ஆபரேஷன் செய்யும்படி நேரும். நல்ல மனைவியும் குழந்தைகளும் அடையப் பெற்றவன்.

**சித்திரை 3ம் பாதத்தில் கேது இருந்த பலன்**

வியாதிகள் அடிக்கடி தொந்தரவு கொடுக்கும். அதனால் சலிப்படைந்த மன நிலையுடன் காணப்படுவான். இரும்பு அல்லது கெமிக்கல் தொடர்பான பாக்டரியில் பணிபுரிவான்.

### சித்திரை 4ம் பாதத்தில் சூரியன் இருந்த பலன்

சிறந்த ஆட்டோமொபைல் மெக்கானிக். இவனை குரு பார்த்திருந்தால் விஞ்ஞான ஆராய்ச்சி அல்லது ஆட்டோமொபைல் எஞ்ஜினியரிங்கில் சிறப்பை அடைவான். செல்வம் சேர்ப்பதில் குறியாக இருப்பான்.

### சித்திரை 4ம் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்

தரும குணம் உடையவன். பொருள் சம்பாதிப்பதற்காக அடிக்கடி பிரயாணங்களை மேற்கொள்வான். தன் முழுமனத்துடன் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் சேவை செய்வான். வாழ்க்கையில் ஒரு நிலையை அடைவதற்கு முன்னால் பலவித துன்பங்களை அனுபவிக்க நேரும்.

### சித்திரை 4ம் பாதத்தில் செவ்வாய் இருந்த பலன்

கல்வி, ஹைஸ்கூல் படிப்பு வரை அமையும். கிளார்க், டைப்பிஸ்ட் அல்லது சேல்ஸ்மேன் ஆக ஊழியம் செய்வான். ஹெர்னியா, மூத்திரப்பையில் கற்கள், டைபாய்ட் போன்ற வியாதிகளால் கஷ்டப்படுவான்.

### சித்திரை 4ம் பாதத்தில் புதன் இருந்த பலன்

இந்த இடத்தில் புதன் நல்ல பலனை தரமாட்டான். உறவினர்கள் இவனை துன்பப்படுத்துவார்கள். அவர்களுக்கு இவன் செய்யும் உதவிகள் அவர்களுக்கு அற்பமாக தோன்றும். பிரீஸ்ட் கான்ஸர் அல்லது லங்ஸ் கான்ஸர், ரத்தத்தில் ஏற்படும் கோளாறுகள், யூரினரி பிரச்சினைகள் போன்றவைகளால் கஷ்டப்படலாம்.

### சித்திரை 4ம் பாதத்தில் குரு இருந்த பலன்

உடல் சக்தி மிக்கவனாக இருப்பான். இந்த இடம் லக்னமாக அமைந்து குருவும் இதில் இருந்தால் ஜாதகன் நீண்ட ஆயுளை உடையவன். குறைவில்லாத அறிவு பெற்றவன். அழகாகவும் பணக்காரனாகவும் இருப்பான். ஆசன வாயில் கட்டி சிரங்குகள், கிட்னி தொந்தரவுகள் தோலில் சிரங்குகள் போன்றவைகளால் கஷ்டப்படுவான்.

### சித்திரை 4ம் பாதத்தில் சுக்கிரன் இருந்த பலன்

சுயமாக சம்பாதித்த சொத்துக்களை உடையவன். தைரியமானவன். பலரும் அறிந்தவனாக இருப்பான். முக்கியமான பெரும் புள்ளிகளின் அபிமானத்தைப் பெற்றவன். அதனால் அவனுடைய பெரும்பான்மையான ஆசைகள் பூர்த்தி அடையும்.

### சித்திரை 4ம் பாதத்தில் சனி இருந்த பலன்

சனி இருப்பதற்கு இது சிறந்த இடம். ஜாதகன் புகழ்பெற்றவன். சமூகத்தில் பெருமதிப்பு உடையவன். பணக்காரன். கௌரவமும் புகழும் தானாகவே இவனை வந்தடையும். தொழிலில் எதிர்பாராத உயர்வு கிடைக்கும்.

### சித்திரை 4ம் பாதத்தில் ராகு இருந்த பலன்

வாழ்க்கை சந்தோஷமானதாக இராது. இவன் பல பெண்களை பணத்திற்காகவும் தான் இன்பம் அனுபவிப்பதற்காகவும் தன் கைக்குள் வைத்திருப்பான்.

### சித்திரை 4ம் பாதத்தில் கேது இருந்த பலன்

பணக்காரன், புண்ணியசாலி, கேது இருப்பதற்கு நல்ல இடம் இது. 35 வயதிற்குப் பிறகு நல்ல மனைவியும், குழந்தைகளையும் அடைவான். 32 வயதிற்கு முன்னால் திருமணம் செய்துகொண்டால் மனைவியின் தவறினால் அவளைவிவாகரத்து செய்துவிடுவான்.

# அத்தியாயம் 26

## துலா ராசி (லக்னம்)

***சித்திரை 3, 4 பாதங்கள் சுவாதி மற்றும் விசாகம் முதல் மூன்று பாதங்கள் கொண்டது.***

***துலா லக்ன பலன்***

வெற்றியும் உடையனாவான் வெகுளி சொல் உடையனாவன்
கற்றறிந்தோர்க்கு நல்லன் கடக்கவே கொடுமை செய்யான்
வித்தைகள் பலவும் கற்று வீணையும் பாட வல்லான்
சுற்றமும் கிளையும் வாழும் துய்யதோர் துலாத்தினானே.

*(சுவடி எண் 1500)*

(இ-ள்.) துலாம் ராசி அல்லது லக்கினத்தில் பிறந்தவன் கற்றறிந்தவர்களுக்கு நல்லவன். கொடுமை எதுவும் செய்யமாட்டான். எல்லா காரியங்களிலும் வெற்றி பெறுபவன். கோபக்காரன். பலவகைக் கலைகளையும் கற்பவன். தன்னையும் தன் சுற்றத்தாரையும் காப்பாற்றிக் கொள்பவன். வீணை முதலிய இசைக்கருவிகளில் வல்லவன். வாய்ப்பாட்டிலும் இனிமையாகப் பாட வல்லவன். இவை எல்லாம் பொருந்தி உள்ளவன் துலாத்தில் பிறந்தவனாவான்.

துலாம் 7வது ராசி, சர ராசி. ஆண் ராசி. ராசி பஞ்ச பூதத்தில் இது காற்று. மற்ற 11 ராசிகளும் மனிதன் அல்லது ஏதாவது உயிரினத்தைக் குறிப்பதாகும். இது ஒன்றுதான் ஜடபொருளாக தராசைத் தன் உருவமாக உடையது. எனவே இந்த ராசிக்காரர்கள் பெரும்பாலும் இறக்கமற்றவர்களாக இருப்பார்கள். இது ஆண் ராசி. அதிபதி சுக்கிரன். பெண்ணினம். எனவே இந்த ராசியில் பிறந்தவர்கள் பெண்களின் நளினம், மென்மை அழகு இவைகளுடன் காணப்படுவார்கள்.

வணிகர், சட்ட நிபுணர், பொறியாளர், சிறுகதை எழுத்தாளர் செக்சியாக எழுதுபவர்கள், பின்னணிப் பாடகர், நடிப்புக் கலையில் வல்லவராகவும், அக்கலையைக் கற்றுத்தரும் பிலிம்துறை முதலியவற்றில் பணி செய்பவர்களாகவும் இருப்பார்கள்.

இந்த ராசிப் பெண்கள் அழகிகள். வாளிப்பான உடல் அழகுள்ளவர்கள். ஆணின் முரட்டுத் தன்மையும், ஆளும் தன்மையும் உள்ளவர்கள். கர்விகள், தன் தலைவனைக் கைக்குள் அடக்கி வைத்துக்கொள்வதில் வல்லவர்கள். கணவன் உறவினருடன் சேர்ந்து வாழாமல் தனிக்குடித்தனத்தையே விரும்புவர்கள்.

அதிர்ஷ்ட நாட்கள் - திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளாம்

அதிர்ஷ்ட நிறம் - வெள்ளை, வெளிர் சிவப்பு, செங்காவி ஆகியவை ஆகும்.

அதிர்ஷ்ட எண்கள் - 6 மற்றும் 9. அதிர்ஷ்ட ரத்தினங்கள் - வைரம், இயலாதவர் அமெரிக்கன் டைமண்ட் பயன்படுத்தலாம்.

**சத்யாசார்ய மதப்படி துலா ராசி லக்கினத்தில் பிறந்தவர் - தன்மைகள்**

சமமான அங்கங்கள் இல்லாதவன். விஷத்தன்மையுள்ள குணக்கேடன், கபம் வாதம் இரண்டும் கலந்த உடல் தன்மை உள்ளவன். சஞ்சல புத்தி உடையவன். குட்டையான கழுத்து உடையவன். நன்றி மறவாதவன். நிறைய சம்பாதிப்பவன். அதிகம் செலவு செய்வபன். கீர்த்தி உடையவன். எல்லோராலும் மதித்துப் போற்றப்படுபவன். எல்லோரையும் புகழ்ந்து போற்றுபவன். அதிகம் நடப்பதில் ஆர்வமுள்ளவன். தர்மசீலன், பல கஷ்டங்கள் உள்ளவன். கீர்த்தி புகழ் வாய்ந்தவன். சாதுக்கள், பந்துக்கள் மற்றும் புத்திர

வியரோகமும் உள்ளவன். போஜனமில்லாமை, அதிகம் வழிநடத்தல் முதலியவைகளால் மரணமேற்படலாம்.

**மற்ற நூல்கள்**

இவர் மெத்தப்படித்தவர். இரக்கமற்றவர், ஆனால் கொடியவர் அல்லர், பல கலைவல்லவர்.

இவர்கள் அரசர்களால் பூசிக்கப்படுவர், புத்தி பொறுமை, புகழ் எல்லாம் உள்ளவர்கள். பணக்காரர். சுகம் புருஷர். சர்வஜனப் பிரியர். சுகந்த பரிமணப்பிரியர். சுகபுருஷன், நல்ல காரியத்தில் கண்ணாய் இருப்பார். எல்லோருக்கும் இனியவர். வியாபாரத்தில் சாமர்த்யம் உள்ளவர். வினோதமான குணங்கள் உள்ளவர். தூய்மையுள்ளவர். தன் குலம் மற்றும் சமூகத்திற்கு இவர் ஒரு ஒளி விளக்கு. சிலேத்துமம் அதாவது சளி நோய் அதிகமுள்ளவர்.

சதைப்பிடிப்பான சமச்சீரான அங்க அமைப்பு உள்ளவர். பளபளக்கும் கண்கள், கன்னம், முகம் எல்லாம் உள்ளவர். வயிறு பெரிது. மீசைவைத்துக் கொள்வதில் பிரியமுண்டு. ஆண்கள் பெண்களை அடிமைகொள்ளும் அழகுள்ளவர். பெண்களால் ஆண்களைப் பரவசப்படுத்தும் அசைவும், நளினமும், ஒயிலான நடையும் உள்ள அழகுபதுமைகள். தர்மவான், புண்ணியசீலர், தெய்வபக்தியும் நற்காரிய சிந்தனை உள்ளவர்கள். கற்பனைத் திறம் அதிகம். மனிதவர்க்கத்திற்குச் சேவகர். நீதிபதிகள், தத்துவ ஞானியாகவும் திகழ்வர். சில சமயம் அவை நாடக, நடன, திரைப்படத்துறை முதலியவற்றைத் தொழிலாகவே உடையவராக இவர்கள் இருப்பார்கள்.

நடுத்தர வயதில் திருமணம் நடக்கும். இடுப்பு நோய், சர்க்கரை வியாதி, குஷ்டரோகம் போன்ற நோய்களால் பாதிக்கப்படுவர். 7, 9, 11, 10, 12, 18 இந்த வயதுகளில் அக்கினி, மந்தம், சத்துரு பீடை, பேதி, வைசூரி போன்ற நோய்களால் பாதிக்கப்படுவர். இந்த வயதுகளில் மேற்கண்ட நோய்கள் தீவிரமடையலாம்.

இவர்கள் 8வது வயதில் வைகாசி மாதம் சுக்லபட்சம் திருதியை கூடிய நாளில் சூலை நோய் ஏற்பட்டு இறைவனடி சேர்வர்.

**இந்த லக்னத்துக்கு**

பாபர் - குரு செவ்வாய்

சுபர் - சுக்ரன், புதன் மற்றும் சனி

கிரஹ சேர்க்கையினால் ஏற்படும் சுபயோகம்

சந்திரனும் புதனும் சேர்ந்தால் நல்ல யோகம். இருவரும் யோகக்காரர்கள்.

பாதகர் - சூரியன்

மாரகர் - சுக்ரன், செவ்வாய்

குறிப்பு:- 11க்குடையவன் என்ற வகையில் சுக்கிரன் பாவி, இவன் லக்னாதிபதியாகையால் கொல்லான். ஆனால் 2, 7க்குடைய செவ்வாய் மாரகன். இவன் பிரபல மாரகன். வலுவானவன்.

சனி, சுக்கிரன், சனி தனியாக, சனி புதன், சனி சந்திரன், புதன் சந்திரன், இவர்கள் சேர்ந்தால் நல்ல யோகம். சனியும் செவ்வாயும் சாதாரண பலனையே தருவர். செவ்வாயும் புதனும் சேர்ந்தால் எந்த பலனும் இராது.

**அந்த லக்னத்துக்கு**

சூரியன்- காரகன் (நல்லதைச் செய்பவன்)

சந்திரன், பத்தாமதிபன் - காரகனே

செவ்வாய்- தனாதிபதி

நடுநிலைக்கோள்- ஆனால் மாரகன்

குரு- 3க்குடையவன் பிரபல அசுப காரகர்

சுக்கிரன் 1,8க்குடையவர்- காரகன். 8ம் அதிபதியாக இருந்தாலும் லக்னத்தில் பந்தமமும் உடையவர். ஆகையால் இவர் இந்த லக்னத்திற்கு நல்லது செய்யும் தன்மையுள்ள காரகர் ஆவார்.

சனி 4, 5க்குடையவர்- இருவரும் காரகரே

சனி- பரமயோக காரகன்

புதன் - சுக்கிரன் - சுபர்

சூரியன் செவ்வாயும், குரு, மூவரும் அசுபர். இவர்களுக்கு யோகமும், செளக்யமும் 24, 25, 32, 33, 35 வயதுகளில் ஏற்படும்.

**சம்மிதைப்படி துலா லக்ன குணங்கள்**

இவர் மெல்லிதான ஒத்தை நாடி சரீரமுள்ளவர். உயர்ந்த தோற்றம், இளைத்த சரீரம், அழகர், எப்பொழுதும் அமைதியை விரும்புபவர்கள். எப்பொழுதும் சந்தோஷமாக இருப்பவர்கள். உண்மை பேசுபவர். தன் மதத்தில் பற்றுள்ள ஆன்மீகவாதி, வேதாந்தம் மனோதத்துவம் அறிந்தவர். சிறிது பயந்த சுபாவமுள்ளவர். மிகவும் அரிதாக, சிலசமயம் சாதுத்தனம் அல்லது வெகுளிக்குணம் உள்ளவர். உலகத்தாரால் போற்றப்படுபவர்கள். மத்யஸ்தம் அல்லது பஞ்சாயத்து பணிசெய்வதில் வல்லவர்.

பெண்களை மிகவும் விரும்புபவர். குழந்தை களிடத்தில் பற்றுடையவர். கவரும் தோற்றமுடையவர். நிமிர்ந்து கூன்விழாமல் இருக்கும் உயர்ந்த வடிவம் உள்ளவர். கனிவான நோக்கம், சுருண்ட கருகருப்பான தலைமுடி யுள்ளவர். வட்ட முகமுள்ளவர். ஒருபக்கம் சாய்ந்து நின்று பிறர் சொல்லுவதைக் கேட்கும் குணமுள்ளவர். நன்றாக உடையை உடுத்துபவர். மொத்தத்தில் அழகுள்ளவர்.

# அத்தியாயம் 21

## சுவாதி நட்சத்திரம்

*இது 15வது நட்சத்திரம். ராசி மண்டலத்தில் 186 பாகை. 40 முதல் 200 பாகை வரை பரவியுள்ளது.*

| | | |
|---|---|---|
| *வடமொழிப்பெயர்* | - | *ஸ்வாதி* |
| *தமிழ்ப்பெயர்* | - | *சோதி, சுவாதி* |
| *அரபுப்பெயர்* | - | *அல் காபர்* |
| *சீனப்பெயர்* | - | *கிங் (AL GAER)* |

*சுவாதி என்றால் வான் என்றும் பெயர். இது ஒற்றை நட்சத்திரம். தனிமுத்து அல்ல ஒரு பவழ மணி போன்றது. நரசிம்மவதாரம் இந்த நட்சத்திரத்தில் தான் ஏற்பட்டது. இதன் அதிதேவதை வாயு.*

**சொல்லவும் வல்லானாகும் சோதிசேர் கண்ணனாகும்**
**இல்லையென்றுரைக்க மாட்டான் இரப்பவர் தமக்கு நல்கும்**
**அல்லவே பலவும் பேசான் ஆயுதம் பிடிக்கவல்லான்**
**தொல்லை நூல் பலவும் கற்றும் சோதிதான் தோன்றினானே.**

*(சுவடி எண். 1500)*

*(இ-ள்.) எந்த சொல்லையும் இவன் நன்றாக பேசவல்லான். இவன் ஞானி. பரந்த கண்ணனாவான். யாருக்கும் இல்லை என்றுரைக்காமல் இரப்பவர்களுக்கு வாரிக் கொடுப்பவன். எந்த தொல்லை தரும் விஷயத்தையும் பேசமாட்டான். எந்த ஆயுதத்தையும் பிடிக்க வல்லவன். (நரசிம்ம அம்ஸமான விஷ்ணுவானதால் விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் திருமலை - சர்வ பிரஸரணா யுத என்று குறிப்பிட்ட தொனி இங்கே தோன்றுகிறது. அதாவது எல்லா ஆயுதங்களையும் இவன் ஏந்தி எய்ய வல்லவன்) பழமையான பல நூல்களையும் இவன் கற்றுத் தேர்ந்தவன். இவையே சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவன் குணங்களாகும்.*

இன்னானுக்கு தெய்வம், ஆதித்தன் - பூதம் - பிரிதிவி, கோத்திரம் - அகஸ்தியன் - சாதி - வைசியன். யோனி - கிடா, பட்சி தேனீ, மரம் - மாதுளை எருக்கம் என்றும் கொள்ளப்படும்.

யோகினி மகேஸ்வரி, வெள்ளிக்கிழமை ஜென்ம வாரம் - வெள்ளிக்கிழமை பொருத்தம் - 7க்கு மேல் தெற்கு வாசல் விடுவது. சித்திரை மாதம் சூனியம் 10 நாழிகை, 4 நாழிகை விஷம். வெதுப்பு தோன்றிடில் 7 நாளையில் தீரும். இதற்கு கோதுமை சாதம் அரிசிச் சோறுடனே நெய்யுடன் கலந்து ஓமம் பண்ணுவது முதலியவற்றை பண்ண வேண்டும்.

இந்நாளில் கோடியுடுக்க, ஏர்பூட்ட நன்று. இவன் பிரதாபம் உடையவன். தெய்வபக்தி உடையவன். புறவடி உயர்ந்திருக்கும் குணவான். விசுவாசிக்கத் தக்கவன், இந்நாள் சீமந்தம் பண்ணவும் நன்று. இவன் வலப்புறத்தில் மறு உண்டு. பயணத்திற்கு நெல்லிக்கனி உண்டு. வழிப் போக வேண்டும்.

இவனுக்குக் கண்ணும் காலும் பெருத்திருக்கும். அரசரை அண்டி வாழ்வான். கோபமுடையவன். நீந்த, நீர் ஆட வல்லவன். அனுபவமுள்ளவன். உடம்பும் பருத்திருக்கும். குள்ளனாகவும் இருப்பான்.

**தமிழ் ஜாதகாலங்காரப் பாடல் – சுவாதி பலன்**

**மறு தொடையில் பல்லவர்க்கும் வசியன் போசனப் பிரியன் பற்ற வாழ்வான்**
**நல் லியல்சேர் தேவதா பக்தியுந்தான் இச்சையுளன் ராச சேவைக்**
**கயல் விழுனானன் தாய்தந்தைக் கினியவன் விசுவாசமுளன் கடினதேகன்**
**சொல்லு நெறி உளன்கரத் தாயுதம் பிடிப்பான் தியாகவான் சோதி யானே. 137**

(இ-ள்.) சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவன் சகல ஐஸ்வர்யமுடையவன். உண்பதில் பிரியமுடையவன். தொடையில் மறு உள்ளவன். நல்ல ஒழுக்கமுடையவன். பாசமுள்ளவன். கடவுள் பக்தி வழிபாடு உடையவன். தாய் தந்தை அவர்களிடத்தில் இனியன். நம்பத்தகுந்தவன்,

பலமான முரட்டு உடல் உள்ளவன். நீதியாக நியாயம் பேசுபவன், கையில் பலவிதமான ஆயுதங்களையும் பிடித்து பிரயோகம் செய்ய வல்லவன் என்பதாம்.

இவன் தரும புத்தியுள்ளவன், சத்தியசந்தன், கிரய விக்கிரயம் செய்வதில் சமர்த்தன், காம இச்சையுள்ளவன், அதிக யாகங்கள் செய்பவன், தானம் செய்பவன் வித்துவானுமாவான் என்பதாம்.

**பிருகத் ஜாதகம்**

வினய முள்ளவன், வியாபாரம் செய்வதில் சமர்த்தன், தயாளன் பிரியவசனன் தார்மீகன் என்பதாம்.

**பெண்ணின் குணங்கள்**

***சுவாதியில் பிறந்தவள் வடமொழி ஸ்த்ரீ ஜாதகப்படி***

இதில் பிறந்தவள் எப்பொழுதும் புத்திரர்களுடன் கூடியவள். சாமர்த்தியமுள்ளவள். சத்தியமுள்ளவள், தனமுள்ளவள், தாகம் அதிகம் இன்றி தண்ணீர் குறைவாகவே அருந்துபவள். புகழுள்ளவள், அதிக தோழிகள் உள்ளவள். தன் சத்துருக்களை ஜெயிக்கக் கூடியவள்.

**வேறு நூல்**

அபூர்வமான தோற்றம் அழகுள்ளவள், சிறிது குறுக்கு புத்தி உள்ளவள். எதிலும் வெற்றி உடையவள். கன்னியின் அழகுள்ளவள். பிரமாதமான குணமுள்ளவள்.

***தமிழ் மதனநூல் வசனம் (சங்கராச்சாரியார் கொக்கோகம்)***

**இவள் நாக தத்துவ லக்ஷண முள்ளவள் மேனிகால்**
**கைதோல் மெய் மிகுந்தோங்கியே ஊனமின்றி**
**உருண்டுயர் கொங்கையள் மீனிறைச்சி விடும் பிட**
**உண்டிடும் மான்மறிக்கண் மதித்தொழும் சோதியே. 138**

(இ-ள்.) இவள் உடல் வனப்பமும் வாளிப்பமும் உள்ளவள். கால் கைதோல் எல்லாமே பெரிய அளவுள்ளவள்.

குற்ற மற்ற உருண்டு திரண்டு உயர்ந்து நிமிர்ந்துள்ள கொங்கை உள்ளவள். மீன் மற்றும் மாமிசத்தையும் விரும்பி உண்பவள். மானைப்போன்ற மருளும் அழகிய சுழல் விழியுள்ளவள். மொத்தத்தில் இவள் மிகவும் அழகி என்பதாம்.

**பிறநூற் செய்திகள் இந்த நக்ஷத்திரம் பற்றி**

சுவாதி நட்சத்திரத்திற்கு ஒரு தனிப் புகழ் உள்ளது. ஆழ்கடலில் உள்ள சிப்பிகள் சுவாதி நட்சத்திரத்தன்று மேலே பரப்பில் வரும். அப்பொழுது அதன் மேல் மழைத்துளி விழுந்தால் சிப்பிகள் மூடிக்கொள்ளும். அதுவே முத்துக்களாகும் என்று பேசப்படும் வழக்கு யாரும் அறிந்ததே. இதனாலேயே சுவாதி முத்யம் என்ற பழமொழி தெலுங்கில் உள்ளது.

இது நட்சத்திரம் சிவப்பான நிறம். மணிக்கச் சொலிப்புள்ளது. இது பெண் நட்சத்திரம், ஒளியும் தோற்ற கம்பீரமும் உண்டு. இது உபயகுல நட்சத்திரமாகும்.

நல்ல போக பாக்கியமுள்ளவர்கள். இதில் பிறந்தவர்கள் சொந்தத் தொழில் விருத்தியாகும். நடுவயதுக்குப் பின் புண்ணிய காரியங்களில் பிறர் சம்பாத்தியமானவற்றை அனுபவிக்கும் பாக்கியமும் இவர்களுக்குண்டு.

**செய்ய வேண்டிய காரியங்கள்**

மூலிகை சேகரிக்க நல்லது. இதில் சூரியன் சஞ்சரிக்கும் போது விலைகள் குறையும். இதில் பெண்கள் ருதுவானால் சத்புத்திரர்களைப் பெறுவார்கள். நல்வழி வாழ்ந்து கணவனிடம் பக்தியுள்ள பதிவிரதையாக இருப்பாள்.

புதுமனை புகுதல், விவாகம், வித்தைகற்க ஆரம்பம் செய்ய நன்று. உபநயனம், நாமகரணம் அன்னப்பிராசனமும் செய்ய உகந்தது.

இந்த நட்சத்திரம் ஜூன் மாதம் இரவு 10 மணி அளவில் நன்கு புலப்படும்.

இதில் பிறந்தவர்கள் மிகவும் திறமைசாலிகள் தீர்மான புத்தி குறைவு. படித்தவர்களும் தேவ காரியங்களுக்கும் நன்கு உதவுபவர்கள். நல்ல சாமர்த்தியமான வியாபாரிகள். நல்ல பணம் வரவு உண்டு.

பிறர் குற்றங்களை விசாரித்துத் தண்டனை வழங்குவதில் சமர்த்தர். பிறரைக் கவர்ந்து தன் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்வதில் சமர்த்தர்.

அன்னியப் பெண்கள் உறவும் உண்டு. இந்த நட்சத்திரக்காரக்களுக்குத் திருமணம் தாமதப்படும். இவர்கள் மனைவிக்கு அடங்கியவர். சிலருக்குப் புத்திரதோஷமும் ஏற்படலாம். சங்கீதம் நாட்டியம் இவற்றில் திறமையுண்டு. தன் குற்றங்களை பிறர் மேல் சுமத்துபவர்கள். இவர்களுக்கு ஏதாவது நோய் இருந்துகொண்டே இருக்கும்.

இந்த நட்சத்திரத்தில் ஞாயிற்றில் சித்தயோகம். சனிக்கிழமை அமிர்தயோகம். திரயோதசி திதி மரணயோகம். இந்த நட்சத்திரத்தில் கடன் கொடுக்கக்கூடாது. சனிக்கிழமை ரிஷப லக்னமானால் பெரிய திட்டங்கள் செய்ய நல்லது.

ஜ்வரம் வந்தால் ஆறுதினம் தயிரன்னம் நிவேதனம் செய்து, தாமரை புஷ்பம் பூஜை - பொன்னிறமுள்ளவை. அகரு தூபம் "சனவி பிதேதி" என்ற மந்திரத்தால், நெய் சேர்ந்த வெள்ளை கோதுமை சாதம் சேர்த்து ஹோமம், சாவித்திரி மந்திரத்தால் 108 தடவை ஹோமம், சந்தனம் புஷ்பம் சேர்த்து வாயு தேவதைக்கு பலி இட்டு பூசிக்க 10 நாள் முதல் 40 நாள் எல்லைக்குள் சுகம். இதில் மாதம் பிறந்தால் பயிர் விளைச்சல் மத்திமம்.

*தமிழ் ஜாதக அலங்காரம்*

பெற்றிடு தீரன் சொற்பனன் ஞானி
பிரியமவை அடைந்தினி திருப்பான்
பெருமை சேர் வித்தைப் பிரசிங்கி சாது
பேசிய சோதியின் முதற்கால்
உற்ற நல் திடவான் ஆகும் வாக்சாலன்
புத்திமான் காரிய வாதி
உண்மை யனந்த ரங்கவான் காமி
ஓதுகால் இரண்டதாம் பலனே
வெற்றிவிற் தொழிலன் சூரனாங் - குடிலன்
மேவுநன் னடையுளான் கலகம்
இயற்றுவான் சோதி விளங்குமூன் றதாம்
எனும் பதத் துதித்திடு வோனே
சொற்றிறன் கோபி கலகமேற் பிரியன்
துர்ச்சனன் சீலவான் காமி
சோதனாம் நான்காம் பதத்தினி லுதித்தான்
தோற்றிய வடிவமைத் தோளாய்!

(இ-ள்.) சுவாதி நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் பிறந்தோனென்று சொல்பவனின் பலனாவது இவன் தைரியமுள்ளவன். கனவு அதிகம் காண்பவன், சன்யாசி, அவனைச் சினேகிப்பவர்கள் மேதாவி, பெருமையுண்டு, தைரியமுண்டு. கல்வியினால் உபன்யாசம் செய்பவன். கோபமில்லாதவன் ஆவான் என்பதாம்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன் மனோதைரியம் உள்ளவன். படபடவென்று பேசுபவன், அறிவில் உயர்ந்தவன், எக்காரியத்திலும் ஜாக்கிரதையாய் நடந்து கொள்பவன், பொய் சொல்லாதவன், ஆழமான நெஞ்சம் உள்ளவன். எதையும் வெளிப்படையாக பேசாதவன். ஸ்திரீ சுகத்தை மிகவும் விரும்புபவன் என்பதாம்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் அம்பு முதலிய ஆயுதங்களால் போரிடும் சமர்த்தன், துற்செய்கைகள் உடையவன். பெரிய குடும்பஸ்தன். நன்னடத்தை இல்லாதவன். கோள் சொல்லுபவன். கெட்ட காரியங்களில் ஈடுபாடு உள்ளவனும் ஆவான் என்பதாம்.

நான்காம் பாதத்தில் உதித்தவன் சொன்ன சொல் தவறாதவன். அதிக கோபம் உள்ளவன், கோள் சொல்லுவதில் அதிக நாட்டம், தீயவர் சேரர்கள் அன்மார்க்கர் ஆகிய நண்பர்களை உடையவன். பரிசுத்தமுடையவன் ஆனால் ஸ்திரீலோலன் என்பதாம்.

**ஜாதக சார தீபம் பாத பலன்**

**முதல் பாதம்**

இதில் பிறந்தவன் கள்வன் திருடன்

**இரண்டாம் பாதம்**

அல்பாயுள் உள்ளவன்

**மூன்றாம் பாதம்**

தரும சிந்தனையுள்ளவன்

**நான்காம் பாதம்**

படிப்படியாக முன்னேறி அரச பீடத்தை அலங்கரிப்பவன் (அரசன்)

**சுவடி எண் 1500 மரண கண்டிகையில் சொல்லியுள்ள சுவாதி பாத பலன்**

**முதல் பாதம்**

பொருள்சேர் மைந்தன் பொய் சொல்லான்சிவந்த கண்ணன் செறிகுழலான்
அறிவு மிகுந்தோன் பெருங்குணத்தான் அடைந்தோர்க்கன்பன் அழகியனாம்
பொறிசேர் மைந்தன் மனையாளைப் பொருளாயெண்ணான் புகழ் விளங்கும்
வெறிசேர் குழலின் மடமாதே வியாழன் காலிற் பிறந்தோனே.! 140

நட்சத்திரம் 8

*(இ-ள்.)* இவன் நிறைந்த தனம் பொருள் உள்ளவன். சிவந்த கண்களை உடையவன். அடர்த்தியான தலைமயிர் உள்ளவன். அறிவு மிகுந்த புத்திசாலி. தன்னை அண்டினவர்களிடத்தில் அன்பு செய்பவன் தனது மைந்தன், மனைவியை அவர்களிடம் நிறைய பணம் இருந்தாலும் மதிக்க மாட்டான். மணம் வீசும் கூந்தலுடைய இளைய பெண்ணே இவையே குரு அங்கிஷத்தில் பிறந்தவனுடைய குணங்களாகும்.

**இதற்குக் கால சக்கர தசை**

| | | | |
|---|---|---|---|
| மேஷச் செவ்வாய் | - | 7 வருடம் | |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| மிதுன புதன் | - | 9 | ,, |
| கடகச் சந்திரன் | - | 21 | ,, |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| துலா வெள்ளி | - | 16 | ,, |
| விருச்சிகச் செவ்வாய் | - | 7 | ,, |
| தனுசு வியாழன் | - | 10 | ,, |
| ஆக வயது | - | 100 | ,, |

**இரண்டாம் பாதம் (மரண கண்டிகை சுவடி எண் 1500)**

ஆரையும் அறிந்து பேசும் அரும் பெரும் பண்பன்சால
சீரிய செய்வதல்லால் சிதைவதே செய்ய வொண்ணான்
வாரியம் பொய்கள் சொல்வான் மனம் பிறர்க்கறிய சொன்னான்
காரிய சூசரனாகும் காரி அங் கிஷத்தினானே!

*(இ-ள்.)* சுவாதி நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், யாரிடம் பேசினாலும் அவர்கள் தகுதி அறிந்தே பேசுவான். பணத்தை விரும்பி சேர்ப்பவன். நல்ல காரியங்களையே செய்வான். கெட்ட அல்லது தீய

செயல்களைச் செய்ய மாட்டான். அளவுக்கு மீறிப் பொய்கள் சொல்ல மாட்டான். பொய்கள் சொல்லவே மாட்டான். இவன் மனதைப் பிறரால் அறிய முடியாத அளவுக்கு ஆழமான மனம் உடையவன். இவனே சனியின் அங்கிஷத்திலர் பிறந்தவன் என்பதாம்.

**இதற்குக் காலச்சக்கரத் தசை**

| | | | |
|---|---|---|---|
| மகரச் சனி | - | 4 | வருடம் |
| கும்பச் சனி | - | 4 | ,, |
| மீன வியாழன் | - | 10 | ,, |
| விருச்சிகச் செவ்வாய் | - | 7 | ,, |
| துலாம் வெள்ளி | - | 16 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| கடகச் சந்திரன் | - | 21 | ,, |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| மிதுன புதன் | - | 9 | ,, |
| ஆக வயது | - | 85 | ,, |

**சுவாதி நக்ஷத்திரம் 3ம் பாத பலன் (சுவடி எண் 1500 மரண கண்டிகை)**

ஊனம துடையனாதம் உறவொடு பகையும் எண்ணான்
மானம துடையனாகும் வழக்கறிந்துரைக்க வல்லான்
மேனியும் உருவும் நல்லான் மிக்கதோர் அறிவு முள்ளான்
கானகம் திரிந்து வாழும் காரியங்கிஷத்தினானே. 143

(இ-ள்.) சுவாதி நக்ஷத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவன் யாரிடமும் உறவு பகை என்று பாராட்டாமல் நடுநிலையாக இருப்பவன். தன்மானமுள்ளவன். வழக்காடி உரையாடி (வாதம் செய்து வெல்வதில் சமர்த்தன்) வழக்கறிஞன். இவன்

நிறமும் சிவப்பு, உருவமும் அழகன். நிறைந்த அறிவுள்ள புத்திசாலி. இவனும் கானகங்களில் திரிந்து வாழ்பவன். அதுவே சனி அங்கிஷத்தில் பிறந்தவன் குணங்களாகும் என்பதாம்.

**இதற்குக் காலச் சக்கரத்தசை**

| | | | |
|---|---|---|---|
| ரிஷப வெள்ளி | - | 16 | வருடம் |
| மேஷச்செவ்வாய் | - | 7 | ,, |
| மீன வியாழன் | - | 10 | ,, |
| கும்பச்சனி | - | 4 | ,, |
| மகரச்சனி | - | 4 | ,, |
| தனுசு வியாழன் | - | 10 | ,, |
| மேஷச் செவ்வாய் | - | 7 | ,, |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| மிதுன புதன் | | 9 | ,, |
| ஆக வயது | - | 83 | ,, |

**சுவாதி 4ம் பாதம் பிறந்தவன் பலன் (சுவடி எண் 1500 மரண கண்டிகை)**

மாந்தளிர் போலும் மேனி மதிமுகன் மறுவு முண்டாம்
ஏந்திய குலத்துக் கெல்லாம் இசைந்ததோர் ராச னாவான்
காய்ந்தரின் நடக்க மாட்டான் கனங்குழை யார்க்கு நல்லான்
சேர்ந்தவர்க் கன்பனாகும் செய்ய பொற் காலினானே. 144

(இ-ள்.) இவன் மேனி நிறம் மாந்தளிர் போல் சிவப்பானவன். சந்திரன் போலும் வட்டமான அழகிய முகமுள்ளவன். அதில் மறுவும் உள்ளவன். தன் குலத்துக்குத் தலைவனாவான். அரசன் போல் உள்ளவன். வெயில் காயும் போது வெளியில் நடக்கமுடியாத அளவுக்கு இவன் மென்மையானவன். அழகிய காதணி அணிந்த பெண்களுக்கு அவன் நேயம் உள்ளவன். இவனைச் சேர்ந்தவர்களுக்கு இவன்

அன்பாக பாசத்துடன் இருப்பான். இவையே சனியின் அங்கிஷத்தில் பிறந்தவன் குணங்களாகும்.

**வடமொழி கர்ம விபாகம் நூலில் கண்ட சுவாதி நக்ஷத்திர சாந்தி பரிஹார முறை**

**சிவபெருமான் சொல்லுகிறார்**

கன்யா குப்ஜ தேசத்தில் ருத்ரதர்மன் என்ற அரசன் இருந்தான். இவன் குடிகளைப் பாதுகாத்து அறம் திறம்பாது ஆண்டுவந்தான். இவனுக்குப் பிரபாவதி என்ற பெயருடைய மனைவி இருந்தாள். ஒருநாள் எதிரிக்கு மிகவும் பயந்த ஒரு அந்தணன் தன் மனைவியுடன் அவனிடம் அடைக்கலம் புகுந்தான். அரசனின் குமாரன் பிராமணனின் மனைவியுடன் போகம் அனுபவித்து வந்தான். அரசன் பிள்ளைப் பாசத்தால் அவனைத் தடுக்கவில்லை.

சிலகாலம் சென்று ராஜா இறந்தான். யமதர்ம ராஜன் அவனை கர்தமம் என்ற நரகத்தில் தள்ளி தண்டித்தான். இங்கு அரசன் 60,000 வருஷங்கள் துன்பம் அனுபவித்தான். அதன் பின் நாயாகப் பிறந்தான். அதன்பின் நரியாகவும் பிறந்து, அது கழித்து மனிதப் பிறவி எடுத்தான். போன ஜென்ம மனைவியே இவனுக்கு மீண்டும் பெண்ணாகப் பிறந்து மனைவியானாள். இப்பொழுது, அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. கிழப்பருவத்தில் இவனுக்கு கப, வாத, பித்த ரோகங்கள் பற்றிக் கொண்டான். இதற்கு சாந்தி பரிகாரம் வருமாறு.

முதலில் தன்னுடைய தனத்தில் 8ல் ஒரு பாகத்தைப் புண்ணிய காரியங்களில் செலவழிக்க வேண்டும். பிறகு சாலை ஓரங்களில் உள்ள பாழடைந்த கிணறு குளங்களைத் தூர்வாரி சரிப்படுத்த வேண்டும். வேதமறிந்த பிராமணனுக்கு, நல்ல துணிகள், ரத்னங்கள், மணி (கோயில் மணி) சாமரம் இன்னும் தீவன சாமக்கிரியைகளுடன் அலங்கரிக்கப்பட்ட கன்றுடன் கூடிய பசுவை, சந்திர கிரஹண சமயத்தில் தானம் பண்ண வேண்டும். மூன்று தோலா எடையுள்ள தங்கத்தால் தாமரை செய்து உத்தம பிராமணனுக்குத் தானம் செய்ய

வேண்டும். இப்படிச் செய்வதால் இவன் பாபம் முழுவதும் தீர்ந்து, மலடியான இவன் மனைவிக்கு, தீர்க்காயுள் உள்ள ஆண் பெண் குழந்தைகள் பிறப்பார்கள்.

**சுவாதி நக்ஷத்திரம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் பரிஹாரங்களும்**

**சிவபெருமான் சொல்லுகிறார்**

கங்கையின் தெற்குக் கரையில் விந்தம் என்ற நகரத்தில் ஒரு பிராமணன் தன் குலத்தொழிலைமறந்து தீய நெறியில் வாழ்ந்து வந்தான். இவன் தினமும் பரத்தையர்களுடன் (மாற்றார் மனைவிகளுடன்) சுகித்து வந்தான். இவன் பசு, பெண் யானை இவைகளை வியாபாரம் பண்ணி வந்தான். இதில் 60 கோடி பணம் சம்பாதித்தான். இதில் ஒரு காசு கூட நல்ல காரியங்களுக்கு செலவழிக்க வில்லை. தன் மனைவியை விட்டு மாற்றான் மனைவியுடன் வாழ்ந்து சுகித்து வந்தான். வயதாகி இவன் இறந்தான்.

இவனை யமபடர்கள் பிடித்துப்போய் கொடிய நரகத்தில் தள்ளினார்கள். ஒரு கல்ப காலம் வரை துன்பம் அனுபவித்தான். அதன்பின் புலியாகவும், அதன் பின் ஆடாகவும் பிறந்தான். அதன் பின் மனிதனாகவும் பிறந்தான். இதில் இவனுக்கு ரோகங்கள் பற்றிக் கொண்டன. இவனுக்குக் குழந்தைகளும் பிறந்து பிறந்து இறந்தன. இவனுக்குச் சுகம் என்பது எள்ளளவும் ஏற்படவில்லை.

தேவி! இதற்குச் சாந்தி பரிகாரம் கேட்பாயாக!

முதலில் இவன் காயத்ரி மந்திரம் ஒரு லக்ஷம் முறை ஜபம் செய்ய வேண்டும். அதில் பத்தில் ஒரு பாகம் ஹோமம் பண்ண வேண்டும். எப்பொழுதும் பகவான் நாராயணன் உருவத்தியானம்பண்ணிக்கொண்டிருக்க வேண்டும். சங்கசக்ர கதாதானனான பீதாம்பரதாரியான விஷ்ணுவை எப்பொழுதும் மனதில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வருஷமும் கார்த்திகை மாதம் துளசி பூஜை செய்ய வேண்டும். சாஸ்த்ர முறைப்படி கோதானம் பண்ண வேண்டும்.

இதனால் இவன் பாபங்கள் தீரும். இவனும் நோய் நீங்கி சுகம் பெறுவான். இவன் மனைவியும் மலட்டுத்தனம் போய் தீர்க்காயுளுள்ள பிள்ளைகளைப் பெறுவாள்.

**சுவாதி நக்ஷத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம சாந்தி பரிகார முறைகள்.**

**சிவபெருமான் சொல்லுகிறார்.**

குருக்ஷேத்ர புண்ணிய பூமியில் ஒரு இடையன் வாழ்ந்து வந்தான். நித்யமும் பயிர்த்தொழிலும், கிரய விக்கிரயமும் செய்து வந்தான். இவனிடம் எருமை, பசு, எருது முதலியவை நிறைய இருந்தன. இவன் மனைவி எப்பொழுதும் பர புருஷர்களுடன் போகம் பண்ணி வந்தாள். எப்பொழுதும் கடுமையான வசனமே பேசுவாள். இந்த இடையன் நிறைய தனம் சம்பாதித்து சேர்த்தும் சிறிதளவும் தானம் செய்யவில்லை. ஆனால் ஒரு சமயம் சந்திர கிரஹணத்தின் போது, காசி க்ஷேத்திரத்தில் பத்துவர்ணம் கொண்ட பசு ஒன்றை அகஸ்மாத்தாக தானம் பண்ணினான். பலகாலம் சென்று இவன் இறந்தான். இவனை எமதர்மன் பிடித்து நரகத்தில், தன்ளினான். 30 ஆயிரம் வருஷம் துன்பம் அனுபவித்த பின் இவன் எருமையாகப் பிறவி எடுத்தான். அதன் பின் தன தான்யம் நிறைந்த குடும்பத்தில் மனிதப் பிறவியை அடைந்தான். ஆனால் பூர்வ ஜென்ம பாவத்தால் இவன் சந்ததியற்றவனாக இருந்தான். இப்பொழுது இதற்கு சாந்தி பரிகாரம் வருமாறு.

முதலில் தன் வீட்டில் உள்ள பணத்தில் 6ல் ஒரு பாகத்தை உத்தம அந்தணனுக்குத் தானம் பண்ண வேண்டும். அதன் பின் ஒரு லக்ஷம் முறை காயத்ரி மந்திரம் ஜபம் செய்விக்க வேண்டும். இதில் 10ல் ஒரு பங்கு ஹோமம் செய்ய வேண்டும். தர்ப்பணம், மார்ஜனமும் செய்யவேண்டும். இதன் பின் சுவர்ணப் பூண் அணிந்த கொம்புடன் கூடிய கபில நிறமுள்ள பசுவை நல்ல போர்வை அணிவித்து உத்தம

பிராமணனுக்குத் தானம் செய்ய வேண்டும். அதன் பின் 55 அந்தணர்களுக்கு விருந்தளித்து, பஞ்ச பாத்திரங்களை ஒவ்வொருவருக்கும் தானம் செய்ய வேண்டும். இதனால் இவன் நோய்கள் நீங்கி இவனுக்கு தீர்க்காயுள் உள்ள குழந்தைகல் பிறக்கும். இவர்களும் சந்தோஷமுடன் வாழ்வார்கள்.

**சுவாதி நக்ஷத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம பாவமும் சாந்தி முறைகளும்**

**சிவபெருமான் சொல்லுகிறார்**

அஸ்தினாபுரம் என்ற ஒரு நகரம் உண்டு. அங்கு மிகவும் சிறந்த அறிவாளிகள் உண்டு. இவனுக்குத் தோன்றும் நோய் கண்டம் முதலியன.

இவன் பிறந்த ஆண்டில் இருந்து (கண்டம்) 5 வயது முதல் சுரமும் சொறியும் சிறங்கும், 10வது வயதில் வயிற்று நோய், நாய்கடியும், 16வது வயதில் மேலிருந்து கீழே விழல் எலும்பு முறிவு முதலியன. 20 வயதில் தண்ணீரால், 25 வயதில் நாற்கால் மிருகத்தால், 34 வயதில் பெண்ணால், 60 வது வயதில் வயிற்று நோயால் 76 வயதில் மனிதனால், விஷக்கடியால், 80 வயதில் காய்ச்சல், 86 வயது சென்று கார்த்திகை மாதம் 15ம் தேதி அமரபக்ஷம் அஷ்டமியும் சனிக்கிழமையும் பெற்ற சுவாதி உதித்த நாளன்று 4 நாழிகைக்கு இறைவனடி சேர்வார்.

**இனி லக்னோதயம்**

இவன் பிறந்த லக்னம் சூரியன் சாரமாகில் கல்விமான்

இவன் பிறந்த லக்னம் சந்திரன் சாரமாகில் சீமானாம்

இவன் பிறந்த லக்னம் செவ்வாய் சாரமாகில் சேவகன்

இவன் பிறந்த லக்னம் புதன் சாரமாகில் வித்துவானாவான்.

இவன் பிறந்த லக்னம் குரு சாரமாகில் அரசபதவி

இவன் பிறந்த லக்னம் சுக்ர சாரமாகில் வேளாண்மை செய்வான்.

இவன் பிறந்த லக்னம் சனி சாரமாகில் ஒரு கண் ஊனன்

இவன் பிறந்த லக்னம் ராகு சாரமாகில் தேசாந்திரி

இவன் பிறந்த லக்னம் கேது சாரமாகில் குருடன், கருமி, விகாரி.

இந்த நாளில் சுரம் தோன்றினால் 16 நாழிகைக்குமேல் விடும். விடாதிருக்கில் கோதுமை அரிசி வேத மந்திரத்தால் ஓமம் செய்து மரத்தடி அல்லது நீர்க்கரையில் இதன் தேவதையை நோக்கிப் பலியிடவும். பிறதேசம் இந்த நாளில் போக வேண்டுமானால் நெல்லரிசி தின்று போகவும். இந்த நாள் மாடு கொள்ள, பொன் பூண, கோடியுடுக்க, தானம் பண்ண, வித்தியாரம்பம் செய்ய நன்று. இதில் பெண் திரளில் புருஷப் பிரஜை உண்டாகும்.

இதில் மாதம் பிறந்தால் விலைவாசி குறையலாம்.

**பிறர் மதப்படி சுவாதி நக்ஷத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்கள்.**

**பொதுப்பலன் - ஆண்கள்**

**உருவ அமைப்பு**

இவனது உருவ அமைப்பு பெண்களை மிகவும் கவரும். உடல் சதைப்பற்றுடன் இருக்கும். உள்ளங்கால்கள் குழிவாக வளைந்தும், கணுக்கால் பகுதி உயர்ந்தும் காணப்படும். இது சுவாதி நக்ஷத்திரத்தில் பிறந்தவர்களுக்கு மட்டும் உள்ள பிரத்தியேக அமைப்பாகும்.

### குணநலன்கள்

அமைதியை விரும்பும் மனிதன், சுதந்திர மனப்பான்மையும், பிடிவாதத் தன்மையும் குடிகொண்டவன். இவன் பிறர் சொத்துக்களுக்கு ஆசைப் படாதவன். அதேபோல் தன் சொத்துக்களையும், உடமைகளையும் பிறருக்குத் தரமாட்டான். தான் செய்யும் வேலைகளில் பிறர் குற்றம் குறை கண்டுபிடிப்பதையோ, விமர்சனம் செய்வதையோ விரும்பமாட்டான். இவனுக்குக் கோபம் வந்துவிட்டால் இவனை அடக்குவது மிகவும் கடினம். இவன் வேலையில், வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் கோபத்தை விட்டொழித்து, மனதை சமநிலையில் வைத்திருக்க வேண்டியது அவசியம்.

தன்னுடைய சுதந்திரத்துக்கு பங்கம் வராத வரை இவன் பிறருக்கு உதவிக்கரம் நீட்டிக் கொண்டிருப்பான். பிறருடைய அந்தஸ்தைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்களுக்குக் கொடுக்கும் மரியாதை ஒரு அளவில் வைத்திருப்பான். பிறருக்கு மரியாதை தருவதில் போலித்தனம் இருக்காது. இவன் ஆபத்தில் உதவும் நண்பன். வெறுப்பவர்களின் மோசமான எதிரி. தனக்கு எதிராக செயல்படுபவர்களைப் பழிவாங்கத் தயங்க மாட்டான். இவனுடைய இளமைப்பருவம் பிரச்சினைகள் நிறைந்ததாக இருக்கும். ஆரம்பத்தில் உற்றார் உறவினர் நண்பர்களுக்கு மிகவும் உதவியும் அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வான். நாளடைவில், உதவி பெற்றவர்கள் இவனை விமரிசனமும், கண்டனமும் செய்வார்கள். அதனால் இவன் அவர்களுக்குச் செய்யும் உதவிகளையும் நன்மைகளையும் நிறுத்தி விடுவான்.

### கல்வி - தொழில் - வருமானம்

இவனுடைய அறிவும், வேலை செய்யும் திறமையும் மிகச் சிறப்பானவை. 25 வது வயது வரை, பணக்கார குடும்பத்தில் பிறந்திருந்தாலும் கூட உடலாலும்,

மனத்தாலும், பொருளாதார நிலையாலும் மிகவும் கஷ்டப்படுவான். இருந்தாலும் 30 வயதுவரை உத்தியோகத்திலோ அல்லது பிஸினஸ்ஸிலோ அதிக முன்னேற்றத்தைக் காண முடியாது. அதன் பிறகு 60 வயது வரை இவன் வாழ்க்கையின் பொன்னான காலமாக அமையும்.

பொற்கொல்லர், மருந்து விற்றல் போன்ற இனங்களில் வேலை அமையும். சந்திரனும் சுக்கிரனும் சேர்ந்து இருந்தால் நடிகனாகவோ, நாடகம் நடத்துபவனாகவோ அல்லது துணியில் தொழிலாளியாகவோ இருப்பான். சந்திரனும் செவ்வாயும் சேர்ந்து இருந்தால் கடற்படையில் சேருவான். சந்திரனும் புதனும் சேர்ந்து இருந்தால் ஜோதிடனாக இருப்பான். சந்திரன், செவ்வாய், சூரியன் மூவரும் சுவாதி நக்ஷத்திரத்தில் இருந்தால் ஜாதகன் மெக்கானிக்கல் எஞ்ஜினீயர் ஆவான்.

**குடும்ப வாழ்க்கை**

கணவன் மனைவி இருவரும் ஒருமித்த மனோபாவம் கருத்து கொண்டவர்களாக இருக்க மாட்டார்கள். வெளியாருக்கு இவர்கள் ஒருவர்க்கொருவர் அட்ஜஸ்ட் செய்துகொண்டு போகும் இலட்சியத் தம்பதிகளாகத் தெரிவார்கள். ஆனால் உண்மையில் அப்படிப்பட்ட இலட்சியத் தன்மை இவர்களுக்குள் இருக்காது.

**உடல் ஆரோக்கியம்**

பொதுவாக இந்த நக்ஷத்திரக்காரர்கள் நல்ல ஆரோக்யம் உடையவர்கள், ஆனால் மனித உடலுக்கே உரிய பைல்ஸ், ஆர்த்ரிடிஸ், வயிறு மற்றும் இருதயக் கோளாறுகள் இவர்களுக்கு ஏற்பட வாய்ப்பு உண்டு.

**பொதுப்பலன் - பெண்கள்**

**உருவ அமைப்பு**

மந்தமான நடை உடையவள். இவள் நடையைக் கொண்டே இவளை அடையாளம் கண்டுபிடித்து விடலாம்.

**குணநலம்**

மற்றவர்களிடம் அன்பும், அனுதாபமும் காட்டுவான். புண்யவதி சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்த்தைப் பெறுவாள். மதக்கோட்பாடுகளில் பற்று உள்ளவள். உண்மையானவள். அனேகர் இவளுடைய நன்பர்களாக இருப்பார்கள். எதிரிகளை வெற்றி கொள்வாள். பெரும்பாலான பெண்கள் ஷாப்பிங் அது இது என்று சுற்றுவதில் விருப்பம் கொண்டவர்களாக இருக்கும்போது இவள் அவ்வாறு சுற்றித் திரிவதில் நாட்டம் கொண்டவளாக இருக்கமாட்டாள்.

**கல்வி வருமானம்**

உத்தியோகத்தில் இருந்தால் அதில் எதிர்பார்த்ததைவிட அதிகமான புகழை அடைவாள். இவள் விரும்பாத போதும், சந்தர்ப்ப சூழ் நிலைகளால் உயர்த்தப்பட்டு, அதிக பிரயாணங்கள் செய்ய நேரும். உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ள நேரும்.

**குடும்ப வாழ்க்கை**

குடும்பத்தில் நிலவும் சில விசித்திரமான சூழ்நிலை சந்தர்ப்பங்கள் நடப்புகள் காரணமாக இவள் தன் மனசாட்சிக்கு விரோதமான காரியங்களை செய்ய நேரும். இருந்தாலும் தன் குழந்தைகள் மூலம் அளப்பரிய சந்தோஷத்தையும் சுகத்தையும் அனுபவிப்பாள். உத்திராட நட்சத்திர வரனை மணந்தால் அனேக பெண் குழந்தைகள் பிறக்கும்.

**ஆரோக்யம்**

வெளித்தோற்றத்தில் நல்ல ஆரோக்கியம் உள்ளவனாகக் காணப்படுவான். ஆனால் உள்ளூர உடல்

பலமற்றதாக இருக்கும். பிராங்கைடிஸ், ஆஸ்துமா, மார்புவலி கணுக்கால் உடைதல், கருப்பைக் கோளாறுகள், ஆகியவை உடையவளாக இருப்பாள். ஒரு பெண் சுவாதியில் ருதுவானால் உண்மையும் புண்ணியமும் உடையவள். நல்ல குழந்தைகளைப் பெற்றெடுப்பாள். மெக்கானிக்கல் வேலையில் ஆர்வம் உடையவள். ஆரோக்கியமும் செல்வமும் உடையவள்.

## சுவாதி நட்சத்திரத்தில் உள்ள கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்

**சூரியன்**

**சுவாதியில் உள்ள சூரியனை மற்ற கோள்கள் பார்த்த பலன்**

இதற்கு ரோகிணி நட்சத்திரத்திற்கு சொல்லி இருக்கும் பலன்களைப் பார்க்கவும்.

**சந்திரன்**

***சுவாதியில் உள்ள சந்திரனை மற்ற கிரகங்கள் பார்த்த பலன்.***

இந்த சந்திரனை சூரியன், செவ்வாய் அல்லது சனி ஆகியவர்கள் தனித்தனியாகப் பார்த்தால் ஜாதகன் ஆண்மை இல்லாதவன். அலி. புதன் பார்த்தால் அரசனுக்கு சமமான அந்தஸ்தை உடையவன். குரு பார்த்தால் பணத்தை உற்பத்தி செய்யும் கெட்டிக்காரன்.

செவ்வாய் முதல் சனி வரை இதர கிரகங்கள் பார்த்த பலன்களுக்கு முன்பே ரோகிணி நட்சத்திரத்திற்கு சொன்ன பலன்களைப் பார்க்கவும்.

## சுவாதி நட்சத்திரப் பாதங்களில் கோள்கள் நின்ற பலன்

### சுவாதி 1ம் பாதத்தில் சூரியன் இருந்தால் அதன் பலன்

ஆர்த்ரிடிஸ் நோய் பாதிக்கும். வேறு எந்த கிரகமும் இதனுடன் சேர்ந்தோ அல்லது பார்த்தோ இருந்தால் ஜாதகன் ஒரு குடிக்காரன் சாராயம் விற்பவன். நல்ல கிரகம் இதனுடன் சேர்ந்தோ அல்லது பார்த்தோ இருந்தால் ஜாதகன் உயர்ந்த பட்ச படிப்பை உடையவன். கெட்டிக்காரன். செல்வந்தன்.

### சுவாதி 1ம் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்

ஜாதகன் புத்திசாலி. கடவுள் பக்தி உடையவன். கப தேகம் உடையவன். கழுத்து குறுகி இருக்கும். குறைபட்ட அங்கத்தை உடையவன். தன் ஆசிரியர்களையும் பெற்றோரையும் பூஜிப்பவன்.

### சுவாதி 1ம் பாதத்தில் செவ்வாய் இருந்த பலன்.

ஐம்புலன்களின் ஆதிக்கத்துக்குஆட்பட்டு, தன் மனதை அவற்றின் சந்தோஷங்களை அடையும் வழியில் செலுத்துவான். வேலையில் கண்ணும் கருத்தும் சிரத்தையும் இல்லாதவன். அதனால் இவன் எந்த உத்தியோகத்தில் இருந்தாலும் வெற்றி அடைய முடியாது. சிறு சிறு வியாபாரத்தில் ஈடுபட்டு வருமானத்துக்கு வழி கோலுவான்.

### சுவாதி 1ம் பாதத்தில் புதன் இருந்த பலன்

நன்றாகப் படித்தவன். இவன் சம்பாதிக்கும் பொருள் முழுவதும் அவனது வைத்திய செலவுக்கே சரியாகி விடும். இவனுக்கு ஏற்படும் வியாதிகள் TB அல்லது பாரிசவாயு அல்லது லங்ஸில் நீர் சேருதல் ஆகியவையாகும்.

### சுவாதி 1ம் பாதத்தில் குரு இருந்த பலன்

நல்ல ஆரோக்யமுடையவன். பிரபலமானவன். நன்றாக சம்பாதிப்பான். நல்ல குழந்தைகளைப் பெறுவான். குடும்பத்தில் அடிக்கடி சச்சரவுகள் உண்டாகும்.

**சுவாதி 1ம் பாதத்தில் சுக்கிரன் இருந்த பலன்**

சுயமாக சம்பாதித்த சொத்துக்களை உடையவன். தைரியசாலி. எல்லோரும் அறிந்தவன். நீர் சம்பந்தமான வியாதிகள், காலரா, ஆஸ்துமா போன்றவை பீடிக்கக்கூடும்.

**சுவாதி 1ம் பாதத்தில் சனி இருந்த பலன்**

புகழை உடையவன். இவனது சாதிக்காரர்களின் மரியாதைக்குரியவன். தன் கிராமத்தில் ஆயிரத்தில் ஒருவனாக திகழ்வான். உடலில் ஏதாவது உறுப்பு ஊனமாயிருக்கும். மூக்கு சதா ஒழுகிக் கொண்டிருக்கும் பிஸ்டுலா நோயால் கஷ்டப்படுவான்.

**சுவாதி 1ம் பாதத்தில் ராகு இருந்த பலன்**

ஜாதகன் கொடூரமானவன். நீதி, நேர்மை கருணை இவையெல்லாம் அவனிடம் கொஞ்சம்கூட கிடையாது. பல விதமான வியாதிகளால் கஷ்டப்படுவான்.

**சுவாதி 1ம் பாதத்தில் கேது இருந்த பலன்**

நீண்ட ஆயுளை உடையவன். டான்ஸ், பாட்டு இவைகளில் ஆர்வம் கொண்டவன். பலவித சாஸ்திரங்களை நன்கு கற்றவன்.

## சுவாதி 2ம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

**சுவாதி 2ம் பாதத்தில் சூரியன் இருந்த பலன்**

சூரியன் மட்டும் இங்கு தனித்து இருந்தால் ஜாதகன் ஒரு பொற்கொல்லன், மருந்து விற்பவன் அல்லது பிரயாணம் செய்யும் தொழிலை செய்வான். இதில் லக்னம் சதயத்தில் இருந்தால் இவனுடைய வலது கண் பாதிக்கப்படும்.

### சுவாதி 2ம் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்

உயர்ந்த உருவமும், நீண்ட மூக்கும், பலவீனமான உடல் உறுப்புக்களும் உடையவன். தனக்கு உதவி செய்பவர்களிடம் நன்றி உள்ளவனாக இருப்பான். இவனுடைய குடும்பத்தில் உள்ளவர்கள் அவனிடம் மரியாதை காட்டுவார்கள். இருந்தாலும் அவனுடைய சொந்த குடும்ப உறுப்பினர்களே இவனது அழிவுக்குக் காரணமாக இருப்பார்கள். பெண் ஜாதகி இந்த சந்திரனை சுப கிரகங்கள் பார்க்காவிட்டால் இளம் வயதிலேயே கணவனை இழப்பாள்.

### சுவாதி இரண்டாம் பாதத்தில் செவ்வாய் இருந்த பலன்

இந்த செவ்வாயுடன் சனியும் சேர்ந்து, லக்னமும் ரோகிணியில் இருந்தால் ஜாதகனுக்கு கான்ஸர் ஏற்படும்.

### சுவாதி 2ம் பாதத்தில் புதன் இருந்த பலன்

பெரியவர்களிடம் மரியாதை உடையவன். தாராள மனமுடையவன். நல்ல மனைவி மக்களைப் பெற்றவன். உத்தியோகத்தில் இருந்தால் மேலதிகாரிகளின் நல்லெண்ணத்தைப் பெற்று அவர்களுக்குப் பிடித்தமானவனாக இருப்பான். பிஸினஸ்ஸில் இருந்தால் இவனுடைய அன்பான குணத்தால் கவரப்பட்டு இவன் கீழ்ப்பணி புரிபவர்கள் இவனை மதிப்புடன் நடத்துவார்கள்.

### சுவாதி 2ம் பாதத்தில் குரு இருந்த பலன்

இது குரு இருப்பதற்கு சிறந்த இடம். ஜாதகனுக்கு நல்ல படிப்பும், ஆரோக்யமும், நல்ல குடும்பத்தையும் இந்தகுரு தருவார். பலருக்கு ஆலோசனை சொல்வான். தரும சிந்தனையாளன்.

### சுவாதி 2ம் பாதத்தில் சுக்கிரன் இருந்த பலன்

தீய குணமுடைய பெண்களால் சூழப்பட்டு இருப்பான். அவர்கள் இவனுக்கு பணிவிடை செய்வார்கள்.

தன்னுடைய சம்பாத்தியத்தில் பெரும் தொகையை அத்தகையவர்களுக்காக செலவிடுவான். கடைசியில் அவனுடைய குடும்பம் கஷ்டப்படும். குடும்பம் சந்தோஷமாக இருக்க வேண்டுமானால் இவன் அத்தகைய செயல்களை விட்டுவிட வேண்டும்.

**சுவாதி 2ம் பாதத்தில் சனி இருந்த பலன்**

செவ்வாய், சூரியன், சனி மூவரும் இதில் இருந்து லக்னம் சதயத்தில் இருந்தால் இந்த குழந்தை பிறந்த ஒரு மாதத்திற்குள் கொல்லப்பட்டு விடும். (அதாவது இறந்து விடும்) சனி மட்டும் இதில் இருந்தால் ஜாதகன் கடின உழைப்பாளி. சுமாரான வருமானம் இருக்கும்.

**சுவாதி 2ம் பாதத்தில் ராகு இருந்த பலன்**

ஜாதகன் ஏழை. நல்லதோ கெட்டதோ எந்த வேலையிலும் ஈடுபடாத சோம்பேறி.

**சுவாதி 2ம் பாதத்தில் இருந்த கேது தரும் பலன்**

பொதுஜன தொடர்பு விஷயத்தில் சிறந்தவன். பெண்களிடம் அதிக ஒட்டுதலாக இருப்பான். வாழ்க்கையின் அடி மட்டத்தில் இருப்பான். அவ்வளவு செல்வமில்லாதவன்.

**சுவாதி 3ம் பாதத்தில் இருக்கும் சூரியன் தரும் பலன்.**

லக்னம் ரேவதியில் இருந்து சூரியனும், சனியும் கூட்டாக இதில் இருந்தால், இந்த குழந்தையின் ஆயுள் இரண்டே மாதம்தான். இந்த சூரியனை, சனி பார்த்தால் கண் நோய்கள் உண்டாகும்.

**சுவாதி 3ம் பாதத்தில் இருக்கும் சந்திரன் தரும் பலன்**

கெட்டிக்கார பிஸினஸ்மேன். இவன் பணக்காரன், அடிக்கடி செய்யும் பிரயாணத்தால் சம்பாதிப்பவன். தன் நற்செயல்களால் பரவலான புகழைப் பெறுவான். தன் குடும்பத்தினரை விட்டு பிரிந்து வாழ்வான்.

**சுவாதி 3ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்**

தைரியமானவன் ஆனால் பொல்லாதவன். சலனப்படும் மனதுடையவன். அலைந்துகொண்டே இருப்பான். நோயாளி.

**சுவாதி 3ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்**

சுக்கிரனும் அவனுடன் இருந்தால், ஜாதகன் டாக்டர் அல்லது மருந்துகள் விற்கும் டீலராக இருப்பான்.

**சுவாதி 3ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்கள்.**

வாழ்க்கையில் சகல வசதிகளையும் அனுபவிப்பவன். இண்டஸ்ட்ரியல் ஸ்தாபனத்தின் தலைமைப் பதவியிலோ அல்லது முதலாளியாகவோ இருப்பான். ஆலோசகராக இருப்பதுடன், நல்ல கல்வி, குடும்பம் முதலியவை அமையப் பெற்றவன்.

**சுவாதி 3ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

இவன் கிளார்க். டைப்பிஸ்ட், ஸ்டெனோ போன்ற வேலைகளில் இருப்பான். சனியும் இங்கிருந்தால் கண் நோய் ஏற்படும்.

**சுவாதி 3ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்**

லக்னம் ரேவதியில் இருந்து சனி, சூரியன், சந்திரன் மூவரும் இங்கிருந்தால் இந்த ஜாதகன் 29ம் வயதில் மரணமடைவான். சனி மட்டும் இங்கிருந்தால் கீழ் மட்டத்தில் இருக்கும் ஜாதகனை உயர் மட்டத்திற்குக் கொண்டு செல்வான்.

**சுவாதி 3ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்**

ஒல்லியான உருவமுடையவன். மன தைரியம் உள்ளவன். பயங்கரமாக சாப்பிடுவான். வாயு ரோகம் உள்ளவன். அஜீரணத்தால் குடலில் கோளாறுகள் ஏற்படும்.

**சுவாதி 3ம் பாதத்தில் கேது தரும் பலன்**

எப்பொழுதும் இழிந்த மனிதர்களுடன் காட்சி அளிப்பான். இவன் மனைவி வேறொருவன் மூலம் பெண் குழந்தையை பெற்றெடுப்பாள். TB குடல் வியாதிகளால் கஷ்டப்படுவான்.

## சுவாதி 4ம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

**சுவாதி 4ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்**

தைரியமானவன். பெண் ஜாதகிக்கு லக்னம் அசுவதியில் இருந்தால் தன் கணவனை விட்டுப் பிரிந்து இருப்பாள். கோபக்கார பெண்மணி.

**சுவாதி 4ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்**

நோயாளி. உறவினர்களுக்கு உதவி செய்வான். ஆனால் அவர்கள் இவனை உதறித்தள்ளுவார்கள். இவனுடைய மரணம் பாம்புக்கடியாலோ, உறவினர்களாலோ அல்லது ஒரு லீடரினாலோ நிகழும்.

லக்னமும் இதில் அமைந்திருந்தால் ஜாதகன் கலை, பாட்டு, கிராப்ட் மூலம் பெரும் தனம் சம்பாதிப்பான். கர்வம் உள்ளவன். இயற்கையாகவே பலவற்றைப் பெற வேண்டும் என்ற ஆசை உடையவன். எதிரிகளை வெற்றி கொள்வான். அரசாள்பவனாகவும் ஆகலாம்.

**சுவாதி 4ம் பாதத்தில் செவ்வாய் இருந்த பலன்**

அரசாங்க உத்யோகத்தில் இருப்பான். தன் வேலையில் சிரத்தை காட்டமாட்டான். அதனால் தண்டனையும் பெறுவான். பிஸினஸ் இருந்தால் இரும்பு வியாபாரம் அல்லது நிலம் கட்டிடங்களை வாங்கி விற்பவனாகவோ இருப்பான்.

**சுவாதி 4ம் பாதத்தில் புதன் இருந்த பலன்**

இந்த புதனை சுக்கிரன் பார்த்தால் ஜாதகன் ஏரோ நாட்டிகல் எஞ்ஜினீயர் அல்லது ஸ்பேஸ் சயன்டிஸ்ட், புதன்

தனித்து யாரும் பாராதிருந்தால் நல்ல பட்டப்படிப்பு படித்து விட்டு சாதாரண ஆசிரியனாக இருப்பான்.

**சுவாதி 4ம் பாதத்தில் குரு இருந்த பலன்**

குருவுடன் சுக்கிரனும் இருந்தால், ஜாதகன் மருத்துவத்துறையில் உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்று பேரும் புகழும் அடைவான்.

**சுவாதி 4ம் பாதத்தில் சுக்கிரன் தரும் பலன்**

ஜாதகன் பாதுகாப்புத்துறை அல்லது செக்யூரிட்டி ஸ்தாபனத்தில் இருப்பான். தன் திறமையால் அங்கு பேரும் புகழும் பெறுவான். சிலருக்கு விபத்தினால் முழங்காலில் முறிவு அல்லது ஊனம் ஏற்படலாம்.

**சுவாதி 4ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்**

ஜாதகன் ஒரு நகரம் அல்லது கிராமம் அல்லது சமூகத்தின் தலைவனாக இருப்பான். இந்த சனியுடன் சுக்கிரனும் சேர்ந்தால் ஜாதகன் மந்திரியாக அல்லது அதற்குச் சமமான நிலையில் இருப்பான்.

**சுவாதி 4ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்**

வெண்ணை,பாலிலிருந்து செய்யப்படும் பொருட்கள் மூலம் சம்பாதனை ஏற்படும். பிறருக்கு உதவும் குணம் உண்டு சிலர் பிறந்த சில நாட்கள் கழித்து நொண்டியாகப் போவதும் உண்டு.

**சுவாதி 4ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்**

நல்ல அதிகாரத்தையும் அந்தஸ்தையும் பெற்றவன். தன்னுடைய அன்றாட செலவுக்கு மேல் செல்வம் இல்லாதவன். குடும்பம் சந்தோஷமான சூழ்நிலையில் செல்லும்.

***

# அத்தியாயம் - 22

## விசாக நட்சத்திரம்

*இது 16வது நட்சத்திரம் ராசி. மண்டலத்தில் 200 பாகை முதல் 213 பாகை 20 கலை வரையில் பரந்துள்ளது.*

| | | |
|---|---|---|
| தமிழ்ப் பெயர் | - | விசாகம் |
| வடமொழிப் பெயர் | - | விசாகம் |
| அரபுப் பெயர் | - | அஸ் - ஸீபனன் (AZ-ZUBANAN) |
| கிரேக்கப்பெயர் | - | லிப்ராக் |
| சீனப் பெயர் | - | டி |

*விசாக நக்ஷத்திரத்தின் அதி தேவதை இந்திரனும் அக்கினியும் ஆகும். இது இரண்டு நக்ஷத்திரங்களால் ஆனது. சிலர் 4 என்றும் கொள்வர். இது ஒரு குயவனின் சக்கரம் போன்ற வடிவுடையது.*

***மரண கண்டிகை சுவடி 1500 கூறும் விசாக நக்ஷத்திரப் பலன்***

**ஈண்டிய தனத்தைத் தேடும் இரப்பவர் தமக்கு நல்கும்**
**நீண்டதத் துவத்தைப் பேணும் நீதியும் உடையனாகும்**
**ஈண்டிய கருமம் செய்யும் இசைந்தது மறுக்க மாட்டான்**
**காண்டிப சிலையும் வல்லான் கருத்துள்ள விசாகத் தானே! 145**

*(இ-ள்.) விசாக நட்சத்திரத்தில் பிறந்தவன். நிறைதனம் தேடி வைத்துக் கொள்வான். தன்னை யாசித்தவர்க்கு யாசகம் கேட்டவர்களுக்கு தாராளமாய் வழங்குபவன். உயர்ந்த வேதாந்தம் மற்றும் சாத்திரக் கருத்துக்களை தெரிந்து தெளிந்தவன். நீதி, நேர்மை தவறாதவன். செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் செய்து முடிப்பான். தான் ஒத்துக் கொண்டவற்றை மறுக்க மாட்டான். இவனே விசாக நட்சத்திரத்தில் பிறந்தவன் குணங்களாம்.*

இந்த நக்ஷத்திரத்ரம் சுளகு போலிருக்கும். இதற்கு யோனி, பெண் புலி. இன்னானுக்குத் தெய்வம்- ஈஸ்வரன் காளியுமாம். பூதம் -அக்கினி. கோத்திரம்- மகாலட்சுமி. பட்சி -வல்லக்குருவி. விருட்சம்-விளாமரம். கணம்-இராட்சத கணம். வெள்ளிக்கிழமை ஜென்ம வாரம் இந்நாளில் பெண் திரளில் விதவையாவாள். வருஷம் பிறக்கில் தானியம் உற்பத்தி குறையும். ஐப்பசி மாதம் சூனியம். இந்நாளில் 14 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம். இதில் வெதுப்பு, சுரம், நோய் தோன்றில் 12 நாளில் விடும். இதற்குப் பெறாத போது நெய்யால் ஓமம் செய்து சுகந்த புஷ்பமும் உடுத்தின புடவை இவைகள் தக்ஷணையுடன் தானம் பண்ணவும். ஆயுள் விருத்தியாகும். ஐப்பசி மாதம் பகை, தை மாதம் சூனியம் என்று சொல்வாரும் உண்டு. வைகாசி மாதமும் பகையாம். செந்தாழம்பு தானமும் நன்று.

திங்கட்கிழமை சுபயோகம்

இவன் நீதி நெறியுடையவன். தெய்வ பக்தியுடையவன். புத்திமான் கோபி. வலது பக்கத்தில் மறு மச்சமுடையவன். மூக்கு உயர்ந்து, வாய் வட்டமாய் செப்பு போன்று சிறிதாய் இருக்கும். உடல் வளைந்திருக்கும். அரசரை அண்டி வாழ்பவன்.

***ஜாதக அலங்காரம் பாடல் - விசாகப்பலன்***

சொல்முகத்தின் மறுநெடியான் நீள் துயில் பிரியன்
சுற்று மர சர்க்கினியன் சொல்லடக்கும் குணத்தான்
நல்வசனன் பொறையுடையான் அன நடையோர் நேயன்
நாடியதோர் தலைமார்பன் அறையின் மறு உளனாம்
செல்வமுளன் சதுர்வேதன் குணவான் முன் கோபி
நீதிவையுளான் விசார மிலான் தெய்வபக்தி யுள்ளான்
வில்வாளும் ஏந்துகரன் ஆம் கயமும் மாவும்
மிக நடத்தும் தியாகியாம் விசாகத்தோனே.! 146

(இ-ள்.) இவன் முகத்தில் மறு உடையவன். நெடியவன். சயனத்தில் விருப்பமுடையவன்.

பந்துக்களுக்கும் அரசர்களுக்கும் விருப்பமுடையவன். அடங்கிப் பேசும் குணமுடையவன். நன்மொழிகளைப் பேசுபவன். அடக்கமுடையவன். பெண்களிடத்தில் நட்புள்ளவன். சிரசு, மார்பு, இடுப்பு இந்த இடங்களில் மறுமச்சம் உடையவன். செல்வமுடையவன். நான்கு வேதங்களும் அறிந்தவன். (இந்த நக்ஷத்திரத்திற்கு குரு - அதிபதி ஆதலால்) நற்குணமும் முன் கோபமுள்ளவன். ஜனங்களால் வணங்கப்படுபவன். கவலையில்லாதவன், கடவுள் வழிபாடுள்ளவன். வில் வாள் இவைகளைப் பிடித்த கையன். யானை, குதிரை ஏறி நடத்தும் திறமையும் உடையவன். பிறருக்கு தருமம் செய்யும் குணமுடையவன். பிறர்க்கு மறுக்காமல் ஈகை செய்யும் கொடையாளனும் ஆவான் என்பதாம்.

***ஜாதகாலங்காரம் கூறும் விசாக நக்ஷத்திரப பாதபலன்***

அமைந்திடும் சஞ்சன் கல்வி மானாரும்
அறிவன் ஜோதிட சௌக்கியவான்
அறிவுறு புலவன் வாணிபம் புரிவான்
ஆகுமே விசாகத்தின் முதற்கால்
தனமும் புகழ்ந் திடுவான் மந்திரன் காமி
சந்தியன் நீதிமான் ரோகி
சரச வானாகும் சந்தோஷியாம் கதிவான்
சாற்றிரு கால்பல னென்பாய்
இமைத்திடும் பலவான் சோரனாங் குள்ளன்
இனியகா ரியமறிந் திடுவான்
எழில் பெறும் பரஸ்திரீகமனன் வாய்ச் சாலன்
ஏதுறு முன்றதாங் காலன்
அமைப்புறும் புத்தி யுடையனாம் யோகி
அருந்தவ முடையவன் ஞானி
அழகுறும் தாரம் ஒன்றுள்ன் நெடியோன்
ஆகும் வாய்ச் சாலன் நாற்பதமே.

(இ-ள்.) விசாக நக்ஷத்திரம் முதற் காலில் பிறந்தவன் நெடியவன். இன்பமுடையவன். ஆரோக்கியமுடையவன், கவி பாடும் புலவன். விற்றல் வாங்கல் முதலிய வியாபாரம் தெரிந்தவன் என்பதாம்.

இரண்டாம் பாதத்தில் உதித்தவன் பிறரிடமும் தன் மனத்திலும் தானே பெரியவன் மேன்மையானவன் என்றும் எண்ணுபவன். மந்திர சாஸ்திரம் அறிந்தவன் பிற பெண்கள் சேர்க்கை அதிக முள்ளவன். வாக்கு வன்மையுடையவன். சத்திய வாக்குடையவன், நோயாளி, யோகத்தில் மூழ்கியவன். நன்மார்க்க முடையவன். சந்தோஷமுடையவனும் ஆவான் என்க.

மூன்றாம் காலில் பிறந்தவன் எக்காலத்திலும் நீங்காத பலமுள்ளவன். திருட்டுத் தனமுடையவன். குள்ளன். பற்பல நன்மையைத் தரும் விஷயங்களை அறிந்தவன். அழகு வாய்ந்த பரஸ்திரீகளிடம் இன்பம் அனுபவிப்பவன். பட பட என பேசுபவனும் ஆவான் என்பதாம்.

நான்காம் காலில் ஜனித்தவன் நற்குணமுடைய புத்திசாலி ஞானமார்க்கம் அறிந்த தபசி. தனமுள்ளவன். சன்னியாசியாக இருப்பவன். அழகுடைய ஏக பத்தினியை உடையவன். முன்கோபி ஜாலவார்த்தையாடுபவன் என்பதாம்.

**ஜாதக சார தீபம் சொல்லும் பாத பலன்**

| | |
|---|---|
| முதல் பாதம் | - நீதிமான் |
| இரண்டாம் பாதம் | - சாஸ்திரங்கள் அறிந்தவன் |
| மூன்றாம் பாதம் | - வாதம் பண்ணும் சமர்த்தன் (வழக்காடி) |
| நான்காம் பாதம் | - தீர்க்காயுள் உள்ளவன் |

**டவன ஜாதகம் சொல்லும் விசாக நக்ஷத்திரப் பலன்**

அதக பொருமையுள்ளவன். தயையுடையவன், சிற்றின்ப வெறுப்புடையவன். இந்திரியங்களை ஜெயித்தவன். உலோபி ஆவான் என்பதாம்.

**பிருகத் ஜாதகம் சொல்லும் விசாக நக்ஷத்திரப் பலன்**

பெருமையுள்ளவன், உலோப குணம் உள்ளவன். சரீர காந்தியுடையவன். சொல்திறம் உடையவன். கலகம் உடையவனாகவும் இருப்பான் என்பதாம்.

**பெண்**

**விசாக நக்ஷத்திரப் பெண்**

**வடமொழி ஸ்திரீ ஜாதக வசனப்படி**

விசாக நக்ஷத்திரத்தில் பிறந்த பெண் தன் சினேகிதிகளிடையே மிகவும் மதிப்பும், மரியாதையும் பெறுவாள். மென்மையான அங்கங்களுள்ள உடலுள்ளவள். புண்ணியத் தீர்த்தங்களில் பற்றுள்ளவள். விரதங்கள் அனுஷ்டிப்பதில் தவறாதவள். தருமம் தெரிந்தவள், சாமர்த்தியசாலி, உறவினர்களால் சூழப்பட்டவள்.

**வேறு நூல்**

விசாகப்பெண் தர்மத்தில் மூலப்பொருளை அறிந்தவள். அறிவும் புத்தியும் உள்ளவள். இரண்டு தெய்வங்களை வழிபடுபவள். விரதம் அனுஷ்டிப்பவள். சத்தியமே அதாவது உண்மையே பேசுபவள் என்பதாம்.

**சங்கராச்சாரியர் மதன நூல் சொல்லும் விசாகப் பெண்ணின் தன்மை**

இவள் நாக தத்துவத்தைச் சேர்ந்தவள்

**நெடியள் ரசியும் நீள்கரம் கொங்கை கால்**
**தடியனவாகி தனக விலனியா வர்க்கும்**
**மிடியள் மனமின் புற்றிருந் திடாள்**
**மடிகள் செய்யும் விசாக நாள் மங்கையே. 148**

விசாக நக்ஷத்திரத்தில் பிறந்தவள் உயர்ந்த நெட்டையான உருவம் உள்ளவள். அரசி அதாவது ராணியாக இருப்பவள். கை, கால்கள் கொங்கை இவ்வுறுப்புக்கள் தடித்து தளதள என்றிருக்கும். பிறரைப் பொறுத்தவரையில் இவள் தரித்திர முள்ளவள். அதாவது சிக்கனமுள்ளவள். மனம் இன்பம் நீடித்திருக்காது. பலவிதமான சாமர்த்தியக் காரியங்களைச் செய்பவள் என்பதாம்.

**இந்த நக்ஷத்திரம் பற்றியபிற செய்திகள்**

விசாகம் திருமால் மருகன் முருகனின் நக்ஷத்திரமாகும். இது குல நக்ஷத்திரப் பிரிவைச் சார்ந்தது. இது ஐந்து நக்ஷத்திரக் கூட்டம் கொண்டது. இது உக்கிர நக்ஷத்திரம் " உ " என்ற சுரம் இதன் ஒலியாகும்.

இதில் செய்யத் தகுந்தவை வித்யாரம்பம். சிற்பம் நாட்டியம் கலை தொடங்க நன்று. ஓவியம் கற்கவும் நல்லது. புதுவாகனம் பெற, கால்நடை வாங்க நன்று. கிணறு வெட்டவும் உகந்த நாள் இதில் சூரியன் சஞ்சரிக்கும் போது விலைகள் குறையும், இதை ஜுன் மாதம் நள்ளிரவில் காணலாம்.

இவர்கள் மிகவும் குறைவாகக் கவலைப்படுபவர்கள். நடையில் மிடுக்குடையவர். இவர்களிடம் பலரும் மரியாதையாக நடந்து கொள்வார்கள். தன் உறவினர்களுக்கு உதவுபவர்கள். ஒழுக்கமுள்ளவர்கள். முகத்திலும் வயிற்றிலும் மச்சமுண்டு. இது கீழ்நோக்கு நாள். 33 வயதில் தொல்லை ஏற்பட்டு நீங்கும். இதன்பின் 70க்கு மேல் நீடித்திருப்பான்.

இது தலையற்ற நட்சத்திரம் எனப்படும். விசாக நட்சத்திரப் பெண் தாய் வீட்டுக்காகாது என்பர் சிலர். இதனால் விசாகப் பிறப்பு வீட்டுக்காகாது என்பது பழமொழி. இவர்களுக்கு சீரணக் கோளாறுகள் மூச்சுத்திணறல் போன்ற நோய்கள் காணும். இந்த விசாகம் பெண்ணுக்கு புகுந்த இடத்தில் நல்ல மதிப்பு உண்டு. ஆயுதம் பிடிப்பவர். வாகன யோகம் உண்டு.

இதற்கு அதிதேவதை சுப்பிரமணியக் கடவுள் என்பாரும் உண்டு. அபசவ்ய நட்சத்திரம் மேற்குதிக்குதான் இதற்கு உரிமையுள்ளது. இத்திக்கின்ராசிக்கு வருணனே அஷ்டதிக்கு பாலகருள் ஒருவர் ஆவார். ஞாயிறு, திங்கள், செவ்வாய் இக்கிழமைகளில் விசாகம் வந்தால் அது மரணயோகமாகும். இதில் பிறந்தால் சாந்தி செய்து கொள்வது நன்று.

இதில் மாவும் நீரும் உண்டு யாத்திரை கொள்ள நன்று. இதில் பணம் கடன் கொடுக்கக் கூடாது. ஞாயிறு நாசயோகம். இது விஷயோகம் என்றும் கூறுவர். புதன்கிழமை எமகண்டம். 2வது பாதம் தினமிருத்யு சுக்ர வாரத்தில் சுக்கிரன் அதாவது வெள்ளி முளைக்கும்போது உழவு ஆரம்பிக்க மிக நன்று. இந்த நட்சத்திரத்தில் சத்துரு கண்ணில் பட்டால் மங்களம் உண்டாகும்.

சனிக்கிழமை கடம், மீனம், தனுசு லக்னங்களில் குஜன் அம்சத்தில் தானியம் வாங்க நன்று. இந்தக் காலகட்டத்தில் நிலத்தகராரு வந்தால், விசாகக்காரனுக்கு வெற்றி. இந்திர தனுசு வானவில் தெரிந்தால் 8 நாளில் மழை, புன்னை புஷ்பம் பூஜை தேவதா துபம்.

சன்ன இந்திராக்னி என்பது பூஜை மந்திரம். பால் சாதம் நெய் ஹோம திரவியம். சாவித்திரி மந்திரத்தால் ஹோமம். இதில் மாதம் பிறந்தால் பயிர் விளைச்சல் குறைவு.

**மரணகண்டிகை சுவடி எண் 1500ல் கண்ட விசாக நட்சத்திர பாதபலன்**

**விசாகம் முதல் பாதம்**

**வெட்டெனப் பேச வல்லான் வெகுளியு முடையனாகும்**
**சிட்டரைச் சேர்ந்து வாழும் செழுங்குடி யாளனாகும்**
**பட்டயம் அணிந்த தோளான் படைக்கெலாம் தலைவனாகும்**
**எட்டுணை யேனும் அஞ்சான் எரியினங் கிஷத்தினானே. 149**

*(இ-ள்.)* விசாக நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவன் வெட்டு ஒன்று துண்டு இரண்டென தீர்மானமாகப் பேசவல்லவன். இவனுக்குக் கோபம் உண்டு. உயர்ந்தவர்களையும் நல்லவர்களையும் சேர்ந்து வாழ்பவன். இவன் உயர்ந்த குடியில் இருப்பவன். இவன் தோள்வலையம் என்ற ஆபரணம் அணிந்தவன். இவன் படைத்தலைவனாகும் மகாவீரன் எள்ளளவும் யாருக்கும் அஞ்சமாட்டான். இவனே செவ்வாயின் அங்கிஷத்தில் பிறந்தவனாவான்.

**இதற்குக் காலச் சக்கரத் தசை**

| | | | |
|---|---|---|---|
| தனுசு வியாழன் | - | 10 வருடம் | |
| மகர சனி | - | 4 | ,, |
| கும்பச் சனி | - | 4 | ,, |
| மீன வியாழன் | - | 10 | ,, |
| மேஷச் செவ்வாய் | - | 7 | ,, |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| மிதுன புதன் | - | 9 | ,, |
| கடகச் சந்திரன் | - | 21 | ,, |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| ஆக வயது | - | 86 | ,, |

### விசாக நக்ஷத்திரம் 2ம் பாதம்

**மார்பகன் றுயர்ந்த மெய்யன் மதிமுக மருவு முண்டாம்**
**சீர்தரும் உண்டி பேணும் செய்யதோர் கொடுங்கணாளன்**
**ஆதரவுடைய பெண்மேல் அன்புளான் அறிஞனாகும்**
**சார்வது மாதர் தம்பால் கரும்புகர் காலினானே. 150**

*(சுவடி எண் 1500)*

*(இ-ள்.)* இவன் மார்பகன்று உயர்ந்த உருவமுள்ளவனாக இருப்பான். சந்திரன் போன்ற இவன் முகத்தில் மறு உண்டு.

உயர்தர உணவையே உண்பான். சிவந்த கோபக் குறிகாட்டும் கண்களுள்ளவன். தான் விரும்பி தன்னை ஆதரிக்கும் பெண்மேல் அன்புடையவனாகவும் இருப்பான். இவன் அறிஞனாகவும் இருப்பான். இவன் பெண்களை மிகவும் சார்ந்திருப்பான். இவனே சுக்கிரன். அங்கிஷத்தில் பிறந்தவனாவான்.

**இதற்குக் காலசக்ர தசை**

| | | | |
|---|---|---|---|
| கன்னி புதன் | - | 9 வருடம் | |
| துலாம் | - | 16 | ,, |
| விருச்சிகச் செவ்வாய் | - | 7 | ,, |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| தனுசு வியாழன் | - | 10 | ,, |
| கற்கடகச் சந்திரன் | - | 21 | ,, |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| மிதுன புதன் | - | 9 | ,, |
| மேஷச் செவ்வாய் | - | 7 | ,, |
| ஆக வயது | - | 100 | ,, |

**விசாக நக்ஷத்திரம் 3 மாதப்பலன்**

மந்திர மறைகள் கற்கும் மாதரால் மருளு முண்டாம்
சுந்தரத் தோள்கள் உள்ளான் தோற்றமும் இசைந்து தோன்றும்
அந்தரப் பொய்கள் சொல்லான் அரும் பொருள் அறிந்த நல்லான்
புத்தியிற் பெரியனாகும் புதனங்கி ஷத்தினானே. 151

*(சுவடி எண் 1500)*

(இ-ள்.) வேத மந்திரங்களை நன்கு பயின்றவன். மாதர்கள் ஆசையில் அவர்களுடன் பழகி மயங்கி நிற்பவன். அழகான தோள்களுள்ளவன். இவன் உருவம் கம்பீரமாகத் தோன்றும் தோற்றம். எப்பொழுதும் பொய்கள் எதுவும் சொல்லமாட்டான். எல்லா விஷயங்களிலும் உள்ள

உண்மையை அறிந்து வாழ்வான். இவன் அறிவிற் சிறந்த வித்துவானாகும். இவனே புதனின் அங்கிஷத்தில் பிறந்தவனாவான்.

**இதற்குக் கால சக்ர தசை**

| | | | |
|---|---|---|---|
| கன்னி புதன் | - | 9 | வருடம் |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| கடக சந்திரன் | - | 21 | ,, |
| மிதுன புதன் | - | 9 | ,, |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| மேஷச் செவ்வாய் | - | 7 | ,, |
| தனுசு வியாழன் | - | 10 | ,, |
| மகரச் சனி | - | 4 | ,, |
| கும்பச் சனி | - | 4 | ,, |
| ஆக வயது | - | 85 | ,, |

## விசாக நட்சத்திரம் 4ம் பாத பலன்

**நீளியன் செய்கை நல்லன் நிபுணனாய் நியாயம் சொல்வான்**
**மாளிகை மனையில் வாழும் மன்னரால் மகிழ்ச்சி உண்டாம்**
**வாளிசேர் கண்ணி னாள்மேல் வல திசை மருங்கி லெண்ணான்**
**காளிசேர் வடிவம் பேணும் கதிரவன் காலினானே 152**

**(சுவடி எண் 1500)**

(இ-ள்.) விசாகம் 4ம் காலில் பிறந்தவன் நீண்டு உயர்ந்த வடிவம் உள்ளவன். செய்வதெல்லாம் நல்லதாகவே செய்வான். நியாயம் சொல்வதில் நிபுணனாவான். பெரிய மாளிகையில் வாழ்வான். மன்னரால் அரசாங்கத்தால் அவனுக்கு மகிழ்ச்சி உண்டு. வாளி அதாவது அம்பு போன்ற கண்கள் உடையவன். தன் மனைவிமேல் அதிக ஆசை வைக்க மாட்டான். இவன் காளி உபாசனை பண்ணுபவன். இவையே சூரியனங்கிஷத்தில் பிறந்தவன் தன்மையாகும்.

(குறிப்பு: இப்பாட்டில் மூன்றாவது அடியில் வல திசை மருங்கில் எண்ணான் என்பதற்கு இடம் பொருத்தமாக இல்லை. எனவை ஓரளவுக்குப் பொருள் காணப்பட்டது.)

**இதற்குக் காலச் சக்கரத் தசை**

| | | | |
|---|---|---|---|
| மீனவியாழன் | - | 10 | வருடம் |
| மகரச்சனி | - | 4 | ,, |
| கும்பச்சனி | - | 4 | ,, |
| தனுசு வியாழன் | - | 10 | ,, |
| விருச்சிகச் செவ்வாய் | - | 7 | ,, |
| துலாம் வெள்ளி | - | 16 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| கற்கடகச் சந்திரன் | - | 21 | ,, |
| ஆக வயது | - | 86 | ,, |

**இந்த நட்சத்திரத்திற்கு மகாதசை**

| | | | |
|---|---|---|---|
| குரு | - | 11 | வருடம் |
| சனி | - | 19 | ,, |
| புதன் | - | 17 | ,, |
| கேது | - | 7 | ,, |
| சுக்ரன் | - | 20 | ,, |
| சூரியன் | - | 6 | ,, |
| சந்திரன் | - | 10 | ,, |
| செவ்வாய் | - | 7 | ,, |
| ராகு | - | 18 | ,, |
| ஆக வயது | | 120 | ,, |

இந்த நட்சத்திரத்திற்கு ஏற்படும் நோய் கண்டம் முதலியன

இவன் பிறந்த ஆண்டில் கண்டம், பிள்ளைப் பிணியால் கஷ்டம். 8வது வயதில் சிலந்தி, வைசூரி, 13 வயதில் வயிற்று வலி மற்றும் அரையாப்பால், 34 வயதில் நீரால் சுரத்தால், 40 வயதில் நாலுகால் மிருகத்தால், 55 வயதில் ஆயுதத்தால், 60 வயதில் பித்தத்தால், 73 வயதில் வெதுப்பால், சிலேத்துமத்தால், 84 வயது சென்று ஆவணி மாதம் திரயோதசி (பூர்வபட்சம்) திதி கூடிய செவ்வாய்க்கிழமை விசாகத்தன்று 4 நாழிகையில் வெதுப்பும் சிலேத்துமமும் இளைப்பும் தோன்றி இறைவனடி சேர்வான்.

இவன் பிறந்த லக்னசாரம் சூரியனாகில் கனவானாம்

இவன் பிறந்த லக்னம் சந்திர சாரமாகில் தனவானாம். சீமானாவான்.

இவன் பிறந்த லக்னம் செவ்வாய் சாரமாகில் விலங்கு பூணுவான்.

இவன் பிறந்த லக்னம் புதன் சாரமாகில் வேளாண்மை செய்வான்.

இவன் பிறந்த லக்னசாரம் குருவானால் ராஜ புருஷன்

வெள்ளி லக்னசாரம் உதயமாகில் வேதியன், பூசாரி, பூசைத்தொழில்

சனி லக்ன சாரமாகில் - உழவனாம்

ராகு லக்ன சாரமாகில் - தவசியாம்

கேது ல்க்ன சாரமாகில் - துஷ்டன்

விசாகம் நட்சத்திரம் 3ம் கால் பிதாவுக்குத் தோஷம்

விசாகம் நட்சத்திரம் 4ம் கால் மாதாவுக்குத் தோஷம்

## கர்ம விபாகம் (வடமொழி நூல்)

## விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் கர்மமும், சாந்தி பரிகாரமும்

### விசாக நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி பரிகாரமும்

**சிவபெருமான் சொல்லுகிறார்:**

காம்பினி என்ற நகரத்தில் ஒரு க்ஷத்திரியன் வசித்து வந்தான். தன் க்ஷத்திரியத் தொழிலை விட்டு வைசிய தொழிலைசெய்து வந்தான். இவன் தினமும் வாணிபம் செய்து வந்தான். வந்த பணத்தைச் செலவழித்தான். அவன் திலவர்மா என்ற பெயர் உடையவனாக இருந்தான். இவன் மனைவியின் பெயர் நிஷ்டுரா என்பதாம். திலவர்மா மிகவும் பணம் சேர்த்தான். அவன் மனைவியும் தன் பிள்ளைகளுடன் நன்றாகச் சுகம் அனுபவித்தாளே அன்றி எந்த தர்ம காரியமும் செய்ய வில்லை. தனக்குக் கொடுத்த பணத்தைத் திருப்பியும் கொடுப்பதில்லை. வெகுகாலம் சென்று அவள் பாம்பு கடித்து இறந்தாள்.

எம தூதர்கள் அவனைப் பற்றி சங்கிலியால் பிணித்து கும்பி பாக நரகத்தில் தள்ளினார்கள். ஒரு யுக காலம் வரை அங்கு துன்பம் அனுபவித்தான். அதன் பின் எருமையாகவும், பசுவாகவும், குதிரையாகவும், எருதாகவும் ஜென்மங்கள் அடைந்தான். அதன் பின் மனித ஜன்மம் கிடைத்தது. பூர்வ ஜென்ம பாவத்தால் இவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. ஒரு பெண் பிறந்த பின் கர்பம் கொள்ளவில்லை. இவன் உடலை பல நோய்கள் பற்றிக் கொண்டன. இதற்குச் சாந்தி பரிகாரம் வருமாறு.

60 துலாம் எடையில் கட்டை விரல் உருவத்தில் ஒரு அரச மரம் வளர்க்க வேண்டும். அதன்பின் 60 துலாம் எடையுள்ள அதற்கு மேடை செய்விக்க வேண்டும். அதன்பின் 15 துலாம் தங்கத்தாலான கல்ப விருக்ஷம் ஒன்றும், அதே எடையில் அதற்கு மேடையும் கட்ட வேண்டும். இந்த

மரங்களின் அடியில் சிவபெருமானின் சிலையை ஸ்தாபனம் பண்ணி மிகவும் இரங்கி அழுது பூஜை செய்ய வேண்டும். மன்னிப்புக் கேட்டு அழ வேண்டும். ஒரு உத்தம பிராமணனுக்குப் பட்டு ஆடை அணிகலன்கள் முதலியவற்றைத் தானம் பண்ண வேண்டும். அதன் பின் அந்தத் தங்க மரங்களையும் கன்றுடன் கூடிய பசுவையும் தானம் பண்ண வேண்டும். கடைசிவரை சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். மற்ற விருதங்களையும் அனுஷ்டிக்க வேண்டும்.

**விசாகம் 2ம் பாதம் பூர்வ கர்ம பரிகாரம்**

**சிவபெருமான் சொல்லுகிறார்:**

முன்பொரு காலத்தில் விஷ்ணு காஞ்சியில், விஷ்ணு பக்தனான பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் வேதம் அறிந்தும் யாருக்கும் வேதம் சொல்லித்தரவில்லை. வேதியர்களை எப்பொழுதும் இவன் நிந்தை புரிந்து வந்தான். அவர்களை மதிப்பதில்லை. இப்படியே இவன் வயதாகி இறந்தான். இந்த பாவத்தால் தர்மராஜன் இவனைப்பற்றி 60,000 வருஷம் நரகத்தில் தள்ளி துன்பப் படுத்தினான். இதன் பின் இவன் பாம்பாகவும், பின் மனிதனாகவும் பிறந்தான். போனஜன்ம பாவத்தால் இப்பொழுது பல கஷ்டங்களை அனுபவித்தான். இவனுக்குக் குழந்தை பிறந்து இறந்தது. இதனால் இவன் காகவந்தயையானான். பணம் காசு இருந்தும் இவன் மிகவும் கஷ்டப்பட்டான்.

முதலில் இவன் வீட்டிலுள்ள பணம், சொத்து இவற்றில் 8ல் ஒரு பங்கைப் பிராமணர்களுக்குத் தானம் பண்ண வேண்டும். அதன் பின் காயத்திரி மந்திரமும் ஜாதவேதஸே என்ற மந்திரமும் ஒவ்வொரு லக்ஷம் முறை தனித்தனி ஜபம் பண்ணுவிக்க வேண்டும். அதில் பின் ஒரு பரங்கி ஓடு நிறையவும் தேங்காய் கூடு நிறையவும் நவரத்தினங்களை நிரப்பித் தானம் பண்ணவேண்டும். இதன் பின் 3 துலாம் எடை தங்கத்தில் அழகிய தாமரை செய்து இவை எல்லாவற்றையும் கங்கையின் நடுவில் நின்று தானம் பண்ணவேண்டும்.

இப்படிச் செய்வதால் இவன் பூர்வ ஜென்ம பாவங்கள் தொலைகின்றன. அதன் பின் அவனுக்குத் தீர்க்காயுள் உள்ள ஆண் மற்றும் பெண் சந்ததியும் ஏற்படும். இவன் நோய், கஷ்டங்கள் எல்லாம் தீரும்.

**விசாக நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம சாந்தி முறை வருமாறு.**

சிவபெருமான் சொல்லுகிறார்

முன்பொரு காலத்தில் விதர்ப்ப நகரத்தில் தேஜ்வர்மா என்ற க்ஷத்திரிய அரசன் ஒருவன் இருந்தான். இவன் வேதமறிந்த பிராமணர்களைத் துன்புறுத்தியும் தன் பிரஜைகளை குடிமக்களை பல விதத்திலும் வருத்தியும் வந்தான். இவன் தொல்லை தாளாமல் குடி மக்கள் தங்களது நாட்டை விட்டு வெளியேறி வேறு இடங்களுக்குச் சென்று விட்டனர். அப்படிப் பலகாலம் சென்றபின் இவன் இறந்தான். எமதூதர்கள் இவனை மஹாகோர நரகத்தில் தள்ளினர். கர்தமம் என்ற நரகத்தில் ஊசி முனையுள்ள கிருமிகளால் இவன் பல காலம் வேதனையை அனுபவித்தான். இதிலிருந்து வெளி வந்த பின் இவன் கழுதையாகப் பிறந்தான். இதற்குப் பிறகு மனிதப் பிறவியை அடைந்தான்.

பூர்வ ஜென்ம பாவத்தால் இவனுக்குப் படையும், மூல வியாதியும் ஏற்பட்டு மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தான். இவன் பலஹீனனானான். இவன் மனைவியோ குழந்தையற்ற மலடியாகவே இருந்தாள். இவனை எல்லாக் கவலைகளும் பற்றிக் கொண்டன. சிறிதளவும் சுகம் ஏற்பட வில்லை. இதற்குச் சாந்தி முறையைக் கேட்பாயாக!

முதலில் இவன் தன் சொத்தின் 10ல் ஒரு பாகத்தைத் தானம் பண்ண வேண்டும். அதன் பின் சாலை ஓரங்களில் குளம், கிணறுகள் வெட்ட வேண்டும். அதன் பின், சிறந்த பிராமணன் ஒருவனுக்கு எல்லா வசதிகளும் பொருட்களும் நிறைந்த ஒரு புது வீட்டைத் தானம் பண்ண வேண்டும்.

அதன் பின் ஆக்ருஷணேன என்ற மந்திரத்தை ஒரு லக்ஷம் முறை ஜபம் செய்விக்க வேண்டும். அதன் பின் வஸ்திரம் பூஷணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட கபிலை பசுவை உரிய பிராமணனுக்குத் தானம் பண்ண வேண்டும்.

அதன் பின் ஒரு தோலா எடை தங்கத்தை உத்தம பிராம்மணனுக்குத் தானம் பண்ண வேண்டும். இப்படிச் செய்வதால் இவன் பாவங்கள் எல்லாம் தொலைந்து இவன் நோய்கள் நீங்கி சுகம் பெறுவான். அதன் பின் அவனுக்குத் தீர்க்காயுள் உள்ள குழந்தைகள் பிறக்கும்.

**விசாகம் நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வகர்ம சாந்தி பரிகாரம் வருமாறு.**

சிவபெருமான் சொல்லுகிறார்.

முன்பொரு காலத்தில் ஹரித்வாரம் நகரத்தில் ஒரு க்ஷத்திரியன் வசித்து வந்தான். இவன் சூரன், வீரன், ஞானியாகவும், சுயகௌரவம் , தேவதை உபாசனை முதலியவையும் உடையவனாக இருந்தான். இவனுக்கு சதா என்னும் அழகிய மனைவியுண்டு. இவளும் கணவனைப் போலவே எல்லா நல்ல பண்புகளும் உள்ளவளாக இருந்தாள். ஒரு சமயம் ஒரு பணக்கார பொற்கொல்லன் அதிக தனம், பொன் முதலியவற்றுடன் இங்கு வந்து சேர்ந்தான். இவன் 100 தங்கம் பொற்கொல்லனுக்குக் கடனாகக் கொடுத்தான். சில காலம் சென்று இவன் பாம்பு கடித்து இறந்தான். பிறகு அவன் பொன் பணம் எல்லாவற்றையும் இந்த க்ஷத்திரியனும் அவன் மனைவியுமே அனுபவித்தனர்.

ஆனால் அந்த தினத்திலிருந்து சிறிது கூட தானம் பண்ணவில்லை. கொஞ்ச காலம் சென்று க்ஷத்திரியனும் இறந்தான். அதன் பின் அவன் சுவர்க்கத்தில் தேவப் பெண்களுடன் வெகு காலம் 7000 வருஷம் வரை சுகமனுபவித்து வந்தான். புண்யம் தீர்ந்த பின் மனிதனாகப் பிறந்தான். அப்பிறவியில் பணம் காசு இவை இருந்தும்

போனஜன்ம மனைவியே இப்பொழுதும் மனைவியானாள். ஆனால் அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. மிகவும் கொடிய ரோகங்கள் இவனைப் பற்றிக் கொண்டன. இவன் பாவங்களுக்குச்சாந்தி வருமாறு.

தன் வீட்டின் பணம் காசு இவற்றின் 6ல் ஒரு பாகத்தை நல்லவர்களுக்குத் தானம் பண்ண வேண்டும். அதன் பின் 10 வண்ணம் கொண்ட ஒரு பசுவைக் கன்றுடன் தானம் பண்ண வேண்டும். காயத்ரி மந்திரம் ஒரு லக்ஷம் முறை ஜபம் பண்ணுவிக்க வேண்டும்.

100 உத்தம அந்தணர்களுக்குச் சுவையான விருந்து படைக்க வேண்டும். அதன் பின் 40 துலாம் தங்கத்தில் பழவிருக்ஷம் செய்து உத்தம பிராமணனுக்குத் தானம் செய்ய வேண்டும். அதன் பின் சூர்ய நாராயண பூஜை செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் இவன் பாவம் தீரும். பின் இவனுக்கு ரோகம் தீரும். மனைவியும் நலம் பெற்று அவளுக்குத் தீர்க்காயுள் உள்ள மக்கள் பிறப்பார்கள். இவர்களும் சந்தோஷமாக வாழ்வார்கள்.

## பிறர் மதப்படி விசாகம் நக்ஷத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்

### பொதுப்பலன்

### உருவ அமைப்பு

உருண்டையான முகம் உடையவன். உடல் பிரகாசமாக மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கும். இந்த ஜாதகர்கள் உயர்ந்து சதைபிடிப்புள்ளவர்களாகவும், ஒல்லியாகவும் குட்டையான உருவத்திலும் இரண்டு விதமாகவும் காணப்படுகிறார்கள்.

### குணநலன்கள்

சக்தியும், ஆண்மையும் உடையவர்கள். உயர்ந்த அறிவுத்திறன் கொண்டவர்கள். தீவிர தெய்வ பக்தி

உடையவர்கள். வாழ்க்கையில் உண்மைத் தன்மையை கடைபிடிப்பார்கள். ஆனால் முன்னோர்கள் காட்டிய பழங்கால மரபு வழிகளில் நம்பிக்கை இல்லாதவர்கள். நாகரிக கருத்துக்களையும் வழிகளையும் அனுசரிக்க விருப்பமுடையவர்கள்.

பெரும்பாலும் தன் குடும்பத்தை விட்டு, வெளியூரில் வாசம் செய்வார்கள். பிறருக்குக் கொடுக்க வேண்டிய அளவுக்கு அதிகமாகவே அவர்களை மதிப்பார்கள். அடிமையாக இருப்பது அவனைப் பொறுத்தவரை தற்கொளைக்குச்சமமானதாகும். மதசம்பந்தமானவைகளில் அதிக உற்சாகமாக ஈடுபட்டாலும், மூடத்தனமான மத சம்பந்தமான செயல்களை பின்பற்றமாட்டான். எல்லா மதங்களும், சாதிகளும், பிரிவுகளும் ஒன்றுதான் என எண்ணுவான். எல்லாவற்றையும் சமமான கண்ணோட்டத்துடன் நோக்குவான். உண்மையே கடவுள், அஹிம்சையே மதம் என்ற காந்திய தத்துவத்தை பின்பற்றுவான். இப்படிப்பட்ட மனோபாவம் உள்ளவர்களில் சிலர் 35வது வயதில் சன்னியாசம் வாங்கிக் கொள்வார்கள். முழுவதுமாக கிரகஸ்தாஸ்ரமம் வாங்கிக் கொள்ளாமல் குடும்பத்துடன் இருந்தபடியே சன்யாசி நோக்கத்துடன் செயல்படுவார்கள். குடும்பத்தினரையும் நல்லபடியாக **கவனி**த்துக் கொள்வார்கள்.

**கல்வியும் வருமானமும்**

தலைசிறந்த மேடைப் பேச்சாளர். தன் வாக்கு வன்மையினால் கூட்டத்தினர் அனைவரையும் கவர்ந்து விடுவான். பேச்சுப் போட்டியில் பல வெகுமதிகளைப் பெறுவான். இத்தகையவர்கள் அரசியலில் இருப்பது சாலப் பொருந்தும். பணத்தை செலவு செய்வதில் ஒரு விசித்திரமான போக்கு இவனிடம் தென்படும். ஒரு பக்கம் அவசியத்துக்குக் கூட செலவு செய்யாத கருமியாக இருப்பான். மறுபக்கம் தேவையற்றவைகளுக்கு அனாவசிய செலவு செய்வான்.

தனியாக சுதந்திரமாக வியாபாரம் செய்வதற்குப் பொருத்தமானவன். பாங்கிங், மதசார்புள்ளதொழில் போன்ற பொறுப்பு அதிகம் இருக்கும். வேலைகளில் இருப்பான். டீச்சர் அல்லது பிரிண்டர் போன்ற வேலைகளும் வாய்க்கும். கணிதத்தில் தேர்ச்சி பெற்றவன்.

## குடும்ப வாழ்க்கை

தாயின் அன்பையும், பாசத்தையும் அதிகம் அனுபவிக்க முடியாதவன். ஒன்று, இவன் இளவயதிலேயே தாயை இழந்து விடுவான். அல்லது சூழ்நிலை, குடும்ப நிலை இவன் தாயைப் பிரித்து வெளியூருக்கு அனுப்பிவிடும். சிலருக்குக் குருவின் பார்வையால் இவன் தாய்க்கு நீண்ட ஆயுள் ஏற்பட்டாலும் ஜாதகன் தாயிடமிருந்து எந்த ஆதாயத்தையும், நன்மையையும், கவனிப்பையும், சுகத்தையும் அனுபவிக்க முடியாதவனாக இருப்பான். ஆனால், தந்தையிடமிருந்து பல நன்மைகளைப் பெற்று அதனால் பெருமையும் கர்வமும் அடைவான். அப்படி இருந்தும் தந்தையிடமிருந்து குறிப்பிட்ட அளவுக்கு அதிகமான உதவிகளைப் பெற முடியாது. அதனால் தாய் தந்தை இருந்தும் அனாதை போல் வாழ நேரும். அவனுக்கும் தந்தைக்குமிடையே அனேக விஷயங்களில் கருத்து வேற்றுமை உண்டாகும். இந்த விஷயங்களில் தீர்வே காணமுடியாது. இதற்குக் காரணம் இவன் சிறு வயதிலிருந்தே கடின உழைப்பாளியாகவும் தன்னைத் தானே உருவாக்கிக் கொண்டவனாக இருப்பதும்தான்.

இவள் மனைவியிடமும், குழந்தைகளிடமும் பற்றும், பாசமும், அன்பும் உடையவள். இவனிடம் உள்ள கெட்ட பழக்கம் இரண்டு. குடிக்கு அடிமையானவன். அதிக காம இச்சையால் பிற பெண்களிடம் சினேகம் உள்ளவன். இந்த பலவீனத்தால், தன் குடும்ப வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் இடைஞ்சல் ஏற்படாமல் பார்த்துக்கொள்வான்.

**ஆரோக்கியம்**

கடவுள் இயற்கையாகவே கொடுத்த சக்தியும், ஆண்மையும் உடையவனாதலால் இவனது ஆரோக்யம் நன்றாகவே இருக்கும். இருந்தாலும் பாரிசவாயு பீடிக்க வாய்யுப்பும் உள்ளது. இவர்களில் 70 % சாதாரணமாக 55 வயதிற்குப்பிறகு பராலிடிக் பீடித்தவர்களாகக் காணப்படுகிறார்கள். முக்கியமாக விசாகம் 2 அல்லது 3வது பாதத்தில் பிறந்தவர்களை பீடிக்க சாத்தியக் கூறு அதிகம் உள்ளது. மீதி 30 % விசாக நட்சத்திரக்காரர்கள் பாரிசவாயு குறைந்த அளவிலோ அல்லது வேறு உருவத்திலோ (RHEMATIC போன்றவை) பீடிக்கப்பட்டவர்களாகவோ இருப்பார்கள். மேலும் அவர்களை ஆஸ்துமாவும் பீடிக்கலாம்.

**பொதுப்பலன் - பெண்கள்**

**உருவ அமைப்பு**

இவள் உடல் மிகமிக அழகுஉள்ளது. இந்த அழகு கடவுள் இவர்களுக்குக் கொடுத்த வரப்ரசாதம். கச்சிதமான அளவுகளுடன் கவர்ச்சிகரமாக காணப்படும் இவர்கள், ஆண்களை கவர்ந்து இழுப்பார்கள். அதனால் அவர்களால் ஏற்படும் தொந்திரவுகளையும் எதிர்நோக்கி சமாளிக்க வேண்டி இருக்கும்.

**குணங்களும் பொதுவான நிகழ்ச்சிகளும்**

இனிமையான வாக்கை உடையவள். வீட்டு வேலைகளிலும், நிர்வாகத்திலும் திறமைசாலி, உத்தியோகத்தில் இருந்தாலும் அங்கும் தன் திறமையை காட்டுவாள். தன்னை உயர்வாகவும், கர்வமாகவும் இவர்கள் நடந்து கொள்ளுவதைக் காண்பது அரிது. எளிமையை விரும்புவாள். பகட்டையும், காட்சிப் பொருளாக இருப்பதையும் விரும்ப மாட்டாள். மேக்கப் போட்டு தன்

இயற்கை அழகை அதிகரித்துக் கொள்ள ஒரு போதும் விரும்ப மாட்டான். இவளுடைய அழகைக் கண்டு மற்ற பெண்கல் இவள் மீது பொறாமைப்படுவார்கள். இவள் மதக் கோட்பாடுகளில் தீவிர நம்பிக்கை உடையவள். அடிக்கடி விரதம் இருத்தல், பூஜை புனஸ்காரங்கள் செய்தல் புண்ணியஸ்தல யாத்திரை இவற்றை மேற்கொள்வாள்.

**கல்வி - தொழில்**

செய்யுள், பாட்டுகளில் ஆர்வம் உடையவள். இதர சுப கிரகங்களின் முக்கியமாக சந்திரனும் சுக்கிரனும் சேர்க்கை ஏற்பட்டிருந்தால், புகழ் பெற்ற எழுத்தாளராக ஆக முடியும். கல்வித்துறையில் கலை, இலக்கியங்களில் சிறப்படைந்து விளங்குவான்.

**குடும்ப வாழ்க்கை**

தன் கணவனை தெய்வமாகக் கொண்டாடுவாள். அவனுடைய மத, சாஸ்திர சம்பந்தமான நடவடிக்கைகள் இவளுடைய கணவன் வீட்டு உறவினர்களை இவள் மீது அன்பும் பற்றும் வைக்கச் செய்யும். தன் குடும்பத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களையும் தூரத்து உறவினர்கள் உள்பட, நன்கு கவனித்து பராமரிப்பதால் அதிகாரமும் அந்தஸ்தும் அவளை தானாகவே வந்தடையும். தன் மாமனாரிடம் அதிக அன்பும் ஒட்டுதலுமாக இருப்பாள். அடிக்கடி புனித ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவாள்.

**ஆரோக்கியம்**

பொதுவில் திடமான ஆரோக்கியம் உள்ளவள். ஆயினும் கிட்னிட்ரபிள் காய்ட்டர் (கழுத்தில் சுரப்பி வீங்குதல்) ஹோரமோ செக்ஸில் ஈடுபடுவதால் உடல் பலவீனம் ஆகியவற்றை அனுபவிக்க வாய்ப்புண்டு.

**விசாக நட்சத்திரத்தில் உள்ள கிரகங்களைப் பார்த்த பலன்**

## சூரியன்

### விசாகத்தில் உள்ள சூரியனை சந்திரன் பார்த்த பலன்

இவனைச் சார்ந்துள்ள அனேக பெண்களை இவன் ஆதரிக்க வேண்டி வரும். ஷிப்பிங் அல்லது தண்ணீர் தொடர்புள்ள தொழிலின் மூலம் சம்பாதனை ஏற்படும்.

### விசாகத்தில் உள்ள சூரியனை செவ்வாய் பார்த்த பலன்

வீரம் உள்ளவன். நியாயமான சண்டை இடுவதில் வல்லவன்.

### விசாகத்தில் உள்ள சூரியனை புதன் பார்த்த பலன்

லலித கலைகளில் ஈடுபாடு உடையவன். அதன் மூலம் வருமானம் பெறுவான்.

### விசாகத்தில் உள்ள சூரியனை குரு பார்த்த பலன்

அரசியல் வாதிகளிடம் நெருங்கிய தொடர்புள்ளவன். தன்னுடைய சுயலாபத்துக்காக அவர்களை உபயோகித்துக் கொள்வான்.

### விசாகத்தில் உள்ள சூரியனை சுக்கிரன் பார்த்த பலன்

அரசியலில் நல்ல ஸ்தானத்தைப் பெறுவான். ஆனந்தமான வாழ்க்கையை அனுபவிப்பான்.

### விசாகத்தில் உள்ள சூரியனை சனி பார்த்த பலன்

பிறரை ஏமாற்றுபவன். பாபகாரியங்களை அஞ்சாமல் செய்வான். அதற்கான தண்டனையையும் அரசாள்பவரிடமிருந்து பெறுவான்.

## சந்திரன்

### விசாகத்தில் உள்ள சந்திரனை சூரியன் பார்த்த பலன்

பிறருக்குக் கடன் கொடுத்தும், விவசாயம் செய்தும் பணம் சம்பாதிப்பான்.

**விசாகத்தில் உள்ள சந்திரனை செவ்வாய் பார்த்த பலன்**

பெண்கள் கூட்டம் இவனை சூழ்ந்திருக்கும். இவனால் அவர்களுக்கு அபாயம் உண்டாகும்.

**விசாகத்தில் உள்ள சந்திரனை புதன் பார்த்த பலன்**

மிகவும் அறிவாளி. கணித அறிவு தேவைப்படும். ஜோதிடம், எஞ்ஜினீர் போன்ற தொழிலில் இருப்பான்.

**விசாகத்தில் உள்ள சந்திரனை குரு பார்த்த பலன்**

தன் பெற்றோர்களிடம் அடக்கமாக பணிவுடன் நடந்து கொள்வான். ஆனால் தன் மனைவிக்கு ஆபத்தை விளைவிப்பான்.

**விசாகத்தில் உள்ள சந்திரனை சுக்கிரன் பார்த்த பலன்**

இவன் நல்ல ஆரோக்யம், செல்வம், இனிமையான குடும்ப வாழ்க்கை எல்லாம் அமையப் பெற்றவன்.

**விசாகத்தில் உள்ள சந்திரனை சனி பார்த்த பலன்**

இளவயதிலேயே தாயை இழப்பான். பழிவாங்கும் உணர்வு மனம் பூராவும் குடி கொண்டிருக்கும். பெண் வர்க்கத்தையே வெறுப்பான்.

**செவ்வாய்**

**விசாகத்தில் உள்ள செவ்வாயை சூரியன் பார்த்த பலன்**

மனைவியை வெறுப்பவன். பொதுவாக இவர்கள் வெளிநாட்டில் வசிப்பார்கள்.

**விசாகத்தில் உள்ள செவ்வாயை சந்திரன் பார்த்த பலன்**

இவன் விசித்திரமானவன். தந்தையை வெறுப்பான். ஆனால் தாயிடம் அன்புள்ளவன்.

**விசாகத்தில் உல்ள செவ்வாயை புதன் பார்த்த பலன்**

அருமையான குழந்தை தெய்வத்தை உடையன். இவன் குழந்தைகள் இவனைவிட அறிவாளிகளாக இருப்பார்கள்.

**விசாகத்தில் உள்ள செவ்வாயை குரு பார்த்த பலன்**

தன் குடும்பத்துடனும், உறவினர்களிடமும் மிகுந்த ஒட்டுதலும் பாசமும் உடையவன். அதிகபட்ச உதவிகளை அவர்களுக்குச் செய்வான்.

**விசாகத்தில் உள்ள செவ்வாயை சுக்கிரன் பார்த்த பலன்**

அரசாங்கத்தில் மிக உயர்ந்த பதவியை பெறுவான். நல்ல அந்தஸ்தும் புகழும் உடையவன்.

**விசாகத்தில் உள்ள செவ்வாயை சனி பார்த்த பலன்**

நல்ல பழக்க வழக்கங்களும் நன்னடத்தையும் உள்ள புண்ணியசாலி. ஆனால் படு கஞ்சன்.

## புதன்

**விசாகத்தில் உள்ள புதனை சூரியன்பார்த்த பலன்**

நல்ல திருமண வாழ்க்கையை அனுபவிப்பான். பெரிய தொழிற்சாலையில் தலைமை பதவியில் இருப்பான்.

**விசாகத்தில் உள்ள புதனை சந்திரன் பார்த்த பலன்**

கடுமையாக உழைப்பவன். பணக்காரன், ஆளும் வர்க்கத்தினர்க்கு நெருக்கமானவன்.

**விசாகத்தில் உள்ள புதனை செவ்வாய் பார்த்த பலன்**

அரசாங்கத்தின் ஆதரவில் உள்ளவன், எஞ்ஜினீராக இருப்பவன்.

**விசாகத்தில் உள்ள புதனை குரு பார்த்த பலன்**

அறிவாளி, செல்வந்தன்.

**விசாகத்தில் உள்ள புதனை சுக்கிரன் பார்த்த பலன்**

வாழ்க்கையில் எல்லா வகையிலும் சந்தோஷத்தை அனுபவிப்பான். அதிஷ்டம் உள்ளவன். செல்வத்தை சேமிப்பான்.

**விசாகத்தில் உள்ள புதனை சனி பார்த்த பலன்**

அனேக கஷ்டங்களையும், உற்பாதங்களையும் எதிர்நோக்க வேண்டியிருக்கும். மிகவும் ஏழ்மையான நிலையில் வாழ்வான்.

## குரு

**விசாகத்தில் உள்ள குருவை சூரியன் பார்த்த பலன்**

ஆரோக்யமும், செல்வமும் இன்பகரமான குடும்ப வாழ்க்கையும் அமையப் பெற்றவன்.

**விசாகத்தில் உள்ள குருவை சந்திரன் பார்த்த பலன்**

பணக்கார குடும்பத்தின் வழித் தோன்றல்

**விசாகத்தில் உள்ள குருவை செவ்வாய் பார்த்த பலன்**

நன்கு படித்த அறிஞன். தைரியமானவன்.

**விசாகத்தில் உள்ள குருவை புதன் பார்த்த பலன்**

பணக்காரன், புண்ணியவான்.

**விசாகத்தில் உள்ள குருவை சுக்கிரன் பார்த்த பலன்**

பெருந்தன்மையானவன். அழகிய இளம் பெண்களின் சகவாசத்தில் இன்பம் காண்பவன்.

**விசாகத்தில் உள்ள குருவை சனி பார்த்த பலன்**

உயர்ந்த ஞானத்தைப் பெற்றவன். பல விஷயங்களிலும் அறிவு பெற்றவன். மணவாழ்க்கை துன்பம் நிறைந்ததாக இருக்கும்.

**சுக்கிரன்**

**விசாகத்தில் உள்ள சுக்கிரனை சூரியன் பார்த்த பலன்**

குணவதியான அழகிய மனைவியைப் பெற்றவன். நிலபுலன்களையும் கட்டிடங்களையும் வாங்குவான்.

**விசாகத்தில் உள்ள சுக்கிரனை சந்திரன் பார்த்த பலன்**

குடும்பத்தில் முத்தானவன். மென்மையாகப் பேசுவான். அதிகமான (SEX) ல் ஈடுபடுவான்.

**விசாகத்தில் உள்ள சுக்கிரனை செவ்வாய் பார்த்த பலன்**

பொல்லாதவன். சட்டவிரோத செயல்கள் மூலம் சம்பாதிப்பவன்.

**விசாகத்தில் உள்ள சுக்கிரனை புதன் பார்த்த பலன்**

அழகிய பர்ஸனாலிடி உடையவன். அமைதியும் நிதானமும் உடையவன்.

**விசாகத்தில் உள்ள சுக்கிரனை குரு பார்த்த பலன்**

வீடு, மனை, வாசல், வாகனம், சந்தோஷமான குடும்பம், புத்திசாலியான பிள்ளைகள் எல்லாம் பெற்றவன்.

**விசாகத்தில் உள்ள சுக்கிரனை சனி பார்த்த பலன்**

கொடூர குணம், அயோக்கியத்தனம், நாணயமின்மை, எல்லாம் நிறைந்தவன், ஏதாவது ஊழலில் மாட்டிக்கொள்வான்.

**சனி**

**விசாகத்தில் உள்ள சனியை சூரியன் பார்த்த பலன்**

ஏழை, தந்தையுடன் சுமுகமான உதவி இல்லாதவன். தந்தையிடம் இருந்து எந்த நன்மையும் கிடைக்காது.

**விசாகத்தில் உள்ள சனியை சந்திரன் பார்த்த பலன்**

அரசியலில் மிக உயர்ந்த ஸ்தானத்தைப் பெறுவான். அல்லது ஒரு தொழிற்சாலையில் தலைமைப் பதவியில் இருப்பான்.

**விசாகத்தில் உள்ள சனியை செவ்வாய் பார்த்த பலன்**

எல்லா விஷயங்களையும் பைத்தியக்காரத் தனமாக அணுகுவான். தன்னுடைய மேலதிகாரிக்கு பிரச்சினைகளை உண்டாக்குவான்.

**விசாகத்தில் உள்ள சனியை புதன் பார்த்த பலன்**

பல சாஸ்த்திரங்களையும், விஞ்ஞானங்களையும் நன்றாகக் கற்றவன். செல்வந்தனாய் வாழ்பவன்.

**விசாகத்தில் உள்ள சனியை குரு பார்த்த பலன்**

வாழ்க்கையில் எல்லா வசதிகளையும் சுகத்தையும் பெற்றவன்.

**விசாகத்தில் உள்ள சனியை சுக்கிரன் பார்த்த பலன்**

விசாக நட்சத்திர பாதங்களில் கிரகங்கள் தரும் பலன்கள்

**விசாகம் 1ம் பாதத்தில் சூரியன் தரும் பலன்**

பெண் ஜாதகத்தில், சூரியன் இங்கு இருக்கும்போது சுக்கிரன் ஹஸ்த நக்ஷத்திரத்தில் இருந்தால் அவளுக்குத் திருமணமே நடக்காது. இவள் பிறருடன் கள்ளத் தொடர்பு வைத்திருப்பாள். ஆண் ஜாதகமாயிருந்தால் இதே அமைப்புக்கு திருமணம் தாமதப்படும். திருமணத்துக்குப்பின் டைவர்ஸ் அல்லது அவளது மரணம் ஏற்படும்.

**விசாகம் 1ம் பாதத்தில் இருக்கும் சந்திரன் தரும் பலன்**

கபம், இருமலால் கஷ்டப்படுவான். இதுவே லக்னமுமாக அமைந்து பாவிகள் இருந்தால் இந்த குழந்தையின் தாய் மரணமடைவாள். இவளுக்கு 8 வயது ஆகும் போது.

ஜாதகன் மாட்டுத்தரகன் தொழில் ஏற்று நல்ல லாபம் சம்பாதிப்பான். மதச்சார்பு உடையவன்.

**விசாகம் 1ல் உள்ள செவ்வாய் தரும் பலன்**

வருமானத்தைவிட செலவுகள் அதிகம் இருக்கும். உடலில் ஊனம் இருக்கும். அல்லது ஏதாவது குறை இருக்கும். எவருக்கும், மதிப்புத் தரமாட்டான். பெண்களால் துன்பம் அனுபவிப்பான். மொத்தத்தில் சந்தோஷமில்லாத வாழ்க்கை நடத்துவான்.

**விசாகம் 1ல் உள்ள புதன் தரும் பலன்**

இந்த புதன், சனியுடன் சேர்ந்து, செவ்வாயால் பார்க்கப்பட்டால் எஞ்ஜினியர் தொழிலில் ஏதாவது கல்வி ஸ்தாபனங்களில் உத்யோகம் செய்வர்ன். இந்த அமைப்பு உள்ளவனுக்கு 30 வயதில் தான் திருமணம் நடக்கும். 31 வயதுக்குப் பிறகு கவர்ன்மெண்ட் உத்தியோகத்துக்குப் போவான்.

**விசாகம் 1ல் உள்ள குரு தரும் பலன்.**

இங்கு குரு இருக்கையில், புதன், சுக்கிரன், கேது மூவரும் பூராட நட்சத்திரத்தில் இருந்தால் ஜாதகனுக்கு ஒரு சகோதரனும் மூன்று சகோதரிகளும் இருப்பர். நடுத்தரமான கல்வி அமையும். தந்தையின் சொத்துக்கள் அவனை வந்தடையும். சாஸ்த்திரங்கள் அறிந்த நிபுணன். கோர்ட் வழக்கில் மாட்டிக்கொள்வான்.

**விசாகம் 1ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

இவன் சனியுடன் சேர்ந்தால் ஜாதகன் இன்டலெக்சுவல் டைப். அரசாங்க உத்யோகத்தில் இருப்பான். இரண்டு திருமணம் நடக்கும். 24 வயது முதல் நல்ல காலம் பிறக்கும். மண வாழ்க்கையில் இன்பம் இருக்காது. 57 வயதுக்குப் பிறகு தன் இருப்பிடத்தை மாற்றுவான். இந்த சுக்கிரன் சந்திரனுடன் இருந்தால் ஜாதகன் பொருள்களை வாங்கி விற்பதில் சமர்த்தன். குடும்பத்தில் மிக்க பாசமும் அன்பும் உள்ளவன்.

**விசாகம் 1ல் உள்ள சனி தரும் பலன்**

லக்னம் இங்கு அமைந்து குரு 7ல் இருந்தால் மலச்சிக்கலும், வாயு சம்பந்தப்பட்ட வியாதிகளும் தோன்றும். சூரியனும் புதனும் கேட்டை நக்ஷத்திரத்தில் இருந்தால் ஜாதகன் அரசாங்கத்தில் நிதி அல்லது அக்கவுண்ட்ஸ் எக்ஸிகூடிவ் ஆக உத்யோகம் பார்ப்பான்.

### விசாகம் 1ல் உள்ள ராகு தரும் பலன்

நீதி நேர்மை அற்றவன். ஆனால் செழிப்பாக இருப்பான். எப்போதும் மற்றவர்களுக்கு உதவி செய்து கொண்டிருப்பான். இவனுடைய அவயவத்தில் ஏதாவது குறை இருக்கும்.

### விசாகம் 1ல் உள்ள கேது தரும் பலன்

தன்னிடமே நம்பிக்கை இல்லாதவன். எப்போதாவது மனத்தளர்வு ஏற்படும். நாட்பட்ட டிஸண்ட்ரி நோய் உடையவன். சனியுடன் உள்ள கேது மெஷினரி சம்பந்தப்பட்ட தொழிலைத் தருவான். 35லிருந்து 40 வயது வரை நல்ல காலமாக அமையும்.

### விசாகம் 2ல் உள்ள சூரியன் தரும் பலன்

சிறு குடும்பம். இரண்டே மகன்கள். நிறைய உணவு வகைகளை உண்பான். வாழ்க்கை சுலபமாகக் கழியும். பிறருக்கு துன்பம் தருவான். கண்பார்வையில் கோளாறு உண்டு. மற்றவருக்கு பிரச்சினைகளை உருவாக்குவான். சண்டைக்காரன். சட்டவிரோத செயல்களைப் புரிபவன். தண்டனை எப்போதும் இவனுக்காகக் காத்திருக்கும். வேறு சுபகிரக பார்வை அல்லதுசேர்க்கை இந்த சூரியனுக்கு இல்லாவிடில் வீட்டு வேலைக்காரனாகப் பணிபுரிவான்.

### விசாகம் 2ல் உள்ள சந்திரன் தரும் பலன்

சூரியனும் இதில் இருந்து சனியின் பார்வையும் பெற்று, லக்னம் ஆயில்யத்தில் அமைந்தால், இந்தக் குழந்தை பிறந்த உடனேயே தாய் மரிப்பாள். சந்திரன் மட்டும் இதில் இருந்தால் ஜாதகன் அதிகப்படியான காம விளையாட்டில் ஈடுபடுவான். பெண்களை ஏமாற்றிப் பணம் பறிப்பான்.

### விசாகம் 2ல் உள்ள செவ்வாய் தரும் பலன்

சூரியன் இவனுடன் சேர்ந்து இருந்தால் ஜாதகன் ஒரு அண்டப்புளுகன். பாபகாரியங்களைச் செய்வான். சந்திரனுடன் இருந்தால் ரத்தம் சமநிலையில் இல்லாததால்

நோய்கள் ஏற்படும். ஒரு தொழிலாளியாகவோ அல்லது மெடலர்ஜிஸ்டாகவோ வேலை செய்வான்.

**விசாகம் 2ல் உள்ள புதன் தரும் பலன்**

லக்னமும் இதில் இருந்தால் இவன் கான்ஸரினால் கஷ்டப்படுவான். சூரியனும் கேதுவும் இருந்தால் சாதாரண படிப்பைத் தருவான். ஆனால் மிகுந்த புத்திசாலியாக இருப்பான். புதனுடன் சம்பந்தப்பட்டால் ஜாதகனின் மனைவி ஒரு அதிர்ஷ்ட்டக்கட்டை. தங்கம், கட்டிடக்கலை மூலம் வருமானம் வரும். விதவைகளுடன் SEX கொள்வான்.

**விசாகம் 2ல் உள்ள குரு தரும் பலன்**

மத சார்பு உடையவன். ஆசார அனுஷ்டானங்களிலும், மந்திர தந்திர வித்தைகள் பயிலுவதிலும் ஆர்வம் கொண்டவன். அன்பும் தோழமையும் கொண்ட மனது உடையவன். மற்றவர்கள் உதவிக்காக இவனை எப்போதும் அணுகலாம். இல்லை என்று மறுக்க மாட்டான்.

**விசாகம் 2ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

புதன் கூடி இருந்தால் இவன் ஒரு இன்டெலக்ட். அரசாங்கத்தில் முக்கியம் வாய்ந்த பதவியில் இருப்பான். இவன் கல்வித் துறையில் இருப்பான். அல்லது கல்வித்துறை சம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபடுவான். இவன் தந்தை துணி வியாபாரியாக இருக்கலாம்.

**விசாகம் 2ல் சனி தரும் பலன்**

ராகுவும் செவ்வாயும் கூட இங்கிருந்தால் food பாய்ஸனிங் ஏற்பட்டு அபாயம் ஏற்படும்

சூரியன் கூட இருந்தால் ஜாதகனின் தந்தை இவன் பிறக்கும் தருணத்தில் மிகவும் கஷ்டமான நிலையில் இருந்திருப்பார். இவன் ஒவ்வொரு நிலையிலும் பல தடங்கல்களை சமாளிக்க வேண்டிவரும்.

**விசாகம் 2ல் உள்ள ராகு தரும் பலன்**

சண்டை போடும் குணமுள்ளவன். இந்த ராகுவால் மனைவியின் ஆயுளுக்குக் கண்டம் ஏற்படும். சுபகிரக பார்வை ஏற்பட்டிருந்தால் மனைவியின் ஆயுள் கெட்டி. மனைவியின் உடல் வியாதியால் இவன் மனப்போராட்டத்துக்கு ஆட்பட்டு மனத்துயரை அடைவான். அதனால் எடுத்ததெற்கெல்லாம் கோபமடைவான்.

**விசாகம் 2ல் உள்ள கேது தரும் பலன்**

சஞ்சலமான மனதுடையவன், அடிக்கடி மனம் மாறுவான். நீதி நேர்மை அற்றவன். பிதுரார்ஜித சொத்துக்களை இழப்பான்.

**விசாகம் 3ல் உள்ள சூரியன் தரும் பலன்கள்**

பலவிதமான கலைகளிலும் பரிச்சயம் உள்ளவன். கண்கள் நோய் உடையதாக இருக்கும். சிலருக்கு கண்பார்வை கூட பாதிக்கப்பட்டு குருடு ஆகலாம். வாத பிரதிவாதம் செய்வதில் விருப்பம் உடையவன்.

**விசாகம் 3ல் உள்ள சந்திரன் தரும் பலன்**

லக்னமும் இதில் அமைந்தால் ஜாதகன் ஒரு செவிடன். உடல் உறுப்புகளில் ஏதாவது குறை இருக்கும். கடைநிலை வேலை செய்பவன். லக்னம் இங்கு இல்லாவிட்டால், இவன் கர்வம் உடையவன். தன் எதிரிகளை வெற்றி கொள்வான். கடவுளிடம் முழுபக்தி உண்டு. அடிக்கடி புண்ணிய ஸ்தல யாத்திரை மேற்கொள்வான்.

**விசாகம் 3ல் உள்ள செவ்வாய் தரும் பலன்**

தோல் பொருட்கள் அல்லது மண்பானை இவற்றை விற்பனை செய்யும் வியாபாரி. பிறருக்கு பாடி கார்டாகக்கூட பணி புரியலாம். முக்கிய புள்ளிகள் அவனுடைய தேகவலிமையை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு வயதான காலத்தில் இவனை விரட்டி விடுவார்கள்.

### விசாகம் 3ல் உள்ள புதன் தரும் பலன்

சனி அனுஷத்தில் இருந்தால் இவன் ஒரு பிஸினஸ்மேன். சனி புதனுடன் இங்கிருந்தால் ஜாதகன் தன்னுடையவும் குடும்பத்தினருடையவும் வியாதிகளுக்காக பெரும் பணம் செலவு செய்வான். இதன் காரணமாக நீதி நேர்மையற்ற முறையில் சம்பாதிக்கும் கட்டாயத்துக்குத் தள்ளப்படுவான். இதன் காரணமாக பெருந்தொகையை அபராதமாகக் கட்ட நேரிடும்.

### விசாகம் 3ல் உள்ள குரு தரும் பலன்

மத சடங்குகள், புண்ணிய காரியங்களை செய்வதனால் வருமானம் அமையும். முக்கியமாக அனேக பிராமணர்களுக்கு போஜனம் அளித்து கௌரவிப்பான். சுக்கிரனும் இங்கிருந்தால் ஜாதகன் வேத, சாஸ்திரங்களை பயிலுவிக்கும் ஆசானாகி அந்த வரும்படியில் வாழ்க்கையை நடத்துவான். சாஸ்திரங்களில் சொல்லியபடி சரியான பாதையில், நல்ல நோக்கத்துடன் சுத்தமான வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவான்.

### விசாகம் 3ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்

இதில் சந்திரனும் சூரியனும் உடன் சேர்ந்திருந்தால் ஜாதகன் சாஸ்திரங்களில் கரை கண்டவன். பல வியாதி உள்ளவன். தன் தாயுடன் சரியான உறவுமுறை வைத்துக்கொள்ளாதவன். இவனுடைய திருமணம் கூடத் தாமதப்பட்டு நடக்கும்.

### விசாகம் 3ல் உள்ள சனி தரும் பலன்

இவன் மந்திரிக்கு அடுத்த ஸ்தானத்தில் இருப்பான். தீர்காயுளை உடையவன். தன் திறமைக்காக அதிக கர்வம் கொள்ளாமல் அமைதியுடனும் அடக்கத்துடனும் இருப்பான்.

**விசாகம் 3ல் உள்ள ராகு தரும் பலன்**

இவன் செல்வந்தனாயும், புகழ்பெற்றவனாயுமிருப்பான். இருந்த போதிலும் தந்தையுடன் சுமூக உறவு இருக்காது. உண்மையில் தந்தையை வெறுப்பான்.

**விசாகம் 3ல் உள்ள கேது தரும் பலன்**

கோபக்காரன், பிரசங்கம் செய்வதில் கெட்டிக்காரன், நல்லவைகள் இவனை வந்தடையாது. பெற்றோர்களை விரோதியாகக் கருதுவான்.

**விசாகம் 4ல் உள்ள சூரியன் தரும் பலன்**

இதில் லக்னமும் அமைந்து, செவ்வாயின் பார்வை ஏற்பட்டால் ஜாதகனுக்கு மார்பு, இருதயம் அல்லது சுவாசப்பையில் கோளாறுகள் ஏற்படும்.

சூரியன் மட்டும் தனியாக இருந்தால், இவன் மற்றவர்களின் துன்பங்களைக் களைவான். அரசாங்க வழக்குகளில் மாட்டிக் கொள்வான்.

**விசாகம் 4ல் உள்ள சந்திரன் தரும் பலன்கள்**

முழு சந்திரனாக இருந்து, லக்னமும் இதில் அமைந்தால் ஜாதகனுக்கு நீண்ட ஆயுள் அமையும். மேலும் நன்கு படித்தவனாகவும் இருப்பான். 22 வயது வரையில் வாழ்க்கை போராட்டமாக இருக்கும். ஒரு டீச்சராக வேலை செய்வான். அதன்பின் வெளிநாடு சென்று அங்கேயே செட்டில் ஆகிவிடுவான். அங்குள்ள அரசாங்கத்தால் பல கௌரவங்களைப் பெறுவான். இந்த சந்திரன் சகோதரிகளுக்கு நல்லதை செய்யமாட்டான்.

**விசாகம் 4ல் உள்ள செவ்வாய் தரும் பலன்**

புதன் பூராடத்தில் இருந்தால் கல்வி தடைபடும். இந்த செவ்வாய் சனியுடன் இருந்தால் ஜாதகன் தன் 38 வயது வரும்போது சொல்ல முடியாத துன்பங்களை

அனுபவிப்பான். சுக்கிரனும் இவ்விடத்தில் இருந்தால் ஜாதகன் தன் இனத்தின் அல்லது சமூகத்தின் தலைவனாக இருப்பான். ஜோதிடம் கணிதம் இரண்டிலும் சிறப்புப் பெறுவான்.

**விசாகம் 4ல் உள்ள புதன் தரும் பலன்**

ஜாதகன் கஞ்சக் கருமி. பொய்யைத் தவிர வேறொன்றும் பேசமாட்டான். தொழில் நுணுக்கத்தில் ஆர்வம் உள்ளவன். கெட்ட பெண்களை மட்டுமே விரும்புவான். அவர்களுடன் மட்டுமே பழகுவான். பாப காரியங்களை துணிந்து செய்வான். சுக்கிரனும் இவனுடன் சேர்ந்து இருந்தால் ஜாதகன் செல்வந்தன் படித்தவன், நல்ல பழக்க வழக்கம் உடையவன்.

**விசாகம் 4ல் உள்ளகுரு தரும் பலன்**

குரு இங்கு இருக்கையில் கேது மூலத்தில் இருந்தால் ஜாதகன் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன். தன் உடன் பிறப்புக்களுக்கு ஆபத்தை உடையவன். பிஸினஸ் மூலம் சம்பாதிப்பான். இன்பமான வாழ்க்கை நடத்துவான்.

குரு மட்டும் இங்கிருந்தால் ஜாதகன் பல எதிர்பார்ப்புகளை உடையவன். பலவற்றை அடைய ஆசைப்படுபவன். சனி பார்த்தால், ஜாதகனுக்கு 5வது வயதில் உடல் நிலை சீரியஸ் ஆகும். பணக்காரன். 30வது வயதிலிருந்து நல்ல காலம் ஆரம்பமாகும். 11, 29, 33, 37வது வயதுகளில் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

**விசாகம் 4ல் சுக்கிரன் தரும் பலன்**

வெளியூர்களில் பர்வலாக பிரயாணம் செய்வான். பிரபல கவியாக விளங்குவான். புத்தகங்கள் எழுதியும் தன் கவித்திறமையாலும் ஏராளமான செல்வத்தைச் சம்பாதிப்பான்.

**விசாகம் 4ல் உள்ள சனி தரும் பலன்**

லக்னம் சுவாதியில் இருந்தால் இவன் கோடீஸ்வரனாக இருப்பான். முகம் அல்லது பற்களில் நோய் அல்லது குறை ஏற்படும். சந்திரனும் இங்கிருந்தால் இவனுடைய குடும்பம் பெரிது.

**விசாகம் 4ல் உள்ள ராகு தரும் பலன்**

பசி மந்தித்துப் போகும். அல்லது உண்ணுவதில் பிரச்சினை ஏற்படும். சூரியனும் இங்கிருந்தால் தந்தையின் கட்டாயத்தினால் தனக்குப் பிடிக்காத பெண்ணை மணந்து கொள்ள நேரும்.

**விசாகம் 4ல் உள்ள கேது தரும் பலன்**

எதையும் மிகைப்படுத்திக் காட்டும் குணமும் நடத்தையும் உடையவன். சோம்பேறிகள். அடாவடிகள் கூட்டத்தில் இருப்பதில் சந்தோஷம் காண்பான்.

❋❋❋

# அத்தியாயம் - 23

## விருச்சிக ராசி மற்றும் லக்னம்

### (விசாகம் 4ம் பாதம் மற்றும் அனுஷம், கேட்டை நட்சத்திரங்கள் முடிய)

வெட்டெனப் பேச வல்லான் வெகுளிமுன் உடையனாகும்
சிட்டரைச் சேர்ந்து வாழும் சீர்குறியாள னாகும்
பட்டயம் மணிந்த தோளான் படைக்கெலாம் தலைவனாகும்
கெட்டன ஒன்றும் வேண்டான் விருச்சிக ராசியானே! 153
(சுவடி எண் 1500)

(இ-ள்.) இந்த லக்னத்தில் பிறந்தவன் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என நறுக்குத்தரித்தால் போல் பேச வல்லவன். கோபமுடையவன். நல்ல பெரியோருடனும் சேர்ந்து வாழும் தன்மை உள்ளவன். சிறந்த சாமுத்திரிக அங்க லட்சணங்களும் உள்ளவராகவும் இருப்பான். தோள்வளை போல் பல ஆபரணங்களையும் அணிபவன். வீரன், படைத்தலைவனாகவும் இருப்பான். கெடுதியான விஷயங்களை விரும்பாதவன்.

இது எட்டாவது ராசி ஸ்திரீ ராசி. தலையால் உதிப்பது. பொன்னிற முடையது. தேளின் உருவம், அதற்குக் கொடுக்கில் விஷம். இவர்களுக்கு வாயில் விஷம். கூரிய புத்தி சாதுர்யமும் உண்டு. சில சமயங்களில் மட்டும் சமாதானப் பிரியர். இது செவ்வாயினுடைய நெருப்புத் தன்மை. இதனால் மிடுக்கும் தடுக்கும் உண்டு.

நீண்ட கண்ணும் மார்பும் உடையவர்கள். முழங்கால் நீண்டு திரண்டு உருண்டு இருக்கும். லட்சியக் காதல் உண்டு.

**பெண்கள்**

காதலும் கற்பும், இயல்பாகவே உள்ள இவர்கள் அழகிகள். எப்பொழுதும் தன் கட்சியை விட்டுக் கொடுக்காமல் வாதம் பண்ணும் தன்மை இவர்களுக்குண்டு. இதனால் இவர்கள் பிறர் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வார்கள். இதற்கு மேலும் கணவன் என்றும் பாராமல் பிறரைதூக்கி எறிந்து பேசுவார்கள். சளைக்காமல் உழைக்கும் தன்மையும், எந்தக் காரியத்தையும் தானே முழுதும் செய்யும் தன்மை உண்டு. இவை எல்லாம் இந்த பெண்களின் குணங்களாகும்.

**சத்யாசார்யர் கருத்துப்படி விருச்சிக லக்னத்தில் பிறந்தவர்கள் தன்மை**

அகன்ற நேராக நிமிர்ந்த முகம், நீண்ட வயிறு உள்ளவன். ஒரே நடத்தையுள்ளவன். எதையும் தாமதித்தும் செய்பவன். வேகமாக நடப்பவன். கிராம நகர அதிபதி, பித்த சரீர முள்ளவன். சிவந்த கண்கள் உள்ளவன். அதிக பந்துக்களைப் போஷிக்கும் பொறுப்புள்ளவன். பிறரை ஹிம்சை புரிவான். செலவாளி, அனேக சந்ததியுள்ளவன். கால்நடைச் செல்வமுள்ளவன். தர்மமற்றவன். மனைவியிடம் பற்றில்லாதவன். தன் குலத்திலே சத்ருக்களுள்ளவன். அதிக ரோக முள்ளவன். வெட்டுக்காயமுள்ளவன். சத்ருவால் கட்டுண்ணப்படுபவன். இதனாலும் அவடபடுதல், போகங்கள், பாப காரியங்கள் நெருப்பு இவற்றால் மரணம் தோன்றும்.

***பிருகு சம்மிதைப்படி***

*இதில் பிறந்தவன் துணிச்சலான சரீர முள்ளவன். கண்கள் உருண்டு பெ[illegible]ாகவும் இருக்கும். இவன் கோபமுள்ளவன். துஷ்டனாகவும், பொய் பேசுபவனாகவும், தாமத குணமுள்ளவன்.கசப்பான சொற்கள் பேசுபவன். கடினசுபாவமுள்ளவன். பிறரை நிந்திப்பவன். தயவு*

தாட்சணியமில்லாதவன். காட்டமுள்ளவன். சில சமயம் பிச்சை எடுக்கும் தொழிலுள்ளவன். சகோதரர்களுடன் சண்டை போடுபவன். சத்துருக்களை வெல்பவன். பிறருக்கு சேவை செய்பவன். இவற்றுடன் சாஸ்த்திரங்கள் அறிந்தவன். நிறையப் படித்தவன். குணமுள்ளவன். சூரன், வீரன், மிகவும் சிந்திப்பவன். இப்படிப்பட்ட தன்மைகள், உள்ளவன். சில சமயம் பிறர் மனதை அறிவதில் சமர்த்தன்.

**பிறநூல்கள்**

வலிமையான கால்கள் திரண்டுருண்ட மேல் உடற்கட்டு உள்ள உருவமுள்ளவன். கேட்போர்க்கு கொடுப்பவன். எப்பொழுதும் உற்சாகமுள்ள, சோர்வில்லாத மனமுள்ளவன். நல்ல பேச்சாளி. இவன் பேச்சுக்கு பிறரிடம் மதிப்புண்டு.

புத்திமான். மரியாதைக்குரியவன். இனிமையாகப் பேசுபவன். காம இச்சை அதிகமுள்ளவன். தன் மனைவியிடம் அதிகம் ஆசையுள்ளவன். கலகம் பண்ணுபவன். ஆசார ஒழுக்கம் உண்டு. பிறர் குண நலன்களைப் பாராட்டுபவன். சாஸ்திரப்படி நடப்பவன். சத்துருக்களை ஜெயிப்பவன்.

தைரியசாலி, தேவையின்றி பிறருடன் பகைமை பாராட்டுபவன். நிச்சய புத்தி. ஆனால் நடிப்புத்தன்மையும் உண்டு. ஏமாற்றுபவன். அளவுக்கு மீறிய ஆசையுள்ளவன். மறைமுகக் கும்பலுடன் தொடர்பு வைப்பவன். லேவாதேவி போன்ற எல்லா தொழில்களிலும் வல்லவன். இவர்களை நம்பி எதையும் செய்ய முடியாத குணக்கேடன்.

இரசாயனத்தொழில், சுரங்கவேலை, சித்த வைத்யம், பந்தய, சூதாட்ட தொழில்கள் காபரே நடனத்தொழில் இவற்றில் ஈடுபாடுள்ளவன். விவசாயம் துறைமுகத்தொழில், விளையாட்டுத்துறை, மின்வாரியம் போன்ற தொழில்களும் அமையலாம்.

விரை வீக்கம், மாதவிடாய்க் கோளாறுகள், ஆண் பெண் குறிகள் சம்பந்தமான நோய்கள் பால் வினை நோய்கள் முதலியவை ஏற்படும்.

3, 5, 10, 18, 40 ஆகிய வயதுகளில் கண்ட தோஷம், சுரம், அக்கினி மாந்தம், ஜன்னி முதலியவற்றால் பீடை ஏற்படலாம். லக்னாதிபதி அஷ்டமாதிபதி ஆயுள்காரகர் ஆகியவர்கள் வலுவானால் அவர்களுக்கு ஆயுள் நலம் உண்டு.

இந்த லக்னத்திற்கு முழுயோகம் தருபவர்கள் சூரியன் சந்திரன்

சாதாரணயோகம் தருபவர்

சந்திரன் செவ்வாய்

சந்திரன் சனி

சந்திரன் சுக்கிரன்

சந்திரன் குரு

சுபம் அசுபமற்ற பயனற்றவை

குருவும் செவ்வாய்

குரு சுக்கிரன்

குரு சனி

இந்த லக்னத்திற்கு

சூரியன் பத்தாமதி - காரகன், நன்மை செய்பவன்

சந்திரன் - பாக்யாதிபதி - காரகன்

செவ்வாய் - லக்ன 6ம் அதிபதி - காரகன்

புதன் - அஷ்டம் - 11ம் அதிபன் - அசுபன் பாபி

குரு - தன பஞ்சமாதிபதி - பொதுவாக சுபன்

சுக்கிரன் 7, 12க்குடையவன் பிரபலகாரகன் அதிகம் நன்மை செய்பவன்

சனி - 3, 4க்குடையவன் அசுபன்

மற்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைப்படி

புதன், சுக்கிரன், செவ்வாய் இவர்கள் பாபர்

குரு சந்திரன் இவர்கள் சுபர்

கிரக சேர்க்கையால் பலன் - சூரியன் சந்திரன் வலுத்த யோகம் இருவரும் யோகக்காரகர்

பாதகன் சந்திரன் - யோக காரகனாயினும் யோகத்தை உரிய சமயத்தில் தருவான். ஆனால் பாதகமும் ஏற்படுத்துவான்.

மாரகன் - சுக்ரன் குரு இவர்கள் மாரகர்.

**குறிப்பு:** எட்டுக்குடையவன் என்ற வகையிலும் 11க்குடையவன் ஆனதாலும் புதன் பாபி. ஸ்திர ராசியானதால் 9க்குடைய சந்திரன் பாபி. 2க்குடைய வகையில் குருவும், 7க்குடையவன் என்ற வகையில் சுக்ரனும் மாரகன். முன்னால் சொன்ன 77 அல்லது 90வது வயதில் மார்கழி மாதம் கிருஷ்ணபக்ஷ பஞ்சமி, ஞாயிற்றுக்கிழமை கூடிய சுபதினத்தில் நள்ளிரவில் இவர் உயிர் பிரியலாம். இவர்களுக்கு அதிர்ஷ்ட நாள், வியாழன், திங்கள் மற்றும் வெள்ளி.

அதிர்ஷ்ட எண்கள் - 9, 6, 3

அதிர்ஷ்ட நிறம் - ரத்தச் சிவப்பு, மஞ்சை, மஞ்சள் சாம்பல் நிறமும் செல்லும்

அதிர்ஷ்ட ரத்தினம் - பவளம்

## அத்தியாயம் - 24

## அனுஷம் நட்சத்திரம்

இது 17வது நட்சத்திரம். ராசி மண்டலத்தில் 213 பாகை 40 கலைவரை பரவியுள்ளது.

| | | |
|---|---|---|
| தமிழ்பெயர் | - | அனுடம் |
| வடமொழிப்பெயர் | - | அனுராதா, அனுஷம் |
| அரபுப் பெயர் | - | (ALIKIL) அல் இக்லில் |
| கிரேக்கப்பெயர் | - | ஸ்கார்ப்பியோனிஸ் |
| சீனப்பெயர் | - | பேங் (FANG) |

அனுராதா என்றால் வெற்றி என்று பொருள். இது 4 நட்சத்திரங்களைக் கொண்டது. இது மலர்ந்த தாமரை மலர் போன்று அல்லது குடை போன்ற உருவம் உள்ளது.

இதன் அதிதேவதை 12 ஆதித்தர்களுள் ஒருவராகிய மித்திரா (மித்திரன்) என்பதாம். இவன் முளை திசுக்கள், நார்ப்பொருள் (முளையின் முதலியவற்றைக் குறிக்கும்.)

***மரண கண்டிகை 1500 சுவடி எண் 1500 கூறும் அனுஷ நட்சத்திரப் பலன்***

**கார்பரி கழுத வண்ணன் கடுஞ்சொற்கள் பேச வல்லான்**
**சீர்பெறச் செய்ய வல்லான் சேர்ந்தவர்க கொன்று மீயான்**
**தாரமாய் இருக்கும் சால துக்கமே பேச வல்லான்**
**ஆர்வமே நேச மெங்கும் அனுஷநாள் தோன்றினானே. 154**

(இ-ள்.) அனுஷ நாளில் பிறந்தவன் கார்கால மேகம் மற்றும் கழுகு மரம் இலை ஓலை போன்ற கருப்பு நிறமுள்ளவன். பேச்சு எப்பொழுதும் கடுமையாகவே இருக்கும். எந்த செயலையும் திருத்தமாகச் செய்வான்.

தன்னை அண்டியவர்களுக்கு இம்மியளவும் கொடுக்க மாட்டான். எல்லோரையும் விட்டு விலகியே தனியாக இருப்பான். எப்பொழுதும் தன் துன்பத்தையே பெரியதாகப் பேசிக் கொண்டிருப்பான். இவன் தான் பிறந்த தேசத்தை எந்த பகுதியையும் ஆர்வத்துடன் நேசிப்பவன். இவனே அனுஷ நட்சத்திரத்தில் பிறந்தவனாவான்.

இன்னாருக்குத் தெய்வம் நாராயணன் (சுவடி) சூரியன் (மற்றவை) பூதம் வாயு - சாதி, பிராமணன் - கோத்திரம் அகஸ்த்தியன். யோனி பெண் மான் - பட்சி சக்ரவாகப்புள் - விருட்சம் மகிழ மரம் - தெய்வ கணம் - யோனி, பிராமணி - செவ்வாய்க்கிழமை ஜன்ம வாரம்.

இந்நாளில் வருடம் பிறக்கில் விலை ஏறும். கார்த்திகை மாதம் சூனியம். இந்நாளில் 14 நாழிகைக்குமேல் 4 நாழிகை விஷம். இது பெண் நாள். உருவம் ஒரு முளையில் முளைத்த (மூப்பனை) மூன்று பனை மரம் போன்றிருக்கும். இதில் வெதுப்பு சுரம் தோன்றில் 9 நாளில் பொறுக்கும். (தீரும்) தீராத போது (பொறாத போதும்) நெய்யும் கருப்பஞ்சாறும் ஓமம் பண்ணுவது பஞ்சவர்ணச் சோறும் ரத்தமும் (குங்குமச் சென்னீரும்) பலி இடவும் 3 நாளில் தீரும்.

ஞாயிறு கூடில் மரணயோகம். திங்கள் கூடில் விஷயோகம். சிரமம் காணும்.

இதில் பிறந்தவன் கண்ணழகன். கண் செவ்வரி படர்ந்திருக்கும். பிராமணன். தாய் தந்தை, தபசிகள் வித்துவான்கள் இவர்களுக்கு நல்லவன். தன்னை அண்டினவர்களிடம் இரக்கமுள்ளவன். பெண் சாதி (மூலம்) விருத்தியுள்ளவன்.

இவனுக்கு மூக்கு நுனி உயர்ந்திருக்கும். புத்திசாலி கோபமுடையவன். வலது புறம் கருப்பு மச்சம் உண்டு. தயிருண்டு வழிச்செல்வது (பயணம்) நல்லது

### தமிழ் சாதகாலங்காரம் கூறும் அனுஷப் பலன்

ஈனமில்லா நற்குண வான் தாம்பூலம் பிரியன்
எவரெங்கும் புகழ்சது ரன் இனிய பக்தியுளனாம்
நானில மெலாம் துதிக்கும் நீதிமான் தூயன்
நயனங்கள் சிவந்திருக்கும் நராதிபன்சன் மானி
மானையார்க் கினியன் மயிரழகன் மார்பகலன்
மாதாவை தந்தை தனை மகிழ்ந்து இரட்சித்திடுவான்
ஆனைபோல வேகமுளன் நற்சொல்லன் நல்லன்
ஐஸ்வரிய வான் கோபி ஆம் அனுடத் தானே! 155

*(இ-ள்.) அனுஷ நட்சத்திரத்தில் பிறந்தவன் எந்த குற்றமும் தாழ்ச்சியும் இல்லாதவன். நற்குணவான். தாம்பூலம் போடுவதில் பிரியன். எல்லாரும் புகழும் படியான சாமார்த்தியமுடையவன். இனியவன். பக்தியுள்ளவன். உலகமெலாம் புகழும் நீதிமான். தூய்மையுடையவன். இவன் கண்கள் சிவந்திருப்பவன். அரசனாகவும் இருப்பவன். பிறரால் சன்மானம் பண்ணப்படுபவன். மான் போன்ற மென்மைத் தன்மையுடைய பெண்களுக்கு இனியவன். அவர்கள் நட்புள்ளவன். இவன் தலைமயிர் சுருண்டு அழகாக இருக்கும். அகலமான மார்புடையவன். தாய் தந்தையை மகிழ்ந்து பாதுகாத்துப் போற்றும் குணமுடையவன். யானையைப் போல் வேகமாக நடப்பவன். நல்ல இனிய சொற்களே பேசுபவன். நல்ல சத்குணமுள்ளவன். நல்ல செல்வம் உள்ளவன். கோபம் உள்ளவன் என்பதாம்.*

### யவன ஜாதகம்

*அவன் ராஜ காரியத்தில் பற்றுள்ளவன். வெளிப் பிரதேசத்தில் (FOREIGN) வசிப்பவன். பெண்களிடத்தில் அதிக இச்சையுள்ளவன். நல்ல வடிவழகன். பாவங்கள் நசிக்கக் கூடிய நல்ல பரிகார காரியங்களைச் செய்யக் கூடியவன். அனுஷ நட்சத்திரத்தில் பிறந்தவன் என்க.*

### பிருஹத் சாதகம்

*அனுஷ நட்சத்திரத்தில் பிறந்தவன் பணக்காரன். பரதேசவாசி, பசி பொறுக்காதவன், சதா ஏதாவது காரணம் பற்றி அலைந்து கொண்டிருப்பவன் என்பதாம்.*

**பெண்கள்**

இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண்கள் பற்றி வடமொழி ஸ்திரீ ஜாதகம்

அனுஷ நட்சத்திரத்தில் பிறந்த பெண் நிறைய தோழிகள் உள்ளவள். கர்வமில்லாதவள். எப்பொழுதும் சந்தோஷமாக இருப்பவள். நல்ல பணம் காசு உள்ளவள். நல்ல ஆபரணங்கள் அணிந்தவள், பெரிய மனிதர்களிடமும் தன் கணவனிடமும் பக்தி பாசம் அன்பும் மரியாதையும் உள்ளவள்.

வேறு நூல்

நிறைய உண்பவள். ஊன் உண்பதில் பிரியமுள்ளவள். பேராசையுடையவள். மதுவிலும் ஆசையுள்ளவள். பிற புருஷரிடத்தில் பற்றுள்ளவள் என்பதாம் (வடமொழி வேறு நூல் மாறான கருத்துக்கள் சொல்வது இந்த நட்சத்திரத்திற்கு அவ்வளவாக பொருந்தாது என்றுதான் கொள்ள வேண்டும்.)

**சங்கராச்சாரியார் மதன நூல்**

இவள் தெய்வதத்துவ லக்ஷணம் உள்ளவள்.

**முகமது கமலம் போலும் மூக்கு நீண்டுயர்ந்த கண்ணாள்**
**மிகவளர்ந் திருக்கும் கொங்கை விளம்புறிற் கோங்கு போலும்**
**சுகமணம் பகர வேண்டும் சுந்தரம் உடையளாகும்**
**சுகமதிழ்ந்த திருக்கும் அன்பாய் அனுஷ நாள் பிறந்துளாளே. 156**

(இ-ள்.) அனுஷ நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணின் முகம் கமலம் போன்று அழகாக இருக்கும். (ஆணுக்கு மிகவும் இன்பம் செய்வதான) இவள் கொங்கைகள் கோங்கு அரும்பு போல உருவில் மிகவளர்ந்து உருண்டு திரண்டு அழகாக அமையப் பெற்றவள். இவள் உடலில் மனதுக்கு இதமளிக்கும் ஒரு சுகந்தமணம் வாசனை வீசும்.

மொத்தத்தில் இவள் பெண்களிலேயே மிகவும் சுத்தமானவள். அதாவது அழகானவள்.

## இந்த நட்சத்திரம் பற்றிய பிற நூல்கள் செய்திகள்

அனுஷமும் கேட்டையும் கவிழ்ந்த தாமரை அல்லது குடை போன்றிருக்கும் என்பர். இந்த நாள் வெள்ளை நிற ஆதிக்கம் கொண்டது. இது மென்மையானது. ஆதலால் ம்ருதுதாரா எனப்படும். விருச்சிக ராசி இந்திர சந்திர மண்டலம் எனப்படும். சந்திரன் இங்கு நீசம் என்றாலும் ராசியின் உயர்வு சந்திரனுக்கு ஓரளவு வலிமை தரக்கூடியதே. அனுஷ நட்சத்திரத்தின் எழுத்து எழுத்துக்கெல்லாம் முதலெழுத்தான வேதம் குறள் இரண்டாலும் போற்றப்படும். பிரணவத்தின் முதலெழுத்தான அ என்ற எழுத்தே ஆகும். மற்ற நூல்களின் கருத்துப்படி இதன் பறவை கிளி, மரம் பலா எனப்படும். இந்த நட்சத்திரத்தில் தான் நந்தனார் பிறந்தார் என்று கூறுவர்.

பெயர் சூட்டல்

வாகன மேறல், புதுமனை புகுதல்

முடிகட்டல், விதை விதைத்தல், மாடு வாங்கல்

வியாதியஸ்தர் குளிக்க முதலியவற்றிற்கு ஏற்ற நாள்

ஜுலை மாதம் முன்னிரவில் இந்த நட்சத்திரத்தை காண முடியும்.

அனுஷ நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பூஜ்யர்கள் என்று அழைக்கப்படுவர். தெய்வீகம் அற்றவர். பணிவும் உயர்குணமும் உள்ளவர்கள். இவர்கள் இப்படி இருந்தும் பிறர் செய்த தீமையை மறக்காமல் பதிலடியும் கொடுப்பார்கள். பிறர் செய்த நன்றியையும் மறக்க மாட்டார்கள். அன்னதானம் செய்பவர்கள். அனுஷத்தில் பிறப்பதே ஒரு ராஜயோகம்தான். இது அஷ்ட மங்கலங்களுக்கும் உகந்தநாள்.

இவர்களுக்கு 64 வயதில் நோய் காணலாம் . எண்பது வயது வரை தீர்க்காயுள் உண்டு.

நட்சத்திரம் 12

இது 6 நட்சத்திரங்களைக் கொண்டது என்று கூறுவர். சக்ராயுதம் போன்ற உருவமும் ஏற்கும். பக்ஷி பரபுஷ்ட காகம் பிறரால் போஷிக்கப்படும் காக்கை. கொள்ளினால் செய்த பட்சணம் உண்டு யாத்திரை செய்ய நன்று என்பர்.

ருதுசங்கமனம், சீமந்தம், அன்ன பிராசனம் சிரார்த்தம் முதலியவற்றுக்கும் நல்லது. வெள்ளி, ஆனந்த யோகம் 3வது பாதம் தினமிருத்யு அனுஷம் நாளில் தனுர் லக்னத்தின் செவ்வாய் அம்சத்தில் (முதல் நவாம்சம்) தானியம் களஞ்சியத்தில் சேகரிக்க நன்று. இந்த நாளில் நடக்கும் கல்யாணப் பந்தலிலிருந்து பூமி மண் எடுத்து பயிரிட நல்ல விளைச்சல். இந்த நாளில் வழக்காட வெற்றி. மேகம் காந்தள் மலர் போல் தோன்றினால் 3 நாளில் மழை பெய்யும் மித்ரன்ய சர்விணிருக்கே என்பது பூஜை, மந்திரம்.

குங்குமம், சந்தனம் சேர்த்து பூஜை சந்தன தூபம். சூரண கந்தம் (வாசனைப் பொடி) ஹோம திரவியம். சாவித்திரி மந்திரத்தால் 108 தடவை ஹோமம், மித்ர தேவதைக்காக நெய், பயறு, பாயசம், உளுந்தைச் சேர்த்து பலி நிவேதனம் 8 நாள் முதல் 15 நாளைக்குள் அரிஷ்ட நிவாரணம்.

***அனுஷ நட்சத்திர பாத பலன்***

பதமுளன் நீதி இங்கிதை மறிவான்
பண்புறு சத்திய வானாம்
பகரு மாசரன் மந்திர சீலன்
பற்றிய அனுஷத்தின் முதற்கால்
இதமுளபுல்லாங் குழலினில் பிரியன்
இசைந்த வாய் சாலனாம் புத்தி
எய்திய சிறப்பன் மானி காமியனாம்
இருபதப் பொருளென உரைப்பர்

விதமுள புத்திமான் சவுந்தரியன்
　　மென்குர லோசையன் எழுதும்
வித்தை சாதுரியன் எடுப்புளா னென்றே
　　விளம்புமுன் மூன்றாம் பதமதற்கே
அதம் செயும் விஷவாக் கன்பர் துரோகி
　　நண்ணிய தமையர்க ளுள்ளான்
அன்புறு மோசை நாணமு முடையான்
　　நவில் சிரங்குடை யான் நான்கறியே. 157

அனுஷம் முதற் காலில் பிறந்தவன் முன்பின் வரும் கருமங்களை முன்கூட்டி அறிபவன். தராதரம் தெரிந்தவன். செம்மையான தவறாத சத்தியவாக்குடையவன் ஆவான்.

இரண்டாம் காலிற் பிறந்தவன் இனிய நாதமுள்ள புல்லாங்குழல் முதலிய இன்னிசைக் கருவிகளை இசைக்கும் திறமையும், பிரியமும் உள்ளவன். இன்சொல் பேசுபவன், படபடவெனப் பேசுபவன். கௌரவமுடையவன். தரக் குறைவான காரியங்களில் ஈடுபடாதவன். ஸ்திரீகள் சுகத்தை மிகுதியும் அனுபவிப்பவன் என்றும் சொல்வர்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் பற்பல ஆலோசனைகள் செய்யும் சொல்லும் புத்திசாலி. ரூபலாவண்யம் மற்றும் தேஜஸ் உள்ளவன். தான் பேசும் போது மெதுவாக தாழ்ந்த குரலில் பேசுபவன். கல்வியில் வல்லவன். சில சமயம் எடுத்தெறிந்து பேசுபவனுமாக இருப்பான் என்றும் கூறுவர்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன் விருப்பமில்லாத விஷவாக்குடையவன். தன் சினேகிதர் முதலியோரை மோசம் பண்ணுபவன். தனக்கு மூத்த சகோதரர்கள் உள்ளவன். அன்னியர்களையும் மற்றுமுள்ளவர்களையும் வஞ்சிப்பவன். இனியதொனி உடையவன். உடலில் சொறி சிரங்குள்ளவனும் ஆவான் என்றுணர வேண்டும் என்பர்.

### ஜாதக சார தீபம் சொல்லும் நட்சத்திரப் பாத பலன்

| | | |
|---|---|---|
| முதல் பாதம் | - | தீவிர புத்தி செயல் உள்ளவன் |
| இரண்டாம் பாதம் | - | தரும சிந்தனை உள்ளவன் |
| மூன்றாம் பாதம் | - | தீர்க்காயுள் உள்ளவன் |
| நான்காம் பாதம் | - | நபும்சகயன் அதாவது பேடி, அலி |

## மரண கண்டிகை சுவடி 1500 கூறும் அனுஷ நட்சத்திரப் பாத வாரி பலன்

### அனுஷ முதற்பாதம்

தலையது கரண்டி யாகும் தன்மனம் பெரிய னாகும்
மலையென வளர்ந்த தோளான் வடிவுடன் சிறந்த மேனி
கலைபல நன்று கற்கும் கடிமதக் காளை யாகும்
மலை தரும் வல்ல பத்தன் மதியினங் கிஷத்தி னானே! 158

*(சுவடி எண் 1500)*

(இ-ள்.) அனுஷ நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவன் தலை பெரிதாக இருக்கும். இவன் விரிந்த தாராள மனப்பான்மையுடையவன். மலைபோல வளர்ந்த உயர்ந்த தோள்களுள்ளவன். இவன் மேனி சிவந்த நிறம். வடிவமும் திட்டமாக அழகாகவும் இருக்கும். பலகலைகளையும் கற்றுத் தேர்ச்சி அடைவான். இவன் மதங்கொண்ட முரட்டுக் காளை போல வலுவும் உள்ளவன். யாரும் மலைத்துத் திகைக்கும் அளவுக்கு இவன் எல்லா வல்லபமும், திறமை அறிவு எல்லாம் உள்ளவன். இவனே மதியான சந்திரனங்கிஷத்தில் பிறந்தவன் ஆவான் என்பதாம்.

**இதற்குக் காலச் சக்கரத் தசை**

| | | |
|---|---|---|
| மீனவியாழன் | - 10 வருடம் | |
| மேஷச் செவ்வாய் | - 7 | ,, |
| ரிஷப வெள்ளி | - 18 | ,, |
| மிதுன புதன் | - 9 | ,, |
| சிங்க ஆதித்தன் | - 5 | ,, |
| கற்கடகச் சந்திரன் | - 21 | ,, |
| கன்னி வெள்ளி | - 9 | ,, |
| துலாம் வெள்ளி | - 16 | ,, |
| விருச்சிகச் செவ்வாய் | - 7 | ,, |
| ஆக வயது | - 100 | ,, |

### அனுஷம் இரண்டாம் பாதம்

மேதையா னனங்கள் சால வேந்தரால் விருப்ப முண்டாம்
மாதுமால் உருவுமாகும் மனம்பிறர்க் கறிய வொண்ணான்
தாது சேர் குழலி னாள்மேல் தனம்பொருள் சார நில்லான்
காதலு முடைய னாகும் கணியனங் கிஷத்தி னானே. 159

(சுவடி எண் 1500)

(இ-ள்.) அனுஷ நட்சத்திரம் இரண்டாம் காலில் பிறந்தவன் அறிவாளி. மன்மதன் போன்ற வடிவழகன். அரசர்களால் (மேல் பதவியில் உள்ளவர்களால்) விரும்பப்படுவான். (செல்வாக்குடையவன்) இலக்குமியை மார்பில் வைத்த திருமாலைப் போன்ற கார்மேக நிறமுள்ள உருவமுள்ளவன். இவன் ஆழமான மனதை யாராலும் அறிந்து கொள்ள முடியாது. மணம் வீசும் கூந்தலுடைய அழகிய தன் மனைவியை பணம், பொருள் இவற்றிற்காக எதிர்பார்க்க மாட்டான். ஆனால் அவள்மேல் அதிக பாசமுள்ளவன். இவனே கணக்கனான புதன் அங்கிஷத்தில் பிறந்தவன் ஆவான் என்பதாம்.

**இதற்குக் காலச் சக்ரதசை**

| | |
|---|---|
| மிதுன புதன் | - 9 வருடம் |
| சிங்க ஆதித்தன் | - 5 ,, |
| . கற்கடகச்சந்திரன் | - 21 ,, |
| கன்னி புதன் | - 9 ,, |
| துலாம் வெள்ளி | - 16 ,, |
| விருச்சிகச் செவ்வாய் | - 7 ,, |
| மீன வியாழன் | - 10 ,, |
| கும்பச் சனி | - 4 ,, |
| மகரச் சனி | - 4 ,, |
| ஆக வயது | - 85 ,, |

**அனுஷ நட்சத்திரம் மூன்றாம் பாதம்**

**தெள்ளியன் செய்ய நல்லன் சேயிழை யாரைப் பேணும்**
**ஒள்ளிய கண்ணி னாள்மேல் ஒண் பொருள் சாரநில்லான்**
**பள்ளியும் பலவும் கற்கும் பாக்கியம் உடையன் ஆகும்**
**வெள்ளியங் கிஷத்தில் வந்த விருப்புடையக் காளை தானே! 160**

**(சுவடி எண் 1500)**

*(இ-ள்.) அனுஷ நக்ஷத்திரம் மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் தெளிவான சிந்தை உள்ளவன். நேர்மையானவன். பெண்களை (தான் விரும்பும் பெண்களைத் தன் சுகத்திற்காக) காப்பாற்றி ஆதரவாக இருப்பான். ஒளி பொருந்திய கண்களையுடைய தன் அழகான மனைவியிடம் பொன் பொருள் எதையும் எதிர் பார்க்க மாட்டான். பலகல்விச் சாலைகளில் பயின்று பெரிய படிப்புகளைப் பெற்றவனாவான். இவன் மிகவும் அதிர்ஷ்ட சாலியாகவும் இருப்பான். இவனே சுக்கிரன் அங்கிஷத்தில் பிறந்தவனாவான் என்பதாம்.*

**இதற்குக் கால சக்கர தசை**

| | | | |
|---|---|---|---|
| மிதுன புதன் | - | 9 வருடம் | |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| கற்கடகச் சந்திரன் | - | 21 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| துலாம் வெள்ளி | - | 16 | ,, |
| விருச்சிகச் செவ்வாய் | - | 7 | ,, |
| மீன வியாழன் | - | 10 | ,, |
| மகரச் சனி | - | 4 | ,, |
| கும்பச் சனி | - | 4 | ,, |
| ஆக வயது | - | 85 | ,, |

**அனுஷ நக்ஷத்திரம் நான்காம் பாதம்**

குறுகிய உருவ மெய்யன் குதலைசேய் குதலை வாயன்
மறுகிய மனத்தன் பெண்மேல் மனமது சாரநில்லான்
முறுகிய கொடுமை செய்யும் முதுகினில் சுழியுண்டென்பர்
செறி தரும் கூந்தல் பேணும் சேயினங் கிஷத்தினானே. 161
(சுவடி எண் 1500)

(இ-ள்.) இவன் குறுகிய மனப்பான்மையுடையவன் புறங்கூறுபவன். உளறு வாயன். மனம் எப்பொழுதும் மாறான விஷயங்களையே எண்ணும் துர்க்குனி - பெண்ணின் வயப்பட மாட்டான். எப்பொழுதும் புறம்பான கொடுமையான காரியங்களையே செய்பவன். இவன் முதுகினில் சுழி இருக்கும். செறிந்த கூந்தல் உடைய தன் மனைவியை மட்டும் அன்புடன் காத்துக்கொள்ளும் குணமுடையவன். இவனே செவ்வாய் அங்கிஷத்தில் பிறந்தவனாவான்.

**இதற்குரிய கால சக்கரத் தசை**

| | | | |
|---|---|---|---|
| தனுசு வியாழன் | - | 10 | வருடம் |
| விருச்சிகச்செவ்வாய் | - | 7 | ,, |
| துலாம் வெள்ளி | - | 16 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| சிங்க மாதித்தன் | - | 5 | ,, |
| கடகச் சந்திரன் | - | 21 | ,, |
| மிதுன புதன் | - | 9 | ,, |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| மேஷச் செவ்வாய் | - | 7 | ,, |
| ஆக வயது | | 100 | ,, |

**இதற்குரிய விம் சோத்தரி தசை வருமாறு**

| | | | |
|---|---|---|---|
| சனி | - | 19 | வருஷம் |
| புதன் | - | 17 | ,, |
| கேது | - | 7 | ,, |
| சுக்கிரன் | - | 20 | ,, |
| சூரியன் | - | 6 | ,, |
| சந்திரன் | - | 10 | ,, |
| செவ்வாய் | - | 7 | ,, |
| ராகு | - | 18 | ,, |
| குரு | - | 16 | ,, |
| ஆக வயது | | 120 | ,, |

**இவனுக்குத் தோன்றும் நோய் கண்டம் முதலியன**

இவன் பிறந்த ஆண்டில் பிள்ளைப் பிணியாலும் சனிதோஷத்தாலும் நோய்க்கண்டம், 4 வயதில் சிலந்தியாலும், 7 வயதில் வெதுப்பும் உதர நோயும், 13 வயதில் 4 கால் மிருகத்தால், 17 வயதில் விஷத்தால் துன்பம் நீரால் கண்டம், 22 வயதில் பெண்ணால் கஷ்டம் நோய், 28 வயதில் அரையாப்பால், சிலந்தி நோயால், 36 வயதில் சத்துருவால், 40 வயதில் வெதுப்பும் கண்ணோயும், 50 வயதில் மண்டை இடியால், 65 வயதில் வெதுப்பும், சோற்றுப்புண்ணால் (கான்சர் போன்றவை) 83 வயதில் வெதுப்பால் வயிற்று நோயால் கண்டம்.

இது தவறினால் 100 வயது சென்று வைகாசி மாதம் அமரபட்சத்து அஷ்டமியும் செவ்வாய்க்கிழமையும் கூடிய அனுஷ நட்சத்திரம் வந்த நாளில் 7 நாழிகை சென்று இவன் இறைவன் அடிசேர்வான்.

இவன் பிறந்தலக்னம்

| | |
|---|---|
| சூரியன் சாரமாகில் | - சேனாதிபதி |
| சந்திரன் உதய லக்ன சாரமாயின் | - தனவான் |
| செவ்வாய் உதய லக்ன சாரமாகில் | - ராஜா |
| புதன் உதய லக்ன சாரமாகில் | - கல்விமான் |
| குரு உதய லக்ன சாரமாகில் | - பிற தொழில்கள் |
| சுக்ரன் உதய லக்ன சாரமாகில் | - வேளாண்மை |
| சனி உதயமாகில் (லக்ன சாரம்) | - ஊனமுள்ளவன் |
| ராகு உதயமாகில் (லக்ன சாரம்) | - தோழன் |
| கேது உதயமாகில் (லக்ன சாரம்) | - குறைக்கால் முடவன் |

இதில்

| | | |
|---|---|---|
| முதற்கால் | - | மாமனுக்குத் தோஷம் |
| 2ம் கால் | - | நல்லது |

3ம் கால் - பாட்டிக்குத் தோஷம்

4ம் கால் - நல்லது. முதற்கால் பிதாவுக்கு அதிஷ்டம் என்றும் சொல்வார்.

இந்த நட்சத்திர மற்றும் பாத தோஷங்களுக்கு ஏகாதசி நாளில் சந்தியாகாலத்தில், மனைவி பிள்ளைகளை ஒதுக்கிவிட்டு தான் மட்டும் கோயிலில் சனிக்கோள் முன் முடியெள்ளைச் சொரிந்துத் தானம் பண்ணவும்.

## அனுஷ நட்சத்திரம்

## கர்ம விபாதம் வடமொழி நூல் சொல்லும் பூர்வ கர்ம பாப சாந்தி பரிஹார பலன்

அனுஷ நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம சாந்தி பரிகார முறை

**சிவபெருமான் சொல்லுகிறார்:**

மாயாபுரி என்ற நகரத்துக்கு சமீபத்தில் கல்யாணபுரி என்ற நகரம் உண்டு. அங்கு ஒரு பணக்கார வியாபாரி வசித்து வந்தான். கிரயவிக்கிரயம் மூலம் நிறைய சம்பாதித்தான். நிறைய தனம் சேர்க்கும் ஆசையில் சிறிதளவு கூட தானம் தருமம் செய்யாமல் இருந்தான். இவன் மனைவியோ மிகவும் மோசமானவள். விபசாரியாகவே வாழ்ந்து வந்தாள். இவளுக்கிரண்டு ஆண் பிள்ளைகள் உண்டாயினர். அந்த வியாபாரி அதிக தனம் குவித்தான். இரண்டு பிள்ளைகளில் ஒருவன் சூதாடியானான். மற்றவன் ஒரு பிராமணப் பெண்ணுடன் போகம் அனுபவித்து வந்தான். தகப்பன் ஆடுகள் விற்றும் நிறைய பணம் பண்ணினான். வைசியன் முதுமை அடைந்தான். இறந்தான்.

எமபடர்கள் இவனைப் பிடித்து நரகத்தில் தள்ளினார்கள். கொடும் நரக வேதனை அனுபவித்தான். இவன் புலியாகப் பிறந்தான். அதன் பின் மனிதப் பிறவி பெற்றான். போன பிறவியின் மனைவியே இவனுக்கு இந்த பிற்வியிலும் மனைவியாகப் பிறந்தாள். ஆனால் இருவரின்

பாபச் செயல்கள் காரணமாக இவர்களுக்குக் கொடிய நோய்கள் பற்றிக் கொண்டன. சந்ததியும் இல்லாமல் போயிற்று. பிறந்த குழந்தைகளும் இறந்து போயின. இதற்கு சாந்தி பரிஹாரம் வருமாறு.

இவன் தன் சொத்து முழுவதையும் தானம் பண்ண வேண்டும். உரிய உபாசனை செய்ய வேண்டும். ஹரிவம்ச புராணம் பாராயணம் பண்ண வேண்டும். அதன் பின் காயத்ரி மந்திரம் ஒரு லக்ஷம் முறை ஜபம் பண்ண வேண்டும். இதனால் இவன் பாபங்கள் நீங்கி இருவரும் உடல் நலம் பெற்று இவர்களுக்கு தீர்க்காயுள் உள்ள ஆண் பெண் குழந்தைகள் பிறப்பார்கள்.

## அனுஷ நட்சத்திரம் 2ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம சாந்தி பரிஹார முறைகள்

**சிவபெருமான் சொல்லுகிறார்:**

மகத தேசத்தில் ஒரு தச்சன் வசித்து வந்தான். மனைவி பெண் பிள்ளைகளுடன் பணம் படைத்தவனாகவும் இருந்தான். இவன் நடுவயதில் தரித்திரனானான். இதனால் ஒரு சன்யாசியிடம் 2000 பொன் கடன் வாங்கிக் கொண்டான். இவன் பணம் பூராவும் செலவழித்து விட்டான். சன்யாசிக்குத் திருப்பிக் கொடுக்க வில்லை. வயதாகி இறந்தும் போனான்.

இவன் இறந்ததும் இவன் மகன் ஒரு கபில நிறப் பசுவை அணிகலன் ஆடை முதலியவைகளுடன் அலங்கரித்துத் தானம் பண்ணினான். சாஸ்திரத்தில் சொல்லியபடி கயா சிரார்த்தம் முதலியவையும் செய்து முடித்தான்.

இதனால் இறந்தவன் ஒரு லட்சம் ஆண்டுகள் யக்ஷ லோகத்தில் சுகம் அனுபவித்தான். புண்ணியம் தீர்ந்தபின் குரங்காகப் பிறந்தான். அதன் பின் கரடியாகவும் பிறந்தான். அதன் பின் மனிதனாகப் பிறந்தான்.

போன பிறவியில் மரச் செதில்களை இழைத்துத் தள்ளியதால் இவன் உடலில் பல நோய்கள் வலிகள் உண்டாயின. போன ஜன்மத்தில் கடனை சன்யாசிக்குத் திருப்பித் தராததால் இவனுக்கு மகன் பிறந்தான். இவன் தினமும் சூதாடியும் வேசியர் நேசமும் போகமும் அனுபவித்து வந்தான். கடனைத் திருப்பித் தராததால் இவனுக்கு இப்படி துஷ்டப்பிள்ளை பிறந்தான். இவன் வேசி வீடே கதியாகக் கிடந்தான். இவன் நல்ல வாலிபப் பருவத்தில் இறந்தான்.

தகப்பனுக்கு மேற்கொண்டு பிள்ளைகள் இல்லை. இவன் மனைவி காகவந்தையையானாள். இதற்கு சாந்தி பரிஹாரம் சொல்லுவோம்.

தன் செல்வத்தின் 8 பாகத்தை புண்ணிய காரியங்களில் செலவழிக்க வேண்டும்.

அதன்பின் ஆக்ருஷ்ணேன என்ற சூரிய மந்திரத்தை ஜபம் பண்ண வேண்டும். இந்த மந்திரம் எல்லா ஆசைகளையும் நிறைவேற்றும். கஷ்டங்களையும் போக்கும். இது மோக்ஷமும் தரவல்லது. சூரியநாராயணன் வழிபாடு பண்ணுபவனுக்கு எதுவும் கிடைக்கும். இவனுக்கு எந்த பொருளும் அரிதாகாது. இவன் சிவபெருமானுக்கும் மிகவும் வேண்டியவன். சிவகணங்கள் முதலியன ரக்ஷிக்கின்றன.

இவன் ஒரு மூங்கில் பாத்திரம் சுற்றிலும் ரத்னங்கள் பதித்து 20 தோலா எடையுள்ள சூரிய மூர்த்தியை அதன் நிலையில் உருவாக்கி

ஓம் நம, சூர்யாய தேவீாய பத்ராய பந்ரரூபினே!
பூர்வ ஜம்னகருதம் சர்வம் மம பாபம வ்யபோஹது!!

என்ற மந்திரத்தை பாராயணம் செய்ய வேண்டும். இதை அந்த மூங்கில் பாத்திரத்துடன் சூரிய பிரதிமையை ஒரு உத்தமப் பிராமணனுக்குத் தானம் செய்ய வேண்டும். பட்டும் பொன்னும் அதனுடன் தானம் செய்ய வேண்டும். அதன் பின் ஞாயிற்றுக்கிழமைகளில் சப்தமியுடன் கூடிய நாளில் விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.

இதனால் இவன் பாவங்கள் தீர்ந்து மீண்டும் தீர்க்காயுள் உள்ள பிள்ளைகள் பிறக்கும். இவர்கள் நோயெல்லாம் தீர்ந்து சந்தோஷமாக வாழ்வார்கள்.

## அனுஷ நட்சத்திரத்தில் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வபுண்ய கர்மமும் சாந்தி பரிஹாரமும்

*சிவபெருமான் சொல்கிறார்*

சௌராஷ்ட்ர தேசத்தில் சுகமா என்ற ஊர் உண்டு. அங்கு தன் குலத்தொழிலை மறந்த பிராமணன் ஒருவன் இருந்தான். இவன் யானை, குதிரை, தேர் முதலியவற்றை வியாபாரம் பண்ணி வந்தான். ஒரு சமயம் அரசன் இறந்த சமயம் பார்த்து இவனே ஊரையே கொளுத்திவிட்டான். இதனால் அனேக மக்கள் பசுக்கள், பிராமண ஆண், பெண்கள் இறந்துவிட்டனர்.

பின் பலகாலம் சென்று இந்த அதம பிராமணன் இறந்து போனான். யம தூதர்கள் இவனைப்பற்றி கோர நரகத்தில் தள்ளினார்கள். நெடுங்காலம் நரகவேதனைக்குப்பின் இவன் யானையாகப் பிறந்தான். அதன் பின் ஆமையாகப் பிறந்தான். அதன் பின் ஒரு நல்ல குடும்பத்தில் மனிதனாகப் பிறந்தான். நிறைய பணம் செல்வம் இருந்தும் முன்ஜென்ம பாவத்தால் இப்பொழுது ஆண் குழந்தைகள் இல்லை. பெண்களே பிறந்தன. இவன் எப்பொழுதும் நோயாளியாகவே இருந்தான். இவன் மனைவிக்கு நோயும் காய்ச்சலும் மிகுந்தன. இதற்கு சாந்தி பரிஹாரம் வருமாறு.

முன் இவன் சொத்தில் 4ல் ஒரு பாகத்தை தானம் பண்ண வேண்டும். அதன் பின் மகர சங்கராந்தியின் போது நியமத்துடன் 7 நாட்கள் மனைவியுடன் (பிரயாகையில்) நீராட வேண்டும். அதன்பின் பூமிதானமும் சொர்ண தானமும் பண்ண வேண்டும். பாயாசம் முதலிய சுவை உணவுகளுடன் உத்தம பிராமணர்களுக்கு விருந்து படைக்க வேண்டும். தக்ஷிணையும் தரவேண்டும். பத்து நிறமுள்ள பசுவை அணிகலன் உடை அலங்காரத்துடன் தானம் பண்ண வேண்டும். அதன்பின் ஹரிவம்ச புராணம் பாராயணம்

பண்ண வேண்டும். இதனால் இவன் பாவம் நாசமாகிறது. அவனும் இவன் மனைவியும் நலம் பெறுவார்கள். இவர்களுக்கு தீர்க்காயுள் உள்ள குழந்தைகளும் பிறக்கும்.

## அனுஷ நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வகர்மமும் சாந்தி பரிஹாரமும்

சிவபெருமான் சொல்லுகிறார்

சுந்திரமான சௌராஷ்டிர தேசத்தில் ஒரு தெருப்பாடகன் இருந்தான். இவன் நல்ல கவிஞனாகவும் பாடகனாகவும், பாக்யசாலியாகவும், தன் கடமையே கண்ணாகவும் இருந்தான். இவன் மனைவி நல்ல அழகி. கணவனுக்கு சேவை செய்யும் உத்தமியாகவும் இருந்து வந்தாள். ஒரு நாள் ஒரு பிரம்மச்சாரி, பாடகன் வீட்டுக்கு வந்தான். இவன் பாடகன் வீட்டு வாசற்படியில் பட்டினி கிடந்தான். விடியற்காலை ஆனவுடன் பாடகன் வீட்டுப் பூனையின் 5 குட்டிகளையும் கொன்று விட்டான். தாய்ப் பூனையும் பட்டினி கிடந்து இறந்தது. வெகுகாலம் சென்று பாடகன் இறந்தான். அவன் மனைவி இவனுடன் உடன்கட்டை ஏறினாள். இவன் தன் மனைவியின் சதி தர்மத்தால் அவளுடன் சத்யலோகத்தில் தேவப் பெண்களுடன் சுகம் அனுபவித்தான். புண்யம் தீர்ந்தபின் மனிதனாகப் பிறந்தான். பணம் காசு இருந்தும் இவனுக்கு குழந்தைகள் பிறந்து அவை இறந்து விட்டன. இவன் மனைவியும் இவனும் பலவகை நோய்களால் அவதிப்பட்டனர். இப்பொழுது இதற்கு சாந்தி பரிகாரம் சொல்லப்படுகிறது.

முதலில் ஜாதவேதசே என்ற மந்திரத்தை ஒருலக்ஷம் முறை ஜபம் செய்விக்க வேண்டும். 60 தோலா எடையுள்ள அல்லது வெள்ளியிலான தாயுடன் கூடிய 5 பூனைக்குட்டிகள்

போல 6 உருவங்கள் செய்து அதற்கு ஆடை போர்த்தி அந்தணர் ஒருவருக்குத் தானம் பண்ண வேண்டும். சிகப்பு நிறமுள்ள பசுவையும் தானம் பண்ண வேண்டும். திங்கள்கிழமை, வியாழக்கிழமை மற்றும் அமாவாசை தினங்களில் பித்ரு பிண்டப்ரதானம் செய்ய வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை கூடிய சப்தமியில் தன் மனைவியுடன் விரதமிருக்க வேண்டும். இப்படிச் செய்வதால் இவர்கள் நோய்கள் எல்லாம் தீரும். அதன்பின் தீர்க்காயுள் உள்ள ஆண் பெண் சந்ததிகள் ஏற்படும். இவர்களும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்.

## பிற மதப்படி அனுஷம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்கள்

### பொதுப்பலன் - ஆண்கள்

#### உடல் அமைப்பு

பிரகாசமான கண்களையும் அழகிய வதனத்தையும் கொண்டவன். கிரக சேர்க்கைகள் கெடுதலாக அமைந்தவர்களுடைய கண்களில் கொடூரம் மின்னும்.

#### குணங்களும் பொதுவான நிகழ்ச்சிகளும்

வாழ்க்கையில் அனேக தடைகற்களை தாண்ட வேண்டி இருக்கும். தனக்கே உரியதான திறமையால் பெரும்பாலான கஷ்டங்களை, ஸிஸ்டமாடிக்காக கையாளுவான். இவன் முகத்தில் ஒரு விதமான சலிப்பும் பிரதி பலிக்கும். பல சமயங்களில் ஏற்படும் கஷ்டங்களும் பிரச்சினைகளுமே இவனது கவலையான இருண்ட முகத்தோற்றத்துக்குக் காரணம். குறிப்பாகக் கூற வேண்டுமானால், இவனுக்கு வாழ்க்கையில் மன அமைதி இருக்காது. சிறிய பிரச்சினைகள் கூட இவன் மனதைப் பாதித்து அதையே திரும்பத்திரும்ப யோசித்துக் கொண்டிருப்பான்.

சந்தர்ப்பம் கிடைக்கும்போது பழிவாங்கும் நினைப்பு இவன் மனதில் எப்போதும் குடிகொண்டிருக்கும். இவ்வளவு குறைபாடுகள் இருந்தாலும் கூட, இவன் கடின உழைப்பாளி. தன் முன் இருக்கும் வேலைகளை முடித்துத்தர எப்பவும் தயாராக இருப்பான். எது வந்தாலும் முன்னேறிச் செல் என்பதே இவன்லக்ஷியம். பல எதிர்மறையான விளைவுகளுக்குப் பிறகு கடைசியில் இவன் விருப்பப்பட்ட பலனை அடைவான்.

கடவுளை தீவிரமாக நம்புவான். இவன் எவரிடமும் நிரந்தரமான, நிலையான உறவோ, தொடர்போ வைத்திருக்க முடியாது. பிறர் உதவி கிடைக்காமலேயே வாழ்க்கை முழுவதையும் கழிப்பான். பிறரை சாராமலேயே வாழ்க்கையை கழிப்பான். பல கஷ்டங்கள் ஏற்பட்டாலும், தன் வெற்றியில் நம்பிக்கையும், தீமை அழிந்து நன்மை வெற்றி பெறும் என்ற நம்பிக்கையை கைவிடமாட்டான்.

**கல்வியும் - வருவாயும்**

பிஸினஸ் செய்தால் வெற்றி அடைய முடியும். உத்தியோகத்தில் இருந்தால் தன்னுடைய மேலதிகாரிகளை தன் கைக்குள் போட்டுக் கொள்ளும் தனித்திறமை இவனுக்கு உண்டு. இளம் வயதிலேயே, அதாவது 17, 18வது வயதிலேயே சம்பாதிக்க ஆரம்பித்து விடுவான். 17லிருந்து 48வது வயது வரை வாழ்க்கை, பிரச்சினைகள் நிறைந்ததாக இருக்கும். இந்தக் காலத்தில் சிற்சில நன்மைகளும் கிடைக்கும். ஆதாயங்களும் வெற்றிகளும் அவ்வப்போது கிடைக்கும். 48 வயதிற்குப் பிறகு வாழ்க்கை மிகப்பிரகாசமாக அமையும். இந்த காலகட்டத்தில்தான் பெரும்பாலான துயரங்களும் கஷ்டங்களும் விலகி வாழ்க்கையில் செட்டில் ஆகி இவன் விருப்பப்பட்டபடி எல்லாம் அமைந்து நன்றாக வாழ்வான். ஜாதகத்தில் சந்திரன் செவ்வாயுடன் கூடி இருந்தால் மருந்துகள் கெமிக்கல்ஸ் தொடர்புள்ள வியாபாரியாக அல்லது டாக்டராக ஆவான்.

**குடும்ப வாழ்க்கை**

எந்த சந்தர்ப்பத்திலும் உடன்பிறந்தவர்களிடமிருந்து ஆதாயமோ உதவியோ, நன்மைகளோ பெற முடியாது. தகப்பனாரிடமிருந்து கூட எந்த நன்மையும் பெற முடியாது. தகப்பனிடம் அடிக்கடி சண்டை சச்சரவுகள் கூட சில ஜாதகர்களுக்கு ஏற்படும். தாயிடம் இருந்து அன்பையும் பாசத்தையும் பெற முடியாத துர்பாக்கியசாலி. சாதாரண சொந்த ஊரிலிருந்து வெகு தூரத்தில் குடியேறி அங்கேயே செட்டில் ஆகி விடுவான். இவ்வளவு கெடு பலன்களை அனுபவித்தாலும்கூட, இவனுடைய திருமண வாழ்வு மிகவும் திருப்திகரமாக அமையும். மனைவி எல்லாவித நற்குணங்களும் நிரம்பப் பெற்றிருப்பாள். தன் வாழ்வின் பழைய காலங்களை நினைவு கூர்ந்து, தன் குழந்தைகளுக்கு அந்த மாதிரியான நிலைகள் வராதவாறு அன்பையும் பாசத்தையும் பொழிந்து அவர்களை நன்றாகக் கவனித்து வளர்ப்பான். அவர்கள் தேவையைப் பூர்த்தி செய்து, குழந்தைகளுக்கு ஒரு தகப்பனின் கடமைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்வான். அதனால் குழந்தைகளும் நல்ல பொஸிஷனுக்கு உயர்ந்து, இவனைவிட மேலான நிலையில் இருப்பார்கள்.

**ஆரோக்யம்**

பொதுவாக நல்ல ஆரோக்யம் உடையவன். ஆஸ்துமா, இருமல், ஜலதோஷம், பல்வியாதி, மலச்சிக்கல், தொண்டை கரகரப்பு போன்றவைகள் இவனுக்குத் தொற்றும். தன் உடலை சரிவர பேணிக்காக்க மாட்டான். வியாதிகளுக்கான மருந்துகளையும் ஒழுங்காகச் சாப்பிட மாட்டான். டோண்ட்கேர் மாஸ்டராக இருப்பான்.

**பெண்கள் - பொதுப்பலன்**

**உடல் தோற்றம்**

அப்பாவியான தோற்றத்தை முகம் காட்டும். அழகற்றவள் கூட ஆண்களைக் கவரும் படியான இடுப்பு

அழகைப் பெற்றவள். பொதுவாக, அனுஷ நட்சத்திரப் பெண்கள் வசீகரமான முக அழகு, உடல் அழகு, இடுப்பு அழகு எல்லாம் பெற்றவர்கள். ஆண்களின் கனவுலக அழகியாக இருப்பாள்.

**குணம்**

இவளுடைய வாழ்வில் தன்னைப்பற்றிய கர்வம், தன்னை உயர்வாக நினைத்தல், போன்றவற்றிற்கு இடமில்லை. வாழ்க்கையில் நாகரிகத்திற்கும் ஆடம்பரத்திற்கும் இடமளிக்காமல் எளிய வாழ்க்கை நடத்துவாள். தன்னலமில்லாத, எல்லாவற்றிலும் ஒத்துப்போகும் வசீகர குணமுடையவள். இவர்கள் சமூக, அரசியல் வாழ்க்கையில் பிரகாசிக்க முடியும். பெரியவர்களிடம் மரியாதை உள்ளவள். இவள் தான் தங்கள் தலைவி என்பது போல நண்பர்கள் கூட்டம் இவளைச் சூழ்ந்திருக்கும்.

**கல்வி - உத்தியோகம்**

சங்கீதத்திலும் இலகு கலைகளிலும் ஆர்வம் உள்ளவள். சங்கீதம் நாட்டியத்தில் அல்லது கல்வியில் உயர்ந்த பட்டத்தைப் பெறுவாள். சிலர் நாட்டியத்தைத் தொழிலாகவும் நடத்துவ ர்.

**குடும்ப வாழ்க்கை**

கணவனிடம் பக்தி உள்ளவள். ஆசார சீலத்துடன் மதக்கோட்பாடுகளை கடைபிடிப்பாள். தன் குழந்தைகளை வளர்ப்பதைப் பொறுத்தவரை ஒரு மாதிரி தாயாக இருப்பாள். தன் கணவனின் உறவினர்களிடம் இவள் காட்டும் பக்தி அவள் வாழ்க்கையை இன்னும் பரிமளிக்கச் செய்யும்.

**ஆரோக்கியம்**

மாதவிடாய் இடைவெளி, ஒழுங்கு முறையில் இருக்காது. கெட்ட ரத்தம் வெளியேறும் போது கடுமையான வலி ஏற்படும். ரத்த ஒழுக்கு அடிக்கடி ஏற்படும். சிலருக்கு மாதவிலக்குக் காலத்தில் முதலில் இரத்த ஒழுக்கு ஏற்பட்டபின், சில மணி நேரங்களோ அல்லது ஒன்றிரண்டு நாட்களோ கழித்துத் தான் தொடர்ந்து ரத்த வெளிப்பாடு உண்டாகும். அந்நாட்களில் மிகுந்த தலைவலியும், மூக்கு அடைப்பும் இருக்கும்.

## அனுஷ நட்சத்திரத்தில் இருந்த கிரகங்களை இதர கிரகங்கள் பார்த்த பலன்

### அனுஷத்தில் உள்ள சூரியனை சந்திரன் பார்த்த பலன்

பல பெண்களை இவன் ஆதரிக்க வேண்டி இருக்கும். ஷிப்பிங் அல்லது தண்ணீர் சம்பந்தப்பட்ட தொழிற்சாலையில் பணி புரிந்து சம்பாதிப்பான்.

### அனுஷத்தில் உள்ள சூரியனை செவ்வாய் பார்த்த பலன்

வீரம் உள்ளவன். சண்டையிடுவதில் நிபுணன்.

### அனுஷத்தில் உள்ள சூரியனை புதன் பார்த்த பலன்

கலைகளில் ஆர்வம் உள்ளவன். அதில் ஈடுபடுவதின் மூலம் சம்பாதனை ஏற்படும்.

### அனுஷத்தில் உள்ள சூரியனை குரு பார்த்த பலன்

அரசியல் வாதிகளிடம் நெருங்கிய தொடர்புள்ளவன்.அவர்களை தன் சுயலாப நோக்கத்திற்கு பயன் படுத்திக் கொள்வான்.

### அனுஷத்தில் உள்ள சூரியனை சுக்கிரன் பார்த்த பலன்

அரசியலில் நல்லதொரு ஸ்தானத்தைப் பெறுவான். சந்தோஷமான மணவாழ்க்கையை உடையவன்.

**அனுஷத்தில் உள்ள சூரியனை சனி பார்த்த பலன்**

இவன் ஒரு வஞ்சகன். ஜனங்களை ஏமாற்றுபவன். பாபகாரியங்களை செய்வான். அதற்கான தண்டனையும் அரசாங்கத்திடமிருந்து பெறுவான்.

**அனுஷத்தில் உள்ள சந்திரனை சூரியன் பார்த்த பலன்**

ஜாதகனுக்கு 2 தாய்களும் 2 தந்தைகளும் இருப்பர்.

**அனுஷத்தில் உள்ள சந்திரனை செவ்வாய் பார்த்த பலன்**

அரசனுக்குப் பிரியமானவனாக இருப்பான்.

**அனுஷத்தில் உள்ள சந்திரனை புதன் பார்த்த பலன்**

அதிர்ஷ்டமில்லாத கொடூரமான, கீழ்த்தரமான துன்பங்கள் நிறைந்த மனிதன்

**அனுஷத்தில் உள்ள சந்திரனை குரு பார்த்த பலன்**

ரோகமுள்ள மனிதன்

**அனுஷத்தில் உள்ள சந்திரனை சுக்கிரன் பார்த்த பலன்**

ஜாதகன் ஏழை

**அனுஷத்தில் உள்ள சந்திரனை சனி பார்த்த பலன்**

அரசியலில் உயர்ந்த இடத்தைப் பெறுவான். அல்லது இவனே மந்திரியாகவும் ஆகலாம்.

**அனுஷத்தில் உள்ள செவ்வாயை சூரியன் பார்த்த பலன்**

சாராதணமாக வெளியூரில் வசிப்பான். தன் மனைவிமேல் வெறுப்பு உடையவன்.

**அனுஷத்தில் உள்ள செவ்வாயை சந்திரன் பார்த்த பலன்**

தன் தாயை நேசிப்பவன். ஆனால் தந்தையை வெறுப்பவன்.

**அனுஷத்தில் உள்ள செவ்வாயை புதன் பார்த்த பலன்**

நல்ல குழந்தைகளை வரப்பிரசாதமாக பெற்றவன். அவர்கள் இவனைவிட புத்திசாலியாக இருப்பர்.

**அனுஷத்தில் உள்ள செவ்வாயை குரு பார்த்த பலன்**

குடும்பத்தினரிடம் அதிக பற்றுள்ளவனாக இருப்பான். உறவினர்களுக்கு உதவி செய்வான்.

**அனுஷத்தில் உள்ள செவ்வாயை** சுக்கிரன் பார்த்த பலன்

கவர்மெண்டில் மிக உயர்ந்த பொஸிஷனில் இருப்பான். புகழ் பெற்றவன்.

**அனுஷத்தில் உள்ள செவ்வாயை சனி பார்த்த பலன்**

அதிர்ஷ்டசாலி, எல்லா சம்பத்தும் பெற்றவன். ஆனால் கருமி.

**அனுஷத்தில் உள்ள புதனை சூரியன் பார்த்த பலன்**

சந்தோஷமாக திருமண வாழ்க்கையை அனுபவிப்பான். பெரிய தொழிற்சாலையில் தலைமைப் பதவியைப் பெறுவான்.

**அனுஷத்தில் உள்ள புதனை சந்திரன் பார்த்த பலன்**

கடின உழைப்பாளி. பணக்காரன். அரசாளும் வர்க்கத்தினருக்கு மிகவும் நெருக்கமானவன்.

**அனுஷத்தில் உள்ள புதனை செவ்வாய் பார்த்த பலன்**

எஞ்ஜினியராக இருப்பான். அரசாங்கத்திடமிருந்து பல நன்மைகளைப் பெறுவான்.

**அனுஷத்தில் உள்ள புதனை சுக்கிரன் பார்த்த பலன்**

வாழ்க்கையில் எல்லா அம்சங்களிலும் சந்தோஷத்தைப் பெறுவான். அதிர்ஷ்டசாலி, பணத்தை சேமிப்பான்.

**அனுஷத்தில் உள்ள புதனை சனி பார்த்த பலன்**

வாழ்க்கையில் பலவித இன்னல்களை அனுபவிப்பான். ஏழ்மையில் வாடுவான்.

**அனுஷத்தில் உள்ள குருவை சூரியன் பார்த்த பலன்**

ஆரோக்யம், செல்வம், ஆனந்தமான குடும்ப வாழ்க்கை எல்லாவற்றையும் அனுபவிப்பான்.

**அனுஷத்தில் உள்ள குருவை சந்திரன் பார்த்த பலன்**

பிறவிப் பணக்காரன்

**அனுஷத்தில் உள்ள குருவை செவ்வாய் பார்த்த பலன்**

நன்கு கல்வி கற்றவன். தைரியசாலி.

**அனுஷத்தில் உள்ள குருவை புதன் பார்த்த பலன்**

புண்ணியசாலி, எல்லா செல்வங்களும் பெற்றவன்.

**அனுஷத்தில் உள்ள குருவை சுக்கிரன் பார்த்த பலன்**

பெருந்தன்மையான பர்ஸனாலிடி உடையவன். அழகிய இளம் பெண்களின் பழக்கத்தில் ஆனந்தம் அடைபவன்.

**அனுஷத்தில் உள்ள குருவை சனி பார்த்த பலன்**

நல்ல ஞானமும் விவேகமும் உடைவன். எல்லா விஷயங்களிலும் திறமை பெற்றவன். குடும்ப வாழ்க்கை துயரம் நிறைந்ததாக இருக்கும்.

**அனுஷத்தில் உள்ள சுக்கிரனை சூரியன் பார்த்த பலன்**

நல்ல குணவதியான அழகிய மனைவியைப் பெற்றவன். நிலம், வீடு முதலியன வாங்குவான்.

**அனுஷத்தில் உள்ள சுக்கிரனை சந்திரன் பார்த்த பலன்**

குடும்பத்தில் ரத்தினம் போன்றவன். இதமாகப் பேசுவபன்.அதிகமாக (SEX)ல் ஈடுபடுவான்.

**அனுஷத்தில் உள்ள சுக்கிரனை செவ்வாய் பார்த்த பலன்**

துஷ்டன், சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவான்.

**அனுஷத்தில் உள்ள சுக்கிரனை புதன் பார்த்த பலன்**

அழகிய உருவம் உடையவன். அமைதியும் அடக்கமும் உடையவன்.

**அனுஷத்தில் உள்ள சுக்கிரனை குரு பார்த்த பலன்**

வாகனங்கள், வீடுகள் உடையவன். இளம் பெண்களை வசப்படுத்திக் கொள்வான். நல்லறிவு உள்ள குழந்தைகளைப் பெற்று சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவான்.

**அனுஷத்தில் உள்ள சுக்கிரனை சனி பார்த்த பலன்**

துஷ்டன், நாணயம் இல்லாத அயோக்கியன், கோர்ட்டு கேசுகளில் சம்பந்தப்படுவான்.

**அனுஷத்தில் உள்ள சனியை சூரியன் பார்த்த பலன்**

ஏழை, தகப்பனுடன் நல்ல உறவு இருக்காது. தந்தையிடமிருந்து எந்த நன்மையும் பெற மாட்டான்.

**அனுஷத்தில் உள்ள சனியை சந்திரன் பார்த்த பலன்**

அரசியல் வட்டாரத்தில் மிக உன்னத ஸ்தானத்தைப் பெறுவான். அல்லது ஒரு தொழிற்சாலையில் தலைமைப் பதவியில் இருப்பான்.

**அனுஷத்தில் உள்ள சனியை செவ்வாய் பார்த்த பலன்**

எல்லா விஷயங்களிலும் இவனது அணுகுமுறை பைத்தியக்காரத்தனமாய் இருக்கும். தன்னுடைய முதலாளிக்கு பிரச்சினைகளை உண்டாக்குவான்.

**அனுஷத்தில் உள்ள சனியை புதன் பார்த்த பலன்**

அநேக சாஸ்திரங்களையும், விஞ்ஞானங்களையும் நன்கு கற்றுணர்ந்தவன், செல்வந்தனாய் வாழ்வான்.

**அனுஷத்தில் உள்ள சனியை குரு பார்த்த பலன்**

வாழ்க்கையில் சகலவித வசதிகளையும் பெற்று வாழ்வான்.

**அனுஷத்தில் உள்ள சனியை சுக்கிரன் பார்த்த பலன்**

தன்னைவிட கீழினப் பெண்களுடன் சுகிப்பான்.

## அனுஷ நட்சத்திரத்தின் பாதங்களில் கிரகங்கள் இருந்த பலன்

**அனுஷம் 1ம் பாதத்தில் சூரியன் இருந்த பலன்**

நல்ல வீரம் உடையவன். இவனைப் பற்றி எல்லோருக்கும் உயர்ந்த அபிப்பிராயம் உண்டு. இவனை மரியாதையுடன் நடத்துவார்கள். எதிரிகளை அழிக்கும் வல்லமை பெற்றவன். எப்போதும் பெண்களுடன் களித்திருக்க ஏங்குவான். சாதாரணமாக இவர்கள் வெளிநாட்டில் செட்டில் ஆகி விடுவார்கள். அல்லது தன் ஊரிலிருந்து வெகுதூரத்தில் உள்ள இடத்தில் செட்டில் ஆவான்.

**அனுஷம் 1ம் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்**

பேச்சில் வல்லவன். மந்தமான நடையை உடையவன். மதிக்கத் தகுந்தவன். புகழும் அதிகார பலமும் உடையவன். இதில் ராகுவும் இருந்தால் வாயில் வியாதி உண்டாகும்.

**அனுஷம் 1ம் பாதத்தில் செவ்வாய் இருந்த பலன்**

அனுஷம் 1ல் செவ்வாயிருந்து, அவனுடன் சந்திரனும் இருந்து, லக்னமும் இதில் அமைந்தால் இந்த ஜாதகி எல்லாவிதமான சட்ட விரோத செயல்களையும் செய்வாள். இரக்கம் அன்பு என்பதே இவளிடம் இருக்காது. ஜாதகனானால் கடின மனத்தை உடையவன். சுத்தமாக இருக்க மாட்டான். பிடிவாதக்காரன், எல்லோருக்கும் தொல்லையும் கஷ்டமும் கொடுப்பான்.

**அனுஷம் 1ம் பாதத்தில் புதன் இருந்த பலன்**

வேடிக்கையும் விளையாட்டுமாகப் பேசிப் பழகுவான். தடைகளையும், தொல்லைகளையும் கடந்து

முன்னேறுவான். தன்னுடைய சொத்து செல்வத்தைப் பற்றி அக்கரை இல்லாதவன். இது இவனுடைய பெரும் குறை. அதனால் இவனது உறவினர் கூட்டம் இவன் செல்வத்தை அபகரித்துச் செல்வர். கடைசியில், தான் இழந்த சொத்துக்களை திரும்பப் பெற முயலும் போது அதில் தோல்வியே கிடைக்கும். சாதகமான தசாபுத்தி நடந்தால் சிறு காம்பன்ஸேஷன் கிடைக்கும்.

**அனுஷம் 1ம் பாதத்தில் குரு இருந்த பலன்**

அனுஷம் 1ல் குரு, சூரியன், லக்னம் மூன்றும் அமைந்தால் ஜாதகன் 22வது வயதில் மரணமடைவான்.

**அனுஷம் 1ம் பாதத்தில் சுக்கிரன் இருந்த பலன்**

இவனுக்குக் கல்யாணம் என்பது ஒரு விளையாட்டு, செக்ஸ் விளையாட்டில் கில்லாடி, வாழ்க்கையின் குறிக்கோள், செக்ஸ் ஒன்றுதான் என நினைப்பவன். பெண்ணாக இருந்தால் யூரினரி இன்பெக்ஷன் உண்டாகும்.

**அனுஷம் 1ம் பாதத்தில் சனி இருந்த பலன்**

நேர்மையற்ற, சட்டத்திற்குப் புறம்பான எல்லா செயல்களையும் செய்வான். திருடன் கொலைகாரனாகக்கூட இருப்பான். நடுத்தரமான உயரம் உடையவன். வீரதீரச் செயல்களில் நம்பிக்கை உடையவன். ஆதலால் மற்றவர்களுக்கு தொல்லைகள் ஏற்படும்.

**அனுஷம் 1ம் பாதத்தில் ராகு இருந்த பலன்**

இவனுடைய லக்னமும் இதில் அமைந்தால் பலவீனமான உடல் ஆரோக்யம் உடையவன். குடும்பப் பிரச்சினைகள் ஏராளமாக இருக்கும். தன்னுடைய தகுதிக்கும், படிப்புக்கும் பொருந்தாத சிறிய உத்தியோகம் அமையும்.

### அனுஷம் 1ம் பாதத்தில் கேது இருந்த பலன்

இவனுடன் சனியும், புதனும் சேர்ந்து இருந்தால் நன்கு கற்றறிந்தவன். உயர்ந்த பொஸிஷனைப் பெறுவான். சனியினுடைய சக்தியால் முன்னேற்றம் மெதுவாக ஏற்படும். மதகுருவாக அல்லது மதபிரச்சாரகனாக இருப்பான்

### அனுஷம் 2ம் பாதத்தில் சூரியன் இருந்த பலன்

முட்டாள். கொடூரமான பார்வை உடையவன். மிகவும் சலனப்பட்ட மனதுடையவன். பணக்காரனாகவும் படித்தவனாகவும் இருப்பான். இவனுடைய கர்வம் பல எதிரிகளைத் தேடித்தரும்.

### அனுஷம் 2ம் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்

இதில் சந்திரனும், உத்திரத்தில் சுக்கிரனும் இருந்தால் ஜாதகனை அரசாங்க உத்தியோகத்தில் பெரிய ராங்க் உள்ள ஆபீசராகச் செய்யும்.

### அனுஷம் 2ம் பாதத்தில் செவ்வாய் இருந்த பலன்

இதில் செவ்வாயுடன் சூரியனும் சந்திரனும் இருந்து லக்னம் ஆயில்யத்தில் இருந்தால் அந்தக் குழந்தை 9வது வயதிற்குள் மரித்துப் போகும்.

### அனுஷம் 2ம் பாதத்தில் புதன் இருந்த பலன்

இதில் குருவும், இருந்து பாபிகளின் பார்வை என்றால் அவனுக்கு புத்திர பாக்யம் இல்லை. சிலருக்கு ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் பிறக்கலாம். புதன் மட்டும் தனித்திருந்தால் சுமாரான பணக்காரன். சந்தோஷமாக இருப்பான். ஆனால் இவன் மனைவியிடம் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். சிறிதளவு தான் உயர்ந்தவன் என்ற எண்ணத்துடன் நடந்து கொண்டாலும் மனைவியால் சந்தோஷம் கெட்டு துயர வாழ்க்கையை நடத்த வேண்டி இருக்கும்.

**அனுஷம் 2ம் பாதத்தில் குரு இருந்த பலன்**

ராணுவ பாதுகாப்பு அல்லது போலீஸ் டிபார்ட்மெண்டில் சேர்ந்து எல்லாரையும்விட உயர்ந்தவனாக இருப்பான். செல்வமும் மகனும் பல நன்மைகளும் ஏராளமாகப் பெறுவான்.

**அனுஷம் 2ம் பாதத்தில் சுக்கிரன் இருந்த பலன்**

நிதி பற்றாக்குறை உடையவன். நடத்தை கெட்ட இழிவான பெண்களுடன் பழகுவான். அதனால் செக்ஸ் வியாதிகள் ஏற்பட்டு கஷ்டப்படுவான். கிரிமினல் வழக்குகள் இவன் மீது ஏற்படும். கைதும் செய்யப்படலாம்.

**அனுஷம் 2ம் பாதத்தில் சனி இருந்த பலன்**

ஜாதகன் ஒரு முட்டாள். அகலமான தோள்களும், வழுக்கைத் தலையும் உடையவன். சண்டை போடும் குணத்தால் உத்தியோகத்தில் முன்னேற்றம் தடைபடும். பிறருடைய சொத்தை தவறாக எடுத்து பயன்படுத்துவதால் (கையாடுவதால்) கோர்ட்டின் தண்டனைக்கு ஆட்பட நேரும்.

**அனுஷம் 2ம் பாதத்தில் ராகு இருந்த பலன்**

சுயநலவாதி. சந்திரனும் இங்கிருந்தால் ராஜயோக வாழ்க்கையை கொடுப்பான். வயதான காலத்தில் பெரும் பணக்காரனாவான். இந்த சேர்க்கையுடன் லக்னம் மகத்தில் இருந்தால் ஜாதகனுக்கு குழந்தைகளே பிறக்காது. அப்படித் தப்பிப் பிறந்தாலும் சிறுவயதிலேயே இறந்து விடும்.

**அனுஷம் 2ம் பாதத்தில் உள்ளகேது தரும் பலன்**

இதில் கேது இருப்பது நல்லதல்ல. சொத்து விவகாரங்கள் சம்பந்தமாக கோர்ட்டில் வழக்கு ஏற்படும். அதனால் பெருத்த நஷ்டமும் ஏற்படும். கீழ்த்தரமான பெண்களுடன் உடல் உறவு கொள்வான். எதிரிகள் முடிந்த அளவுக்கு இவனுக்கு கஷ்டத்தை உண்டாக்குவார்கள்.

**அனுஷம் 3ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்**

தன்னைவிட கீழ் நிலையில் உள்ளவர்களுடன் எந்தவித உறவும் வைத்துக் கொள்ளமாட்டான். இவன் ஏழை அல்லது நடுத்தர வகுப்பில் பிறந்திருந்தாலும், பெரிய குடும்பத்தில் பிறந்தவன் மாதிரி தன்னைக் காட்டிக்கொண்டு பகட்டும் ஆடம்பரமுமாக வாழ்வான்.

**அனுஷம் 3ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்**

இந்த சந்திரனுடன் சூரியனும் இங்கிருந்து லக்னம் மகரத்தில் இருந்து சந்திரனையும் சூரியனையும் சனி பார்த்தால் தாயின் மரணம் சம்பவிக்கும்.

**அனுஷம் 3ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்**

ஐம்புலன்களால் ஏற்படும் இன்பத்தில் மனதைச் செலுத்தி அவைகளை நன்கு அனுபவிப்பான். தன் பணக்கார நண்பர்களின் தயவைப் பெற்று அதையும் அனுபவித்து மகிழ்வான். இந்த செவ்வாயை குரு பார்த்திருந்தால் ஜாதகன் கவர்ச்சிப் பொலிவுள்ளவன். பழகுவதற்கு இனிமையானவன். செல்வந்தன். பெற்றோர்களின் அன்பைப் பெற்றவன்.

**அனுஷம் 3ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்**

இந்த புதனுடன் ரோகிணியில் இருக்கும் லக்னமும் அமைந்தால் பெண் ஜாதகியின் திருமணம் அதிர்ஷ்டமுள்ளதாக இருக்கும். ஆனால் இவள் கணவனுக்கு (SEX) உணர்வு மிகவும் குறைவு. அதனால் செக்ஸ் உறவு முடிந்ததும் இருவருக்கும் சச்சரவுகள் ஏற்படும். இருந்தாலும் கணவன் செல்வந்தன். எல்லாவசதிகளும் சுகமும் கிடைக்கப் பெற்றவன். எல்லா விஷயங்களிலும் சிந்தனையும், கவனமும் உடையவன்.

**அனுஷம் 3ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்**

இந்த குருவை சுக்கிரன் பார்த்தால் ஜாதகன் கணிதத்தில் புலி. இந்த குருவுடன் செவ்வாய் சேர்ந்தால் ஜாதகன்

தைரியமுள்ளவன். பெரியவர்களிடம் பணிவு உள்ளவன். ஆனால் வாழ்க்கையில் சம்பாதிப்பது உண்டு உடுக்கவே சரியாகிவிடும்.

**அனுஷம் 3ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

ஆணானால் மூத்திரப்பை கோளாறு அடையும். பெண்ணானால் கருப்பை அல்லது ஓவரியில் கோளாறு ஏற்பட்டு கஷ்டப்பட நேரும். இருந்தாலும் இவர்கள் வாழ்க்கை நல்லவிதமாக இல்லாமல் இரண்டாம் தர வாழ்க்கை நடத்துவார்கள்.

**அனுஷம் 3ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்**

பொல்லாத்தனம் உடைய துஷ்டன். 52 வயதுக்குப்பிறகு நல்ல காலம் பிறக்கும். மூலத்தில் கேதுவும் இருந்தால் அரசாங்கத்தின் மூலம் லாபம் பெறுவான். உள்ளுக்குள்ளே விளக்க முடியாத துயரங்கள் மண்டிக் கிடந்தாலும், வெளிப்பார்வைக்கு அவைகளைக் காட்டிக் கொள்ளாமல் சந்தோஷமாக இருப்பதாகக் காட்டிக்கொள்வான்.

**அனுஷம் 3ல் உள்ள ராகு தரும் பலன்**

ராகு இங்கு இருக்கையில், லக்னம் ஹஸ்தத்திலும், சனியும் செவ்வாயும் சித்திரை 4ம் பாதத்திலும் இருந்தால் அந்த குழந்தை ஒரு வருடத்துக்கு மேல் உயிர் வாழாது.

ராகு மட்டும் தனியாக இங்கிருந்தால் சந்தோஷமான குடும்ப வாழ்க்கையும், சாதாரணமான வாழ்க்கை வசதிகளையும் அளிப்பான்.

**அனுஷம் 3ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்**

சனியும் இங்கிருந்தால் இவன் ஒரு எஞ்ஜினியர். 24 வயது வரை நிரந்தரமாக எந்த வேலையும் கிடைக்காது. 30 வயதிற்குப் பிறகு நல்ல நிலையை அடைந்து, சுமாரான வசதிகளுடன் வாழ்க்கையை அனுபவிப்பான்.

### அனுஷம் 4ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்

பலவித கலைகளையும் நன்கு அறிந்தவன். சப்தத்தின் தன்மை அறிவதில் நிபுணன். அழகிய இளம் பெண்களின் அருகாமையில் இருப்பதை பெரும் இன்பமாக நினைப்பவன். எடுத்துக் கொள்ளும் எல்லா காரியங்களிலும் உண்மையுடன் உழைப்பான்.

### அனுஷம் 4ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்

எதிலும் கவனம் செலுத்த மாட்டான். வியாதியால் கஷ்டப்படுபவன். அலைந்து கொண்டே இருப்பான். குடும்பத்தில் ஏற்படும் மகிழ்வும் சுகங்களும் இவனால் பெறமுடியாது. சிலருக்கு திருமணமே நடக்காது. அப்படித் தப்பித்தவறி நடந்தாலும் இவன் அவளை விலக்கி விடுவான்.

### அனுஷம் 4ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்

வயல்களும், வாசல்களும், கழனி மேடுகளும் உடைய வசதியுள் விவசாயி. அதன் மூலம் நிறைந்த வருமானம் உள்ளவன்.

### அனுஷம் 4ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்

சரியான அளவுகளுடன் கூடிய உடலைப் பெற்றவன். நற்குணங்கள் நிரம்பியவன். நல்ல மனைவி அல்லது கணவனைப் பெற்ற அதிர்ஷ்டசாலி. ஆசிரியர் தொழில் பார்க்கலாம். லேடீஸ் ஹாஸ்டல் அல்லது பெண்கள் ஸ்தானத்தில் வார்டனாக இருக்கலாம். இந்த புதன், சனி, செவ்வாய் இருவராலும் கெட்டிருந்தால் கெட்ட பெண்கள் கூட்டத்துக்கு தலைவனாக இருப்பான்.

### அனுஷம் 4ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்

இந்த குருவை செவ்வாய் பார்த்திருந்தால் ஜாதகன் தைரியசாலி. பெரியவர்களிடம் பணிவு உள்ளவன். கைக்கும் வாய்க்குமான வாழ்க்கை அமையும்.

**அனுஷம் 4ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

கெமிஸ்ட்ரி சந்பந்தமான துறையில் உத்தியோகம் அமையும். இவர்கள் சுண்ணாம்பு கற்கள் தயாரிப்பதில் கெட்டிக்காரரர்கள். தூக்கத்தில் நடக்கும் வியாதி அல்லது தூக்கமே வராத வியாதியால் கஷ்டப்படுவார்கள்.

**அனுஷம் 4ல் உள்ள சனி தரும் பலன்**

நெருப்பு, ஆயுதங்களால் அபாயம் ஏற்படும். கைது செய்யப்படும் வாய்ப்பு உள்ளவர்கள், சிலர் நீண்ட கால வியாதிகளால் கஷ்டப்படுவார்கள். வருமானத்தைவிட செலவினம் அதிகமாக இருக்கும். கறுப்பு நிறமுடையவன். உடல் உறவு இன்பத்தில் நாட்டம் இல்லாதவன். ஆனால் சூதாடுதல், பந்தயம் கட்டுதல் போன்ற விளையாட்டுக்களில் இன்பமடைவான். பொல்லாத்தனம் நிறைந்தவன்.

**அனுஷம் 4ல் உள்ள ராகு தரும் பலன்**

புதன், குரு, சனி, லக்னம் நால்வரும் பூராடத்தில் இருந்து ராகு இங்கு இருந்தால் பிறக்கும் குழந்தை சில மணி நேரங்களே உயிர் வாழும்.

**அனுஷம் 4ல் உள்ள கேது தரும் பலன்**

அடிக்கடி வசிக்கும் இடத்தை மாற்றுவான். பிதுரார்ஜித சொத்துக்களை விற்று விட்டு வெளியூர்களில் அலைந்து திரிவான். பெண்களால் இழப்பு ஏற்படும்.

## அத்தியாயம் - 25

## கேட்டை நட்சத்திரம்

இது 18வது நட்சத்திரம். ராசி மண்டலத்தில் 226 பாகை40 கலை முதல் 240 பாகை வரை பரந்துள்ளது.

| | |
|---|---|
| வடமொழிப் பெயர் | - ஜ்யேஷ்டா |
| தமிழ்ப் பெயர் | - கேட்டை |
| அரபுப் பெயர் | - அக் கல்ப் (AL KALB) |
| கிரேக்கப் பெயர் | - அன்கரெஸ் (ANKARES) |
| சீனப் பெயர் | - ஸின் |

இது 3 நட்சத்திரக் கூட்டங்களைக் கொண்டது. காதணி அல்லது மாலையில் தொங்கும் பதக்கம் போன்று உருவமுள்ளது. இந்த வடமொழிச் சொல்லுக்கு எல்லோரையும் விட மூத்தவன் என்று பொருள். ஒரு கொள்கைப்படி முன்னொரு காலத்தில் அஸ்வினிக்குப் பதிலாக கேட்டையிலிருந்தே அதை முதலாகக் கொண்டே 27 நட்சத்திரங்கள் கணக்கிடப்பட்டன என்ற கொள்கையு முண்டு. அப்படியானால் இது எல்லாவற்றையும் விட மூத்தது என்ற பொருள் பொருந்துவதாகும்.

இந்த நட்சத்திரத்தின் தேவதை இந்திரனாகும். இந்திரன் பஞ்ச பிராணனுக்கும் தலைவன் என்று சொல்லுவதால் இவன் மக்கள் உயிர்க்கெல்லாம் தலைவன் என்று கொள்ளப்படும். எனவே கேட்டை நட்சத்திரத்தின் உயர்வு சொல்லாமலே விளங்குவதாகும்.

## கேட்டை நட்சத்திரத்தில் பிறந்த பலன்

களையுடை மனத்த னாகும் கருமங்கள் அறிந்து செய்யும்
வளவியன் பேர்விருப்பால் வரும் வினை பார்த்து வாழும்
விளைபயிர் மிகவுண் டாகும் மிக்கதோர் தானம் செய்யும்
கிளைபல உடைய னாகும் கேட்டை நாள் தோன்றினாளே.! 161

*(சுவடி எண்: 1500)*

கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவன் களையுடைய அதாவது குற்ற உணர்வு கொண்ட மனம் உள்ளவன். செய்யும் வேலைகள் எல்லாவற்றையும் திருத்தமாகச் செம்மையாக அறிந்து செய்யும் குணமுடையவன். எதிர் காலத்தில் வரப்போகும் செயல்களுக்கு ஏற்ற நிலைமைகளை எதிர்பார்த்து அதற்காகத் திட்டமிட்டுச் செயல்படக் கூடியவன். இவனுக்கு விளை நிலமும், பயிர் விளைச்சலும் அதிகமாகக் காணும். இதனால் இவன் நல்லபடி தானம் பண்ணுவான். இவன் நிறைய உறவினர்களை உடையவனாகவும் இருப்பான். இதுவே இந்தக் கேட்டையில் பிறந்தவன் குணங்களாகும் என்பதாம்.

இன்னானுக்குத் தெய்வம் இந்திரன் - பூதம், வாயு, சாதி பிராமணன். இந்த நட்சத்திரம் ஈட்டி போன்ற உருவமுள்ளதாயிருக்கும். யோனி கலைமான். பட்சி - சக்கரவாகப்புள். விருட்சம் - மாமரம் அல்லது பலாமரம். இராசி விருச்சிகம் - வாரம், செவ்வாய் - கார்த்திகை மாதம் சூனியம். இந்த நட்சத்திரம் உதித்து 14 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம். இதில் வருடம் பிறக்கில் வெய்யில் அதிகமாகும். தானிய உற்பத்தி குறையும்.

இந்த நாளில் வெதுப்புத் தோன்றில் 7 நாளில் விடலாம். விடாதபோது நெல்லரிசியுடன் நெய்யைக் கூட்டி ஓமம் செய்ய வேண்டும். தயிறும் சோறும் கலந்து பலி இடுவது நல்லது. திசைகள் தோறும் பார்த்து நின்று தானம் பண்ண வேண்டும். 3 நாளில் தீரும்.

இந்த நாளில் ஞாயிறு கூடில் விஷ யோகம். இவன் குணம். கண்ணழகியன் செறிந்த சுருண்ட கூந்தலுடையவன். நுனிமூக்கு உயர்ந்திருக்கும். இவன் தனியாக உண்ணான். பிறருக்கு இட்டும் உண்ணுவான். தனக்கு மட்டுமல்லாமல் பிறருக்கும் பொருள் தேடுவான்.

இந்த நட்சத்திரத்தில் பெண் திரளில் விதவையாவாள். இவன் விதம் விதமாக தின்பண்டங்கள் உண்ணும் இச்சையுடையவன். வலது புறத்தில் மச்சம் மறு உள்ளவன். சிவந்த மேனி உடையவன்.

***தமிழ் ஜாதகாலங்காரப் பாடல்***

**தாட்டிகன் துட்ட இணக்கன் பொய்யான் உபாயன்**
**தருபக்தியுளன் இரவான் குரூர கோபி**
**நாட்டியஉள் மூச்சுளன் நீராடவும் பிரியான்**
**நற்புத்தி உளன் நெடியன் தமையனை ரட்சிப்பான்**
**வாட்டமிலாச் சிற்றுண்டி தின்பன் மன்னருக் கினியன்**
**மயிர்க்கடையும் விழிசிவப்பும் வலப்பாக மறுவன்**
**கேட்டமொழி திறங்கொன்னான் பொய்யை மெய்யாக்கிடுவன்**
**கேள்வியுளன் கடுஞ்சொல்லன் கேட்டையானே. 162**

(இ-ள்.) கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவன் பலமுள்ளவன். கெட்டவர்கள் நேசமுள்ளவன். சத்தியம் தவறியவன். தந்திரமுள்ளவன், தக்க கடவுள் வழிபாடு உடையவன். ஏற்பதிகழ்ச்சி என்பதை அறிந்தவன். கொடுமையுடைவன். கோபமுடையவன், உள் சுவாசத்தை அடக்கிவைக்கும் வலிமையுடையவன். தண்ணீர் முழுக்குப் பிரியன். நல்ல அறிவுடையவன். நெடியவன் தனக்குமுன்பிறந்தவனை போஷிப்பவன். பலவகை சிற்றுண்டிகள் உண்பதில் பிரியமுள்ளவன். அரசருக்குப் பிரியமானவன். தலைமயிர் நுனியும் கண்ணும் சிவப்பாய் இருப்பவன். வலது பக்கத்தில் மறு உள்ளவன். கேட்ட சொல்லை நம்பாதவன். பொய்யை மெய் போலக் காட்டுபவன். கேள்வியில் விருப்பமுடையவன். கண்டிப்பாகப் பேசுபவனும் ஆவான் என்பதாம்.

**யவன ஜாதகம்**

கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவன் அதிக ஜாக்கிரதையாக வேலை செய்வான். சிரமமுடையவன், காமி குரூர சேஷ்டையுடையவன். அசத்தியத்திற்குப் பயப்படுபவன். தனவந்தனும் ஆவான் என்பதாம்.

**பிருகத் ஜாதகம்**

இவனுக்கு அதிக சிநேகிதர்கள் கிடையாது. கிடைத்த மட்டும் திருப்தி அடைபவன். தருமம் செய்பவன். அதிக கோபம் இவைகள் உள்ளவன் என்பதாம்.

**பெண்கள்**

**கேட்டை நட்சத்திரப் பெண்**

**வடமொழி ஸ்த்ரீ ஜாதகப்படி**

கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தபெண் ரம்யமான அழகுடையவள். அச்சமுற்று வாயாடும் தன்மை யுடையவள். பணிவுள்ளவள், ஆனால் கோபமுள்ளவள். நல்ல பாக்யசாலி. பிள்ளைகளுடன் வாழ்பவள். தன் சகோதரர்களிடம் பாசம் உள்ளவள். சத்தியத்தில் நம்பிக்கை உள்ளவள்.

வேறுநூல்

இவள் ஆயுதங்களால் பிறரைத் தாக்கும் திறமை யுள்ளவள். அதிகம் கலகம் பண்ணுபவள். மிகவும் சூடானவள். அதாவது அதிக கோபமுள்ளவள் என்பதாம்.

**சங்கராசாரியர் மதன நூல் கூறும் கேட்டைப் பெண்**

**இது அரக்கி தத்துவம் சார்ந்தது.**

**நெகிழ்ந்து நீண்டு நெருங்கும் கருங்குழல்**
**மகிழ்த்திராள் மனமெங்கும் பகர்ந்திராள்**
**புகழ்ந்து பின்புறம் பேசுவாள் ஆரையும்**
**இகழ்ந்தோ ரறிவாள் இருங்கேட் டையே.! 163**

(இ-ள்.) மென்மையாக தளர்ந்து நெருங்கிய சுருண்ட கருங்கூந்தலுடையவள், எப்பொழுதும் கிலேசத்தினுடனேயே இருப்பாள். மகிழ்ந்து இருக்கமாட்டாள். இவள் உள்ளக் கிடக்கையை வெளியில் சொல்ல மாட்டாள். முன்னால் ஒருவரைப் புகழ்ந்து, பின்னால் அவர்களைப் பற்றியே புறம் பேசுபவள், எப்படிப்பட்டவரையும் இகழ்ந்து பேசுபவள். இவையே கேட்டை நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணின் குணங்களாகும்.

**பிற நூல் செய்திகள் கேட்டையைப் பற்றியவை.**

கேட்டையில் பிறந்தது கோட்டையும் கட்டும், சேட்டையும் செய்யும் என்பது முதுமொழி. ஜாதகம் உயர்வானால் கோட்டை கட்டும் ராஜயோகம்தான்.

அதன் உருவம் அரச வெண் கொற்றக் குடை போன்றது என்பர். வர்னம் சிவப்பு, முனை கீழே உள்ள முக்கோணம் போன்றது. முதல் மூன்று கோணங்களிலும் மூன்று நட்சத்திரங்கள் ஒளி வீசும். கேட்டை மூன்றும் ஈட்டியாகும் என்பது பழமொழி. சாதகப் பறவை மழையை எதிர் நோக்குவது போன்ற தன்மையுடையது இது. இதன் ஒலி “ ஏ” என்பதாகும்.

இதன் நாலு பாதமும் ஒரே நட்சத்திரத்தில் இருப்பதால் இது முழு நட்சத்திரம். கேட்டைக்கு சாந்தி செய்ய வேண்டும். இந்த நட்சத்திரக்காரர்களுக்கு ஆண் சந்ததி அதிகம்.

**செய்யத்தக்கவை**

காதுகுத்தல், சூளைக்குத் தீ வைத்தல், வழக்காடல், சத்ரு உடன் எதிர்த்தல், நிலுவையை வசூலித்தல், மந்திரப் பிரயோகம், மாடு விற்றல் முதலியவற்றிற்கு இது ஏற்றது. பொதுவாக இது சுப காரியங்களுக்கு ஏற்றதல்ல. இந்த நாளில் மேகம் சிவந்தால் மழை பெய்யும். இது பயணத்திற்கு ஏற்றதல்ல. நிர்பந்தமானால் எள்ளு சாதம் உண்டு. 18 நாழிகைக்கு மேல் மேற்கு அல்லது தெற்கு திசைகளில் செல்லலாம். ஜூலை மாதம் இரவு 11 மணிக்குமேல் இது வானில் தெரியும்.

கேட்டையில் பிறந்தவன் வீட்டுக்கு ஆகாது என்பர். இதில் பிறந்த பெண்களை தனக்கு மேல் மூத்த சகோதரன் உள்ள ஆண் திருமணம் புரியக் கூடாது என்பர். கேட்டைப் பெண், ஜேஷ்டனுக்கு ஆகாது என்பர்.

இதில் முதலிரண்டு பாதத்தில் திரளும் பெண்கள் நல்லகுடும்ப வாழ்க்கையும் புத்திரரும் உடையவர்கள். பின்னிரண்டு பாதங்களில் பிறந்த பெண்களுக்கு வைதவ்யம் ஏற்படலாம். உரிய சாந்தி செய்து கொள்ள வேண்டும். இதில் பிறப்பவர்கள் 45 வயதைத் தாண்டினால் 80 வயதுவரை வாழ்வார்கள்.

கேட்டை நட்சத்திரத்தில் பிறந்ததால் யாருக்காக ஆகாது என்று நூல்களில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. ஆதியந்த பரம நாழிகையை 10 பாகமாக்கினால் அந்தந்த பாகத்தில் பிறந்த பலன் வருமாரு.

1ம் பாகம் தாய்க்கு அரிஷ்டம்

2ம் பாகம் தாய்ப்பாட்டனுக்கு அரிஷ்டம்

3ம் பாகம் மாமனுக்கு அரிஷ்டம்

4ம் பாகம் தாய்க்கு அரிஷ்டம்

5ம் பாகம் ஜாதகருக்கு அரிஷ்டம்

6ம் பாகம் குடும்ப நாசம்

7ம் பாகம் தாய்குடும்பத்திற்கு அரிஷ்டம்

8ம் பாகம் ஜேஷ்ட சகோதரனுக்கு அரிஷ்டம்

9ம் பாகம் மாமனாருக்கு அரிஷ்டம்

10ம் பாகம் சர்வநாசம்

கேட்டை ஆண் பெண் யாராக இருந்தாலும் திருமணத்திற்குப் பின் கேட்டை மாமனார் மாமியார்களுக்கு படிப்படியாகச் சரிவு ஏற்படும் என்று சொல்வார்கள். கேட்டை குல நாசம் செய்யும் என்ற பழமொழியும் அறியத்தக்கது. கேட்டையில் பிறந்தவர்கள் கோட்டை கட்டி ஆள்வார்கள் என்றதும் இவர்கள் உயர்ந்த வாழ்க்கை வாழ்வார்கள் என்று கூறப் பட்டாலும் சில சமயம் பெரும்பாலும் இப்படி அமைவதில்லை. தாம் பிறந்த இடத்திலிருந்து வெகுதூரம் சென்று வாழ்வார்கள்.

இது பார்ஸ்வ நாடி. சமநோக்கு நட்சத்திரம். வருணதிக்கு இதற்குரியது. ஞாயிறு, செவ்வாய், வெள்ளியில் கேட்டை மரணயோகமாகும். இந்த யோகத்தில் பிறந்தபோது குடும்பக் கஷ்டம் வெகுவாக இருக்கும். இதற்கு இதன் அதிதேவதை இந்திரனுக்கு சாந்தி பரிகாரம் செய்யவேண்டும்.

இது குறுக்கு முகமுடையது. குஞ்சுளம் போன்றும் உருவம் உண்டு என்பர் சிலர்.

இதில் சேனாபதி நியமனம், தான்ய சேகரம் செய்யலாம். திங்கள் கிழமையில் செவ்வாயின் லக்னத்தில் கிணறு வெட்டலாம். காந்தள் மலர் போன்று மேகம் தோன்றினால் 10 நாளில் மழை பெய்யும். சுரம்நோய் வந்தால் தீராது. மரணம் வரை நேரலாம். ஐந்து நாளைக்குப் பீடை சித்ரான்னம் நைவேத்தியம், புடலம் பூவால் பூஜை, கற்பூரம் அகர் தூபம் இந்திராய என்ற மந்திர பூஜை, நெய் சேர்த்த போனி கிழங்குகளின் வேர் இவைகளால் ஹோமம். சாவித்திரி மந்திர ஹோமம் 108 தடவை ஹோமம். சந்தனம், புஷ்பம் இவற்றால் இந்திரனுக்குப் பலி. ஆரியவாலாயனர், மாண்டவ்யர் இரு ரிஷிகளுக்கு சாந்தி செய்யாவிடில் மரணம் நிச்சயம் என்று கூறுவர்.

## கேட்டை நட்சத்திரப் பாத பலன்

## தமிழ் சாதகாலங்காரம் கூறுவது

தெரிந்துதான் எழுத வல்லவன் கருவி
செயம்பரி காரியாம் காந்தி
செறிவிளை யாட்டு நகைசந் தோஷி
சீர்மிகும் கேட் டை யின் முதற்கால்
பொருந்துசங் கீதப் பிரியன் வாய்ச்சாலன்
புகழும் நல்லீகையான் சுகவான்
போகிகள் மனத்தன் ரோகியா மென்றே
புகலுவர் இரண்டதாம் காலே
திறந்துகண் ரோகி பசுவுளன் கலகன்
செப்பிய சுனயுத்தியினான்
செய்குவன் பிறர்காரியம் தன தென்றே
சீர்பெறும் மூன்றதாங் காலே
அறிந்திடும் கலகப் பிரியன்முன் கோபி
வஞ்சகன் குரூரமே புரிவன்
வந்திடும் குலத்தின் மேன்மை கூறிடுவான்
மன்னிய ஈரிரு காலே! 164

(இ-ள்.) சிறப்புப் பொருந்திய கேட்டை நட்சத்திரத்தில் முதற்காலில் பிறந்தவன். எல்லா விஷயங்களையும் தெரிந்து வரைய வல்லவன். அகங்காரி, ஏளனவசனங்களை பேசுபவன். ஒளி பொருந்திய உடலுள்ளவன். மகிழ்ச்சியோடும், நல்ல செய்கையுடனும் திருப்தி அல்லது குதூலகத்துடன் இருப்பவன் ஆவான் என்க.

இரண்டாம் காலில் பிறந்தவன் யாவரும் மகிழத்தக்க சங்கீத சாகித்தியங்களில் சந்தோஷமுடையவன், படபடப்போடு பேசுபவன், தரும குணமுள்ளவன், சௌக்யத்தையுடையவன், மோகத்தில் ஆழ்பவன். துர் எண்ணம் உள்ளவன். வியாதியும் உடையவன் என்று கூறுக.

மூன்றாம் காலில் பிறந்தவன் விழிகளில் ரோக முள்ளவன். பசுக்களை உடையவன். கோள் சொல்லுபவன். துர்க்குணம் உடையவன், பிறர் செய்யும் காரியங்கள் யாவும் தன்னுடையதென்று செய்பவன். சாதுவாகவும் இருப்பான் என்றும் கூறுக.

நான்காம் காலில் ஜனித்தவன், மகிழ்ச்சியுடையவன். கோள் சொல்லுபவன், முன் கோபி, ரோசக் கருத்துடையவன், எவருக்கும் துன்பங்களையே விளைவிப்பவன். தன் குலத்தினரை மனிதரைப் பற்றியும் பெருமை பேசிக்கொள்பவன் என்று கூறுக.

**ஜாதக சாரதீபம் கூறும் பாத பலன்**

முதல் பாதத்தில் பிறந்தவன் - குரூரன்

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன் - போகவான்

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் - வித்துவான்

நான்காம் பாதத்தில் பிறந்தவன் - புத்திரனுள்ளவன்.

**சுவடி எண் 1500 மரண கண்டிகை கூறும் கேட்டை நட்சத்திர பாத பலன்**

மாந்துளிர் போலு மேனி மனந்தரு கல்வி கற்கும்
ஏந்திய குலத்துக் கெல்லாம் இசைந்ததோர் ராச னாவான்
காய்ந்த பின் நடக்க மாட்டான் கனங்குழை யார்க்கு நல்லான்
சேர்ந்தவர்க் கன்பனாகும் செய்ய பொற் காலினானே. 165

(இ-ள்.) கேட்டை நட்சத்திரம் முதற்காலில் பிறந்தவன் மாந்துளிர் போன்று சிவந்தமேனியுள்ளவன். தன் மனதுக்கேற்ற கல்வியை உவந்து சிறப்பாகக் கற்பவன். தன் குலத்துக் கெல்லாம் ஒரு அரசன்போல் நாயகனாய் இருப்பான். இவன் வெய்யிலில் நடக்க மாட்டான். அழகான காதணி அணிந்த தன் மனைவி மற்றும் தான் விரும்பும் பெண்களுக்கு மிகவும் நல்லவன். தன்னைச் சேர்ந்தவர்களிடம் மிகவும் அன்பு செலுத்துபவன். இவையே குருவின் அங்கிஷத்தில் பிறந்தவனின் குணங்களாகும்.

இதற்குக் காலச்சக்கரத் தசை

| | | | |
|---|---|---|---|
| மீன வியாழன் | - | 10 வருடம் | |
| கும்பச் சனி | - | 4 | ,, |
| மகரச் சனி | - | 4 | ,, |
| தனுசு வியாழன் | - | 10 | ,, |
| விருச்சிகச் செவ்வாய் | - | 7 | ,, |
| துலாம் வெள்ளி | - | 16 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| கடகச் சந்திரன் | - | 21 | ,, |
| ஆக வயது | - | 86 | ,, |

**கேட்டை நட்சத்திரம் 2ம் காலில் பிறந்த பலன்**

ஊனம துடையனாகும் உறவாடு பகையும் எண்ணான்
மானம துடையனாகும் மனம்பிறர்க் கறிய வொண்ணான்
மேனியும் உருவும் நல்லான் மிக்கதோர் அறிவு மில்லை
கானகம் திரிந்து வாழும் காரியங் கிஷத்தி னானே. 166

(இ-ள்.) கேட்டை இரண்டாம் பாதத்தில் பிறந்தவன் உடலில் ஏதாவது ஊனமிருக்கும். இவன் உறவினரையும் போற்ற மாட்டான். பகைவரையும் பெரிதாக எண்ண மாட்டான். இவன் மிகவும் தன்மானமுள்ளவன். இவன் ஆழமான மனம் உள்ளவன். இவன் உள்ளக்கிடக்கையை யாராலும் அறிய முடியாது. இவன் மேனி நிறம் சிவப்பு. உருவமும் அழகு. இவன் அவ்வளவு கூர்மையான அறிவு படைத்தவன் இல்லை. இவன் பல இடங்களிலும் காடுகள் உட்படத் திரிந்து வாழக் கூடியவன். இவனே சனியின் அங்கிஷத்தில் பிறந்தவனாவான் என்பதாம்.

இதற்குக் காலச்சக்கரத் தசை

| | | | |
|---|---|---|---|
| மிதுன புதன் | - | 9 | வருடம் |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| மேஷச் செவ்வாய் | - | 7 | ,, |
| தனுசு வியாழன் | - | 10 | ,, |
| மகரச் சனி | - | 4 | ,, |
| கும்பச் சனி | - | 4 | ,, |
| மீன வியாழன் | - | 10 | ,, |
| மேஷச் செவ்வாய் | - | 7 | ,, |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| ஆக வயது | - | 83 | ,, |

**கேட்டை நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்த பலந்**

ஆரையும் அறிந்து பேசுவர் அருட் பொருட் கன்பனாகும்
சீரிய உண்டி பேணும் சிதைவதே செய்வ தெல்லாம்
வாரிய கவிகள் சொல்லும் மனமது கொடுமை எண்ணும்
காரிய குசலனாகும் காரியங் கிஷத்தினானே. 167

(சுவடி எண் 1500)

(இ-ள்.) கேட்டை 3ம் பாதத்தில் பிறந்தவன் எவரிடமும் அறிந்து, சரியாக பேசுபவன். அரிய தனத்தின் மேல் பற்றுடன் ஈட்டி வாழ்பவன். நல்ல சுவையான உணவை வக்கணையாக உண்பவன். ஆனால் செய்யுங் காரியமெல்லாம் சரியாகச் செய்ய மாட்டான். ஆனால் முன்பின் முரணான காரியங்கள் செய்தாலும் செய்த வரையில் ஒழுங்காகச் செய்து முடிக்கும் திறமை உடையவன். இவனே சனியின் அங்கிஷம் கேட்டை 3ம் பாதத்தில் பிறந்தவன் தன்மைகளாகும் என்பதாம்.

இதற்குக் காலச் சக்கரத் தசை

| | | | |
|---|---|---|---|
| மிதுன புதன் | - | 9 | வருடம் |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |

| | | | |
|---|---|---|---|
| கடகச் சந்திரன் | - | 21 வருடம் | |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| துலாம் வெள்ளி | - | 16 | ,, |
| விருச்சிகச் செவ்வாய் | - | 7 | ,, |
| மீன வியாழன் | - | 10 | ,, |
| கும்பச் சனி | - | 4 | ,, |
| மகரகச் சனி | - | 4 | ,, |
| ஆக வயது | - | 85 | ,, |

**கேட்டை நட்சத்திரம் 4ம் காலில் பிறந்த பலன்**

சிறிதே உண்ணும் பொய்சொல்லான் சிறந்த கண்ணன் செறிகுழலன்
அறிவே மிகுந்த பெருங்குணத்தான் அடைந்தோர்க் கன்பன் அழகியரும்
பொறிசேர் மைந்தன் மனையாளைப் பொருளென் றெண்ணான் புகழ்
விளங்கும்
வெறிசேர் கூந்தல் மானே வியாழன் காலில் பிறந்தோனே. 168
(சுவடி எண் 1500)

*(இ-ள்.)* கேட்டை நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவன் குறைந்த உணவே உட்கொள்ளுவான். பொய் பேசமாட்டான். கண்கள் இவனுக்குச் சிவந்திருக்கும். நெருங்கிய தலைமயிர் உள்ளவன். இவன் அறிவு மிகுந்த புத்திசாலி. நல்ல உயர்ந்த குணம் உள்ளவன். தன்னை அண்டினவர்களுக்கு அன்பானவன். தன்னுடைய உழைக்கும் மகன் மற்றும் மனைவியை ஒரு பொருட்டாக எண்ண மாட்டான். மதிக்கமாட்டான். புகழுடையவன் ஆகும். வாசனை வீசும் கூந்தலுடைய பெண்ணே! இவையே குருவின் அங்கிஷத்தில் பிறந்தவன் தன்மைகளாம் என்பதாம்.

இதற்குக் காலச் சக்கரத் தசை

| | | | |
|---|---|---|---|
| தனுசு வியாழன் | - | 10 வருடம் | |
| விருச்சிகச் செவ்வாய் | - | 7 | ,, |

| | | | |
|---|---|---|---|
| துலாம் வெள்ளி | - | 16 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| கடகச் சந்திரன் | - | 21 | , |
| மிதுன புதன் | - | 9 | ,, |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| மேஷச் செவ்வாய் | - | 7 | ,, |
| ஆக வயது | - | 100 | ,, |

**இந்த நட்சத்திற்கு விம்சோத்தரி தசை**

| | | | |
|---|---|---|---|
| புதன் தசை | - | 17 | ,, |
| கேது தசை | - | 7 | ,, |
| சுக்ர தசை | - | 20 | ,, |
| சூரியன் தசை | - | 6 | ,, |
| சந்திரன் தசை | - | 10 | ,, |
| செவ்வாய் தசை | - | 7 | ,, |
| ராகு தசை | - | 18 | ,, |
| குரு தசை | - | 16 | ,, |
| சனி தசை | - | 19 | ,, |
| ஆக வயது | - | 120 | ,, |

**இவனுக்கு ஏற்படும்** நோய் முதலியன

இவன் பிறந்த ஆண்டில் பிள்ளைப் பிணியால் கஷ்டம், 4 வயதில் உதர நோய், 7 வயதில் கண்ணோய், 12 வயதில் நாய்க்கடியால், 19 வயதில் காது வலியால், 22 வயதில் நீர்க்கண்டம், 30 வயதில் விஷத்தால், 50 வயதில் சிரங்கால் கண்ணோயால், 55 வயதில் விஷத்தால், 60 வயதில் வெதுப்பு, வயிற்றுக் கடுப்பால், 83 வயதில் பித்தத்தால், 86 வயதில்

சிலேத்துமத்தால் கஷ்டப்பட்டு, அது கடந்த கார்த்திகை மாதம் 13ம் தேதி செவ்வாய்க்கிழமை வரும் கேட்டை நட்சத்திர நாளில் 4 நாழிகை சென்று அமரபட்சம் திரயோதசி சேர்ந்த நாளில் வெதுப்பு தோன்றி இறைவனடி சேர்வார்.

**இவன் பிறந்த லக்ன சாரம்**

| | | |
|---|---|---|
| சூரியனாகில் | - | சேனாபதி |
| சந்திரனாகில் | - | மந்திரி |
| செவ்வாய் ஆகில் | - | உத்தியோகஸ்தன் |
| புதன் உதயமாகில் | - | கல்விமான் |
| குரு உதயமாகில் | - | பண்டிதன் |
| சுக்கிரன் உதயமாகில் | - | வியாபாரி |
| சனி உதயமாகில் | - | கோள் சொல்லுபவன் |
| ராகு உதயமாகில் | - | இரந்துண்போன் |
| கேது உதயமாகில் | - | யோகி |

இதில் முதல் பாதம் பிதாவைக் கொல்லும். இவன் பரிசுத்தம் உடையவன். கோவிலில் 18 நெய்விளக்கேற்றவும், கரும்புள்ளியும் தான்யமும் கூட்டி ஹோமம் பண்ணி சாந்தி செய்யவும். கேட்டை நட்சத்திர தோஷம் விலகும்.

**கர்ம விபாகம் (வடமொழி நூல்) கூறும் கேட்டை நட்சத்திர பூர்வகர்ம சாந்தி பரிகார முறைகள்**

**கேட்டை நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம சாந்தி பரிகாரமுறைகள்**

**சிவபெருமான் சொல்லுகிறார்**

மஹாராஷ்டிரா தேசத்தில் ஒரு பிராமணன் வாழ்ந்து வந்தான். அவன் வேதம் நன்கு கற்றுப் பாராயணம் செய்து வந்தான். அவன் ஒரு குளம் தோண்டி வைத்தான். அதில் கிடைத்த லாபத்தைப் பங்கிட்டுக் கொள்வதில் அவனுக்கும்

அவன் சகோதரனுக்கும் பூசல் வந்து விட்டது. இந்த சகோதரன் தனக்குப் பணம் கிடைக்காததால் விஷம் குடித்து இறந்து போனான். மற்றவன் வந்த பணம் முழுவதையும் செலவழித்து விட்டான்.

இதன் பின் பிராமணன்இறந்தான். இவன் கர்தமம் என்ற மஹா கொடிய நரகத்தில் தள்ளப்பட்டான். இங்கே 60 ஆயிரம் ஆண்டுகள் தண்டனை அனுபவித்தான். அதன் பின் காகமாகப் பிறந்தான்.

இதன் பின் மனிதப் பிறவி அடைந்தான். பூர்வ ஜென்ம பாவத்தால் இவனுக்குக் குழந்தைகள் இல்லாமல் போயிற்று. அடுத்து இவனுக்குக் கொடிய குஷ்ட ரோகம் உண்டாயிற்று. இதற்குச் சாந்தி பரிஹாரம் வருமாறு.

தன் முழுதனத்தின் 8ல் ஒரு பாகத்தை புண்ய காரியங்களில் செலவழிக்க வேண்டும். அதன் பின் சாலை ஓரங்களில் குளம் கிணறுகள் வெட்ட வேண்டும்.அதன் பின் 15 தோலா எடையுள்ள தங்கத்தால் தன் உடன் பிறந்தவன் உருவம் பண்ணி கந்த தூப புஷ்பங்களால் பூஜித்து, அலங்கரித்து அதன் பின் ஒரு லக்ஷம் முறை காயத்ரி மந்திரம் ஜெபம் செய்விக்க வேண்டும். அதன் பின் அதில் ஒரு பங்கு ஹோமம் பண்ண வேண்டும்.

மகர சங்கராந்தியின் போது பிரயாகையில் நீராடி முன் சொன்ன தங்க உருவத்துடன் பசுவையும் உத்தம அந்தணனுக்குத் தானம் பண்ண வேண்டும். அதன்பின் பிராம்மணர்களுக்கு அவர்கள் பேரன்கள் காலம்வரை வரக்கூடிய சொத்து சேர்த்து தானம் பண்ண வேண்டும். பூமி தானமும் பண்ண வேண்டும். விருந்துணவும் செய்விக்க வேண்டும். இதனால் இவன் பாபங்கள் தீரும். இவனும் நோய் நீங்கி சுகம் பெறுவான். இவர்களுக்குத் தீர்க்காயுள் உள்ள மக்கள் பிறப்பார்கள். இவன் குடும்பத்துடன் சந்தோஷமாக வாழ்வான்.

## கேட்டை நக்ஷத்திரம் 2ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வகர்ம சாந்தி பரிகாரம்

சிவபெருமான் சொல்லுகிறார்

பட்டணம் என்ற அழகிய நகரம் உண்டு. அங்கு கோவர்தனன் என்ற கருமான் ஒருவன் தன் மனைவியுடன் வசித்து வந்தான். இவன் தர்ம சிந்தனையுடன் தொழில் செய்து வந்தான். இவன் தனவானாகவும் இருந்தான். இவனுக்கு 2 புத்திரர்கள் இருந்தனர். இவர்களில் மூத்தவனை வெளியில் துரத்திவிட்டான். அவனுக்கு எதுவும் கொடுக்கவில்லை. இவன் சிறிய பிள்ளைக்கு சொத்து கொடுத்தான். தன் மனைவியை விலக்கி விட்டு வேறு ஒரு இளம் பெண்ணை இரண்டாம் தாரமாக பண்ணிக்கொண்டான். சில காலம் சென்று புலியால் அடித்துக் கொல்லப்பட்டான். இவனை யமதூதர்கள் நரகத்தில் தள்ளினார்கள். 30 ஆயிரம் ஆண்டுகள் நரக வேதனைக்குப்பின் இவன் மனிதப் பிறவி பெற்றான். அதன் பின் பாம்பாகப் பிறந்தான். அதன் பின் தனவானுடைய குடும்பத்தில் மனிதனாகப் பிறந்தான். சூர வீரனாகவும், படித்தவனாகவும் அறிவாளியாகவும் அரசனுக்கு நண்பனாகவும் ஆனான். இவன் இப்பிறவியிலும் தன் மனைவியைத் தள்ளி வைத்து விட்டு பரஸ்திரீயுடன் சுகித்து வந்தான்.

இவன் செய்த பாவத்தால் இவனுக்குப் பெண் குழந்தைகளே பிறந்தன. ஆண் பிரஜை ஏற்படவில்லை. இவனை ரோகங்கள் பற்றிக்கொண்டன. அரிப்பு, சூடு இவையும் பற்றிக் கொண்டன. இவனுக்குச் சாந்தி பரிஹாரமுறை வருமாறு. ஒவ்வொரு ஏகாதசியும் உபவாசம் இருந்து விரதம் அனுஷ்டிக்க வேண்டும். தன் சொத்தின் 6ல் ஒரு பாகத்தைத் தானம் பண்ண வேண்டும். பின் ஆறு அங்கங்களுடன் கூடிய ஸ்ரீருத்ர பாடம் செய்ய வேண்டும். அதன் பின் ஹரிவம்ச புராணம் பாராயணம் பண்ண வேண்டும். எப்பொழுதும் துர்கா சப்தசதி பாராயணம் செய்ய வேண்டும். அதன் பின் எள் போன்ற புள்ளிகள் உள்ள பசுவைத் தானம் பண்ண வேண்டும்.

சிரார்த்தம் முறைப்படி செய்ய வேண்டும். (அமாவாசை யன்று) அதன் பின் இவன் பாவம் தீரும். நோய் நீங்கி இவர்களுக்குத் தீர்க்காயுள் உள்ள மக்களும் பிறந்து இவர்கள் மகிழ்வுடன் வாழ்வார்கள்.

**கேட்டை நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ புண்ய பாவ மற்றும் பரிஹார முறைகள்**

சிவபெருமான் சொல்லுகிறார்

பீஜப்பூர் நகரத்தில் வெற்றிலை பீடா செய்து விற்கும் வியாபாரி ஒருவன் இருந்தான். இவன் ஒரு குடிகாரன், இவன் வேளாளன். இவனுக்கு 2 புத்திரர்கள் இருந்தனர். நிறைய பணம் சேர்த்தான். இவன் பண விவகாரத்தில் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் இவனுக்குப் பூசல் ஏற்பட்டது. இதனால் தன் மூத்த மகனைக் கொன்றுவிட்டான். அவன் மனைவியை தான் வைத்துக்கொண்டு அனுபவித்து வந்தான்.

இப்படிப் பலகாலம் சென்றபின் அவன் இறந்தான். இவனை எமபடர்கள் படித்து கோர நரகத்தில் தள்ளினார்கள். நரகத்தில் 60 ஆயிரம் ஆண்டுகள் வேதனை அனுபவித்த பின் நாயாகப் பிறந்தான். அதன்பின் எருதாகப் பிறந்தான். அதன்பின் இவன் மனிதப் பிறவியை அடைந்தான். போன ஜென்மத்தில் நிறைய கோதானம் பண்ணினான். அதனால் இப்பொழுது பணக்காரனாகப் பிறந்தான். தன் மகனைக் கொன்று மருமகளை தான் அனுபவித்த பாவத்தால் இவனைப் பல நோய்களும் கவலையும் பற்றிக்கொண்டன. காய்ச்சலும் அடிக்கடி ஏற்பட்டது. இவனுக்குக் குழந்தை இல்லாமலும் போயிற்று. இவனுக்கு இரவில் தூக்கமும் இல்லை.

இதற்குச் சாந்தி முறை வருமாறு. தன் தனம், சொத்து இவற்றில் 3ல் ஒரு பாகத்தை முதலில் குளம், கிணறு, வெட்டிப் பொதுமக்களுக்கு அளிக்க வேண்டும். அதன் பின் தன் மனைவியுடன் இருந்து பௌர்ணமி விரதம் இருக்க வேண்டும். பிராமணர்கள் மூலம் ஒரு லக்ஷம்

சிவலிங்கங்களின் பூஜை செய்விக்க வேண்டும். தன் ஒரு காராம் பசுவைத் தானம் பண்ண வேண்டும். இதன் பின் ஒரு லக்ஷம் முறை காயத்திரி மந்திர ஜபம் செய்விக்க வேண்டும். அதில் பத்தில் ஒருபங்கு ஹோமம், மார்ஜனம், தர்ப்பணம் செய்விக்க வேண்டும். அறுபது துலாம் எடை தங்கத்தில் தன் பையனைப் போன்று உருவம் அமைக்க வேண்டும். இதை பொன் மணி அணிகலன்களால் அலங்கரித்து உத்தம பிராமணனுக்குத் தானம் பண்ண வேண்டும். இதனால் இவன் பாபங்கள் நசிக்கின்றன. இவன் நோய்கள் குணமாகி இவனுக்கு நீடித்த ஆயுளுள்ள குழந்தைகள் பிறக்கும். பின்பு இவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்.

**கேட்டை நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவர்கள் பூர்வ கர்ம விளைவும் சாந்தி பரிஹாரமும்**

சிவபெருமான் சொல்லுகிறார்

வேணி என்ற நதியின் மேற்கே சதுர் புஜம் என்ற நகரத்தில் லக்ஷமணன் என்ற பத்திரம் எழுதுபவன் இருந்தான். இவனுக்கு அழகிய மனைவியுண்டு. இவள் பரபுருஷர் தொடர்புள்ளவளாக இருந்தாள். பத்திரக்காரன் வாணிப முதலிய தொழிலும் செய்து நிறைய பணம் சேர்த்தான். இவன் வீட்டில் ஒரு பறவைக்கூடு இருந்தது. அதில் பறவை முட்டை இட்டுக் குஞ்சு பொறித்து வளர்த்து வந்தது. இவனுக்கு பிள்ளைகள் பலர் பிறந்தனர்.

அந்தப் பறவை பகலில் தன் குஞ்சுகளுக்குப் பல உணவுப் பொருள்களைக் கொண்டுவந்து ஊட்டி வளர்த்தது.

ஒரு நாள் இவனுக்கு இவன் மனைவி வகைவகையாக உணவு படைத்தாள். அப்பொழுது கூட்டிலிருந்த குஞ்சுகள் இவன் இலையிலிருந்த உணவுப் பொருளைக் கொத்தி சாப்பிட்டன. சினங்கொண்ட பத்திரக்காரன் அக்குஞ்சுகளைக் கொன்று விட்டான்.

இதன் பின் வெகு காலம் சென்ற பின் இவன் மனைவியுடன் இறந்தான். இவனையும் அறியாமல் செய்த புண்ணியத்திற்காக முதலில் 70 ஆயிரம் வருடம் சுவர்க்கத்தில் சுகம் அனுபவத்தான். புண்ணியம் தீர்ந்தபின் இவன் வெளியேற்றப்பட்டான்.

அதன்பின் கங்கை கண்டகி நதிகளுக்கிடையே ஒரு ஊரில் இவன் மனிதப் பிறவி பெற்றான். பணம் நிறைய இருந்தது. போன ஜென்ம மனைவியே இந்தப் பிறவியிலும் மனைவியானாள். போன ஜென்ம பாவத்தால் இவளுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை. இவனுக்கு நோய்கள் பற்றிக் கொண்டன. கொஞ்சம் கூட சுகம் கிடைக்கவில்லை. தினமும் மன வேதனை அடைந்து வந்தான்.

**இப்பொழுது இதற்குச் சாந்தி பரிஹாரம் வருமாறு**

முதலில் சூரியன் மற்றும் சந்திரனின் காயத்திரி மந்திரங்களை தனித்தனி லக்ஷம் முறை ஜெபம் செய்ய வேண்டும். தன் வீட்டு சொத்து பணம் இவற்றின் 8ல் ஒரு பங்கை புண்ணிய காரியங்களில் செலவழிக்க வேண்டும். அதனுடன் கன்றுடன் கூடிய கபில நிறப் பசுவையும் தானம் பண்ண வேண்டும். அதன் பின் 10 நிறப் பசு ஒன்றைத் தானம் செய்ய வேண்டும். பிராமணருக்கு போஜனம் அளிக்க வேண்டும். அதன் பின் 100 தோலா தங்கம், வெள்ளி, செம்பில் பல்வகைக் குஞ்சுகளைத் தயார் செய்யவேண்டும். உத்தம பிராமணர்களுக்கு தானம் செய்ய வேண்டும். பூமி தானமும் செய்ய வேண்டும். கடைசியில் ஹரிவம்ச புராணம் பாராயணம் செய்ய வேண்டும். அதன் பின் ஜாத வேதசே என்ற மந்திரத்தை ஒரு லக்ஷம் முறை ஜபம் பண்ண வேண்டும். அதன் பின் கோபால மந்திரமும் ஜபம் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் இவன் பாபங்கள் தீரும். அதன்பின் தீர்க்காயுள் உள்ள குழந்தைகள் பிறக்கும். இவனும் குடும்பத்துடன் சந்தோஷமாக வாழ்ந்து வருவான்.

**பிறர் மதப்படி கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்**

**பொதுப்பலன் - ஆண்கள்**

**உடல் அமைப்பு**

வசீகரமான முகப்பொலிவும், நல்ல உடல் வலிமையும் பெற்றவன். கேட்டையில் பிறந்த அனேகருக்கு பற்கள் இடையே இடைவெளி அல்லது பற்கள் முன்னால் நீட்டிக் கொண்டிருக்கும் குறையை காணலாம். இந்த இரண்டு குறைகளும் இல்லாவிட்டால் பற்களின் நிறம் வெண்மையாக இராமல் நிறம் மாறுபட்டு இருக்கும்.

குணங்கள்

வெள்ளை மனதுடையவன். சாத்வீக குணமுடையவன், இவன் வெளிப்படையாக எதையும் காட்டிக்கொள்ளாதவன் ஆதலால் இந்த சிறந்த குணத்தை பலரால் அறிய முடியாமல் போகும். சிறு பிரச்சினைகள் கூட இவனை அணுகாது. மனதில் எதையும் மறைத்து வைத்துக் கொள்ள இவனுக்குத் தெரியாது. எதையும் வெளிப்படையாக பேசி விடுவான். தன் சொந்த குடும்ப விஷயங்களைக் கூட பிறரிடம் தயங்காமல் கூறி விடுவான். இப்படிப் பட்டவர்களிடம் எந்த ரகசியமான விஷயங்களையும் கூறக்கூடாது. ஏனெனில், எல்லாவற்றையும் பலர் அறியக் கூறிவிடுவான். பிறரிடம் அந்த ரகசியத்தைக் கூறாவிட்டால் தன் வாழ்க்கையில் எதையோ இழந்தது போல் ஆகி விடுவான். தூக்கம்கூட சரியாக வராது. நிலைகொள்ளாமல் தவிப்பான். மறுநாள் பொழுது விடிந்ததும் கண்ணில் பட்ட முதல் நபரிடம் அந்த விஷயங்களைச் சொன்ன பிறகு தான் இவன் மனது நிம்மதி அடையும்.

இவன் பிடிவாதமும் கோபமும் கொண்டவன். இந்த குணங்களால் இவனுக்கு அடிக்கடி பிரச்சினைகள் உருவாகும். இவைகள் இவன் முன்னேற்றத்தை ஒரு சுவர் போல் மறிக்கும். பிறருடைய யோசனைகளை இவன் ஏற்றுக்

கொள்ளமாட்டான். தன்னுடைய மனசாட்சி சொல்வதை, தனக்கு சரி என்று படுவதையே செய்வான்.

கொள்கை பிடிப்பு காரணமாக சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் அனுசரித்துப் போகாமல் பல விஷயங்களில் அந்த இடத்திலேயே திடீரென முடிவெடுப்பான். முன்பின் யோசிக்காமல் எடுக்கும் இந்த முடிவுகள் கடைசியில் அவனை ஆபத்தான சூழ்நிலைக்கு உள்ளாக்கி விடும். இந்த குணத்தின் காரணமாக, இவனுக்குத் தேவைப்படும்போது தன்னால் முடிந்த உதவியை செய்தவர்கள் என்று பார்க்காமல் அவர்களுக்குக் கஷ்டத்தையும் பிரச்சினைகளையும் உண்டாக்கத் தயங்கமாட்டான். சமயத்தில் அவர்களை உதாசீனப்படுத்தி, மோசமாக நடத்துவான். உறவினர்களிடமிருந்து எந்த உதவியையும் எதிர்பார்க்க முடியாது. வெளிப்பார்வைக்குத் தன்னை கர்வம் மிகுந்தவனாக தோற்றமளித்தாலும் நெருங்கிப் பழகிப் பார்த்தால் அதற்கு எதிரிடையாக இருப்பான்.

இவன் ஆல்கஹால் மருந்துகள் அருகில் செல்லவேக் கூடாது. ஏனெனில் அவற்றை உபயோகித்தால் வெகு சீக்கிரத்தில் தன் நிலையை இழந்து விடுவான். அதனால் இவன் கஷ்டப்பட்டு சம்பாதித்த நற்பெயரை கெடுத்துவிடும். மேலும் குடும்ப வாழ்க்கையிலும், தொழிலிலும் அமைதியும் முன்னேற்றத்தையும் தடுத்து விடும்.

**கல்வி தொழில்**

சிறு வயதிலேயே தன் வீட்டை விட்டு வெளியேறி வெகு தூரத்திற்குச் சென்று அங்கு தஞ்சம் புகுவான். உழைப்பினால் தான் சம்பாதித்து சாப்பிடவேண்டும். வேலையில், கவனமும், உண்மையுமாக இருப்பவன். ஆதலால் எந்த வேலையாயிருந்தாலும், அதில் விரைவில் முன்னேறுவான். தொழில் அல்லது வேலையை அடிக்கடி மாற்றிக்கொண்டே இருப்பான்.

50 வயது வரை வாழ்க்கை சோதனை நிறைந்ததாகவே இருக்கும். வாழ்க்கையில் ஒரு ஸ்திரத் தன்மை அதற்குப் பிறகு தான் உண்டாகும். 18லிருந்து 26 வயதுவரை உள்ள 8 வருடங்களும், மிகவும் கஷ்டங்களும், துயரங்களும் நிறைந்ததாக இருக்கும். இந்தக் காலங்களில் பொருளாதார நெருக்கடியும், மன வியாகூலமும், உச்சகட்டத்தில் இருக்கும். சிலருக்கு இதனால் மனநோயும் ஏற்படக்கூடும். 27 வயதுக்குப் பிறகுதான் இந்தக் கஷ்டங்களைக் கடந்து கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றம் ஏற்படத் துவங்கும். ஆனாலும் 50 வயதுவரை இந்த முன்னேற்றம் மெதுவாகவே ஏற்படும்.

**குடும்ப வாழ்க்கை**

இவன் தன் தாயிடமிருந்தும், உடன் பிறந்தவர்களிடமிருந்தும் எந்த நன்மை, ஆதாயங்களையும் எதிர்பார்க்க முடியாது. மாறாக அவர்கள் இவனுக்கு எதிரிகளாக ஆகிவிடுவார்கள். பொதுவாக இவனை உறவினர்களும், நண்பர்களும் விரும்ப மாட்டார்கள். இதற்கு முக்கிய காரணம் கேட்டையில் பிறந்தவர்கள். பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் அடையாளமும் வைத்துக்கொள்ள விரும்புவதுதான்.

இவன் மனைவி எப்பொழுதும் கணவன் மேல் அதிகாரம் செலுத்துபவளாக இருப்பாள். இவனது குடி பழக்கத்தை தடுக்க எல்லா முயற்சிகளையும் எடுப்பாள். இவனுடைய மணவாழ்க்கை ஒற்றுமையும், அன்யோன்யம் நிறைந்ததாகவும் ஆனந்தமயமாகவும் இருக்கும். ஆனால் மனைவிக்கு ஏற்படும் உடல் வியாதிகளால் அல்லது வேறு ஏதாவது தவிர்க்க முடியாத காரணங்களால் அவளை விட்டுப் பிரிந்து வாழ வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும். அதனால் ஏற்படும் கவலை அவன் மனதை பெரிதும பாதிக்கும்.

**உடல் ஆரோக்கியம்**

அடிக்கடி சுரம், வயிற்றுப்போக்கு, இருமல், கபம், ஜலதோஷம், ஆஸ்துமா, வயிற்றுக் கோளாறுகள் ஆகியவை இவனுக்கு சாதாரணமாக வரக்கூடிய வியாதிகள். இவர்கள் ஒரு நோய் அல்லது மற்றொன்றால் அடிக்கடி பாதிக்கப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். கைகளிலும், தோள்களிலும் கடுமையான வலி ஏற்படும் வாய்ப்பும் உண்டு.

**பெண்கள் - பொதுப்பலன்**

**உருவ அமைப்பு**

எல்லா உடல் உறுப்புக்களும் சரியான அளவில் இருக்கும். கச்சிதமான உடல் கட்டுடன் சதைப்பிடிப்பாகவும், புஷ்டியாகவும் இருப்பாள். நீண்ட கைகளும், அகலமான முகமும், குட்டையான சுருள் முடியுடன் காண்பவரை கவர்ந்திழுப்பாள். நடுத்தரமான உயரம் உடையவள்.

**குணம்**

தீவிரமான உணர்ச்சிகளை உடையவள். ஆசாபாசங்களும், பொறுமை குணமும், ஆழ்ந்த அன்பும் கொண்டவள். இவள் அறிவாளி, கூர்ந்த மதி உடையவள். எதையும் யோசித்து பலாபலன்களை ஆராய்ந்து செய்வாள். எதையும் சட்டெனப் புரிந்து கொள்வாள். தன்னைப் பற்றி மற்றவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை அறிந்துகொள்ள ஆர்வமாக இருப்பாள். இவளுடன் பிறந்த பெண்மை குணம், பிறரை அதிகாரம் செய்ய அனுமதிக்காது. எது ஒன்றையும் கிரமமாக அமைப்பதில் சிறந்தவள். கூட்டம், விருந்து, நிகழ்ச்சிகள் முதலியவற்றை சிறந்த முறையில் ஏற்பாடு செய்து வெற்றிகரமாக முடித்துத் தருவாள்.

**கல்வி, உத்தியோகம்**

எல்லா விளையாட்டுகளிலும், பங்கேற்பாள். சுமாரான நடுத்தர கல்வி அமையும். வீட்டு வாழ்க்கையில் திருப்தி

உள்ளவள். தன் கணவனின் தொழில் வெற்றியின் மூலம் தனக்குத் தேவையானவைகளைப் பெற்று இன்பமடைவாள். குடும்ப வாழ்க்கையிலேயே திருப்தியும் சந்தோஷமும் அடையும் இவர்கள் பெரும்பாலும் உத்தியோகத்துக்குச் செல்வதில்லை.

**குடும்ப வாழ்க்கை**

குடும்பத்தில் ஒற்றுமை காண்பது கடினம். சிலருக்கு குழந்தைகளை இழக்கும் துர்பாக்கியமும் ஏற்படும். அதனால், கணவன் வீட்டு உறவினர்களால் துன்புறுத்தப்படுவாள். இவளைப் பற்றி பல கட்டுக்கதைகளை பரப்பி அவர்கள் இவளுக்கு மனத்துன்பத்தைத் தருவார்கள். இவள் தன் உறவினர்களிடமும் அண்டை அயலார்களிடமும் ஜாக்கிரதையாகப் பழகவும் பேசவும் வேண்டும். அப்படி நடந்துகொள்ளா விட்டால் இவள் வாழ்க்கையில் நஞ்சைத்தூவி இவள் வாழ்க்கையை சின்னாபின்னப்படுத்தி விடுவார்கள். கவலையில்லாமல் இருக்கும் நேரம் இவளுக்குக் கிடைப்பதே அரிது.

இவள் தானாகவே ஒரு விதியை வகுத்துக்கொண்டு அதன்படியே தன் குழந்தைகள், பெரியவர்களானதும் பழிக்குப்பழி வாங்குவது போல் இவளை அலட்சியப்படுத்தி, ஒதுக்கி வைத்து விடுவார்கள்.

ஆரோக்கியம்

இவர்கள் நல்ல ஆரோக்கியத்தைப் பெற்றவர்கள் அல்ல. சிலருக்கு கருப்பையில் வியாதிகள் தோன்றும் ப்ராஸ்ரேட் கிளாண்டு விரிவடைந்து வலியைக் கொடுக்கும். கைகள், தோள்களில் வலிகள் ஏற்பட்டு துன்பத்தைக் கொடுக்கும்.

**கேட்டை நட்சத்திரத்தில் உள்ள கிரகங்களை மற்ற கிரகங்கள் பார்த்த பலன்**

**கேட்டையில் உள்ள சூரியனை செவ்வாய் பார்த்த பலன்**

சிவந்த கண்களை உடைய பயங்கரத் தோற்றம் கொண்டவன் குருரத்தன்மை உடையவன்.

**கேட்டையில் உள்ள சூரியனை குரு பார்த்த பலன்**

ஏழைகளுக்கு உணவு வழங்கி ஆதரிப்பான். மிக்க செல்வம் படைத்தவன். அரசியல் துறையில் நல்ல பெயரும் புகழும் உடையவன். அல்லது அரசாங்கத்தில் பெரிய பொஸிஷனில் இருப்பான். ஏதாவது கல்வி ஸ்தாபனத்தில் பெரிய பதவியில் இருப்பான்.

**கேட்டையில் உள்ள சூரியனை சுக்கிரன் பார்த்த பலன்**

மனைவியைத் தவிர, இவன் மற்ற அழகிய இளம் பெண்களுடன் கூடி களித்து மகிழ்வான். செல்வம் இவனை அண்டாது.

**கேட்டையில் உள்ள சூரியனை சனி பார்த்த பலன்**

இவன் ஏழையாக இருப்பான். சோம்பேறியாகவும் இருப்பான். நோயுற்றவன் போல் உருவத் தோற்றம் கொண்டவன்.

ஆனால் இதே பொஸிஷன் நவாம்சத்தில் இருந்தால் ஜாதகன் அறிவாளி, பணக்காரன், கவர்மெண்டில் உயர்ந்த பதவியில் இருப்பான். தன் தந்தையை வெறுப்பவன்.

**கேட்டையில் உள்ள சந்திரனை சூரியன் பார்த்த பலன்**

தன்னிடம் உதவி கோரி வந்தவனிடம் அன்புடன் நடந்து அவனுக்குத் தேவையானவற்றைக் கொடுத்து உதவுவான். ஆனால் இவனது மனம் குரூரத்தன்மை கொண்டது. அரசாங்கத்தில் அதிகாரமும் தகுதியும் பெற்ற பதவியில் இருந்து வருவான்.

**கேட்டையில் உள்ள சந்திரனை செவ்வாய் பார்த்த பலன்**

பற்களிலும், காதுகளிலும் தொந்தரவுகள் ஏற்படும். சமூகத்தின் ஒரு பிரிவினரைச் சார்ந்து தன் வாழ்க்கையை நடத்துவான்.

**கேட்டையில் உள்ள சந்திரனை புதன் பார்த்த பலன்**

பெயரும் புகழும் பெற்று எல்லாவித சௌகரியங்களுடனும் ஆனந்த மயமான வாழ்க்கையை வாழ்வான்.

**கேட்டையில் உள்ள சந்திரனை குரு பார்த்த பலன்**

எல்லாவற்றையும் நன்கு கற்றுணர்ந்தவன். அதனால் தான் பெற்ற அறிவை பலருக்கும் கற்றுத் தருவான்.

**கேட்டையில் உள்ள சந்திரனை சுக்கிரன் பார்த்த பலன்**

இளம் பெண்களுடன் பழகுவதில் இன்பம் அனுபவிப்பான். பணக்காரனாயிருப்பான்.

**கேட்டையில் உள்ள சந்திரனை சனி பார்த்த பலன்**

பலவீனமான உடலையும் ஆரோக்கியத்தையும் பெற்றவன். பிறரிடம் கருணை இல்லாதவன். நல்ல குழந்தைகள் அமையாத துர்பாக்கியவான்.

**கேட்டையில் உள்ள செவ்வாயை சூரியன் பார்த்த பலன்**

குரூரமான குணமுள்ளவன். சகோதரனை பகைத்துக் கொள்பவன், அரசினரால் கஷ்டமுண்டு.

**கேட்டையில் உள்ள புதனை சூரியன் பார்த்த பலன்**

இவனை எல்லோரும் விரும்புவார்கள். உண்மையே பேசுவான். அரசாங்கத்திடமிருந்து பல ஆதாயங்களைப் பெறுவான்.

**கேட்டையில் உள்ள புதனை சந்திரன் பார்த்த பலன்**

சங்கீதத்திலும், பைன் ஆர்ட்ஸிலும் ஆர்வம் உள்ளவன். அவற்றின் மூலமாகப் பணம் சம்பாதிப்பான். பெண்களுடன் எல்லாவித வசதிகளையும் அனுபவிப்பான். இன்பங்களையும் பெறுவான். வண்டி, வாகனம், வீடு எல்லாம் அடையப் பெற்றவன்.

**கேட்டையில் உள்ள புதனை செவ்வாய் பார்த்த பலன்**

அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்பு உள்ளவன். அவர்கள் மூலம் தன் சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வான்.

**கேட்டையில் உள்ள புதனை குரு பார்த்த பலன்**

நல்ல குடும்பம், நன்மக்கட்பேறு, செல்வம் எல்லாம் கிடைக்கப் பெற்ற அதிர்ஷ்ட்டசாலி.

**கேட்டையில் உள்ள புதனை சுக்கிரன் பார்த்த பலன்**

இவனுடன் தொடர்புள்ள எல்லா மனிதர்களும் இவனை விரும்புவார்கள். செல்வம், பெயர், புகழ் எல்லாம் பெற்று சிறப்பாக வாழ்வான்.

**கேட்டையில் உள்ள புதனை சனி பார்த்த பலன்**

உறுதியான உடலும், பலமும் உடையவன். விவாதம் செய்வதில் விருப்பமுள்ளவன். சமூகத்திற்கு நல்ல தொண்டு செய்வான்.

**குரு கேட்டையில் இருந்து அவனை சூரியன் பார்த்த பலன்**

கடவுளுக்குப் பயந்தவன், தப்பான காரியங்களைச் சட்டத்துக்குப் புறம்பான செயல்களைச் செய்யப் பயப்படுவான்.

**குரு கேட்டையில் இருந்து அவனை சந்திரன் பார்த்த பலன்**

பெயர், புகழ், செல்வம் எல்லாவற்றையும் பெறுவான்.

**குரு கேட்டையில் இருந்து அவனை செய்வாய் பார்த்த பலன்**

ஜாதகன் பொல்லாதவன், பிறருடைய கர்வத்தை அடக்குவான், அரசாளுபவரிடமிருந்து வருமானம் பெறுவான்.

**குரு கேட்டையில் இருந்து அவனை புதன் பார்த்த பலன்**

நல்ல பழக்க வழக்கம், நடத்தைகள் இல்லாதவன். பிறருடைய தகராறு, பிரச்சினைகளில் அழையாத விருந்தினன் போல் மூக்கை நுழைப்பான்.

**குரு கேட்டையில் இருந்து அவனை சுக்கிரன் பார்த்த பலன்**

அழகு சாதனங்கள் விற்பான். அல்லது பெண்கள் உபயோகிக்கும் பொருள்களை விற்கும் வியாபாரி. பெண்களுடன் சேர்ந்து இன்பம் அனுபவிப்பான்.

**குரு கேட்டையில் இருந்து அவனை சனி பார்த்த பலன்**

தன் குடும்பத்தினரிடமிருந்து ஏற்படும் சந்தோஷத்தையும், இன்பங்களையும் சுகங்களையும் இழந்தவன். பொல்லாதவனாக இருப்பான். பிறரை கஷ்டப்படுத்துவதில் இன்பம் காண்பவன்.

**சுக்கிரன் கேட்டையில் இருந்து அவனை சூரியன் பார்த்த பலன்**

வேலையில் இவன் காண்பிக்கும் திறமை காரணமாக கவர்மெண்டிடமிருந்து பல நன்மைகளைப் பெறுவான். ஆனால் இவன் மனைவியின் காட்டிக் கொடுக்கும் வஞ்சகத் தன்மையால் அவளால் பல இன்னல்களை அனுபவிப்பான்.

**சுக்கிரன் கேட்டையில் இருந்து அவனை சந்திரன் பார்த்த பலன்**

சமூகத்தில் உயர்ந்த ஸ்தானத்தை அடைவான். ஆனால் அதே சமயம் பெண்களுடன் அதிக நெருக்கமான பழக்கம் வைத்துக் கொளவதால் கடுமையான விமரிசனத்துக்கும், கண்டனத்துக்கும் ஆளாவான்.

**சுக்கிரன் கேட்டையில் இருந்து அவனை செவ்வாய் பார்த்த பலன்**

ஏழையாகவும், விகார உருவமும் உள்ளவனாகவும் இருப்பான்.

**சுக்கிரன் கேட்டையில் இருந்து அவனை புதன் பார்த்த பலன்**

வாழ்க்கையில் பல தடைக்கற்களைக் கடக்க நேரிடும். தான் விரும்பியபடி வாழ முடியாதவன்.

**சுக்கிரன் கேட்டையில் இருந்து அவனை குரு பார்த்த பலன்**

எல்லோரையும் கவர்ந்திழுக்கும் படியான உருவம் படைத்தவன். நல்ல மனைவி, மக்களுடன் செல்வத்தையும் வாழ்க்கை சௌகரியங்களையும் பெற்று வாழ்வான்.

**சுக்கிரன் கேட்டையில் இருந்து அவனை சனி பார்த்த பலன்**

தேவைப்பட்டவர்களுக்கு வாரி வழங்குவான். அமைதியை நேசிப்பவன். ஏகப்பட்ட கறுப்புப் பணம் உள்ளவன்.

**சனி கேட்டையில் இருந்து அவனை சூரியன் பார்த்த பலன்**

பசு, பசுவிலிருந்து கிடைக்கும் பால், வெண்ணை போன்ற பொருட்களால் வருமானம் அடைவான். பிறருக்கு நன்மை விளைவிக்கக் கூடிய காரியங்களைச் செய்வான்.

**சனி கேட்டையில் இருந்து அவனை சந்திரன் பார்த்த பலன்**

கெட்ட மனிதர்களின் கொள்கைகளைப் பின்பற்றி கெட்ட க்ாரியங்களைப் புரிபவன். கொடுமையும் வஞ்சகமும், தந்திரமும், நிறைந்த கயவன். ஏழை.

**சனி கேட்டையில் இருந்து அவனை செவ்வாய் பார்த்த பலன்**

அதிகமாகப் பேசுபவன். பிறருக்கு உதவி செய்யமாட்டான்.

**சனி கேட்டையில் இருந்து அவனை புதன் பார்த்த பலன்**

சட்டத்திற்குப் புறம்பான நேர்மையற்ற செயல்கள் மூலம் சம்பாதிப்பான். நல்ல குடும்ப வாழ்க்கையை அனுபவிக்க மாட்டான்.

**சனி கேட்டையில் இருந்து அவனை குரு பார்த்த பலன்**

அரசாங்கத்தில் வேலைக்கமர்ந்து, உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்று தேவைக்கு, அதிகமாகவே சம்பாதிப்பான். நல்ல மனைவி மக்களுடன் குடும்ப வாழ்க்கையை சந்தோஷமாக அனுபவிப்பான்.

**சனி கேட்டையில் இருந்து அவனை சுக்கிரன் பார்த்த பலன்**

விஸ்தாரமான பிரயாணங்களை மேற்கொள்வான். நல்ல பர்ஸனாலிடி இல்லாதவன். ஆயினும் பெண்களை மயக்கி உடல் உறவு கொள்வதில் விருப்பம் உள்ளவன்.

**கேட்டை நட்சத்திரத்தின் பாதங்களில் கிரகங்கள் இருந்த பலன்**

**கேட்டை 1ம் பாதத்தில் சூரியன் இருந்த பலன்**

விஷம், நெருப்பு, ஆயுதங்கள் இவற்றின் மூலம் இவனுக்கு ஆபத்து ஏற்படும். சந்திரனும் சனியும், சூரியனுடன் இருந்தால் இவன் வாழ்க்கை 9 வருடங்கள்தான்.

**கேட்டை 1ம் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்**

இந்த சந்திரனை பாப கிரகங்கள் ஏதேனும் பார்த்தால் நெருப்பு அல்லது ஆயுதத்தால் மரணம் நேரும். இந்த

ஜாதகனுக்கு பிறந்த .1 வருடத்துக்குள் கண்டம் ஏற்படுமாதலால், ஒரு வருடம் கழிந்த பின்பே இவனுடைய ஜாதகப் பலன்களைக் கூற வேண்டும்.

**கேட்டை 1ம் பாதத்தில் செவ்வாய் இருந்த பலன்**

நெருப்பு, விஷம், ஆயுதத்தால் உயிருக்குக் கண்டம் ஏற்படும். இவனை குரு பார்த்திருந்தால் ஜாதகன் கவர்ச்சிகரமான உருவ அமைப்பும் பொலிவும் செல்வமும் பெற்றவன் பெற்றோர்கள் இவனை அதிகம் நேசிப்பார்கள்.

**கேட்டை 1ம் பாதத்தில் உள்ள புதன் இருந்த பலன்**

இது லக்னமாக இருந்தால் ஜாதகன் கலைகளிலும் சங்கீதத்திலும் விற்பன்னன். இதன் மூலம் நிறைய பணம் சம்பாதிப்பான்.

**கேட்டை 1ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்**

குரு இங்கு இருக்கையில், லக்னம் கிருத்திகை முதல் பாதத்தில் இருந்து குருவை சூரியன், சந்திரன், செவ்வாய், சனி, நால்வரும் பார்த்தால் இந்தக் குழந்தை பிறந்த 3 வருடங்களுக்குள் இறந்து விடும்.

**கேட்டை 1ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

இந்த சுக்கிரனுடன் செவ்வாயும் இங்கிருந்தால் இந்த ஜாதகன் கணிதத்தில் வல்லவன். புகழ் பெற்ற சோதிடனாகவும் இருப்பான். இவன் சாதியில் உள்ளவர்கள் இவனிடம் மரியாதை உள்ளவர்கள். இவன் சொல்லுவதைக் கேட்டு அதன்படியே சொல்வார்கள்.

**கேட்டை 1ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்**

சனி இங்கிருக்கும் போது, சூரியன் கிருத்திகை நட்சத்திரத்தில் இருந்தால் ஜாதகன் மூளையில் கட்டி ஏற்பட்டு அதனால் கஷ்டப்படுவான். பொறாமை குணம் உடையவன். முன் கோபக்காரன், எதற்கெடுத்தாலும் சண்டை போடுவான். வீரதீரச் செயல்களைச் செய்ய ஆசைப்படுவான்.

**கேட்டை 1ம் பாதத்தில் உள்ல ராகு தரும் பலன்**

சாதாரணமாக ராகு இதில் இருந்தால் ஜாதகனுக்கு 2 களத்ரம் ஏற்படும். லக்னமும் இதில் அமைந்தால் 2 களத்ரம் ஏற்படுவது நிச்சயம். முதல் குழந்தையின் ஆயுள் அதிக வருடங்களுக்கு சொல்வதற்கில்லை. இந்த சேர்க்கையை பாபிகள் பார்த்தால் இந்த ஜாதகன் நோயுள்ளவன் ஆவான். 7 வருடத்திற்குள் மரணம் அடைவான்.

**கேட்டை 1ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்**

இந்த அமைப்பு, அரசாங்க உத்தியோகம் கிடைப்பதற்குச் சிறந்தது. செவ்வாயும் இங்கிருந்தால் உத்தியோகத்தில் உயர்ந்த பதவியை அடைவான். இவன் பலவித டிரெயினிங்குக்காக தேர்ந்தெடுக்கப்படுவான். வெளி நாடுகளில் பிரயாணம் செய்வான்.

**கேட்டை 2ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்**

இந்தப் பாதம் லக்னமாய் அமைந்து, சூரியனும் இங்கிருந்தால் ஜாதகன் உயரம் அதிகமுள்ளவன். தலைமுடி குறைவாக இருக்கும் அல்லது உதிர்ந்து வழுக்கை ஆகிவிடும். கண் நோயினாலும் அவதிப்படுவான். உடலில் எப்போதும் அரிப்பு ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். எந்த விஷயத்திலும் பொறுமை என்பதே இருக்காது. எவருக்கும் கருணை காட்ட மாட்டான்.

**கேட்டை 2ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்**

இந்த சந்திரனை சனி பார்த்தால், ஜாதகன் சுயநல வாதியாக இருப்பான். தன்னுடைய மூத்த சகோதரனை வெறுப்பான். எல்லா விஷயங்களும் தெரிந்த மாதிரி வேஷம் போடுவான். ஆனால் வாழ்க்கை என்னவோ மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். முன் கோபம் அதிகமுள்ளவன். தனக்குச் சொந்தமில்லாத அன்னியப் பெண்களிடம் அதிக அளவில் உடலின்பம் பெறுவதில் ஈடுபடுவான்.

**கேட்டை 2ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்**

அரசாங்கத்திடமிருந்து எதிர்பாராத வகையில் ஆதாயங்கள் கிடைக்கும். விவசாயம் மூலம் வருமானம் பெறுவான். விவசாயம் சம்பந்தமாக அலைந்து பல இடங்களுக்குச் சென்று அதனால் வருமானம் பெறுவான்.

**கேட்டை 2ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்**

இந்த புதனுடன் சூரியனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் மென்மையாக பேசுவான். நல்ல குணம் உடையவன். கண்ணியம் மிக்கவன். பண விஷயத்தில் திடீரென ஏற்றத் தாழ்வுகள் ஏற்படும். கவர்ண்மெண்ட் உத்தியோகத்தில் இருப்பான்.

செவ்வாயுடன் இருந்தால் ஜாதகன் துரதிர்ஷ்டம் பிடித்தவளை மனைவியாக உடையவன். ஜாதகனுடைய எல்லா காரியங்களிலும் தலையிட்டு குளறுபடி செய்து விடுவாள். அதனால் இவனுடைய நிலைமை படுமோசமாக ஆகிவிடும்.

இந்த சேர்க்கையை சுக்கிரன் பார்த்தால் நிலைமை மாறிவிடும். தங்கத்தின் மூலம் பணவரவு ஏற்படும். மனைவியும் அதிர்ஷ்டசாலியாக இருப்பாள்.

**கேட்டை 2ல் உள்ள குரு தரும் பலன்**

ஜாதகன் நன்கு படித்தவன். செல்வந்தன், சாஸ்த்திரங்களை கற்றுணர்ந்த புலவன். செவ்வாயும் சூரியனும் இந்த குருவுடன் சேர்ந்தால் ஜாதகன் வாழ்க்கையில் மிக உன்னதமான நிலையை அடைவான். செல்வம் செழிக்கும். வாழ்க்கை வசதிகள் பெருகும். சந்தோஷம் உண்டாகும். ஒரு மந்திரியாகக் கூட ஆகக் கூடும்.

**கேட்டை 2ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

பிறர் நம்பும்படி பொய் பேசுபவன். அதிகமான இன்பத்தைப் பெண்களுடன் உறவாடிப் பெறுவான்.

ரசாயனப் பொருள்கள் விற்பனை மூலம் சம்பாதிப்பான். அல்லது பெண்கள் உபயோகிக்கும் ஆடம்பர பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலை வாயிலாக பொருளீட்டுவான்.

**கேட்டை 2ல் உள்ள சனி தரும் பலன்**

காக்கை போன்ற கன்னங்கரிய நிறம் உடையவன். பார்க்க சகிக்காத உருவம் உடையவன். தந்திரமும், ஏமாற்று வேலையும் இவன் உடன் பிறப்புகள். இருந்தாலும் தன்னுடைய ஏமாற்றும் டெக்னிக்கால் நல்ல அதிகாரத்தையும் பெயரையும் பெற்று அனுபவிப்பான். ஏதாவது தொற்று வியாதி ஏற்பட்டு கஷ்டப்படுவான்.

**கேட்டை 2ல் ராகு தரும் பலன்**

ஜாதகன் பொல்லாத்தனமும், பிறரை ஏமாற்றும் குணமும் கொண்டவன். தன்னுடன் பிறந்தவர்களையும் ஏன் தன் சொந்த பெற்றோர்களையும் கூட, தன் சுயதேவைக்காக ஏமாற்றத் தயங்கமாட்டான். இவன் சதா நோயுள்ளவன். இருப்பினும் கீழ்த்தரப் பெண்களுடன் அடிக்கடி உடலுறவு கொள்வான்.

**கேட்டை 2ல் உள்ள கேது தரும் பலன்**

கேது கேட்டை 1ல் உள்ள பலனையே இங்கும் தருவான். ஆனால் இந்த கேதுவுடன் சுக்கிரன் சேர்க்கை அல்லது பார்வை மூலம் சம்பந்தப்பட்டால் ஜாதகன் ஆட்டோமொபைல் பிஸினஸ்ஸில் ஈடுபட்டு கணிசமான லாபத்தைப் பெறுவான்.

**கேட்டையில் 3ல் உள்ள சூரியன் தரும் பலன்**

ஆணுக்கு ஜனனம் பகலில் ஏற்பட்டு, இந்த இடத்தில் இருக்கும் சூரியனை, சனியும் செவ்வாயும் பார்த்தால் இந்த ஜாதகன் பிறந்த உடனேயே அவன் தந்தையின் மரணம் சம்பவிக்கும். பெண் குழந்தையாக பிறந்தால் தந்தைக்கு எந்த கெடுதியும் ஏற்படாது.

**கேட்டை 3ல் உள்ள சந்திரன் தரும் பலன்**

இதில் சனியும் இருந்தால், ஜாதகன் வயதான பெண்களிடம் பிரியம் உள்ளவன், சாஸ்த்திரங்களை உணர்ந்தவன். இவன் மனைவி பெல்லாதவளாக இருப்பாள். பெற்றோர்களை கண்டபடி சாடுவான். வார்த்தைகளால் தாக்குவான். செல்வமற்றவனாக வாழ்வான்.

**கேட்டை 3ல் உள்ள செவ்வாய் தரும் பலன்**

செவ்வாய், புதன், சுக்கிரன், சனி எல்லோருடனும் லக்கினமும் இங்கு அமைந்தால் ஜாதகன் குபேரனைப் போல் வாழ்வான்.

**கேட்டை 3ல் உள்ள புதன் தரும் பலன்**

இந்த புதனுடன் சூரியனும் செவ்வாயும் சேர்ந்தால் ஜாதகன் புகழுடன் விளங்குவான். வெட்கம் மானம் இல்லாதவன். கொடூரமானவன். செல்வம், மனைவி மக்கள் அற்றவனாக இருப்பான்.

**கேட்டை 3ல் உள்ள குருதரும் பலன்**

இந்த குருவுடன் சூரியன், சந்திரன், செவ்வாய் ஆகிய மூவரும் சேர்ந்திருந்தால், ஜாதகன் ஒரு கோடீஸ்வரனாக இருப்பான். பெண்கள் இவனை மிகவும் விரும்புவார்கள். எந்த விதக் கவலையும் இல்லாத மனிதன். எல்லா விஷயங்களையும் அறிந்த கில்லாடி யாக இருப்பான்.

**கேட்டை 3ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

இந்த அமைப்பு ஆணுக்கு இருந்தால் அவன் ஒரு எஞ்ஜினியராக இருப்பான். பெண்ணுக்கு இருந்தால், அவள் ஒரு டாக்டராக இருப்பாள். சிலர் உலோகங்கள் விற்கும் வியாபாரியாகவும் இருப்பதைக் காண முடியும்.

**கேட்டை 3ல் உள்ள சனி தரும் பலன்**

ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியை உடையவன். சந்தோஷம் என்பது இவன் அனுபவிக்காத ஒன்று. முதல் திருமணம் 22வது வயதில் நடைபெறும். இவனுடைய கொடுமையும் துன்புறுத்தலும் தாங்கமுடியாமல் இவன் மனைவி வேறு நபருடன் ஓடிப்போவாள்.

**கேட்டை 3ல் உள்ள ராகு தரும் பலன்**

தன்னுடைய எண்ணங்களையும், யோசனைகளையும் பிறருக்குத் தெளிவாகக் கூறி அவர்களைத் தெரிந்து கொள்ளும்படி செய்வதில் சமர்த்தன். இவனுடைய வாழ்க்கை சிதைந்ததாக இருக்கும்.

**கேட்டை 3ல் உள்ள கேது தரும் பலன்**

நல்ல நண்பர்கள் இவனை எப்போதும் சூழ்ந்து இருப்பார்கள். பலதரப்பட்ட விளையாட்டுக்கள் அல்லது மனமகிழ் நிகழ்ச்சிகளை பொறுப்பேற்று நடத்துவான். பணவசதி உடையவன்.

**கேட்டை 4ல் உள்ள சூரியன் தரும் பலன்**

பழங்கால ரிஷிகளின் கூற்றுப்படி, இந்த சூரியனை இரண்டு பக்கமும் பாபிகள் சூழ்ந்திருந்தால் இவன் பிறந்த உடனேயே இவன் தந்தையின் மரணம் ஏற்படும். ஆனால் அனுபவத்தின் மூலம் இவன் தந்தை மரணமடையாமல் நீண்ட காலம் வாழ்வதை பார்க்க முடிகிறது. எப்படி இருந்தாலும், இந்த சூரியன், பாபிகளின் நடுவில் இருந்து, சனியும் செவ்வாயும் மிருகசீர்ஷம் 4ம் பாதத்தில் அல்லது திருவாதிரை நட்சத்திரத்தில் இருந்தால் அப்போது ஜாதகன் பிறந்த உடனே அவன் தந்தை விபத்தினால் மரணமடைவான்.

**கேட்டை 4ல் உள்ள சந்திரன் தரும் பலன்**

லக்னம், குரு இருவரும் ஹஸ்த நட்சத்திரத்தில் இருந்தால் ஜாதகன் தன் மனைவி/கணவனை இழப்பான். இவன் நிரம்ப படித்தவனாயும், டாக்டர் அல்லது சயன்டிஸ்ட் ஆக உயர்ந்த நிலையில் இருப்பான். மனைவி/கணவன் இழந்த துயரத்தால் அல்லது பிரிவினால் ஏற்பட்ட கஷ்டத்துடன் தன் குழந்தைகளால் மனம் டென்ஷன் அடையும்.

**கேட்டை 4ல் உள்ள செவ்வாய் தரும் பலன்**

செவ்வாய் இருக்கையில், ராகு கேட்டை 4லிருந்து 3வது நட்சத்திரத்தில் இருந்து, அந்த ராகுவிலிருந்து 3வதாக சனி இருந்தால் இந்த ஜாதகனின் மனைவி இறப்பது நிச்சயம்.

**கேட்டை 4ல் உள்ள புதன் தரும் பலன்**

இந்த புதனுடன், குருவும் சனியும் சேர்ந்தால் ஜாதகன் பணக்காரனாகவும், தொழிற்கலையில் சிறந்தவனாகவும் இருப்பான். இவன் கண்கள் பாதிப்பு அடையும்.

**கேட்டை 4ல் உள்ள குரு தரும் பலன்**

இந்த குருவுடன், சூரியன், சந்திரன், செவ்வாய், மூவரும் சேர்ந்தால், இந்தக் குழந்தை 5 வயதிற்குள் இறக்கக் காரணமாவார்கள். இந்த குருவுடன் செவ்வாயும் சனியும் சேர்ந்தால், ஜாதகன் கீழ்த்தரமானவன். கருணையில்லாதவன். உடலில் காயம் பட்டவனாக இருப்பான். இருந்தாலும் இவன் அரசாங்கத்தால் கௌரவிக்கப்படுவான்.

**கேட்டை 4ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

செல்வத்தை எல்லாம் அழித்து விடுவான். வாழ்வில் வசந்தம் இருக்காது. 43 வயதுக்குப் பிறகு அதிகாரமும் அந்தஸ்தும் பெறுவான். தான் அழித்த சொத்தையும் செல்வத்தையும் திரும்ப சம்பாதிப்பான்.

**கேட்டை 4ல் உள்ள சனி தரும் பலன்**

ஜாதகன் சுறுசுறுப்பானவன், செல்வந்தன், நீதி நேர்மையற்ற முறையில் செல்வம் சேர்ப்பான். ஆனால் அதை அனுபவிக்க அதிர்ஷ்டமில்லாதவன். உடலில் பலவித நோய்கள் தோன்றும். நடுத்தரக் கல்வியை உடையவன்.

**கேட்டை 4ல் உள்ள ராகு தரும் பலன்**

குடும்பத்தினர் இவனை வெறுத்து ஒதுக்குவார்கள். உடல் முழுவதும் நோயுள்ளவன். தந்திரசாலி, வஞ்சகன், பிறரை ஏமாற்றிப் பிழைப்பான்.

**கேட்டை 4ல் உள்ள கேது தரும் பலன்**

இவர்கள் பெரும்பாலும் பிஸினஸ்ஸில் ஈடுபடுவார்கள். வாழ்க்கை முழுவதும் நல்ல சுகத்தையும் சந்தோஷத்தையும் அனுபவிப்பார்கள். மத ஸ்தாபனங்களில் முழுமனதுடன் சிரத்தையாக ஈடுபட்டு காரியமாற்றுவார்கள்.

## அத்தியாயம் - 26

### தனுசு ராசி

***(அல்லது லக்னத்தில் பிறந்தவர்கள் தன்மைகள்)***

**(மூலம், பூராடம் மற்றும் உத்திராடம் முதல் பாதம் உள்ளிட்டவற்றில் பிறந்தவர்கள்.)**

சிந்தையில் வணிகனாகும் திருவிரு மார்ப னாகும்
அந்தமாம் அழகனாகும் அரிவையர் வசந்தனாகும்
கந்தமாம் பானுக் கந்த காதலாய் கல்வி கற்கும்
தந்தை தாய் தம்மைப் பேணும் தக்கதோர்தனுவி னானே! 169

(இ-ள்.) தனுர் லக்னத்தில் பிறந்தவன் வியாபார நோக்குள்ளவன். விஷ்ணுவைப் போல் அழகுள்ளவன். லக்ஷ்மீகரம் பொருந்தியவன். பெண்கள் விரும்பும் கவர்ச்சியுடையவன். அவர்கள் வசப்பட்டு அடங்கி நடப்பவன். தந்தை மற்றும் தாயைப் பாதுகாப்பவன் என்பதாம்.

இது நாலாவது உபய ராசி, நெருப்பு, ஆண் ராசி தீர்க்க ராசி, தருமசீலன், தைரியம், பேராசை, குறிக்கோள் உண்டு. எதையும் பொருட்படுத்தாமல் எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருப்பவர்கள்.

கண்டதும் காதல் உண்டு, காமம் இரண்டாம் பக்ஷம். இவர்கள் மெத்தப் படித்தவர்கள். சாதுத்தன்மை உள்ளவர்கள். இதனால் வாழ்க்கையில் நிறைய ஏமாற்றம் உண்டு. நிறைய தாக்ஷணிய சிந்தை உள்ளவர்கள். அதனால் அதிக இழப்பும் உண்டு.

**பெண்கள்**

இதில் பிறந்த பெண்கள் சபல சித்தம் உள்ளவர்கள். எதையும் தாங்களே செய்து முடிக்க இயலாதவர்கள். எதற்கும் கணவரையே நம்பி இருப்பவர்கள். கண்டதும் காதல்

இருந்தும் அதை முடிவு செய்ய முடியாமல் பிறகு முடிவு செய்து சில சமயம் வேறு ஒருவரை மணக்க வேண்டிய கட்டாயத்துக்காளாகி மணப்பவர். ஆனால் மண வாழ்க்கையில் மகிழ்ச்சி உண்டு.

**சத்யா சார்யர் மதப்படி தனுசு லக்னம் பற்றி**

பெருத்த உதடு, பல், மூக்குகளை உடையவர்கள். கபவாத தேகமுள்ளவர். தடித்த மர்ம ஸ்தானம் தொடைகளை யுடையவர்கள். அழகற்ற நகமுள்ளவர்கள். எப்பொழுதும் ஏதாவது ஒரு காரியத்தில் முயற்சியுள்ளவன். சூரன். அர்ப்பர்களையும் நீசர்களையும் சேவிப்பவன். திருட்டு, அக்னி, அரசன் இவர்கள் மூலம் இவர்களுடைய தனம் நாசமடையும். சில்பம், பிற சாஸ்த்திரங்களை நன்கறிந்தவன். பலரால் கொண்டாடத்தக்கவன். தன் உடன் பிறந்தோரை ஹிம்சிப்பவன். அவர்களால் ஹிம்சிக்கப்படுவபனும் ஆவான். அவர்களால் இழப்பும் உண்டு. அன்ய தேசத்தில் தொழில் செய்து சம்பாதிப்பவன். தர்மத்தில் அதிகப் பற்றுள்ளவன். களத்ர விரோதி, அதாவது மனைவிக்கு எதிரி. முகரோகி, நாற்கால் விலங்குகள் சர்ப்பம் தீண்டல், அரசன் மூலம் கட்டுப்படல், அல்லது அரச தண்டனை முதலியவற்றால் மரணம் சம்பவிக்கலாம்.

**பிருகு சம்மிதைப்படி தனுசு லக்னப் பலன்**

இவர்கள் மாநிறமுள்ளவர்கள். பெரிய பற்களையும் குதிரை போன்ற தொடையும், அழகான தோற்றமும் உள்ளவர்கள். மிகவும் காரிய சமர்த்தர். பிறரிடம் அவனுக்கு மதிப்பு உண்டு. புத்திசாலி, சாத்வீக குணமுள்ளவன், உயர்ந்த குணசாலி. உண்மையைக் காப்பாற்றுபவன். வீரனாகவும் பணக்கரனாகவும் இருப்பான். எப்பொழுதும் பயணம் செய்வதில் விருப்பமுள்ளவன். உழைப்பவன், தேவபக்தி குருபக்தி உண்டு. பெண்கள் காதலில் கட்டுண்டு நிற்பவன். பலகலைகளும் கற்று வல்லவனாக இருப்பவன். சில சமயம் கவிஞனாகவும் எழுத்தாளனாகவும் இருப்பவன்.

இவன் இளமைக் காலத்தில் அதிக சுக புருஷன், மத்திம வயதில் சாதாரண நிலையும், அந்திம காலத்தில் தனம் தான்ய வளத்துடன் வாழ்பவன். இவனது 22, 23வது வயதுகளில் அதிக தன லாபம் ஏற்படும்.

**பிறநூல்கள் கருத்துப்படி தனுசு லக்னம்**

இவர்கள் எந்தக் காரியத்திலும் லாப நஷ்டக்கணக்குப் பார்ப்பவர்கள். சுகந்த பரிமளப் பொருள்களில் எப்பொழுதும் ஆசை உண்டு. படிப்பாளி, சத்தியவான், குணவான், பேச்சாளி, சுகவான், தனவான், அதிக நண்பர்கள் உள்ளவன், சஞ்சாரி, ஏதாவது உத்யோகத்தில் இறுதி வரை இருந்துகொண்டு இருப்பார்கள். போர்த் தொழிலில் வல்லவர். (தனுசு வில் எனவே போர்) உயர்ந்தோர்பால் மதிப்புள்ளவர். வாகன சுகம் உண்டு. ஆளடிமை உள்ளவர். தைரியசாலி.

நல்ல கட்டான உடல் வாகும், முக்கோண முகமும், சிவந்த நிறமும் உள்ளவர். உதட்டில் குழிவிழுந்த அதிர்ஷ்ட அடையாளம் உண்டு. நிறைய ரோமம் உள்ளவர்.

கபடமற்றவர், நாணய முள்ளவர்கள், குறிக்கோளே கண்ணாக இருப்பவர்கள். தத்துவம், ஞானம், வேதாந்தம் முதலியவற்றில் ஈடுபாடுண்டு. தர்ம சாஸ்த்திரம் பொருளாதாரம், இவற்றில் ஈடுபாடுண்டு. பற்றுள்ளவர். அனைவர் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். குலசிரேஷ்டர், வீரர், ஊக்கத்துடன் இருப்பவர். பணிவும் அடக்கமமும் உண்டு. பரோபகார சிந்தனையும் உண்டு.

தலைமை ஆசிரியர், வழக்கறிஞர், ஆடிட்டர், பொருளாதாரத்துறை நிபுணர், நீதிபதி, புரோகிதத் தொழில், வங்கித் தொழில், மடாதிபதி, மதத் தலைமை, கல்வித்துறை, பதிப்புத்துறை, புத்தக வெளியீடு போன்ற தொழில்கள் அமையலாம்.

*3, 4, 5, 12, 15, 18, 32, 40, 47* வது வயதுகளில் கண்நோயாலும், உஷ்ண தேகத்தாலும் பாதிப்புண்டாகும். லக்னாதிபதி, ஆயுள் காரகர் ஆயுள் ஸ்தானாதிபதி மூவரும் வலுத்தால் 71 வயது வரைஜீவித்து இருப்பார்கள்.

**இந்த லக்னத்திற்கு நல்ல யோகம் அளிப்பவர்கள்**

புதன் + சூரியன்

சாதாரண யோக மளிப்பவர்

குரு + செவ்வாய்

எந்த பலனும் தராதவர்

செவ்வாய் + புதன்

குரு + சூரியன்

**கோள்கள்**

சூரியன் - 9ஆம் அதிபன் - நல்ல யோகம் செய்பவன்.

செவ்வாய் - 5, 12க்குடையவன். சுபம் அசுபம் இரண்டுமற்றவன்.

புதன் - 7, 10க்குடையவன். சாமானிய யோகம், மற்றும் செயலற்றவன்.

குரு லக்னம் 4க்குடையவன் - காரகன் அதாவது சுபன்

சுக்கிரன் 6, 11க்குடையவன் - அசுபன் சனி, தன 3ம் ஆதிபதி - நல்லது கெட்டது இரண்டும் கெட்டவன் செயலற்றவன்.

**வேறு கருத்துப்படி**

*இந்த லக்னத்திற்கு பாபர் - சுக்கிரன்*

*சுபன் - சூரியன்*

*கிரக சேர்க்கைப் பலன்*

*சூரியன் புதன் - ராஜ யோகம் இருவரும் யோக காரகர்*

*பாதகன் - புதன்*

*மாரகர் - புதன், சனி*

***குறிப்பு:*** *7ம் அதிபதி என்ற வகையில் புதன் மாரகன் மற்றும் பாதகன். 6, 11க்குடைய வகையில் சுக்கிரன் பாபி, 2ம் அதிபதி என்ற வகையில் புதன் மாரகன்.*

*அதிர்ஷ்ட நாள் - வியாழன், சனி*

*அதிர்ஷ்ட நிறம் - வெள்ளை, கிரீம், வெளிர் மஞ்சள் மற்றும் வெளிர் சிவப்பு.*

*அதிர்ஷ்ட ரத்தினம் - கனகம் அல்லது நீல புஷ்பராகம்*

*அதிர்ஷ்ட எண் 3, 9 மற்றும் 5*

*இவர்கள் 77வது வயதில், மார்கழி மாதம் கிருஷ்ண பக்ஷ இரவில் விசாக நக்ஷத்திரம் கூடிய நாளில் இயற்கை எய்தக் கூடும்.*

❋❋❋

# அத்தியாயம் - 27

## மூலம் நட்சத்திரம்

**(இது 19வது நக்ஷத்திரம் இராசி மண்டலத்தில் 240 பாகை முதல் 253 பாகை 20 கலை வரை பரவியுள்ளது.)**

| | |
|---|---|
| தமிழ்ப் பெயர் | - மூலம் |
| வடமொழிப்பெயர் | - மூலம் |
| அரபுப் பெயர் | - அஷ் சஹீவாஹ் (ASH - SHAULAH) |
| கிரேக்கப்பெயர் | - ஸ்கார்பியானிஸ் (SCORPIONIS) |
| சீனப்பெயர் | - யுயிஜ |

சாகல்யர் கருத்துப்படி மூல நட்சத்திரம் 9 உடுக்களைக் கொண்டது. இது சிங்கத்தின் வால் போன்றிருக்கும் என்பார்கள். சிலர் இது 11 உடுக்கள் கொண்டது என்றும், தேள் கொடுக்கு போன்று வடிவுள்ளது என்றும் கூறுவர். இது 2 நக்ஷத்திரமே கொண்டது என்று கூறும். இதற்கு விக்ரது என்ற பெயரும், ஊர்ந்து செல்வது என்பதைக் குறிக்கும். மூலம் உதிக்கும் போது நோய்களுக்கு பெரும்பாலும் வேகம் குறைவும் நீங்கவும் இடமுண்டு.

மூலம் என்றால் வேர் என்று பொருள். ஆதிநாளில் மூலத்தை ஆதாரமாகக் கொண்டுதான் நக்ஷத்திரங்களைக் கணக்கிட்டனர். இதனால் மூலம் என்பதும் ஆரம்பித்தலையும் குறிக்கும்.

மூல நக்ஷத்திரத்தின் அதிதேவதை நிருடி என்ற பெண் தெய்வம் என்றும் இவள் கருநிறம் கொண்டவள் என்றும் கரிய நிறத்துணிகள் அணிந்தவள் என்றும் கூறுவர். இவள் அசுபமே குறிப்பதால், இந்த நட்சத்திரத்தில் எந்தத் தொழிலைத் தொடங்கினாலும் பூஜை செய்து விட்டுத்தான் தொடங்க வேண்டும்.

### *மூல நக்ஷத்திரத்தில் பிறந்தவர் பலன்*

### *சுவடி எண் 1500ல் மரண கண்டிகை சொல்லுபவை*

அகமுடை செல்வனாகும் ஆயுதம் பிடிக்க வல்லன்
சுகமுக வசியனாகும் சுற்றத்தார் தமக்கு நல்லான்
மிகவுயர் கல்வி கற்றும் வேந்தர்க்கும் இனிய னாகும்
முகமதும் அழகனாகும் மூல நாள் தோன்றி னானே. 170

(இ-ள்.) மூல நட்சத்திரத்தில் பிறந்தவன் தன்மைகள் வருமாறு. இவன் வீட்டில் செல்வம் மிகுந்திருக்கும். ஆயுதம் பிடித்து போராட வல்லவனாவான். இவன் காண்பவர் மனம் மகிழும் அளவுக்கு வசீகரத் தோற்றமுள்ளவன். இவன் தன் சுற்றத்தினருக்கு நல்லவன் ஆவான். (உதவிகள் முதலியவை செய்வான்) இவன் உயர்ந்த கல்வி கற்பான். அரசர்கள் தோழமையுள்ளவன். இவன் முகம் அழகாக இருக்கும். இவையே மூல நாளில் தோன்றியவன் குணங்களாகும் என்க.

இன்னானுக்குத் தெய்வம் ஈஸ்வரன். யோகினி - வராகி. பூதம் - வாயு, ஜாதி - பிராமணன், கோத்திரம் - அகஸ்தியன், யோனி - பெண் நாய், பட்சி - செம்போத்து, கணம் - ராக்ஷதம், வியாழக்கிழமை - ஜென்ம வாரம். இதன் உருவம் - நான்கு மீன் எக்காளம் போன்றிருக்கும். மார்கழி மாதம் சூனியம். 20 நாழிகைக்குமேல் 4 நாழிகை விஷம்.

இந்நாளில் சுரம் தோன்றில் 7 நாளில் விடும். விடாத போது வேத மந்திரத்தால் ஓமம் பண்ணுவது. கருப்பஞ்சாற்றிலே சாதம் வைத்து தெற்கு திக்கில் பலி இடுவது. திசை தானம் பண்ணுவது. உடுத்தின வஸ்திரம், கம்பளி, ஆடு தானம் பண்ணுவது. உளுந்தும், சோறும், கடுகும் கலந்து நாலு திசைக்கும் பலி இடுவது.

### இவன் குணம்

திரு (செல்வம்) உடையவன். செம்மையுடையவன், சிற்றுண்டி விருப்பம் அதிகம் கோபமுடையவன். பண்டிதனாக இருப்பான். செய்நன்றி மறவாதவன். வீண் சொற்கள் பொறாதவன். புறவடி உயர்ந்து மூக்கும்

உயர்ந்திருக்கும். இவன் கண்கள் செவ்வரி படர்ந்திருக்கும். வலது பக்கத்தில் மச்சம் அல்லது மறு இருக்கும். யாத்திரைக்குப் பால் குடித்துப் பயணப்படவும்.

**ஜாதக அலங்காரம் சொல்லும் மூல நட்சத்திரப் பலன்**

மண்டியநித் திரைப் பிரியன் புறந்தாளுன்னதனாம்
வழுவாமல் செய்தருமம் செய்புத்தி மானாம்
திண்டிறல் ஆயுதந்தன்னால் சீவனஞ் செய்திடுவான்
திகழ்தாய் தந்தைக்கினியன் சிறந்தவை சீலன்
கண்டசிறு திண்டி தின்னப் பிரியவான் லோபி
கண்டசிறுகச் சிவந்திருக்கும் கல்வி மானாம்
மிண்டுகளே செய்திடுவான் உறவினரைச் சேரான்
முன்கோபி கொடியனாகும்மூலத் தானே. 171

(இ-ள்.) மூல நட்சத்திரத்தில் பிறந்தவன் தூக்கத்தில் அதிக விருப்பமுடையவன். புறவடி உயர்ந்திருக்கும். செய்ய வேண்டிய கருமங்களை தவறின்றித் திருத்தமாகச் செய்பவன். மிக்க வலிமையான ஆயுதத்தால் தொழில் செய்து பிழைப்பவன். தாய் தந்தையருக்கு அன்புடையவன். புத்திசாலி, மேன்மையான தவமுடைய நற்குண சாலி, கண்ணால் கண்ட பலகார வகைகளை உண்பதில் விருப்பமுடையவன். ஈகையில்லாதவன். சிவந்த கண்ணுடையவன். தீமைகள் செய்பவன். தன்சுய ஜனங்களைச் சேர்ந்து வாழாதவனுமாவான்.

**பிருஹத் ஜாதகம்**

கர்வம், அதிக தனம், சுகம், பிறருக்கு இம்சை செய்யாமை, ஸ்திர புத்தி, விஷயங்களை அனுபவித்தல், இவைகளை உடையவன் என்றறியவும்.

**பிற நூற் செய்திகள்**

இது 5 நக்ஷத்திரக் கூட்டம் என்பர். இதன் உருவம் சிங்கம் போன்றது என்பாருமுளர். ஆம் மூலம் அரசாளும் பெண் மூலம் நிர்மூலம் என்ற இரண்டு பழமொழிகளில் இரண்டாவது, அவ்வளவு பொருந்தாது. மூலத்தில் பிறந்த

பெண்ணின் மாமனாருக்கு ஆகாது என்பர். முதல் பாதத்தில் பிறந்த பெண்ணுக்குத்தான் இந்த தோஷமென்றும் மற்ற பாதங்களில் பிறந்த பெண்களுக்கு இந்த தோஷமில்லை என்றும் நூல்கள் கூறுவதும் அறியத்தக்கது. எதுவும் அவர் அவர் ஜாதக அமைப்புப்படியே நடக்கும் என்பதை மறக்கக் கூடாது.

இது கீழ் நோக்கு நாள் இதன் ஒலி "ஏ" என்பதாகும். ஒற்றை எண். இருப்பிடம் பெரிய நகரம், மரம் - மராமரம், புள் - சக்கரவாஹம் (அசணப்பறவை அல்லது அன்றில்) உக்ர நக்ஷத்திரம் வருண மண்டலத்தைச் சார்ந்தது.

இது ராம பக்த ஹனுமான் பிறந்த நக்ஷத்திரம். அரக்கர்கள் ராவணாதியர் நக்ஷத்திரம் இதுவே என்பர். இதனால் ராமாயணத்தில் சீதாபஹரணத்தின் பின் ராமன் துக்கப்படும்போது அரக்கர் நக்ஷத்திரமான மூலத்தில் வால் நக்ஷத்திரம் தோன்றியதால் ராவணனும் அவன் குலமும் அழியும் என்று இலக்குவன் இராமனைத் தேற்றுவதை இராமாயண யுத்தகாண்டத்தால் அறியலாம். சமீபத்தில் தோன்றிய ஹேலி என்ற வால் நக்ஷத்திரம் இதுவே என்றும் இனம் காணப்பட்டுள்ளது.

இந்த நக்ஷத்திரத்தில் தெற்கு மேற்கு திசைகளில் செய்யும் யாத்திரை வெற்றியடையும்.

விவாஹம், சீமந்தம், நாமகரணம், உபநயனம், வியாதியஸ்தர் நீராடல், விவசாய வேலைகள், மந்திரப் பிரயோகம், சிற்ப சித்திர வேலைகள், பயணம், முதலியவற்றிற்கு இது ஏற்ற நக்ஷத்திரமாகும்.

ஜூலை மாதம் முடிய இரவில் கும்பலக்னக் கடைசியில் இதை விண்ணில் பார்க்க முடியும்.

இந்த நக்ஷத்திரத்தில் ருதுவான பெண்கள் நன்மக்களைப் பெற்று நல்ல வாழ்க்கை அமையப் பெறுவர்.

மூல நக்ஷத்திரம் முதல் இரண்டு நாழிகை அபுக்த மூலம் என்பர். இந்த நாழிகையில் பிறந்தவர்கள் பிறரால் எடுத்து வளர்க்கப்படுவார்கள்.

*மூலம் 1ம் பாத ஜனனம் - தகப்பனுக்கு ஆகாது*

*மூலம் 2ம் பாத ஜனனம் - தாய்க்கு ஆகாது*

*மூலம் 3ம் பாத ஜனனம் - தன நாசம்*

*மூலம் 4ம் பாத ஜனனம் - தோஷமில்லை நல்லது*

மூல நட்சத்திர ஆதியந்த பரம நாழிகையை ஒரு விருட்சமாகப் பாவித்து அதை பாகமாக்கி ஒவ்வொரு பாகத்துக்கும் பலன் சொல்லப்படும். அதன் விவரம் வருமாறு.

*முதல் 4 நாழிகைக்குள் வேர் - சர்வ நாசம்*

*அடுத்து 7 நாழிகை - அடிமரம் தனநாசம்*

*அடுத்து 10 நாழிகை - (மரப்பட்டை) சகோதர நாசம்*

*அடுத்து 8 நாழிகை - (கிளைகள்) - மாதுர் நாசம்*

*அடுத்து 9 நாழிகை - (இலைகள்) ஆளடிமை*

*அதை அடுத்து 5 நாழிகை - ராஜ சன்மானம்*

*அதை அடுத்து 6 நாழிகை - விதைகள் பூமி லாபம்*

*அதை அடுத்து 6 நாழிகை - (காய்ந்த சருகுகள்) அற்பாயுள்*

*மூலநட்சத்திர சுக்ல பக்ஷ ஜனனம் - சுபம்*

*மூல நட்சத்திர அமர பக்ஷ ஜனனம் - அசுபம்*

மூல நட்சத்திர அமாவாசை, பௌர்ணமி ஜனனங்கள் மத்திம பலனைத் தரும்.

தமிழ் மாதங்களில் வருகின்ற மூல நட்சத்திரத்தில் ஜனனபலன் வருமாறு

1) வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி மாதங்களில் மூல நட்சத்திரம் சொர்க்க மூலம் எனப்படும். இதில் ராஜ்ய சம்பத்து, யாக ஜீவனம் உண்டாகும்.

2) ஆனி, ஐப்பசி, புரட்டாசி, பங்குனி, மாத மூல நட்சத்திரம் பாதாள மூலம் எனப்படும். இதில் பிறருக்கு தன நாசம் ஏற்படும். இவர்களுக்கு எவ்வளவு வந்தாலும் போதாது.

3) சித்திரை, மார்கழி, ஆடி, தை மாத மூல நட்சத்திரம் மத்திய மூலம் எனப்படும். இதில் பிறப்பவர்கள் மேற்கொள்ளும் காரியங்களெல்லாம் நாசம் என்று கூறுவர்.

பொதுவாக வளர்பிறையில் வரும் மூலத்தில் பிறப்பவர்களுக்குச் சுபபலனும், தேய்பிறையில் மூல நட்சத்திரத்தில் பிறப்பவர்களுக்கு - அசுப பலனும் உண்டாகும் என்பர்.

இது நவதாரை என்ற கொள்கையும் உண்டு. வெள்ளை நிறம் நபும்சகம் (அலி) இதன் 4ம் பாதம் மிருத்யு பாதம் எனப்படும். இது முதலில் சொன்னவற்றிற்கும் அல்லாமல் அன்ன பிராசனம். ஆக்ரேண ஸ்தாரீ பாகம் (யாகத்தில் முதல் தாம்பூலம் வழங்கல்) பில்லி, ஏவல் போன்ற அபிசார காரியங்களுக்கு மாற்று செய்தல் முதலியவற்றிற்கு ஏற்றது. இந்த நாளில் கடன் தரக்கூடாது.

ஞாயிறு மரண யோகம். ஞாயிறு செவ்வாய் சேர்ந்தால் வார யோகம். மூலம் தனுர் லக்னத்தில் நகரங்கள் ஸ்தாபிக்கலாம். சிவந்த ரக்த மேகம் கண்டால் எட்டு நாளில் மழை, ஜ்வரம் வந்தால் மரணம் அல்லது அதற்கு சமமான கண்டம். 10 நாள் பீடை மீன் மாமிசம், கள், போளி நைவேத்தியம், நக்கவர்ண அசோக புஷ்ப பூஜை, எருமை கொம்பு கொளுக்கி க்ராம் மோஹீணாம் பராபரா என்ற மந்திரம்,

நெய் உருண்டை அல்லது நீள கிழங்குகள். சாவித்திரி மந்திரம் 108 தடவை ஹோமம் நிர்நாடி தேவதையின் பொருட்டு பாயஸத்தோடு கூடிய அன்னம் பலி, மாதம் பிறந்தால் பயிர் விருத்தி.

**பெண்கள்**

***வடமொழி ஸ்திரீ ஜாதகம் சொல்லும் பலன்***

மூலத்தில் பிறந்த பெண் குறைவாகவே சுகமனுபவிப்பவள். விதவை அல்லது வறுமை யுடையவளாகவும் இருக்கலாம். அடிக்கடி நோய் வாய்ப்படுவாள். நிறைய சாஸ்த்திரங்கள் அறிபவள். பந்துஜனங்களை உதாசீனப்படுத்துபவள்.எப்பொழுதும் பிறரையே நம்பி இருப்பவள் கீழ்த்தரமான குணமுள்ளவள், கர்வமுள்ளவள்.

***பிறநூல்***

பாவகாரியங்களைச் செய்பவள்,அதிக முரட்டுத்தனம், கோபம், வேகம் உள்ளவள். கெட்ட முரணான காரியங்கள் செய்பவள். இவளால் குல தோஷ நாசம் உண்டாகும் என்பர்.

***தமிழ்ச் சங்கராசாரியார் மதன நூல் கூறுவது***

***இந்த நக்ஷத்திரப் பெண் பூத தத்துவத்தைச் சேர்ந்தவள்***

**குறிய கூந்தல் கொடும் பெரும் கொங்கையாள்**
**அறிவி லோதுவாள் ஆரையும் சங்கியாள்**
**உறவில் அன்பில் உகந்தவர்க் கன்பிலார்**
**முறையி லாதவள் மூல நாள் மங்கையே. 172**

*மூல நக்ஷத்திரத்தில் பிறந்த பெண் பூத தத்துவத்தைச் சார்ந்தவள். குட்டையான நிளமற்ற கூந்தலும் அளவுக்கு மீறிய பெருத்த கொங்கைகள் உள்ளவள். ( இது தரித்திரம் குறிக்கும்) தன் உறவினர் அல்லது தன்னை விரும்புபவர்கள் இருவகையினரிடமும் அன்பில்லாதவள் என்பதாம்.*

### மூல நக்ஷத்திரப் பாத பலன்கள்

### தமிழ் ஜாதக அலங்காரப் பாடல்

தானுண்ணு முணவில் கிழங்கின் மேல் பிரியன்
சாற்றிய பாபமே புரிவான்
தாழ்விலாரோகி உன்மத்த னென்றே
நாற்றுவர் மூலத்தின் முதற்கால்
வானுயர் புலவன் வயிற்றுநோ யுடையான்
சத்தியவான் புத்தியுள்ளவனாம்
வனமுடைமானி பக்ஷமுள்ளவனாம்
மருவுகா லிரண்டினில் வந்தோன்
ஈனமாம் பில்லி சூனிய மறிவான்
எழிலுளன் சோம்பவான் காமி
இனியநற் கனிமேல் பிரயனா மூன்றில்
எண்ணிய மலரிது வென்பர்
கோனெனும் பலவான் நிபுணனாம் சாது
கோபமே நீக்குவன் ஞானி
கூறுசத் துருவை யடக்குவன் கழுத்தில்
கொண்ட நோயுளன் ஈரிரண்டே. 173

*(இ-ள்.)* தான் உண்ணும் உணவில் இவன் கிழங்குகளை விரும்பி உண்பவன். பாப காரியங்களையே செய்பவன் என்றும் நீங்காத நோய்களை உடையவன். இவன் பைத்திய குணமுடையவன் என்று மூலம் முதற்பாதத்தில் பிறந்தவர் பலனாம் என்பர்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன். வானளாவும் புகழுடைய புலவனாவான். வயிற்று நோயுள்ளவன். சத்தியமே பேசுவான். நல்லறிவு வாய்ந்தவன். என்னாளும் இழிவில்லாது கௌரவத்தையே உடையவன். எவரிடத்திலும் அன்பு நிறைந்தவனும் ஆவான் என்பதாம்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் பில்லி ஏவல், சூனியம் மந்திர காரியங்களை அறிந்து வைத்தவன். சோம்பேரி, ஸ்திரீ லோலன், அருமையான கனிகளைப் புசிக்க விருப்பமுள்ளவனும் ஆவானென்று கூறுவர்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், யுத்த வீரன், வீரம் வாய்ந்தவன், எல்லாவற்றிலும் வல்லவன், கோபமில்லாதவன், சாது ஞானவான், சத்துருக்களை அடக்குபவன், கழுத்தில் கண்டமாலை என்னும் நோயுள்ளவன் என்றும் சொல்லுவர்.

**ஜாதக சாரதீபம் சொல்லும் பாத பலன்**

முதல் பாதம்: மூலம் முதல் பாதத்தில் பிறந்தவன் போக முடையவன்.

இரண்டாம் பாதம்: தியாக புத்தி உள்ளவன்

மூன்றாம் பாதம்: நல்ல நண்பன்

நான்காம் பாதம்: அரசனாவான்

**சுவடி எண் 1500 மரண கண்டிகை சொல்லும் மூல நட்சத்திர பாத பலன்**

**மூலம் முதல் பாத பலன்**

**குறுகிய உருவின் செய்யன் குறளைசேர் குழறுவாயன்**
**மறுகிய மனத்தன் பெண்மேல் மனமது சார நில்லான்**
**முறுகிய கொடுமை செய்யும் முதுகினில் சுழியுண்டென்றும்**
**செறிதரு கூந்தல் பேணும் சேயினங் கிஷத்தி னானே! 174**

(இ-ள்.) இவன் குள்ளமான உருவமுடையவன், கோள் சொல்லும் குதப்புகின்ற தெளிவற்ற பேச்சை உடையவன். நேர்மையற்ற முரண்பாடான எண்ணமுள்ள மனமுள்ளவன். பெண்ணாசை இல்லாதவன். கொடுமையான குரூரமான செயல்களைச் செய்பவன். இவன் முதுகினில் சுழி உண்டு என்பர். இவன் நெருங்கிய கூந்தலுடைய தன் மனைவியை விரும்பி பாதுகாப்பான். இவனே மூல நட்சத்திரம் முதல் பாதத்தில் செவ்வாய் அங்கிஷத்தில் பிறந்தவன் என்பதாம்.

இதற்குக் கால சக்ர தசை

| | | | |
|---|---|---|---|
| மேஷச் செவ்வாய் | - | 7 வருடம் | |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| மிதுன புதன் | - | 9 | ,, |
| கற்கடகச் சந்திரன் | - | 21 | ,, |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| துலாம் வெள்ளி | - | 16 | ,, |
| விருச்சிகச் செவ்வாய் | - | 7 | ,, |
| தனுசு வியாழன் | - | 10 | ,, |
| ஆக வயது | - | 100 | ,, |

**மூலம் இரண்டாம் பாதப் பலன்**

**தெள்ளிய தியாகி நல்லன் சேயிழை யாரைப் பேணும்**
**ஒள்ளிய கண்ணி னாள்மேல் ஒண்பொருள் சார நில்லான்**
**பள்ளியும் பலவும் கற்கும் பாக்கியமுடைய னாகும்**
**வெள்ளியங் கிஷத்தில் வந்த விருப்புடை காளைதானே 175**

(இ-ள்.) இவன் தெளிவான சிந்தனை உடையவன். தியாகியாக செயல்படுபவன். தான் விரும்பி மணந்த மனையாளையும், தான் விரும்பிப் பழகிய பெண்களையும் பராமரிப்பவன். ஆனால்தன் மனைவியை பணத்திற்காக எதிர்பார்க்க மாட்டான். பல பள்ளிகள் கல்லூரிகளிலும் படித்து பட்டங்கள் பெறும் உயர் கல்வி கற்பவன். இவன் பாக்கியமுடையவனாகும். இவையே சுக்கிரன் அங்கிஷத்தில் பிறந்த மூலம் 2ம் பாதத்தில் பிறந்தவனின் குணங்களாகும்.

**இதற்குக் கால சக்கரத் தசை**

| | | | |
|---|---|---|---|
| மகரச்சனி | - | 4 வருடம் | |
| கும்பச் சனி | - | 4 | ,, |

| | | | |
|---|---|---|---|
| மீன வியாழன் | - | 10 வருடம் | |
| விருச்சிகச் செவ்வாய் | - | 7 | ,, |
| துலாம் வெள்ளி | - | 16 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| கடகச் சந்திரன் | - | 21 | ,, |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| மிதுன புதன் | - | 9 | ,, |
| ஆக வயது | - | 85 | ,, |

**மூல நட்சத்திரம் 3ம் பாதம் பலன்**

மேதையாம் அனங்கன் நல்லன் வேந்தரால் விருப்பமுண்டாம்
மாதுமால் உருவ னாகும் மனம் பிறர்க் கரிய ஒண்ணான்
தாதுசேர் குழலினான் மேல் தன் பொருள் சால நில்லான்
மீதுறு வலக்கை வல்லான் மிதுன அங்கிஷத்தி நானே. 176

(இ-ள்.) மூல நட்சத்திரம் 3ம் காலில் பிறந்தவன் அறிவாளியானவன். மன்மதன் போல் அழகுள்ளவன். அரசர்களால் விரும்பப் படுபவன். இலட்சுமியின் கணவன் திருமால் போன்ற நிரமும் உருவ அழகுமுடையவன். இவன் மன ஆழத்தைப்பிறரால் அறிய முடியாது. மகரந்த வாசனையுள்ள கூந்தலுடைய தன் மனைவியை அவன் பணத்திற்காக எதிர்பார்க்க மாட்டான். இவன் வலதுகை வலிமை மிகவும் உடையவன். இவனே மிதுன அங்கிஷத்தில் பிறந்தவனாவான்.

**இதற்குக் கால சக்கரத் தசை**

| | | | |
|---|---|---|---|
| இடபவெள்ளி | - | 16 வருடம் | |
| மேஷச் செவ்வாய் | - | 7 | ,, |
| மீன வியாழன் | - | 10 | ,, |
| கும்பச் சனி | - | 4 | ,, |

| | | | |
|---|---|---|---|
| மகரகச் சனி | - | 4 | ,, |
| தனுசு வியாழன் | - | 10 | ,, |
| விருச்சிகச் செவ்வாய் | - | 7 | ,, |
| துலா வெள்ளி | - | 16 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| ஆக வயது | - | 83 | ,, |

**மூல நட்சத்திரம் 4ம் பாத பலன்**

தலையது கரண்டி யாகும் தன் மனம் பெரிய னாகும்
மலைதரு வல்ல பத்தன் வடிவுடன் சிறந்த மேனி
கலைபல நன்று கற்றும் கடிமதக் காளையாகும்
மலையென வளர்ந்த தோளான் மதியினங் கிஷத்தி தானே 177

*(இ-ள்.) மூல நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவன் குணங்களாவது. இவன் தலைபெருத்திருக்கும். இவன் பரந்த மனமுடையவனாகவும், பிறர் மலைத்து பிரமிக்கும் படியான வல்லமையுடையவன். இவன் வடிவமும் சிறந்த நிறமும் உடைய அழகன். இவன் பலகலைகளும் கற்று தேர்ந்தவன். இவன் வீரத்தில் முரட்டுக் காளையைப் போல வலிமையும் உள்ளவன். இவன் மலைபோல உயர்ந்த தோள்களுள்ளவன் சந்திரன் அங்கிஷத்தில் பிறந்தவனாவாள்.*

**இதற்குக் காலச் சக்கரத் தசை**

| | | | |
|---|---|---|---|
| கடக சந்திரன் | - | 21 வருடம் | |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| துலாம் வெள்ளி | - | 16 | ,, |
| விருச்சிகச் செவ்வாய் | - | 7 | ,, |

| | | | |
|---|---|---|---|
| தனுசு வியாழன் | - | 10 | ,, |
| மகரகச் சனி | - | 4 | ,, |
| கும்பச் சனி | - | 4 | ,, |
| மீன வியாழன் | - | 10 | ,, |
| ஆக வயது | - | 86 | ,, |

**இதற்கு மகாதசை**

| | | | |
|---|---|---|---|
| கேது | - | 7 வருடம் | |
| சுக்கிரன் | - | 20 | ,, |
| சூரியன் | - | 6 | ,, |
| சந்திரன் | - | 10 | ,, |
| செவ்வாய் | - | 7 | ,, |
| ராகு | - | 18 | ,, |
| குரு | - | 16 | ,, |
| சனி | - | 19 | ,, |
| புதன் | - | 17 | ,, |
| ஆக வயது | - | 120 | ,, |

**இவனுக்குத் தோன்றும் கண்டம் நோய் முதலியன**

இவன் பிறந்த ஆண்டில் பிள்ளைப் பிணியால் தத்து 5 வயதில் வெதுப்பு10 வயதில் 19 வயதில் வெதுப்பு மற்றும் விஷத்தால் 22 வயதில் ஸ்திரீகள் மருந்தீட்டால் 32 வயதில் நாலுகால் மிருகத்தால், உயரமேறி விழுதலால் 44 வயதில் காது வலி மற்றும் மூல வியாதியால் வயிற்று நோயால் 47 வயதில் வெதுப்பு 66 வயதில் வெதுப்பு 70 வயதில் கபால சன்னி 80 வயதில் வெதுப்பு மற்றும் வயிற்றுக் கடுப்பால் 86 வயதில் மண்டை இடி நோயால் இவை கடந்தால் நூறு வயது சென்று ஆவணி மாதம் பூர்வ பட்சத்து பஞ்சமியும் வெள்ளிக்கிழமை மூல நக்ஷத்திரமும் கூடிய சுப தினத்தில் மூலம் 50 நாழிகை கடந்து பாலுண்டு இறைவனடி சேர்வார்.

**இவன் பிறந்த லக்னசாரம்**

| | | |
|---|---|---|
| சூரியனாகில் | - | தனவான் |
| சந்திரன் ஆகில் | - | மணியக்காரன் |
| செவ்வாய் ஆகில் | - | கோனன் |
| புதனாகில் | - | சீமானாவான் |
| குருவாகில் | - | ராஜ புருஷன் |
| வெள்ளியாகில் | - | வியாபாரி |
| சனியாகில் | - | ஊனமுடையவன் |
| ராகுவாகில் | - | கலகன் |
| கேதுவாகில் | - | தரித்திரன் |

இதில் 2ம் கால் பிதா மரணம், 3ம் கால் மாமன் மரணம், இந்த தோஷத்திற்குப் பெருமாள் கோவிலில் நெய் விளக்கேற்றவும்.

**கர்ம விபாகம் (வடமொழி நூல்) கூறும் மூலம் நக்ஷத்திரம் பூர்வ கர்ம வரலாறும் சாந்தி பரிஹாரமும்**

**மூலம் 1ம் பாதம் கர்ம விபாகம் கூறும் இந்த நக்ஷத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவர் பூர்வ கர்மமும் சாந்தி முறையும்**

சிவபெருமான் சொல்லுகிறார்!

அயோத்யா நகரத்தில் ராமதாஸ் என்ற காயஸ்தன் ஒருவன் பேரும் புகழும் பெற்று வாழ்ந்து வந்தான். இவனுக்குத் தேவி என்ற மனைவி உண்டு. இவன் விஷ்ணுவிடம் மிகவும் பக்தி பூண்டு பிராம்மணர் உத்தமர்களுக்கும் சேவையும் செய்து வந்தான். இவன் மனைவியும் பதிவிரதையாகவும் இவனுக்குத் தொண்டு செய்தும் உத்தமியாகவும் இருந்தாள்.

வேதம் ஓதுபவனும் யானை, குதிரை, வாணிபம் செய்பவனும் ஆன மற்றொரு பிராமணன் இவன் வீட்டுக்கு ஒரு நாள் வந்தான். இவன் நண்பன் ஆனதால் சாதுர் மாச விரதத்திற்கு இவன் வீட்டிலேயே தங்கினான். இவன் 400 தோலா எடையுள்ள தங்கத்தை காயஸ்தன் வீட்டில் வைத்து விட்டு பூரி க்ஷேத்திரம் சென்று விட்டான். இவன் பிரம்மச்சாரி இவன் பூரியிலேயே உயிர் நீத்தான். காயஸ்தனுக்கோ வெகு நாள் சென்று தரித்திரம் ஏற்பட்டு விட்டது. வேறு வ்ழியின்றி அந்த பிராமணனுடைய பொருளைக் கொண்டு பிழைத்து வந்தான். நாள் சென்று இவனும் இறந்தான்.

இவனுக்கு சுவர்க்க வாசல் கிடைத்தது. அங்கு 90,000 வருஷம் எல்லா போகங்களையும் அனுபவித்தான். புண்யம் தீர்ந்தபின் மீண்டும் மனிதனாகப் பிறந்தான். போன ஜன்மத்தில் அடைக்கலப் பொருளை அனுபவித்த பாபத்தால் இந்த ஜாதகத்தில் இவனுக்கு சந்ததி ஏற்படவில்லை. இதற்குச் சாந்தி பரிஹாரம் வருமாறு.

காயத்ரி ஜாதவேதசே த்ரயம்பகம் என்னும் இம்மூன்று மந்திரங்களையும் ஒவ்வொரு லக்ஷம் முறை தனித்தனியாக ஜபம் பண்ண வேண்டும். அதன் பின் இவற்றிற்கு முறையாகப் புரஸ்தரணம் பண்ண வேண்டும். அதன் பின் 40 தோலா எடை தங்கத்தில் ஒரு பிராமணன் உருவம் வடித்து முறைப்படி பூஜிக்க வேண்டும். அதை, ஆடை ஆபரணங்களுடன் அலங்காரம் பண்ணிய ஒரு காவி நிறப் பசுவுடன் பிராமண உத்தமன் ஒருவனுக்குத் தானம் பண்ண வேண்டும். அதன் பின் ஒரு எருதையும் பசுவுடன் தானம் பண்ண வேண்டும்.

இதனால் இவன் பாபம் தீரும். நல்ல குழந்தைகளும் பிறக்கும்.

**மூலம் நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம வரலாறும் சாந்தி பரிஹாரமும்.**

**சிவபெருமான் சொல்லுகிறார்:**

அயோத்தி நகரத்திற்கு மேற்கே ராகவபுரம் என்ற ஊர் உண்டு. அங்கு நிறைய ஜனங்கள் வசித்து வந்தனர். இவர்கள் நடுவில் யோக சர்மா என்ற பிராமணன் ஒருவன் வசித்து வந்தான். இவனுக்கு குணவதி என்ற அழகான மனைவியுண்டு. இவன் மிகவும் ஞானியாகவும் புரோஹித னாகவும் அதிக பணக்காரனாகவும் இருந்தும் மிகவும் கருமியாக இருந்தான். இவன் தானம் வாங்கிப் பிழைத்தான். இவன் தம்பி வியாபாரம் பண்ணிப் பிழைத்து வந்தான். இவர்கள் மிகவும் பாசம் ஒற்றுமையுடன் இருந்தனர். ஆனால் நெடுங்காலம் சென்று இவர்களிடையே பகை ஏற்பட்டு விட்டது.

பாகப் பிரிவினைக்காக கடும் சண்டை ஏற்பட்டது. இதனாலேயே மனம் நொந்து இளையவன் இறந்து போனான்.

மூத்தவன் எல்லா சொத்தையும் தன்சந்ததிக்கே கொடுத்தான். பின்னால் இவனும் வயதாகி இறந்தான். இவன் செய்த பாவத்தால் இவன் ரக்த கர்தமம் என்ற நரகத்தில் தள்ளப்பட்டு அங்கு பல்லாயிரம் வருஷங்கள் வேதனை அனுபவித்துக் கழுதையாகப் பிறந்தான். அதன் பின் செம்மறி ஆடாகப் பிறந்தான். அதன்பின் இவனுக்கு மனிதப் பிறவி கிடைத்தது. இப்பொழுது இவன் வைத்தியத் தொழிலில் சிறந்து விளங்கினான். போன ஜன்ம பாவத்தால் இவனும் இவன் மனைவியும் நோயாளிகளாயினர். குழந்தைகளும் பிறக்க வில்லை.

**இதற்குப் பிராயச்சித்தம் வருமாறு**

முதலில் ஹரிவம்ச புராணம் பாராயணம் செய்ய வேண்டும். அதன்பின் சிவபூஜை செய்ய வேண்டும். அமாவாசையன்று பிண்ட தானம் பண்ண வேண்டும்.

அதன்பின் சடாக்ஷரம் 10 லக்ஷம் தடவை ஜபம் செய்ய வேண்டும். அதன்பின் கீழ்க்கண்ட புராண மந்திரங்களால் 40 தோலா எடையுள்ள தங்கத்தாலான தன் தம்பியின் உருவம் வைத்து பூஜை செய்ய வேண்டும்.

ஓம் நமோ சவித்ரே தேவாய வேத வேதாங்க பாரக!
பூர்வ ஜன்ம க்ருதம் சர்வம் மமபாபம் வ்யபோஹது!!
அக்ஞானாத்தா ப்ரமாதாத்தா ப்ராதுரம் சாபஹாரக!!
ததர்த்தம் கௌர்மயா தத்தா சாத்வீ பூதாயதே நம!!

இப்படி அந்த பிரதிமையை பூசித்து சடங்கை முடித்தவுடன் இவர்கள் நோய் நீங்கி நலம் பெறுவர். அதன்பின் அவன் மனைவிக்கு தீர்க்காயுளுள்ள குழந்தைகள் பிறக்கும்.

## மூலம் நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வகர்மமும் சாந்தி பரிஹாரமும்

### சிவபெருமான் சொல்லுகிறார்

சரயூநதியின் வடகரையில் மங்களபுரம் என்ற ஊர் உள்ளது. அங்கு மாமிசம் உண்ணும் ஒரு க்ஷத்திரியன் இருந்தான். இவன் பெயர் பாவசேன என்பதாகும். இவனுக்கு மனோஹரா என்ற மனைவி இருந்தாள். இந்த க்ஷத்திரியன் சூதாடியும், குடித்தும் பொழுது போக்கி வந்தான். தினமும் திருடியும் பிழைத்து வந்தான். வெகு காலம் சென்று இவன் பாம்பு கடித்து இறந்து போனான். இவன் பண்ணிய பாபத்திற்காக எமதூதர்கள் இவனை ரௌரவம் என்ற நரகத்தில் 60 ஆயிரம் வருஷங்கள் தண்டித்தனர். இதன் பின் புலியாகப் பிறந்தான்.

அதன் பின் உத்தம குலத்தில் மனிதனாகப் பிறந்தான். பூர்வ ஜன்மத்தில் இவன் தீப தானம் பண்ணினான். அதனால் இப்பிறவியில் பணக்காரனாகப் பிறந்தான். போன ஜன்மத்தில் குடித்ததாலும் வேசிகளுடன் இருந்ததாலும் அந்த பாவம் காரணமாக, இவனுக்குப் பிறக்கும் குழந்தைகள் யாவும் இறந்தன. சூதாடிய பாவத்தால் இப்பொழுது கோபம் அதிகமாக உள்ளது. சாந்தி பரிஹார முறை வருமாறு.

தன் வீட்டிலுள்ள பணத்தில் 6ல் ஒரு பகுதியை புண்ணிய காரியங்களில் செலவு செய்ய வேண்டும். அதன் பின் சாலையோரங்களில் குளமும், கிணறுகளும் வெட்ட வேண்டும். காயத்ரி மந்திரம் ஒரு லக்ஷம் முறை ஜபம் பண்ண வேண்டும். அதன் பின் ஹோமம், தர்ப்பணம், மார்ச்சனம் செய்ய வேண்டும். 10 நிறங் கொண்ட பசுவையும் தானம் பண்ண வேண்டும். இதன் பின் இவன் நோய்கள் தீரும். மனைவியும் நலம் பெறுவாள். அதன் பின் இவர்களுக்குத் தீர்க்காயுள் உள்ள குழந்தைகள் பிறந்து இருவரும் சந்தோஷமாக வாழ்ந்திருப்பார்கள்.

**மூல நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம வரலாறும் சாந்தி பரிஹாரமும்**

**சிவபெருமான் சொல்லுகிறார்:**

வைசாலி என்ற மத்ய தேசத்தில் டம்பகம் என்ற ஊர் உள்ளது. அங்கு பீமன் என்ற பெயர் உடைய உப்பு வியாபாரி ஒருவன் வாழ்ந்து வந்தான். இவனுக்கு நல்ல மனைவியும் மூன்று புத்திரர்களும் உண்டு. இவனுக்கு உப்பு வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைத்தது. நிறைய கால்நடைச் செல்வமும் தனமும் சேர்ந்தது.

இவனது மூத்த மகன் தன் மனைவியன்றியும் வேசி ஒருவளுடனும் போகம் பண்ணி வந்தான். உப்பு வியாபாரியின் 2 எருதுகளும் வயல் பக்கம் உள்ள கிணற்றங்கரைக்கு மேயச் சென்றன. மூத்த மகன் வேசியுடன்

இருந்ததால் இவற்றைக் கவனிக்க வரவில்லை. அவற்றுடன் அவன் மனைவியும் இருந்தாள். இரவுக்கு சற்று முன் இந்த 3 ஜீவன்களும் கிணற்றில் விழுந்து இறந்தன. காலையில் அவற்றை கிணற்றுக்குள்ளிருந்து வெளியில் எடுத்தார்கள்.

வயதான உப்பு வியாபாரி இறந்தான். இவன் பாபங்களுக்காக இவனை எமபடர்கள் பற்றி பிடித்து ஊசி முனைக் கிடங்குகள் கொண்ட கொடிய நரகத்தில் தள்ளினார்கள். 2000 வருஷங்கள் இவன் அங்கு தண்டனை அனுபவித்தான். அதன் பின் ஆடாகவும், அதன் பின் பூனையாகவும் பிறவிகள் அடைந்தான்.

இவன் செய்த புண்ணியத்தால் மனிதனாகப் பிறந்தான். செல்வந்தனாக இருந்தான். பெண் குழந்தைகளும் தோன்றின. போன ஜன்மத்தில் தன் மனைவியை உடனே கிணற்றிலிருந்து எடுத்துக் காப்பாற்றாததால் இவனுக்கு பெண் குழந்தைகளே பிறந்தன. வேசிகளுடன் வாழ்ந்ததால் இவனுக்கு தீரா நோய்கள் ஏற்பட்டன. இதற்குச் சாந்தி பரிகாரமுறைகள் கேட்பாயாக.

முதலில் தன் சொத்தில் 8ல் ஒரு பாகத்தை உத்தம அந்தணனுக்குத் தானம் பண்ண வேண்டும். அதன்பின் ஒரு லக்ஷம் முறை காயத்ரி ஜபம் செய்ய வேண்டும். அதன் பின் ஹோமம் தர்ப்பணம் மார்ச்சனம் ஆகியவை அனுசரிக்க வேண்டும். அதன் பின் 20 தோலா எடைத் தங்கத்தாலான லக்ஷ்மீ விக்கிரஹம் செய்ய வேண்டும். அதன் பின் 40 தோலா எடையுள்ள வெள்ளியால் 2 எருதுகளின் விக்கிரஹத்தைச் செய்ய வேண்டும். அதற்கு லக்ஷ்மி பூஜை முறைப்படி செய்ய வேண்டும். எருதுகளைக் காப்பாற்றாத பாவத்திற்காக நந்தி கேஸ்வர பூஜை செய்ய வேண்டும்.

இதன் பின், முன் சொன்ன எருதுகள் உருவங்களை தக்ஷணையுடன் தானம் பண்ண வேண்டும். ஒரு கபில நிற பசுவை கொம்புகளில் தங்கப் பூண்களுடன் ஆடை முதலியன அணிவித்து உத்தம பிராமணனுக்குத் தானம் செய்ய

வேண்டும். இதனால் இவன் பாபங்கள் முழுவதும் நாசமாகும். இவனும் நல்ல உடல் நலம் பெற்று இவர்களுக்குத் தீர்க்காயுள் உள்ள நல்ல ஆண் பெண் குழந்தைகள் பிறக்கும். அதன் பின் இவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்.

**பிறர் மதப்படி மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்**

**பொதுப்பலன்**

**உடல் அமைப்பு**

நல்ல உருவ அமைப்பைக் கொண்டவன். கைகளும் கால்களும் அழகுடையதாக அமைந்திருக்கும். கண்களில் ஒளி மின்னும். இவன் குடும்பத்திலேயே இவன் ஒருவன்தான் அழகும் கவர்ச்சியும் உடையவனாக இருப்பான்.

**குண நலன்கள்**

இனிமையான சுபாவமுடையவன், பழகுவதற்கு இனியவன். அமைதியை விரும்புபவன். தன் வாழ்வில் சில குறிக்கோள்களை உடையவன். மூல நட்சத்திரத்தில் பிறந்தவர்களைக் கண்டு மனிதர்களுக்கு ஒரு பயம் உண்டு. இது ஒரு கெட்ட நட்சத்திரம். இதில் பிறந்தவர்களுக்குக் கெடுதல்கள் சம்பவிக்கும். இவர்களால் மற்றவர்களுக்கும் ஆபத்து என்ற கருத்தே இந்த பயத்திற்குக் காரணம். ஆனால் இதில் சிறிதளவு உண்மை இருந்தாலும் பெரும்பாலும் அந்த மாதிரியான கெடுதல்கள் ஏற்படுவதில்லை.

இதில் பிறந்தவன் எந்த சாதகமில்லாத நிலைகளையும் எதிர்த்து நின்று சமாளிக்கக் கூடியவன். எல்லா இன்னல்களையும் ஊடுருவிச் சென்று தடைகளையும் கஷ்டங்களையும் வென்று வெற்றியை பெறுவான்.

இவன் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்பட மாட்டான். தன்னுடைய சொந்த சமாச்சாரங்கள் எதையும் சீரியஸ்ஸாக எடுத்துக் கொள்ள மாட்டான். எல்லா செயல்களையும் நிகழ்ச்சிகளையும், கஷ்டங்களையும் கடவுளிடம் ஒப்படைத்து விட்டு, எல்லாம் நல்லபடியாக வெற்றிகரமாக முடிய வேண்டும் என்று கடவுளைத் தொழுவான்.

**கல்வி ஜீவனோபாயம்**

வரவு செலவு கணக்கில் கண்ட்ரோல் இல்லாமல் இருப்பதால் பெரும்பாலும் நிதி சம்பந்தமான விஷயம் கடனில் போய் முடியும். இவன் பிறருக்கு உபதேசமும், அறிவுரையும் ஆலோசனையும் சொல்லும் டைப். தன் சொந்த விஷயத்தில் அந்த யோசனைகளையும், அறிவுரையையும் பின்பற்றி நன்மை பெற இவனல் இயலாது. இந்த மாதிரியான குணமுள்ள இவர்கள், நிதி சம்பந்தமான யோசனைகளையும், மதசம்பந்தமான உபதேசம் செய்யும் தொழிலுக்கே லாயக்கானவர்கள்.

இவர்கள் பல் துறைகளிலும் திறமை பெற்றவர்கள். எதையும் எடுத்து திறம்பட செய்து முடிப்பர். இந்த சாமர்த்தியம் இருப்பதால், இவர்கள் ஒரே வேலையில் நிலைத்து இராமல் அடிக்கடி உத்தியோகம் செய்யும் இடங்களை மாற்றிக் கொண்டிருப்பார்கள். அதனால் ஒரே ஸ்தாபனத்தில் அல்லது தொழிலில் நிலைத்து இருப்பது என்பது இவர்கள் ஜாதகத்தில் இல்லை. இந்த நிலைத்து நிற்காமை என்ற பிறந்த குணத்தின் காரணமாக தொழிலில் மாறிக் கொண்டே இருப்பதால் இவர்களுக்கு எப்போதும் பணமுடை இருந்து கொண்டே இருக்கும்.

இவர்களடைய மற்றொரு விநோதமான குணம் இவர்கள் எப்போதும் நண்பர்கள் கூடவே இருப்பார்கள். அவர்களுக்காக தங்கள் வருமானத்தின் பெரும் பகுதியை செலவழிப்பார்கள். நேர்மையற்ற முறையில் சம்பாதிக்க மாட்டார்கள். வரவை விடசெலவு அதிகமாக இருப்பதால்

அத்தகைய நண்பர்கள் கூட்டத்திலிருந்து விலகி இருக்க வேண்டும். நடப்பதெல்லாம் நாராயணன் (கடவுள்) செயல் என்ற நம்பிக்கையை - மனோபாவத்தை ஒதுக்கி வைத்துவிட்டு சற்று சுயநலவாதியாக மாறி தன் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முயல வேண்டும்.

27 நட்சத்திரங்களில், மூல நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் மட்டுமே தங்களுடைய உண்மையையும், சக்தியையும், பக்தியையும் தான் வேலை செய்யும் யஜமானர்களுக்கு அர்ப்பணிக்கின்றார்கள். இவர்களுக்கு என்று தனியாக ஒரு சிறப்பு உள்ளது. ஒரு வித சக்தி இவர்களின் உள்ளும் புறமும் எப்போதும் வேலை செய்து கொண்டே இருக்கும். அவை, இவர்கள் மேற்கொள்ளும் எல்லா வேலைகளிலும் வெளிப்பட்டு வெற்றியைத் தேடித்தரும்.

இவன் தன் வாழ்க்கை வசதிகளுக்காக அயல் நாடு சென்று சம்பாதிப்பான். இவனுடைய சொந்த ஊரில் அல்லது நாட்டில் இவனுக்கு அதிக அதிர்ஷ்டம் கிடையாது. ஆதலால் இவர்கள் பிஸினஸ் அல்லது உத்தியோகத்துறையில் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டு அயல் நாட்டுக்குச் சென்றுவிட வேண்டும். அங்குதான் இவர்களுக்கு அதிர்ஷ்ட தேவதை காத்திருக்கிறார்.

இவன் எல்லாத்துறைகளிலும் திறமைசாலி. நன்றாக பிரகாசிப்பான். குறிப்பாக லலித கலைகள், எழுத்தாளன், சமூகப்பணி இவற்றில் சுடர்விட்டு பிரகாசிப்பான்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்குப் பெற்றோரிடமிருந்து அன்பு கவனிப்புப் போன்ற ஆதாயங்கள் எதுவும் கிடைக்காது. இவர்கள் தங்களைத் தாங்களே உருவாக்கிக் கொள்வார்கள். இவர்களது மணவாழ்க்கை ஏறக்குறைய நன்றாகவே திருப்தி உள்ளதாகவே அமையும். ஒரு நல்ல மனைவிக்கு இருக்க வேண்டிய எல்லா நற்குணங்களையும், இவனுக்கு வாய்க்கும் மனைவி பெற்றிருப்பாள்.

**ஆரோக்யம்**

இவனுடைய ஜாதகத்தில் சூரியன், சந்திரன் அல்லது சுக்கிரன் கெட்டிருந்தால் இவனுக்கு ஈசனோபிலியா அல்லது TB உண்டாகும். இந்தப் பாதிப்பு செவ்வாய், சனி அல்லது ராகுவால் ஏற்பட்டிருந்தால் வயிற்றுக் கோளாறுகள் அல்லது பாரிச வாயு ஏற்படும். எந்த விதமான வியாதியாக இருந்தாலும் அதன் கடுமையை அவனுடைய முகத்தில் காண முடியாது. நோய் கடுமையாக இருந்து உபாதைகள் அதிகமாக இருந்தபோது கூட இவனுடைய முக உணர்ச்சிகள் அவற்றை பிரதிபலிக்காது. சாதாரணமாக இவர்கள் தங்கள் உடல் ஆரோக்கியத்தில் போதிய கவனம் செலுத்துவதில்லை. இதன் காரணமாக இவர்களுடைய *27, 31, 44, 48, 56, 60*வது வயதுகளில் உடல் ஆரோக்கியம் மிகவும் மோசமாக பாதிக்கப்படும்.

இவன் போதை பழக்கத்துக்கு ஆளாகி விட்டால் அதைக் கட்டுப்படுத்தவோ அல்லது விட்டொழிக்கவோ முடியாது. ஆதலால் இவன் மது, கஞ்சா போன்ற போதை மருதுகள் பக்கம் தலை வைத்துக்கூட படுக்ககூடாது.

**பொதுத்தன்மை - பெண்கள்**

**உருவத்தோற்றம்**

கருப்பு இல்லாமல், சிவப்பும் இல்லாமல் நடுத்தர மாநிறத் தோற்றம் உஷ்ண நாடுகளில் கருப்பும், குளிர் நாடுகளில் வெண்மையும் கொண்ட நிறமுடையவள். முன் பற்கள் நெருக்கமாக இல்லாமல் இடைவெளி விட்டு இருக்கும். இது செல்வம் உள்ளவள் என்பதற்கான அடையாளம்.

**குணம்**

கள்ளம் கபடு இல்லாத மனது உடையவள். பிடிவாத குணம் உண்டு. சிறிய விஷயங்களில்கூட விட்டுக்கொடுக்காமல், உறுதியாக இருப்பாள், பிறரைக் கையாளும் வழி முறையை அறியாதவள். ஆதலால் பல பிரச்சினைகள் அடிக்கடி உண்டாகும்.

**கல்வி - தொழில்**

இந்தப் பெண்கள் கல்வி அறிவை அதிகமாகப் பெறுவதில்லை. படிப்பில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை. படிப்பு புத்தியில் ஏறாததால் இவர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் ஓரிரண்டு வருடங்கள் தங்கிப் படிக்கும் படியாக ஆகிவிடுகிறது. கடைசியில் வெறுப்படைந்து படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகின்றனர். இதற்கு ஒரே விதிவிலக்கு உண்டு. குரு மக நட்சத்திரத்தில் இருந்தாலோ அல்லது மகத்தைப் பார்த்தாலோ படிப்பு நன்றாக வரும். ஜாதகர் டாக்டர் ஆகலாம். அல்லது பிறர் பார்த்து பொறாமைப்படும் அளவுக்கு நல்ல பொஸிஷனை அடையலாம். இந்த ரெக்கார்டை ஏற்படுத்துவார்கள்.

**குடும்ப வாழ்க்கை**

மூல நட்சத்திரத்தில் பிறந்த ஆண்களைப் போல பெண்கள் திருமணத்தின் சந்தோஷங்களை அனுபவிக்க முடியாது. விவாகரத்து அல்லது கணவனின் மரணத்தினால் தனியான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டி இருக்கும். மற்ற கிரகங்களின் அமைப்பு, பார்வையைப் பொறுத்து மேற்சொன்ன பலன் மாறுபடும். கெடுதல் நேராது. திருமணத்தில் தடங்கல்கள் ஏற்பட்டு, கால தாமதமாக திருமணம் நடைபெறும். செவ்வாயின் நிலை ஜாதகத்தில் சாதகமாக அமையாவிட்டால் கணவன் அல்லது குழந்தைகளால் ஏகப்பட்ட பிரச்சினைகள் உருவாகும்.

**ஆரோக்யம்**

ருமாடிஸம், இடுப்புப் பிடிப்பு, முதுகு, இடுப்பு, கை, கால்களில் வலி, தோள்பட்டையில் வலி போன்றவை இவர்களை எளிதில் பீடிக்கும் நோய்களாகும்.

**மூல நட்சத்திரத்தில் அமைந்துள்ள கிரகங்களை மற்ற கிரகங்கள் பார்த்தால் ஏற்படும் பலன்**

**மூல நட்சத்திரத்தில் உள்ள சூரியனை சந்திரன் பார்த்த பலன்**

ஜாதகனுக்கு அழகான பிள்ளை பிறக்கும். பிறரை கவரும் வண்ணம் பேசுவான்.

**மூலத்தில் உள்ள சூரியனை செவ்வாய் பார்த்த பலன்**

போலீஸ் அல்லது டிபன்ஸ்ஸில் சேர்ந்து பெயரும் புகழும் பெறுவான். ஆனால் குடும்பத்தினரால் புறக்கணிக்கப்பட்டவனாக இருப்பான்.

**மூலத்தில் உள்ள சூரியனை புதன் பார்த்த பலன்**

செல்வந்தனாய் இருப்பான். தங்கம், வெள்ளி போன்ற விலை உயர்ந்த உலோகங்களை சேகரித்து வைப்பதில் ஆர்வம் உள்ளவன். மந்திர தந்திரங்கள் சாஸ்திரங்களை எல்லாம் அறிந்தவனாக இருப்பான்.

**மூலத்தில் உள்ள சூரியனை குரு பார்த்த பலன்**

மினிஸ்டர் அல்லது அதற்குச் சமமான தகுதியைப் பெற்றவன்.

**மூலத்தில் உள்ள சூரியனை சுக்கிரன் பார்த்த பலன்**

மிகப் பெரும் கோடீஸ்வரன், பெண்களின் உறவில் சுகம் காண்பதற்காக நிறையப் பணம் செலவழிப்பான்.

**மூலத்தில் உள்ள சூரியனை சனி பார்த்த பலன்**

தீயவர்களுடன் உறவாடுவான். மாடுகள் மூலம் சம்பாதிப்பான்.

**மூலத்தில் உள்ள சந்திரனை சூரியன் பார்த்த பலன்**

பெரும் புகழ் பெறுவான். அரசபோகங்களை அனுபவிப்பான்.

**மூலத்தில் உள்ள சந்திரனை செவ்வாய் பார்த்த பலன்**

டிபன்ஸ் அல்லது ஏதாவது பாதுகாப்பு ஸ்தாபனத்தில் பணி புரிபவான்

**மூலத்தில் உள்ள சந்திரனை புதன் பார்த்த பலன்**

தொழில் நுட்பம் அறிந்தவன். சிறந்த சோதிடன். வேலையாட்கள் மற்றும் பல வசதிகளை உடையவன்.

**மூலத்தில் உள்ள சந்திரனை குரு பார்த்த பலன்**

நல்ல நிலையை அடைவான். பல தொழில் நிறுவனங்களுக்குச் சொந்தக்காரன். நல்ல பரஸனாலிடி உடையவன்.

**மூலத்தில் உள்ள சந்திரனை சுக்கிரன் பார்த்த பலன்**

மதாச்சார அனுஷ்டானங்கள் உள்ளவன். பணக்காரன், நன்மக்கட்பேறு பெற்றவன்.

**மூலத்தில் உள்ள சந்திரனைச் சனி பார்த்த பலன்**

அணுகுமுறையில் பொல்லாத்தனம் இருந்தாலும் பல மதக்கோட்பாடுகளையும் சாஸ்திரங்களையும் நன்கு கற்றுணர்ந்தவன்.

**மூல நட்சத்திரத்தில் உள்ள செவ்வாயை சூரியன் பார்த்த பலன்**

உலகத்தாரால் கௌரவிக்கப்படுவான். மிகுந்த அதிர்ஷ்டக்காரன், குரூர நடவடிக்கைகளில் மாட்டிக் கொள்ள நேரும்.

**மூலத்தில் உள்ள செவ்வாயை சந்திரன் பார்த்த பலன்**

உடல் ஊனங்களால் கஷ்டப்படுவான். கற்றறிந்தவன். கிரிமினல் நடவடிக்கைகளில் மாட்டிக் கொள்ள நேரும்.

**மூலத்தில் உள்ள செவ்வாயை புதன் பார்த்த பலன்**

பல கலைகளையும் கற்றுணர்ந்தவன். அனேக பலதரப்பட்ட விஷயங்களையும் கற்றறிந்த புலவன்.

**மூலத்தில் உள்ள செவ்வாயை குரு பார்த்த பலன்**

செல்வந்தன், வாழ்க்கையை கஷ்டமில்லாமல் கழிப்பதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் பெற்றிருந்தாலும், திருமண வாழ்க்கை மகிழ்ச்சி இல்லாததாகவே இருக்கும்.

**மூலத்தில் உள்ள செவ்வாயை சுக்கிரன் பார்த்த பலன்**

தர்ம காரியங்கள் செய்வான். பெண்களுக்கு உதவி செய்யம்போது, அவர்களை வளைத்துப் போட்டு (SEX)அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே அந்த உதவியை செய்வான்.

**மூலத்தில் உள்ள செவ்வாயை சனி பார்த்த பலன்**

உடலில் ஏதாவது ஒரு ஊனம் இருக்கும். அலைந்துகொண்டே இருப்பான்.

**மூலத்தில் உள்ள புதனை சூரியன் பார்த்த பலன்**

அமைதியே உருக்கொண்டவன். யூரினரி நோய்களால் அவஸ்தைப்படுவான்.

**மூலத்தில் உள்ள புதனை சந்திரன் பார்த்த பலன்**

நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். எல்லோரும் அறிந்த எழுத்தாளன். பிறரை சந்தோஷப்படுத்தும் குணம் உள்ளவன்.

**மூலத்தில் உள்ள புதனை செய்வாய் பார்த்த பலன்**

எழுத்தாளனாகப் பணம் சம்பாதிப்பான். இவனுடைய செயல்கள் சமூகத்துக்கு ஒத்து வராது.

**மூலத்தில் உள்ள புதனை குரு பார்த்த பலன்**

மிகுந்த அறிவாளி. பிறரைக் கவரும் பரிஸனாலிடி உடையவன். பெருந்தன்மை உள்ளவன். அரசியலில் உயர்ந்த ஸ்தானத்தைப் பெறுவான்.

**மூலத்தில் உள்ள புதனை சுக்கிரன் பார்த்த பலன்**

மென்மையாகப் பேசுபவன். ஒரு ஆசிரியனாகத் தொழில் செய்பவன்.

**மூலத்தில் உள்ள புதனை சனி பார்த்த பலன்**

தந்திரசாலி. கொடூர எண்ணமுள்ளவன். துயரமான வாழ்க்கையை நடத்துபவன்.

**மூலத்தில் உள்ள குருவை சூரியன் பார்த்த பலன்**

ஜாதகன் ஒரு ஏழை. எல்லோரும் இவனை வெறுப்பார்கள்.

**மூலத்தில் உள்ள குருவை சந்திரன் பார்த்த பலன்**

அதிர்ஷ்டக்காற்று இவனை நோக்கி வீசிக்கொணடே இருக்கும். நல்ல சந்தோஷமான குடும்ப வாழ்வை அனுபவிப்பான். ஏராளமான பணமும், வாழ்க்கை வசதிகளும் உள்ளவன்.

**மூலத்தில் உள்ள குருவை செவ்வாய் பார்த்த பலன்**

பொல்லாதவன், பிறருக்குக் கஷ்டங்களைத் தருவான். எதிரிகளால் ஆபத்தும் காயங்களும் ஏற்படும்.

**மூலத்தில் உள்ள குருவை புதன் பார்த்த பலன்**

ஒரு மந்திரியாகவோ அல்லது அதற்குச் சமமான பதவியையோ வகிப்பான்.

**மூலத்தில் உள்ள குருவை சுக்கிரன் பார்த்த பலன்**

நீண்ட ஆயுளை உடையவன். எல்லா வகையிலும் அதிர்ஷ்டம் உள்ளவன்.

**மூலதில் உள்ள குருவை சனி பார்த்த பலன்**

ஒரு மந்திரியாகவோ அல்லது அதற்குச் சமமான பதிவியையோ வகிப்பான்.

**மூலத்தில் உள்ள சுக்கிரனை சூரியன் பார்த்த பலன்**

நன்கு படித்தறிந்த அறிஞன். செல்வந்தன். ஆனால் முன்கோபக்காரன்.

**மூலத்தில் உள்ள சுக்கிரனை சந்திரன் பார்த்த பலன்**

அரசனுக்குச் சமமான அந்தஸ்தைப் பெருவான்

**மூலத்தில் உள்ள சுக்கிரனை செவ்வாய் பார்த்த பலன்**

பெரிய பணக்காரன், பிஸினஸ்ஸில் ஈடுபடலாம்

**மூலத்தில் உள்ள சுக்கிரனை புதன் பார்த்த பலன்**

நிலம், நீச்சு, வண்டி, வாகனங்கள், கட்டிடங்கள், செல்வம் எல்லாவற்றையும் அடைவான்.

**மூலத்தில் உள்ள சுக்கிரனை குரு பார்த்த பலன்**

ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் நடக்கும், பெரிய குடும்பத்தை உடையவன்.

**மூலத்தில் உள்ள சுக்கிரனை சனி பார்த்த பலன்**

பெரும் அதிர்ஷ்டத்தையும், செல்வத்தையும் எல்லாவித இன்பங்களையும் தங்கு தடையின்றி அனுபவிப்பான்.

**மூலத்தில் உள்ள சனியை சூரியன் பார்த்த பலன்**

மற்ற நட்சத்திரங்களில் உள்ள சனியை, சூரியன் பார்த்த பலனைக் காட்டிலும் இதில் நல்ல பலன்களே ஏற்படும். ஜாதகன் பெயர், புகழ், செல்வம் எல்லாம் குறைவறப் பெறுவான்.

**மூலத்தில் உள்ள சனியை சந்திரன் பார்த்த பலன்**

தாய்க்குக் கண்டம் உண்டாகும். நல்ல குடும்பத்தைப் பெற்றவன்.

**மூலத்தில் உள்ள சனியை செவ்வாய் பார்த்த பலன்**

எல்லோரும் இவனை வெறுப்பார்கள். சட்டத்தால் தண்டிக்கப் படுவான். தந்திரமும் பொல்லாத்தனமும் உடையவன்.

**மூலத்தில் உள்ள சனியை புதன் பார்த்த பலன்**

நல்ல புகழை அடைவான். மந்திரிக்குச் சமமான அந்தஸ்தைப் பெறுவான்.

**மூலத்தில் உள்ள சனியை குரு பார்த்த பலன்**

ஆராய்ச்சியாளனாக அல்லது ஆசிரியராக இருப்பான்.

**மூலத்தில் உள்ள சனியை சுக்கிரன் பார்த்த பலன்**

ஜாதகனை அவன் தாய் வளர்க்க மாட்டாள். வேறொரு பெண்மணியால் வளர்க்கப்படுவான் . பல பொறுப்புக்கள் இவனை வந்தடையும்.

**மூல நட்சத்திரப் பாதங்களில் மற்ற கிரகங்கள் நின்ற பலன்**

**மூலம் 1ம் பாதத்தில் சூரியன் இருந்த பலன்**

புதனும் இங்கு இருக்கும்போது ஜாதகனின் தந்தை நல்ல அறிவாளி. கடவுளுக்குச் சமமானவர். இவன் பெற்றோர்கள் பல ஏழைகளுக்கு அன்னதானம் செய்வார்கள். பல தரும காரியங்களிலும் ஈடுபடுவார்கள்.

**மூலம் 1ம் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்**

செவ்வாயும் சுக்கிரனும்கூட சந்திரன் இங்கிருந்தால், கூடவே லக்னம் திருவாதிரை நட்சத்திரத்தில் இருந்து பிறந்த பெண் கணவனுடைய சம்மதத்துடன் விபச்சாரம் செய்வாள்.

**மூலம் 1ம் பாதத்தில் செவ்வாய் இருந்த பலன்**

தன் எதிரிகளை வெற்றி கொள்வான். வசதிகளும், சந்தோஷமும் வாழ்க்கையில் உடையவன். ஆனாலும் திருமணமான முதல் 5 வருடங்கள் குடும்பத்தில்

பிரச்சினைகளும், கஷ்டங்களும் இருக்கும். சிலருக்கு இந்த பிரச்சினைகள் பிரிவு அல்லது டைவோர்ஸ் வரை கூட சென்றுவிடக்காரணமாக இருக்கும்.

**மூலம் 1ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்**

அரசாள்பவருக்கு பிரியமானவனாக இருப்பான். மந்திரியாக அல்லது அதற்குச் சமமான அந்தஸ்தை உடையவனாக இருப்பான்.

**மூலம் 1ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்**

ஜாதகன் ஒரு புரொபஸராக அல்லது எஜுகேசன் டிபார்ட்மெண்டின் தலைவனாக இருப்பான். வாழ்க்கையை புனிதமான வழியில், நேர்மையையும், உண்மையையும் கொள்கைகளாகக் கொண்டு செலுத்துவான்.

**மூலம் 1ம் பாதத்தில் சுக்கிரன் தரும் பலன்**

இவனும் குருவும் சூரியனும் கூட இங்கிருந்தால் ஜாதகனை அறிவாளியாக, தைரியம் உடையவனாக ஆக்குவார்கள். மேலும் இவன் மந்திரியாகவோ அல்லது சமதையான அந்தஸ்துடனோ இருப்பான். கண்களில் கோளாறுகள் ஏற்பட்டு கவலையைக் கொடுக்கும்.

**மூலம் 1ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்**

நல்ல மனைவி, மக்கட்பேறு, செல்வம் முதலியவற்றை அனுபவிப்பான். குடும்பத்திலேயே இவன் தாராள மனது உடையவன்.

**மூலம் 1ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்**

ராகு இங்கிருக்கும்போது, சனி, சந்திரன், செவ்வாய் மூவரும் பூசம் நட்சத்திரத்தில் இருந்தால் ஜாதகன் தன் குழந்தைகளால் கடுமையான மனபாதிப்புக்கு ஆளாவான். பெண்ணாக இருந்தால் கருப்பை கோளாறுகள் ஏற்படும். மேலும் தன் மகன் ஒருவனின் காரணமாக மன சித்திரவதைக்கு உள்ளாவாள்.

**மூலம் 1ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்**

இங்குள்ள கேதுவுடன், லக்னம் அனுஷத்தில் இருந்தால் ஜாதகனுக்கு நல்ல அழகிய வீடுகளும் கணிசமான நிலச்சொத்துக்களும் உடைமையாகும். அவைகளை இழந்தும் விடுவான். ஆனால் இவனது 31வது வயதில் சொத்துக்களும் பணமும் பெரும்பான்மையான இழந்த சொத்துகளை மீண்டும் வாங்கி விடுவான்.

**மூலம் 2ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்**

இந்த சூரியனை சுபர்கள் பார்க்காவிட்டால் ஜாதகன் சிறுவியாபாரியாக இருப்பான். சுக்கிரன் இந்த சூரியனுடன் சம்பந்தப்பட்டிருந்தால் பட்டுத்துணி வியாபாரியாக இருப்பான்.

**மூலம் 2ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்**

ஜாதகன் எந்த வேலையிலும் நாணயமில்லாதவன். பேச்சில் வல்லவன். தன்னுடைய நாணயமில்லாத குணத்தினால் வாழ்க்கையில் சந்தோஷத்தை அடையமாட்டான். சில கேசுகளில், இப்படிப் பட்டவனுடைய மனைவி, இவனை உதறித் தள்ளிவிட்டு இன்னொரு மனிதனுடன் ஓடிப்போய் விடுவதை காண முடிகிறது.

**மூலம் 2ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்**

அடிப்பட்டு காயமடைந்த உடலை உடையவன். கடுமையான பேச்சு, பிறரை அண்டி வாழ்பவன். கடுமையான போராட்டத்துக்குப் பிறகு வெற்றி பெறுவான். 40 வயது வரையில் இவனது புத்தி வளர்ச்சி அடையாது. அதனால் சரியான மெச்சூரிடி இல்லாத காரணத்தால் 40 வயதுக்கு மேல் தான் வாழ்க்கையில் எந்த வித முன்னேற்றமும் காண முடியும்

**மூலம் 2ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்**

இந்த புதனுடன் சுக்கிரனும் ராகுவும் சேர்ந்து இருந்தால் ஜாதகன் ஆரம்பத்தில் ஒரு எஞ்ஜினீயராக இருப்பான். பின்னால் சொந்தமாகவே தொழிற்சாலை ஆரம்பித்து உற்பத்தியை தொடங்குவான். வாழ்க்கை பொதுவாக சந்தோஷத்துடன் இருக்கும். புதன் மட்டும் தனித்திருந்தால், அரசாங்கத்தால் ஒரு சாதாரண வேலையைத் தருவான்.

**மூலம் 2ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்**

அந்தஸ்து, அதிகாரப்பலன், செல்வம் இவற்றை அரசனுக்குச் சமமாகப் பெறுவான். இவனை சுக்கிரன் பார்த்தால் ஜாதகனுக்குப் பெண்களால் பிரச்சினைகள் ஏற்படும்.

**மூலம் 2ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

மனிதருக்குள் மாணிக்கமாய், தேவனாய் திகழ்வான். பெண்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபடும் ஸ்தாபனம் அல்லது அனாதைப் பெண்களைக் காப்பாற்றும் ஸ்தாபனம் இவற்றுடன் தொடர்பு கொண்டவனாக இருப்பான்.

**மூலம் 2ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்**

பல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து அறிஞனாக இருப்பதுடன் அவற்றின் மூலம் பெயரையும் புகழையும் அடைவான். எப்போதும் இவனுடைய உதவியையும் ஆலோசனையையும் கேட்கும் நண்பர்கள்கூட்டம் இவனைச் சூழ்ந்திருக்கும். உயரமும் கட்டுக் கோப்பான பலம் மிகுந்த உடலையும் உடையவள்.

**மூலம் 2ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்**

பெண் ஜாதகத்தில் லக்னம் மிருகசீரிஷத்தில் இருந்து, ராகு மூலம் 2ல் இருந்தால், அவள் தன் குடும்பத்தின் அழிவுக்குக் காரணகர்த்தாவாக இருப்பாள். வாழ்க்கையில் வசதிகளும் சந்தோஷமும் அற்றவள்.

**மூலம் 2ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்**

செல்வமும் வசதிகளும் நிறைந்த வாழ்க்கையை உடையவள். இந்த கேதுவுடன் செவ்வாயும் சேர்ந்தால் ஜாதகன் மந்திரியாவான். அல்லது அதற்குச் சமமான தகுதியைப் பெறுவான்.

**மூலம் 3ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்**

ஜாதகன் தொண்டைக் கமறல் உள்ளவன். கற்பனை வளமும், வேடிக்கையாக பேசும் குணமும் கொண்டவன். பெண்ணாக இருந்தால் மூளையில் கடுமையான வலி ஏற்பட்டு தொந்தரவு கொடுக்கும். பெட்ரோல் அல்லது எண்ணை வியாபாரத்தில் ஈடுபடுவான்.

**மூலம் 3ம் பாதத்தில் உள்ள சந்திரன்** தரும் பலன்

இவனை செவ்வாய் அல்லது சூரியன் அல்லது சனி பார்த்திருந்தால் ஜாதகன் ஒரு லாயர், கோர்ட்டில் ஆர்பிட்ரேட்டராக இருப்பான். விலைமகள் வீட்டுக்குப் போகும் பழக்கத்துக்கு அடிமையாவான்.

**மூலம் 3ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்**

ஆயுதங்களால் ஏற்பட்ட காயங்களை உடையவன். பேச்சில் கடுமை தொனிக்கும். சிறு விஷயத்துக்குக்கூட பிறரைச் சார்ந்து இருப்பான். வாழ்க்கையில் சந்தோஷமும் வெற்றியும் பெரும் போர்ட்டத்திற்குப் பிறகே கிடைக்கும்.

**மூலம் 3ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்**

சுதந்திரமான, தனிப்பட்ட தொழிலைச் செய்வான். இங்கு குரு இருந்தால் உயர்ந்த நிலையை எட்டிப்பிடிப்பான். சார்ட்டட் அக்கவுண்டண்ட அல்லது வேத சாஸ்த்திர பண்டிதனாக இருப்பான்.

### மூலம் 3ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்

தீர்க்காயுள் கொண்டவன். வாழ்க்கை வசதிகளையும் சந்தோஷமான குடும்பத்தையும் பெற்றவன். புதன் இவனுடன் சேர்ந்தால் இவன் ஒரு பண்டிதனாக ஆக முடியும். இவர்களை செவ்வாய் பார்த்தால் பெரிய சமூகத்தில் குருவாக ஆகலாம்.

### மூலம் 3ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்

சுக்கிரன் மட்டும் தனித்து இருந்தால் வாழ்க்கை ஒரு போராட்டம். ஏழ்மை தாண்டவமாடும். மனைவி மக்கள் சந்தோஷம் எதுவும் இருக்காது.

### மூலம் 3ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

இந்த சனி நல்ல டிபன்ஸ் அதிகாரியை உருவாக்குவான். டிபன்ஸில் இருந்தால், ஜாதகன் வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமையைத் தேடித் தருவான். இவனை செவ்வாய் பார்த்தால் இந்த பலன் நிச்சயம் கிடைக்கும்.

### மூலம் 3ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

நன்கு படித்த அறிவாளி. வேத சாஸ்திர பண்டிதன். கணிசமான ஸ்தாவர சொத்துக்களை உடையவன். இந்த சொத்துக்கள் இவனுடைய 50 வயதில் அழிந்து விடும். சந்திரன், கேட்டை நட்சத்திரத்தில் இருந்தால் இந்த பலன் நிச்சயம் ஏற்படும்.

### மூலம் 3ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

மூலம் 1, 2ம் பாதங்களில் உள்ள பலனையே கேது இங்கும் தருவான். அத்துடன் ஜாதகன் இருதய சம்பந்தமான நோய்கள் அல்லது ரத்தம் விஷத்தன்மை வாய்ந்ததாக மாறும் அபாயம் உண்டு.

**மூலம் 4ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்**

சூரியன் இங்கிருப்பது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. மயக்கம் மூளை சோகை, கடுமையான தலைவலி ஆகியவை தொந்தரவு கொடுக்கும். செவ்வாயும், சுக்கிரனும் கூட இதில் சம்பந்தப்பட்டு இருந்தால், ஜாதகன் நோய்வாய்ப்பட்டவனைப் போன்ற தோற்றமுள்ள ஒரு டாக்டர்.

**மூலம் 4ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்**

இந்த ஜாதகன் பிறந்த 4 வருடங்கள் வரை உயிருக்குக் கண்டம் இருப்பதால், அதன் பிறகே இவனுக்கு எந்த சோதிடப் பலனையும் கூற வேண்டும்.

**மூலம் 4ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்**

எரிச்சலூட்டும் பேச்சு நடவடிக்கைகளை உடையவன். எதற்கெடுத்தாலும் சண்டை சச்சரவில் இறங்குவான். டிபன்ஸ்ஸில் சேரலாம் வழக்கு வியாஜ்ஜியங்களில் மாட்டிக்கொள்வான். வாழ்வில் ஏற்பட்ட சலிப்பின் காரணமாக மந்திர தந்திரங்களில் ஈடுபடுவான்.

**மூலம் 4ம் பாதத்தில் உள்ள புதன் தரும பலன்**

இந்த புருஷனை குரு பார்த்திருந்தால், ஜாதகன் ஒரு கோடீஸ்வரன். தொழில் கலையில் வல்லவன். வேதங்களையும், சாஸ்திர சம்பிரதாயங்களையும் நன்கு கற்றவன்.

**மூலம் 4ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்**

குரு மூலம் 3ல் உள்ள பலன்களையே இங்கும் தருவான். மேலும் ஜாதகன் மதம் அல்லது விஞ்ஞான ஸ்தாபனத்தில் தலைமைப் பதவியில் இருப்பான்.

**மூலம் 4ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

சுக்கிரன், சனி மற்றும் சூரியன் இங்கு இருந்தால் ஜாதகன் மத சம்பந்தமான நூல்களில் அறிஞன். ஆனால்

வாழ்க்கையில் தினசரி தேவைக்கு பணமில்லாமல் திண்டாடும் ஏழ்மையை உடையவன். இவ்வளவு இருந்தும் இவனுக்கு ஒத்துழைப்புத் தரும் குடும்பத்தை உடையவன்.

### மூலம் 4ல் உள்ள சனி தரும் பலன்

ஜாதகன் ஒரு கிராமம்/ டவுனுக்குத் தலைவனாக இருப்பான். அல்லது கல்வி ஸ்தாபனத்தில் தலைமைப் பதவிக்கு ஈடான ஸ்தானத்தை அடைவான். இதில் சுக்கிரனும் சேர்ந்தால், ஜாதகனின் மனைவியும் உத்தியோகம் பார்ப்பவளாக இருப்பாள்.

### மூலம் 4ல் உள்ள ராகு தரும் பலன்

இந்த ராகுவுடன், விசாகம், அல்லது 2ம் பாதத்தில் உள்ள லக்னமும் சேர்ந்தால் ஜாதகனுக்கு அடிக்கடி கடல் கடந்த பிரயாணங்கள் ஏற்படும். ஒரு எக்ஸிகூடிவ் ஆகக் கூடிய திறமை பெற்றவன். ஆனால் வெட்கமில்லாத நடத்தையை உடையவன்.

### மூலம் 4ல் உள்ள கேது தரும் பலன்

உயர்ந்த ஸ்தானத்துக்குச் சென்றாலும் வாழ்க்கையில் பின் தங்கி விடுவான். பல கஷ்டங்கள் ஏற்படும். உறவினர்கள் எதிரிகளாக மாறி அவர்களால் அதிகமான கஷ்டங்களையும் தொந்தரவுகளையும் அனுபவிக்க வேண்டி வரும்.

## அத்தியாயம் - 28

## பூராட நட்சத்திரம்

இது 20 வது நட்சத்திரம். ராசி மண்டலத்தில் 253 பாகை 20 கலை முதல் 266 பாகை 40 கலை வரை பரவியுள்ளது.

| | |
|---|---|
| தமிழ்ப்பெயர் | - பூராடம் |
| வடமொழிப்பெயர் | - பூர்வாஷாட |
| அரபுப் பெயர் | - அன் நாய்ம் (AN-NAAIM) |
| கிரேக்கப் பெயர் | - சகிட்டாரி (SAGITTARI) |
| சீனப்பெயர் | - கி. |

பூர்வம் என்றால் முன்னாள் - ஆஷாராட என்றால் - தோற்கடிக்க முடியாதவர். அதாவது முதலிலிருந்தே தோற்கடிக்க முடியாதவர் என்பது பொருள். இது 4 நட்சத்திரங்களைக்கொண்டது என்பர். இது யானைத் தந்தம் போலிருக்கும் என்பர்.

இதன் அதிதேவதை ஜலம்

இந்த நட்சத்திரத்தில் பாத தோஷம் வருமாறு

முதல் பாதம் - தாய்க்கு ஆயுள் பங்கம், உடல் நலக்குறைவு

இரண்டாம் பாதம் - தகப்பனுக்கு ஆயுள் பங்கம். உடல் நலக்குறைவு.

மூன்றாம் பாதம் - தாய் மாமனுக்கு ஆயுள் பங்கம் உடல் நலக்குறைவு

நான்காம் பாதம் - ஜாதகனுக்கே அரிஷ்டம்

**சுவடி எண் 1500 மரண கண்டி சொல்லும் பூராட நக்ஷத்திரப் பலன்**

கையது கமலமாகும் கருமங்கள் பலவும் செய்யும்
தையலாள் பிணிய னாகும் தந்தைதாய்க் கினியனாகும்
மெய்யழ குடைய னாகும் விரும்பிய கல்வி கற்கும்
பொய்யுரை என்றும் சொல்லான் பூராட நாளி னானே. 178

(இ-ள்.) பூராட நட்சத்திரத்தில் பிறந்தவன் தாமரை போன்ற அகலமான கைகளுடையவன். பலவித காரியங்கள் செய்வதிலும் சமர்த்தனாவான். இவன் பெண்களைச் சேர்தலால் ஏற்படும் ஸ்திரீரோகம் உள்ளவன். தந்தை தாயர்க்கு நல்லவன்.

நல்ல உடலழகுள்ளவன். தான் விரும்பிய கல்வி கற்றுத்தேர்வன். இஞ்ஜினியர், டாக்டர், கம்ப்யூட்டர் பொறியாளன் என்று இந்த காலப்படிப்புப் படிப்பவன். இவன் எப்பொழுதும் பொய் சொல்லாத சத்தியசந்தன் என்பதாம்.

**தமிழ் சாதகாலங்காரம் சொல்லும் பூராட நட்சத்திரத்தின் பலன்**

மெய்ந் நெடியன் சிறுநெற்றி யான்வாசப் பிரியன்
விசாரமுளன் அரசர் நண்பன் மேல் கருமம் பார்ப்பான்
செய்யசிற்றுண் டிப்பிரியன் மாதாவுக் கினியன்
சேர்ந்தவரை ரட்சிப்பவன் சிவந்தசிறு விழியன்
கைகாலும் நீட்சியுளன் சவுந்தரியன் விசாலன்
கள்வனாம் வீரியவான் கரங்கள் புயம் வலியன்
பொய் சொல்லான் சஞ்சாரப் பிரயன்மின் னார்க்கினியன்
பொழிதன வான் அப்பூராடத் தானே. 179

(இ-ள்.) பூராட நட்சத்திரத்தில் பிறந்தவன். நீண்ட சரீரமுடையவன். சுகந்தபரிமள விருப்பமுள்ளவன். ஆலோசனையுடையவன். அரசர்களிடத்தில் சிநேகமுள்ள

வன். சிறந்த தொழில்கள் செய்பவன். நல்ல பலகார வகைகளில் விருப்பமுள்ளவன். தாய்க்கு விருப்பமுள்ளவன். அடுத்தவர்களைக் காப்பாற்றுபவன். சிவந்த சிறிய கண்களையுடையவன். கருத்தவன். வீரமுடையவன். பலமான கைகள் தோள்கள் உடையவன். பொய் சொல்லாதவன், ஊர் பயணம் செய்வதில் விருப்பமுடையவன். பெண்களுக்குப் பிரியமுடையவன். தானம் செய்பவனும் ஆவான் என்பதாம்.

**யவன ஜாதகம்**

மகிழ்ச்சி பொங்கும் முகமுடையவன். மிகுந்த வினையமுடையவன், தானம் செய்பவன், பசுக்களை பராமரிப்பவன். துக்கத்தை அனுபவிப்பவன் காருண்யமுடையவன், அபிமான முடையவன்.

**பிருஹத் ஜாதகம்**

இஷ்டப்படி ஆனந்தம் தரும் மனைவி உடையவள். கர்வம், நிலைத்த சினேகம் உடையவன் என்று கூறப்பட்டது.

**இந்த நட்சத்திரத்தில் பிறந்கத பெண்ணின் குணம்**

**வடமொழி ஸ்திரீ ஜாதகப்படி**

பூராட நட்சத்திரத்தில் பிறந்தவள் தன் குலத்தில் பந்து ஜனங்களில் முக்கியமாகப் போற்றப்படுபவள். அதிக குணவதி, பலமுள்ளவன், பதிவிரதை, பெரிய அழகிய கண்களையுடையவள். மிகவும் அழகுள்ளவள். இவள் உலகில் புகழுள்ளவளாக இருப்பாள்.

**வேறு நூல்**

தரும புத்தியுடையவள், வணக்கத் தன்மையுடையவள். சத்ய வாக்குள்ளவள். புண்ய காரியங்களையே செய்பவள். இவையே பூராட நட்சத்திரத்தில் பிறந்தவள் குணங்களாகும்.

**சங்கராச்சாரியார் மதனநூல் சொல்லும் பூராட நட்சத்திரப் பெண்ணின் குணங்கள்**

*இவள் நாக தத்துவத்தைச் சார்ந்தவள்*

மேல் மெலிந்து குறங்கு பெருத்திடும்
சால விரகங்கள் தடித்து சுற்றிடும்
நூலெ னச்சிறு நொய்ய மருங்குலாள்
பாலெனச் சொல் பகரும் பூராடமே. **180**

(இ-ள்.) பூராடத்தில் பிறந்த பெண் இடை நூல் போல் இளைத்து மெலிந்து மேலும் கீழும் மார்பகம், தொடை முதலியவை பெருத்து நல்ல தோற்றப் பொலிவுள்ளவள். இவள், பால் போல இனிமையாகப் பேசுபவள்.

**சுவடி எண் 1500ல் கண்ட பூராட நட்சத்திரம் பற்றிய பிற செய்திகள்**

இவனுக்குத் தெய்வம் ஈஸ்வரன் , பூதம் வாயு, ஜாதி வைசியன், கோத்திரம் புலஸ்தியன், யோனி -ஆண் குரங்கு, பட்சி -வண்டவாங்குருவி, விருட்சம் வன்னிமரம், மானிட கணம், ஜென்ம வாரம் - வியாழக்கிழமை. இந்த நட்சத்திரத்தில் வருஷம் பிறக்கில் தானியம் மற்றவற்றின் விலைகளேறும். இது உதித்து 24 நாழிகைக்குமேல் 4 நாழிகை விஷம். இந்த நட்சத்திரம் கட்டில் கால் போலிருக்கும். பெண் திரளில் விதவையாவாள். வெதுப்பு தோன்றில் 8 நாளில் குணமாகும். இதற்கு நெய்யாலே மந்திரம் சொல்லி ஓமம் செய்து, கடுகு, மாமிசம் பலியிடுவது. சுகந்த புஷ்பம் மற்றும் அதன் பின் பாலும் நெய்யும் நல்லெண்ணெயும் கலந்து ஓமம் பண்ணவேண்டும். பெண் திரளில் முன் சொன்னது போல் விதவையாவாள். அல்லது கலயாணம் ஆகாமல் கன்னியாகவும் இருப்பாள். இந்நாளில் கன்று காலிகொள்ள நன்று. இந்த நாளில் பிறந்தவன் அழகுடையவன். இவன் குணம் உள்ளவன். செம்மையுடையவன். வித்தை மேல் ஆசையுள்ளவன். வீரமும், திறமையும் உடையவன். தன

தானியமுள்ளவன். அடக்கமுடையவன். வித்துவான்களுக்கு நல்லவன். நன்றாகப் பேசுபவன். தயவான கனிந்த பார்வையுடையவன். பரத்தை மேல் ஆசையுடையவன்.

**பிறநூல் செய்திகள்**

இது இரண்டு நட்சத்திரங்களைக் கொண்டது என்பாரும் உண்டு. இது ஒரு சாய்ந்த கொம்பு போன்றது. இந்த நட்சத்திரம் கீழ் நோக்கும் நாள் இது குருட்டு நட்சத்திரமும் ஆகும். இது பஞ்சமத்தொனி.

**செய்யத்தக்கவை**

கணினி வித்யாரம்பம். மாடு வாங்கல், ஆயுதம் சேகரித்தல், விவசாயம் பண்ணல், வித்திடல், நவரத்னம் வாங்க நன்று. கிணறு குளம் வெட்டல், மந்திரப் பிரயோகம், விஷவைத்தியம், கடன் தீர்த்தல், சுரங்கப்பணி இதில் கொள்ளையடிக்கவும் செல்வர். இதில் பிறந்த பெண்ணைப்பற்றி பூராடம் நூலாடாது என்ற பழமொழி உண்டு. இவர்களுக்கு முதல் திருமணம் நடந்து அல்லது முதல் நிச்சயம் தவறி இரண்டாம் திருமணம் நடக்கலாமே அன்றி இவள் விதவையாவாள் என்று எந்த நூலிலும் இல்லை. இது பயணத்திற்கு உகந்ததல்ல. நிர்பந்தமான போது பால் குடித்து பயணம் செய்யலாம். தெற்கு வடக்கு திசைகளில் பயணம் செய்யலாம். இவர்கள் 60 வயதைக் கடப்பது அரிது என்பர். இது தாண்டினால் 80 வயது வரை வாழ வழி உண்டு. ஜாதக ஆயுள் ஸ்தானம் நன்கு அமைந்தால் இதைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை.

இரவு 10 நாழிகைக்கு மேல் இந்த நட்சத்திரத்தைக் காணலாம்.

இவர்கள் திருமண வாழ்க்கை அன்யோன்யமாக அமைவது கடினம். கருத்து வேறுபாடு இருக்கும். இதன் அதிதேவதை வருணன் என்பாருமுண்டு. இது பெண் நட்சத்திரம். மத்திய நாடி, சவ்ய நட்சத்திரமாகும். இதற்கு

வடமேற்கு திக்கும் உரியது. இதனால் அதற்குரிய வாயு தேவனும் (அஷ்ட திக்கு பாலகருள் ஒருவர்) அதிதேவதையாகக் கருதப்படுவார்.

திங்கட்கிழமை பூராடம் வரின் மரண யோகமாகும். அதில் பிறப்பவர்கள் பரிகாரம் செய்து கொள்ள வேண்டும்.

இதில் சுரம் தோன்றினால் 3 நால் முதல் 5 நாள் வரை குணமாகும். இதில் கடன் தரக்கூடாது. மாலை கட்டல், பிறரை காப்பாற்றுதல் இவற்றிற்கு இது நல்ல நாள். இதற்கு நாலு பக்கமும் சிவந்த மேகம் தோன்றினால் 5 நாளில் மழை பொழியும். பீடைக்கு கல்ஹார புஷ்பம் பூஜை.

ஆபோஹிஷ்டா என்பது பூஜா மந்திரம். சென்னெல் ஹோம திரவியம். சாவித்திரி மந்திரத்தால் 108 தடவை ஹோமம். 108 தடவை வருணனுக்கு பாயசமும் நெய்யும் பலி இடுக. 20 நாளில் அரிஷ்டம் நீங்கும்.

### பூராட நட்சத்திரம் பாத பலன்

**தமிழ் ஜாதகாலங்காரம்**

ஈறிலா வணக்க முடையான் சேயே
இலாதவன் விகாதமே புரிவான்
இயம் பிடுசூரன் மத்திம வயதும்
என்பர் பூராடத்தின் முதற்கால்
பேறுடை யோகி சவுந்தரி யோனாம்
பெட்புறும் சினேகித மில்லான்
பேதையாம் வேசைக் கானென் றுரைப்பர்
பெரியவர் இரண்டதாம் காற்கே
மாறிலாச் சுகவான் பாக்கியவான் மாதா
வாலிபம் தன்னிலே மரிப்பன்
வளர் பெரு நோயன் குணமுள்ள தெளிவன்
மன்னி மூன்ற தாங் காலே

வீறிவான் முதுகில் நோயுளன் திருடன்
விளம்பிய வாதவான் பல வான்
மேவிய துரோகி சிறுவய திற்காம்
விளம்பிய தந்தை நாற் காற்கே.! 181

(இ-ள்.) பூராடம் முதல் பாதத்தில் பிறந்தவன் வணக்கமும் பணிவும் உள்ளவன். இவனுக்கு மக்கள் செல்வம் இருப்பது அரிது. இவன் நல்ல வீரன். சூரன். கலகம் புரிபவன். இவன் மத்திமாயுள் உடையவனே.

பூராடம் 2ம் பாதத்தில் பிறந்தவன் நல்ல சாதனை புரியும் யோகியாக இருப்பான். அழகன், நல்ல சினேகிதர் இல்லாதவன். சிறிது மந்த புத்தி, வெகுளித்தனம் உடையவன். வேசியரிடம் பழகி சுகிப்பவன் என்று சொல்லப்பட்டது.

பூராடம் மூன்றாம் காலில் பிறந்தவன் என்றும் குறையாத சுகமுடையவன். பாக்கியசாலி. இளமையில் தாயை இழப்பான். பெருநோய் அல்லது தீரா நோய் உடையவன். குணசாலி, தெளிவான சிந்தையுள்ளவன் என்று சொல்லுவர்.

நாலாங்காலில் பிறந்தவன் வலிமை இல்லாதவன் முதுகில் நோயுள்ளவன். களவுத் தொழில் செய்பவன். வாதம் புரிபவன், பலசாலி, துரோகம் செய்பவன், இள வயதில் பிதாவை இழப்பவன் என்றும் சொல்லுவர்.

**ஜாதக சார தீபம் சொல்லும் பூராட பாத பலன்**

முதல் பாதம் - சிரேஷ்ட மானவன், உயர்ந்தவன்

இரண்டாம் பாதம் - அரசன், அதற்குச் சமானமானவன்

மூன்றாம் பாதம் - இனிமையாகப் பேசுபவன்

நான்காம் பாதம் - தனவான்

**சுவடி எண் 1500 மரண கண்டிகை நூல் கூறும் பூராட நட்சத்திர பாத பலன்**

**பூராச நட்சத்திரம் முதல் பாத பலன்**

நீனியன் செய்யன் சால நிபுணனாம் நேயம் செய்வான்
மாளிகை மனையில் வாழும் மன்னரால் மகிழ்ச்சி யுண்டாம்
வாளிசேர் கண்ணினாள் மேல் மனது சார நில்லான்
காளிசேர் வடிவைப் பேணும் கரிரவன் காலினானே! 182

(இ-ள்.) இவன் நெடிது உயர்ந்தவன். எல்லா விஷயங்களிலும் நிபுணனாக இருப்பான். பிறரிடம் மிகவும் பாராட்டுபவன். இவன் அரண்மனை போன்ற மாளிகையில் வசிப்பவன். இவனுக்கு அரசனால் அல்லது அரசாங்கத்தால் உதவியும் மகிழ்ச்சியும் உண்டு. அம்பு போன்ற கூரான வடிவமுள்ள அழகிய கண்ணுடைய அழகி ஆனாலும் தன் மனைவி மேல் அதிகம் பாசம் வைக்கமாட்டான். இவன் காளியின் வடிவை அதாவது காளி தேவதையை சொரூப தியானம் பண்ணுபவனாக இருப்பான் என்பதாம்.

**இதற்குக் காலச் சக்கர தசை**

| | | | |
|---|---|---|---|
| விருச்சிகச் செவ்வாய் | - | 7 | வருடம் |
| துலாம் வெள்ளி | - | 16 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| கடகச் சந்திரன் | - | 21 | ,, |
| மிதுன புதன் | - | 9 | ,, |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| மேஷச் செவ்வாய் | - | 7 | ,, |
| மீன வியாழன் | - | 10 | ,, |
| ஆக வயது | - | 100 | ,, |

**பூராட நட்சத்திரம் 2ம் பாத பலன்**

மந்திர மறைகள் கற்கும் மாதரால் அருளுமுண்டாம்
சுந்தரப் பலன்கள் சொல்லும் தோளிலே திசைகள் தோன்றும்
அந்தரம் பொய்கள் சொல்லான் அரும்பொருள் நெருங்கி வாழும்
புந்தியிற் பெரியனாகும் புதனினங் கிஷத்தி னானே. 183

சுவடி எண் 1500

(இ-ள்.) பூராட நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவன் வேதங்களையும் மந்திர சாஸ்திரங்களையும் நன்கு கற்று தேர்வான். இவனுக்குப் பெண்களால் பல வகையிலும் உதவி உண்டாம். சோதிடம் அறிந்து அழகான பலன்கள் சொல்லுவதில் வல்லவன். இவன் எல்லாதிக்குகளிலும் பரவிய புகழும் உயர்ந்த தோள்களும் உடையவன். இவன் பொய்கள் சொல்லமாட்டான். தான் சம்பாத்தித்ததை சேர்த்து வாழ்வான். இவன் புத்தியில் பெரியவன். அதாவது பெரிய புத்திசாலியாக இருப்பான். இவனே புதன் அங்கிஷத்தில் பிறந்தவன் என்பதாம்.

**இதற்குக் காலச் சக்கரத் தசை**

| | | | |
|---|---|---|---|
| மகரச் சனி | - | 4 வருடம் | |
| கும்பச் சனி | - | 4 | ,, |
| மீன வியாழன் | - | 10 | ,, |
| மேஷச் செவ்வாய் | - | 7 | ,, |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| மிதுன புதன் | - | 9 | ,, |
| கடகச் சந்திரன் | - | 21 | ,, |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| ஆக வயது | - | 85 | ,, |

**பூராட நட்சத்திரம் 3ம் பாத பலன்**

| | | | |
|---|---|---|---|
| மகரச் சனி | - | 4 வருடம் | |
| கும்பச் சனி | - | 4 | ,, |
| மீன வியாழன் | - | 10 | ,, |
| மேஷச் செவ்வாய் | - | 7 | ,, |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| மிதுன புதன் | - | 9 | ,, |
| கடசகச் சந்திரன் | - | 21 | ,, |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| ஆக வயது | - | 85 | ,, |

**பூராட நட்சத்திரம் 3ம் பாத பலன்**

மார்பகன் றுயர்ந்த மெய்யன் மதிமுகம் மருவுண் டென்றும்
சீர்தரும் உண்டி பேணும் சேய்தரும் கொடுங்க ணானன்
ஆதர வுடைய னாகும் அறிவுடன் நன்கு கற்கும்
சார்வதும் மாதர்தம்பால் தரும்புகர்க் காலி னானே!

(சுவடி எண் 1500)

(இ-ள்.) பூராடம் மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் மார்பு அகன்று உயர்ந்திருக்கும். உடல் வாகுள்ளவன். இவன் சந்திரன் போன்ற அழகிய முகமுடையவன். அதில் மரு அல்லது மச்சம் இருக்கும். இவனை எல்லோரும் ஆதரிப்பர். அறிவுடன் கல்வியை ஊன்றி நன்றாகக் கற்பான். இவன் பெண்களைச் சுற்றிச் சுற்றி வருவான். இவனே சுக்கிரன் காலில் பிறந்தவனாவான் என்பதாம்.

**இதற்குக்க கால சக்கரத் தசை**

| | | | |
|---|---|---|---|
| துலாம் வெள்ளி | - | 16 வருடம் | |
| விருச்சிகச்செவ்வாய் | - | 7 | ,, |
| தனுசு வியாழன் | - | 10 | ,, |

| | | | |
|---|---|---|---|
| மகரச் சனி | - | 4 | ,, |
| கும்பச் சனி | - | 4 | ,, |
| மீன வியாழன் | - | 10 | ,, |
| மேஷச் செவ்வாய் | - | 7 | , |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| கன்னி புதன் | - | 9 | ,, |
| ஆக வயது | - | 83 | ,, |

**பூராட நட்சத்திரம் 4ம் பாதப் பலன்**

சிட்டரைச் சேர்ந்து வாழும் செழுங்குடியான னாகும்
வெட்டெனப் பேச வல்லான் வெகுளிமுன் உடையனாகும்
பட்டயம் அணிந்த தோளான் படைக்கெலாம் தலைவனாவான்
இட்டருக் கினிய னாகும் எரியனங் கிஷத்தினானே. 185

*(சுவடி எண் 1500)*

(இ-ள்.) பூராடம் நாலாம் பாதத்தில் பிறந்தவன் நல்ல ஒழுக்கமுள்ள குணவான்களையே சேர்ந்து வாழ்வான். இவன் வளமான நல்லகுடும்பத்தில் பிறந்தவனாவான். இவன் வெட்டிப் பேச வல்லவன். முன்கோபமுள்ளவன். இவன் தோள் வளையம் என்ற தோளணி அணிந்தவனாவான். தனக்கு இஷ்டமான ஜனங்களுக்கு இனியவனாவான். இவனே செவ்வாய் அங்கிஷத்தில் பிறந்தவனாவான் என்பதாம்.

**இதற்குக் காலச் சக்கரத் தசை**

| | | | |
|---|---|---|---|
| கடகச் சந்திரன் | - | 21 வருடம் | |
| சிங்க ஆதித்தன் | - | 5 | ,, |
| மிதுன புதன் | - | 9 | ,, |
| ரிஷப வெள்ளி | - | 16 | ,, |
| மேஷச் செவ்வாய் | - | 7 | ,, |
| மீன வியாழன் | - | 10 | ,, |

| | | | |
|---|---|---|---|
| மகரச் சனி | - | 4 | வருடம் |
| கும்பச் சனி | - | 4 | ,, |
| தனுசு வியாழன் | - | 10 | ,, |
| ஆக வயது | - | 86 | ,, |

**பூராட நட்சத்திர மகாதசை விம்சோத்தரி**

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | - | 20 | வருடம் |
| சூரியன் | - | 6 | ,, |
| சந்திரன் | - | 10 | ,, |
| செவ்வாய் | - | 7 | ,, |
| ராகு | - | 18 | ,, |
| குரு | - | 16 | ,, |
| சனி | - | 19 | ,, |
| புதன் | - | 17 | ,, |
| கேது | - | 7 | ,, |
| ஆக வயது | | 120 | ,, |

**இனி இவனுக்கு ஏற்படும் கண்டம் நோய் முதலியன**

இவன் பிறந்த ஆண்டில் பிள்ளைப் பிணி 4 வயதில் வெதுப்பு, 9ம் வயதில் 4 கால் மிருகத்தால், 11ம் வயதில் விஷத்தால், 10 வயதில் பெண்ணால் கண்டம் (மருந்தீடு முதலியன) மற்றும் கண்ணோயால், 27 வயதில் மரமேறி விழுதல், 28 வயதில் சிலந்தி நோயால் கிறந்த மற்றும் சூலையால், 30 வயதில் அரச தண்டனையால், 34 வயதில் சத்துருவால், 38 வயதில் வெதுப்பால், 40 வயதில் இடது பக்கத்து வியாதியால், 58 வயதில் வாத சன்னியால், 60 வயதில்

வெதுப்பால் மண்டை இடியால், 86 வயதில் சிலேத்துமத்தால், 94 வயதில் சென்று ஐப்பசி மாதம் அமரபட்சம் பிரதமையும் வெள்ளிக்கிழமையும் பூராட நட்சத்திரமும் கூடிய நாளில் பூராடம் 15 நாழிகை சென்று சிலேத்துமத்தால் மரணம்.

**இனி இவன் பிறந்த லக்னம்**

சூரிய சாரமானால் - தனவான்

சந்திரன் சாரமாகில் - தான்யம் உடையவன்

செவ்வாய் சாரமாகில் - சேவகன்

புதன் சாரமாகில் - வித்துவான்

குரு சாரமாகில் - சூரன்

சுக்கிரன் சாரமாகில் - பிரபலமானவன்

சனி சாரமாகில் - ஊனமுடையவன்

ராகு சாரமாகில் - துஷ்டன், கள்ளன்

கேது சாரமாகில் - தரித்திரன்

பூராடம் 2ம் கால் மாதா மரணம்

பூராடம் 3ம் கால் தந்தை மரணம்

பூராடம் 4ம் கால் மாமன் மரணம்

இதற்குப் பெருமாள் கோயிலில் 50 திருவிளக்கிடவும். மேலும் சிவலிங்கத்திற்கு அன்னாபிஷேகம் செய்யவும். (ராமானுஜ) தாசர்களுக்கு அமுதிடவும். அடுத்து பெருங்காயம் புளி, எள்ளு, உளுந்து, பயறு, அவரை (பயறு) காராமணி, கோதுமையும் நவதான்யமும் வள்ளுவனுக்குத் தானம் செய்யவும்.

(குறிப்பு: ஏட்டில் திருவள்ளுவருக்குச் சாந்தி செய்யவும் என்று உள்ளது. இது வள்ளுவருக்கு என்றிருக்க வேண்டும். பெரும்பாலும் அவர்களே சோதிடராய் இருந்து வருகிறார்கள். எனவே திருக்குறள் எழுதிய திருவள்ளுவர் அல்ல என்று கொள்ள வேண்டும்.)

## பூராட நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பூர்வபுண்ணிய பாவமும் சாந்தி பரிஹாரமும்

## பூராட நட்சத்திரத்தின் முதல் பாகத்தில் பிறந்தவர்களின் பூர்வகர்மமும் சாந்தி பரிஹாரமும்

சிவபெருமான் சொல்லுகிறார்

அயோத்தியில் வசிஷ்ட முனிவர் ஆச்ரமத்தில் ஸ்ரீதனேஸ்வரர் என்ற பிராமணன் ஒருவன் இருந்து வந்தான். அவன் பண்டிதனாகவும் தன் குல நெறி தவறாதவனாகவும் அறிவாளியாகவும் இருந்தான். இவன் மனைவி பதிவிரதையாகவும் ஒழுக்க நெறி உடையவளாகவும் இருந்தாள். இவனுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் உண்டு. இவன் பிறருக்கு கல்வி புகட்டி அதனால் ஊதியம் பெற்று வாழ்ந்து வந்தான்.

இவனுடைய மருமான் (தங்கை பிள்ளை) தீர்த்த யாத்திரை செல்லும் வழியில் மனைவியுடன் இவன் வீட்டில் வந்து தங்கினான்.

இவன் ஒரு மாதம் இங்கு இருந்தான். அதன் பின் இவன் அங்கு பாம்பு கடித்து இறந்தான். இவனுக்கு தனேஸ்வர் கர்ம காண்டம் கிரியை செய்தான்.

இப்படி ஒரு வருஷம் ஆனபின் தனேஸ்வரனுக்கும் அவன் மருமானின் மனைவிக்கும் பாசமும் தொடர்பும் ஏற்பட்டது. இந்த சமயம் தனேஸ்வர் மனைவிக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் சண்டை ஏற்பட்டது.

வெகு காலம் சென்று தனேஸ்வர் சர்மாவும் இறந்தான். இவனை யமதர்ம ராஜன் கோர நரகத்தில் தள்ளினான். 60000 ஆண்டுகள் கோர நரக வேதனை அனுபவித்தான். இவன் மருமான் மனைவி வேறு ஒரு சமயம் பிரயாகையில் புண்ணிய நீராடியதால், இவள் பாவத்தால் பந்தப்படவில்லை.

தனேஸ்வர் நரகத்திலிருந்து விடுபட்டவுடன் தொடர்ந்து கொக்கு, காக்கை தவளையாகவும் பிறவி எடுத்தான்.

அதன் பின் தேவகந்தர்வர்களும் புகழும் ஒரு தேசத்தில் பணக்காரக் குடும்பத்தில் மனிதனாகப் பிறந்தான்.

இவன் எல்லா வித்தைகளும் பெற்று அழகாகவும் இருந்தான். இவன் போன ஜன்மத்தில் தன் மருமானின் மனைவியுடன் போகம் பண்ணிய பாவத்தால், இவன் நோயாளியானான். இவன் பலமிழந்து இவனுக்குச் சந்ததியும் இல்லாமல் போயிற்று. இவனுக்குத் தீராத வயிற்று நோய் ஏற்பட்டது. இவனுக்குப் பெண் குழந்தைகளே பிறந்தன்.

**இப்பொழுது இந்த பாவத்துக்குப் பரிஹாரம் சொல்லுகிறேன் கேட்பாயாக.**

முதலில் தன் சொத்தில் 6ல் ஒரு பாகத்தை புண்யகாரியங்களில் செலவு செய்ய வேண்டும். அதன் பின் காயத்ரி மந்திரத்தையும் ஜாத வேதசே என்ற மந்திரத்தையும் (இரண்டு மந்திரங்களுக்கும் புரஸ்சரணம் ஹோமம் முதலியவை) செய்ய வேண்டும். பழைய கிணறுகள் சாலையோரக் குளங்களையும் மராமத்து பார்த்து சரிசெய்ய வேண்டும். அதன் பின் 60 மரம் செடிகள் கொண்ட தோட்டத்தை நிர்மாணம் செய்ய வேண்டும். மாசி மகத்தின்போது பிரயாகையில் துலாதானம் பண்ண வேண்டும்.

இப்படிச்செய்வதால் இவன் பாபங்கள் நாசமாகின்றன. இவன், இவன் மனைவி இருவரும் உடல் நலம் பெற்று இவர்களுக்குத் தீர்க்காயுள் உள்ள குழந்தைகள் பிறப்பார்கள். இதன் பின் இவர்கள் சந்தோஷமாக வாழ்வார்கள்.

**பூராடம் 2ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி முறைகளும்**

சிவபெருமான் சொல்லுகிறார்

கர்நாடக தேசத்தில் சிவபுரம் என்ற நகரம் உண்டு. அங்கு நிறைய வியாபாரிகள் வாழ்ந்து வந்தனர். இங்கு தரணிதரன் என்ற வைசியன் மிகவும் புகழுடன் விளங்கினான். இவன்

மனைவி மிகவும் அழகியாக இருந்தாள். இவன் வியாபாரத்தில் நிறைய பணம் சேர்த்தான். இவனுக்கு ஒரு அந்தணன் சிநேகிதனானான். இவன் தன் குலத் தொழிலை விட்டு வேறு வகையான வியாபாரங்கள் செய்து, பொன், வைரம், முத்து, தங்கம் மற்றும் நிறைய தனமும் சேர்த்து வைத்தான். இவன் நட்பு காரணமாக தன் தனம் முழுவதையும் வைசியன் வீட்டில் வைத்தான். அவற்றை வைசியன் அனுபவித்தான். வயதாகி வைசியன் இறந்தான். இவன் மனைவி கணவன் பிரிவுதாளாது விரதமிருந்து இறந்து போனாள். இவள் புண்ணியத்தால் இருவரும் 1000 வருஷங்கள் சுவர்க்க போகம் அனுபவித்தனர். அதன்பின் வைசியன் காகமாகவும் அதன்பின் அன்றில் பறவையாகவும் அதன்பின் அன்னப் பறவையாகவும், கடைசியில் மனிதப் பிறவையைப் பெற்றாள். போன ஜன்ம மனைவியே இப்பொழுது மனைவியாக வாய்த்தாள்.

ஆனால் இவளுக்கு குழந்தைகள் இல்லை. இவள் மலடாகவே துக்கம் அனுபவித்து வந்தாள். சரீரத்தில் பல நோய்கல் தோன்றின. பாப பலத்தால் பெண்களே பிறந்தன. இதற்கு சாந்தி பரிகாரம் வருமாறு. தன் சொத்தின் பாதியை உத்தம பிராமமணனுக்குத் தானம் செய்ய வேண்டும். அதன்பின் ஒரு லக்ஷம் தடவை லக்ஷ்மி மந்திரம் ஜபம் செய்ய வேண்டும். அதன் பின் ஹோமமம் முதலிய புரஸ் சரணமும் முடிக்க வேண்டும். பின்பு பொற்பூண் அணிவித்த கொம்புகளுடன் கூடிய கன்றுகளுடன் பொன் மணி முத்து எல்லாம் அணிவித்த பசுவைத் தானம் பண்ண வேண்டும். குறைந்த பக்ஷம் 100 பிராமணர்களுக்குப் போஜனம் செய்விக்க வேண்டும்.

அதன்பின் 400 தோலா எடையுள்ள தங்கத்தாலான பீடம் ஒன்று செய்து அதன் நடுவில் பிராமணனின் வெள்ளியினால் ஆன மூர்த்தி அமைத்து அதை தான் செய்த பாவங்களைச் செல்லி அழுது மன்னிப்புக்(CONFESSION) கேட்டு பூஜை செய்ய வேண்டும்.

இதன் பின் அவர்கள் பாவமனைத்தும் தீரந்து உடல் நலம் பெறுவர். அவர்களுக்குத் தீர்க்காயுள் உள்ள குழந்தைகள் பிறக்கும். பின்பு எல்லோரும் சந்தோஷத்துடன் வாழ்வர்.

**பூராட நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் முன் ஜென்ம கர்ம பலனும் சாந்தி பரிஹாரமும்**

கங்கை யமுனை சங்கமத்துக்கருகே யமுனைக் கரையில் கந்தர்வபுரம் என்றொரு நகரமுண்டு. அங்கு ஸோதன் என்ற வகுப்பைச் சேர்ந்த மிகவும் புண்ணிய காரியங்களைச் செய்து வந்த ஒருவன் வாழ்ந்து வந்தான். இவன் பகவானின் கல்யாண குணங்களை நன்கு அறிந்தவன். தன் நண்பர் உறவினர்களால் நன்கு பூசிக்கப்பட்டவன். இவன் அந்த தேசத்தின் அரசனாகவும், மிகவும் புத்திமானாகவும் ஞானியாகவும் இருந்தான்.

இவன் ஒரு சமயம் தவறுதலாக ஒரு பிராமணனின் நிலத்தை அபகரித்துக் கொண்டான். அதனால் மனம் ஒடிந்த பிராமணன் விஷம் குடித்து இறந்தான். லோதன் வயதாகி இறந்தான். எமதூதர்கள் இவனை கும்பீபாகம் என்ற நரகத்தில் தள்ளினர். ஒரு யுக காலம் அங்கு அவன் வேதனை அனுபவித்தான். அதன்பின் முதலில் அவன் பன்றியாகவும் அதன் பின் கரடியாகவும் ஜென்மம் எடுத்தான்.

இதற்குப் பின்பு ஒரு பணக்காரக் குடும்பத்தில் மனித ஜன்மம் பெற்றான். போன ஜன்ம பாவத்தால் இந்த ஜென்மத்தில் இவனால் நிலம் அபகரிக்கப்பட்டு பிராமணன் இறந்ததால் இவனும் இப்பிறவியில் ஆண் குழந்தை இன்றி பெண் குழந்தைகளே உள்ளவனானான். இவனைத் தீராத நோய்களும் பற்றிக் கொண்டன.

**இப்பொழுது இதற்கு சாந்தி வருமாறு**

காயத்ரி ஜாதவேதஸே மற்றும் த்ரயம்பகம் ஆகிய மூனறு மந்திரங்களையும் ஒவ்வொரு லட்சம் முறை ஜபம் செய்து அதற்கு ஹோமம், தர்ப்பணம், மார்ச்சனம் ஆகிய புரஸ்சரண முறைகளைச் செய்ய வேண்டும். பத்து நிறமுள்ள

ஒரு பசுவைத் தானம் பண்ண வேண்டும். 100 பிராமணர்களுக்கு விருந்துணவு படைக்க வேண்டும். இவர்களுக்குத் தனித்தனியாக குறைந்த பக்ஷம் நிலம் வாங்கித் தனித் தனியாக தானம் பண்ணவேண்டும். 20 தோலா எடையில் ஒரு பிராமணன் உருவம்செய்து அதை முறைப்படி பூசை செய்து உத்தம பிராமணனுக்குத் தானம் கொடுக்க வேண்டும். மகர சங்கராந்தியன்று பிரயாகையில் தன் மனைவியுடன் புண்ணிய ஸ்நானம் செய்ய வேண்டும்.

இப்படி செய்வதால் இவன் பூர்வ பாவங்கள் தீர்கின்றன. இவனும் இவன் மனைவியும் உடல் நலம் பெறுவர். இவர்களுக்குத் தீர்க்காயுள் உள்ள ஆண் சந்ததியும் ஏற்படும். இதன் பின்னர் இவர்கள் திருப்திகரமாக வாழ்வார்கள்.

**பூராச நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவர்களின் போன சென்ம பாவமும் சாந்தி பரிஹாரமும்**

**சிவபெருமான் சொல்லுகிறார்:**

அயோத்தியில் ஒரு தோட்டக்காரன் வாழ்ந்து வந்தான். இவன் எல்லோருக்கும் முக்கியமான பெரியோர், பிராமணர்களுக்கும் தன்னால் முடிந்த தொண்டுகளைச் செய்து வந்தான். இவன் மனைவி மிகவும் துஷ்டையாகவும், விபசாரியாகவும் இருந்தாள். இவன் மாலைகள் கட்டி விற்றுப் பிழைத்து வந்தான். இவனுக்கு ஒரு பிராமண நண்பன் இருந்தான். ஒரு சமயம் அவன் இவன் இல்லத்திற்கு வந்து ஒரு லட்சம் பொற்காசுகளை அடைக்கலப் பொருளாக வைத்துவிட்டு சென்றான். வெகுகாலம் வரை திரும்பி வரவில்லை. இதற்கிடையில் பிராமண்ன் கொடுத்த பணம் முழுவதும் செலவாகி விட்டது.

வெகு காலம் சென்று இவன் இறந்தான். இவன் ஒருலட்சம் வருடம் சுவர்க்கத்தில் போக சுகம் அனுபவித்தான். அதன்பின் புண்ணியம் தீர்ந்தபின் மத்திய தேசத்தில் மனிதப் பிறவியை அடைந்தான். போன ஜன்ம

பாவத்தால் இவனுக்கு சந்ததி இல்லாமல் போய் விட்டது. போன ஜன்ம மனைவியே இப்பிறவியிலும் மனைவியாக வாய்த்தாள். இவள் நோயும் காய்ச்சலுமாகவே இருந்தாள். இதற்குச் சாந்தி வருமாறு.

முதலில் விதிப்படி சிவபூஜை செய்ய வேண்டும். அதன் பின் ஒரு லட்சம் முறை சிவபஞ்சாட்சர ஜபம் செய்ய வேண்டும். அதற்கு முறைப்படி ஹோமம் தர்ப்பணம், மார்ச்சணம் முதலியவை செய்ய வேண்டும். ஒரு மாத காலம் தேவி சப்தசதி பாராயணம் செய்ய வேண்டும். தன் வீட்டிலுள்ள பணத்தில் ஆறில் ஒரு பாகத்தை உத்தம பிராமணன் ஒருவனுக்குத் தானம் பண்ண வேண்டும். அதன்பின் குதிரை, பால் கறக்கும் எருமை இவற்றைத் தானம் பண்ண வேண்டும். 40 தோலா எடையில் பூ, இலை, காய், பழம் உள்ள மரத்தின் உருவம் ஒன்றைச் செய்து அதையும் தானம் பண்ண வேண்டும். இதனால் இவனுக்கும், இவன் மனைவிக்கும் நோய்கள் தீரும். இவர்களுக்கு தீர்க்காயுள் உள்ளஆண் பெண் குழந்தைகள் பிறப்பார்கள். அதன்பின் இவர்கள் சந்தோஷமாக வாழ்வார்கள்.

## பிறர் மதப்படி பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்கள்

### பொதுப்பலன் - ஆண்கள்

ஒல்லியாகவும் உயரமாகவும் உடல் இருக்கும். பற்கள் மிக அழகாக, வரிசையாக அமைந்திருக்கும். நீண்ட காதுகளும், குறுகிய இடையும், நீண்ட கைகளும் உடையவன். கண்கள் ஒளி மிகுந்தவை. மொத்தத்தில் அழகான உருவ அமைப்பு கொண்டவன்.

### குணநலன்கள்

பிரமிக்கத்தக்க அறிவை உடையவள். கெட்டிக்காரத்தனம் மிகுந்தவன். தான் கையாளும் விஷயங்களில் சட்டென்று ஒரு முடிவுக்கு தாவி விடுவான்.

வாக்கு வாதத்தில் இவனை மிஞ்ச யாருமில்லை. பிறரை தன் சொற்களால் நம்ப வைத்து தன் வழிக்குக் கொண்டு வரும் அசாதாரண திறமை பெற்றவன். சரியோ தவறோ எதுவானாலும் தான் சொல்லுவது அல்லது செய்வதுதான் சரி என்று நினைப்பவன். பிறர் எடுத்துச் சொன்னால்கூட ஒப்புக்கொள்ள மாட்டான். இவனிடமிருந்து மற்றவர்கள் அட்வைஸ் பெறலாமே தவிர மற்றவர்கள் சொல்லும் அட்வைஸ் இவன் காதில் ஏறாது.

தான் ரொம்ப தைரியசாலி, என்று எவருக்கும் பயப்படமாட்டேன் என்ற பரை சாற்றிக் கொண்டாலும் உள்ளூற பயந்தாங்கொள்ளி. ஏதாவது கஷ்டங்கள் தோன்றினால் பயந்து சாவான். சந்தர்ப்ப சூழ்நிலைகள் கட்டாயப்படுத்தினால் அல்லது தைரியசாலியான ஒருவன் இவன் உதவிக்கு வந்தால் அப்போது தைரியத்தை ஏற்படுத்திக்கொண்டு பிரச்சினைகளை சமாளிக்க முயலுவான். எந்த முடிவையும் இவனால் சுயமாக எடுக்க முடியாது. சின்ன விஷயங்களில் கூட முடிவு எடுக்க முடியாமல் திண்டாடுவான். ஏதாவது ஒரு காரணத்தினால் அல்லது வாக்கு வாதத்தின்போது திடீரென பலாபலன்களை எண்ணிப் பாராமல் முடிவு எடுத்துவிடுவான். கடைசி வரையில் அந்த முடிவை மாற்றிக்கொள்ள மாட்டான். அந்த முடிவு தப்பாகவே இருந்தாலும் அவனை மாற்ற யாராலும் முடியாது. அப்படிப்பட்ட பிடிவாத குணம் கொண்டவன்.

பிரதிபலனை எதிர்பாராமல் பலருக்கும் பல காரியங்களைச் செய்து கொடுப்பான். அதனால் பல கண்டனங்களுக்கும் உள்ளாவான். இவன் தனக்குத் தெரியாத, அறிமுகமில்லாத மனிதர்களிடத்திருந்தே அதிக நன்மைகளையும் ஆதாயங்களையும் அடைவான். யாருடனும் நிரந்தரமான உறவு அல்லது தொடர்பு வைத்துக் கொள்ளமாட்டான். இவன் மனது வைத்து ஒரு நோக்கத்துடன் உண்மையாக ஒரு வேலையைச் செய்தானாகில் வாழ்க்கையில் மிக உயர்ந்த நிலைமையை அடையக்கூடும்.

இவன் வெளிப்பகட்டை வெறுப்பவன். கடவுளுக்குப் பயந்தவன். நேர்மையும் பணிவும் உடையவன். வெளிவேஷம் போடாதவன். மற்றவர்களின் முன்னேற்றத்திற்குத் தொந்தரவு, தடை செய்யும் எந்த செயலையும் எண்ணிக்கூட பார்க்கமாட்டான்.

மத ஈடுபாடு அதிகம் உள்ளவன். பூஜிக்கத் தக்கவர்களை அழைத்து மரியாதை செய்து அன்னமளிப்பான். தன் பெரும்பான்மையான நேரத்தை பூஜை புனஸ்காரத்தில் செலவழிப்பான். பழமையான பொருட்களை சேகரிப்பதில் நாட்டம் உடையவன். இவனிடம் அத்தகைய பல அரிய பொருட்கள் இருக்கும். கவிதைகள், செய்யுள்கள், எழுதுவதில் விருப்பம் அதிகம் உண்டு.

**கல்வி - தொழில்**

இவன் எல்லாத் துறைகளிலும் அறிவைப் பெற்றவனாக இருந்த போதிலும், கலைத் தொழில் அல்லது மருத்துவ தொழிலுக்கு மிகவும் உகந்தவன். நம்பிக்கையான மேனேஜர் பணியாளர் கிடைத்தாலொழிய இவர்கள் எந்த பிஸினஸ்ஸிலும் ஈடுபடக்கூடாது. வேதாந்தம், மந்திர தந்திர விஞ்ஞானங்கள் முதலியவைகளை கற்பதில் அதிக ஆர்வம் உள்ளவன்.

32வயது வரை உள்ள காலம் சோதனையாக, தவறுகள் மலிந்ததாக இருக்கும். அதன் பின்னர் மெதுவாக வெற்றிப் படிகளில் ஏற ஆரம்பிப்பான். 32லிருந்து 50 வயது வரை உள்ள காலம் பிரகாசமாக அமையும்.

**குடும்ப வாழ்க்கை**

பெற்றோர்களின் அன்பையும், ஆதரவையும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் உடன் பிறந்தவர்களிடமிருந்து பல நன்மைகளை அடையும் அதிர்ஷ்டம் உள்ளவன். சகோதரர்கள் இவனுக்கு மிகவும் உதவி செய்வார்கள். வாழ்வின் பெரும் பகுதி வெளியூரில் கழிக்கும்படி நேரும்.

கல்யாண வாழ்க்கை ஏறக்குறைய மகிழ்ச்சி உள்ளதாகவே இருக்கும். நாட்கடந்து திருமணம் நடக்கலாம். போட்டி போடுவது போல் திருமணமும் இருக்கும். தன் மனைவியையும், அவளது உறவினர்களையும் மிகவும் சார்ந்திருப்பான். அப்படி இருந்தும் தம்பதிகளுக்குள் அடிக்கடி ஒற்றுமையின்மையும் சண்டை சச்சரவுகளும் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். கடைசியில் மனைவி சொல்வது செய்வது சரி என்று தோன்றி அவளுடன் சமாதானமாகி விடுவான். இவன் குழந்தைகள் வகையில் மிகவும் அதிர்ஷ்டக்காரன். திறமைமிக்க, மரியாதையுள்ள இவனது குழந்தைகள் குடும்பத்திற்கு பெருமையைத் தேடித் தருவார்கள். இரண்டு குழந்தைகளுக்கு மேல் இவனுக்கு இருக்காது.

**ஆரோக்கியம்**

வெளித் தோற்றத்தில் ஆஜானுபாகு போல் தோற்றமளித்தாலும், ஆரோக்யக் குறைவு உள்ளவன். இவர்கள், ஒரு குறிப்பிட்ட குணமாகாத நோய் ஒன்றினால் எளிதில் பீடிக்கப்படுவர்கள். கடுமையான கக்குவான், இருமல், பிராங்கைடிஸ், மூச்சு விடுவதில் சிரமம் போன்றவற்றில் அது ஒன்றாக இருக்கும்.

இதைத்தவிர இவன் ஜாதகத்தில் சந்திரன் அல்லது சுக்கிரன் பாபக்கிரகங்களால் பாதிக்கப்பட்டிருந்தால் இவர்களுக்கு ஹார்ட் அட்டாக், மலேரியா அல்லது ஈசனோபிலியா போன்ற நோய்களும் தாக்கக்கூடும். இவன் கடமை உணர்வு கொண்டவன். சீரியஸ்ஸான நோய் உள்ள நிலையிலும் ஒரு வேலையை முடிக்க வேண்டும் எனக் கருதினால் அந்த வேலையை, உடல் தொந்தரவை சட்டை செய்யாமல் செய்ய ஆரம்பித்து விடுவான். தொடைகள் உபாதைக்கு உள்ளாவான். ரூமாடிக் நோய் ஏற்படக் கூடிய வாய்ப்பு மிக அதிகமிருப்பதால் இவன் தனது சுவாசப்பையைப் பற்றி அதிக அக்கறை எடுத்துக்கொண்டு அதை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

## பொதுப்பலன் - பெண்கள்

### தோற்றம்

வனப்பு மிகுந்த பேரழகியாக இருப்பாள். உருண்ட விழிகள், காந்தத்தைப் போல பிறரைக் கவரும் வண்ணம் அமைந்திருக்கும். கனிவான பார்வை கொண்டவள், நீண்ட நாசியும், சிவப்பு நிறமும், பிரவுன் கலர் தலைமுடியும் கொண்ட இவள் ஆண்களின் கனவுக்கன்னியாக இருப்பாள்.

### குணங்கள்

இவள் அறிவாளி. உடலில் சக்தியும், தெம்பும், உற்சாகமும், பெண்மையும், உயிர் சக்தியும், நிறைந்தவள். அதனால் இவள் எதையும் அடையவேண்டும் என்ற ஆர்வமும், பேராசையும் உடையவைகளாயிருப்பாள். என்றாலும் இவள் பிடிவாதக்காரி அல்லது கஷ்டமான தசைகளிலும் கூட இவள் அவற்றை எதிர்கொண்டு வெற்றியே காண்பாள். எதையும் சாதக பாதகங்களை அலசி ஆராய்ந்து நன்றாக யோசித்தே கடைசி முடிவை எடுப்பாள். தான் சரியென்று கருதுவதையே பேசுவாள். பிறர் இவள் கருத்தை ஜீரணிப்பதற்குக் கஷ்டப்படுவார்கள். நாய், பூனை, போன்ற சிறு பிராணிகளை விரும்பி வளர்ப்பாள். அல்லது அவை மீது பிரியமாக இருப்பாள். இவள் செய்யும் பிராமிஸ்கள் பூர்த்தி அடைவதில்லை. தன் பெற்றோர், சகோதரர்கள், மீது கசப்பும் வெறுப்பும் ஏற்படும். உறவினர்களுக்கு தலைவியாக இருப்பாள். தீர்மானமான குணமும், உண்மையும் உடையவளாக இருப்பாள்.

### கல்வியும் - தொழிலும்

பூராட நட்சத்திரப் பெண்கள் நல்லகல்வி அறிவு பெற்றவர்கள், ஒரு டீச்சராகவோ, வங்கியிலோ உத்தியோகம் பார்ப்பாள். மதஸ்தாபனத்திலும் வேலை அமையலாம். புதன், சந்திரனுடன் ஒரே இடத்தில் இருந்தால் எழுத்தாளியாகவோ, புத்தகம் பதிப்பிக்கும் தொழிலிலோ இருப்பாள்.

**குடும்ப வாழ்க்கை**

வீட்டு வேலைகளில் திரமைசாலி. வயது ஏற ஏற தன் கணவனின் மீது அன்பையும் பாசத்தையும் வளர்த்துக் கொள்வாள். இதனால் இவள் வாழ்க்கையில், மேலும் மேலும் சந்தோஷம் நிரம்பி வழியும், குழந்தைகளிடமிருந்து பெறும் ஆதரவும் அன்பும் குறிப்பிட்ட அளவைத் தாண்டாது.

**ஆரோக்கியம்**

உடல் ஆரோக்கியம் நல்ல நிலையிலேயே இருக்கும். ஆண்களுக்கு சொல்லிய வியாதிகளைத் தவிர இவர்களுக்கு அடிக்கடி கருப்பை சம்பந்தப்பட்ட கோளாறுகளும், தொடைகளில் வலி அல்லது வேறு உபாதைகளும் ஏற்படும்.

**பூராட நட்சத்திரத்தில் இருந்த கிரகங்களை மற்ற கிரகங்கள் பார்த்த பலன்**

இதன் பலன்களுக்கு மூல நட்சத்திரத்திற்கு இந்த பகுதியில் சொன்ன பலன் கள் பொருந்தும்.

**பூராட நட்சத்திர பாதங்களில் இருந்த கிரகங்களின் பலன்கள்**

**பூராடம் 1ம்பாதத்தில் சூரியன் இருந்த பலன்**

உயர்ந்த அந்தஸ்து, அதிகாரபலம், வசதிகள் எல்லாம் பெறுவான். இவன் இரட்டை வாழ்க்கை உடையவன். ஒன்று லௌகீக உலகம் மற்றொன்று ஆன்மீக உலகம். இரண்டிலும் நீக்கமற வாழ்ந்து வருவான். தனது 21வது வயதிலே உத்தியோகம் பார்க்க ஆரம்பித்து விடுவான். பிஸினஸ்ஸில் நுழைந்தால் தன் தந்தை செய்து வந்து பிஸினஸ்ஸை தொடர்ந்து செய்வான்.

**பூராடம் 1ம் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்**

இதில் செவ்வாயும், சூரியனும் கூட இருந்தால் ஜாதகன் ருமாடிக் நோயினால் கஷ்டப்படுவான். தாய்க்கும் கண்டம்

ஏற்படும். இவனுடைய 13 வயதில் ஒரு கண்டம் ஏற்படும். இவன் உடல் ஆரோக்கியம் மிக மோசமாக பாதிக்கும். அந்த சமயத்தில் உடனடியாக கவனித்து, தகுந்த மருத்துவம் செய்யாவிடில் இவன் உயிருக்கு ஆபத்து உண்டாகும்.

### பூராடம் 1ம் பாதத்தில் செவ்வாய் இருந்த பலன்

சனி அனுஷ நக்ஷத்திரத்திலும், குரு திருவோண நக்ஷத்திரத்திலும் செவ்வாய் பூராடம் முதல் பாதத்திலும் இருந்தால் இவனுடைய சகோதரர்களில் ஒருவன் இளவயதில் இறந்து விடுவான். இங்கு செவ்வாய் மட்டும், ஒருவனை தைரியவானாகவும் ஆனால் அன்பில்லாதவனாகவும் செய்து விடும். குருவுடன் சம்பந்தப்பட்டிருந்தால் அரசாங்கத்தில் நிர்வாகத் துறையில் உத்தியோகம் பார்ப்பான்.

### பூராடம் 1ம் பாதத்தில் புதன் இருந்த பலன்

சனியுடன் உள்ள புதன் பொருட்களை வாங்கி விற்கும் தொழிலைத் தருவான். 21 வயதிலிருந்து நல்ல காலம் தொடங்கும். சுக்கிரனால் பார்க்கப்பட்டால் வெளி நாடுகளுக்குச் சென்று ஏராளமான பொருளை சம்பாதிப்பான். இந்த அமைப்பில் சந்திரனும் சேர்ந்தால் ஜாதகன் தாயகம் திரும்பி வரமாட்டான். வெளிநாட்டிலேயே செட்டில் ஆகி விடுவான்.

### பூராடம் 1ம் பாதத்தில் குரு இருந்த பலன்

இந்த குருவுடன் சனியும் சூரியனும் இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகனின் தந்தைக்கு அற்பாயுள். இரண்டு சகோதரிகளும், அனேக சகோதரர்களும் உடையவன். இதில் ஒரு சகோதரி இளம் வயதிலேயே இறந்து விடுவாள்.

### பூராடம் 1ம் பாதத்தில் சுக்கிரன் இருந்த பலன்

இவனுடன் ராகு இருந்தால் ஜாதகன் பெண் குழந்தைகள் மட்டுமே உடையவன். பொதுவாக இதில் உள்ள சுக்கிரனால் ஜாதகனுக்கு இளம் வயதிலேயே திருமணம்

நடந்து விடும். பெண்களானால் 18 வயது முடியும் முன்னரே கல்யாணம் நடந்துவிடும். ஆனால் அப்படி நடந்த கல்யாணம் நிலைத்து நிற்பதில்லை.

**பூராடம் 1ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்**

இந்த சனியை குரு சேர்ந்திருந்தாலோ அல்லது பார்த்திருந்தாலோ ஜாதகன் அரசாள்பவனாகவோ அல்லது அரசாங்கத்தில் முக்கியமான பதவியிலோ இருப்பான். பிறருடன் உறவாடுவதில் சமர்த்தன். மத நோக்கு உடையவனாக இருப்பான்.

**பூராடம் 1ம் பாதத்தில் உள்ள ராகு இருந்த பலன்**

செவ்வாய், சுக்கிரன், சனி மூவரும் பூச நட்சத்திரத்தில் இருக்கும் போது ராகு இங்கு இருந்தால், ஜாதகன் வாழ்வில் பல துயரங்களும் இன்னல்களும் ஏற்படும். அல்சர் வந்து அவஸ்தைப் படுவான். தன்னுடைய விதவை சகோதரியைக் காப்பாற்றும் பொறுப்பு இவனை வந்தடையும். மனநிலை பாதிக்கப்பட்ட சகோதரனையும், நோய் வாய்ப்பட்ட தாயையும் காப்பாற்றும் பொறுப்பையும் இவன் ஏற்றுக் கொள்வான்.

**பூராடம் 1ம் பாதத்தில் கேது இருந்த பலன்**

இந்த கேதுவுடன் லக்னமும் இதில் அமைந்தால் ருமாடிக் நோய்கள் உண்டாகும். கணிசமான செல்வத்தை சம்பாதித்து சேமித்து வைப்பான். குடும்பத்தில் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகம் இருக்கும்.

**பூராடம் 2ம் பாதத்தில் சூரியன் இருந்த பலன்**

செல்வந்தனாய் இருப்பதுடன் பலரும் மதிக்க வாழ்வான். இவனுடைய பிடிவாத குணம் பலருடைய விரோதத்தை சம்பாதித்துத் தரும். இவன் வெளியாட்களுடன் தொடர்பு கொள்ளும் போது, மிக மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனெனில் அவர்களால் ஆபத்து ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

### பூராடம் 2ம் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்

இவன் 9 மாதக் குழந்தையாக இருக்கும்போது தந்தைக்கு கண்டம் ஏற்படும். ஜாதகன் அழகான அவயவங்களையும், ஒளி படைத்த கண்களையும் உடையவன். பர்ஸனாலிட்டியை பொறுத்தவரை குடும்பத்தில் ஒரு முத்தாக திகழ்வான். சாஸ்த்திரங்களை கற்ற பண்டிதனாக இருப்பான். ஏழைகளுக்கு உணவளித்து, தேவை உள்ளவர்களுக்கு உதவியும் செய்வான்.

### பூராடம் 2ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்

இந்த செவ்வாயை குரு பார்த்தால் ஜாதகனுக்கு சந்தோஷமும் மனைவியும் கிடைப்பது அரிது. கவலை எப்போதும் மனதை வாட்டிக்கொண்டிருக்கும். சிலருக்கு குறைந்த அளவில் மன நோய்கள் பீடிக்கும். இவனுடன் சனி சேர்ந்திருந்தால் இவனுடைய குடும்பத்தில் ஏற்படும் இன்னல்களுக்கும் இவனே காரணமாய் இருப்பான்.

### பூராடம் 2ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்

இவன் அரசாங்க உத்தியோகத்தில் இருப்பான். அரசாள்பவருக்கு ஆலோசனை சொல்பவனாக முக்கிய பதவியில் இருப்பான். தனிப்பட்ட தொழில்நடத்துபவனாக இருந்தால் சட்ட நுணுக்கம் தெரிந்தவன் அல்லது பல ஸ்தாபனங்களுக்குக் கணக்கு வழக்கு பார்த்துக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றிருப்பான். அல்லது சார்ட்டர்ட் அக்கவுண்டண்டாக இருப்பான்.

### பூராடம் 2ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்

இந்த குருவை சுப கிரகங்கள் பார்த்து லக்னம் ரோகிணியில் இருந்தால் ஜாதகன் புண்ணிய ஸ்தல யாத்திரை செய்யும் போது மரணமடைவான். சந்திரன் இந்த குருவை பார்த்தால் புனித நீராடும் போது தண்ணீரில் மூழ்கி மரணமடைவான்.

**பூராடம் 2ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

இந்த சுக்கிரனுடன், சனி, சூரியன், செவ்வாய் மூவரும் சேர்ந்திருந்தால் இவன் தந்தையை பார்க்க மாட்டான். இவனுக்கு சகோதரி கிடையாது. அனேகமாக பெற்றோருக்கு ஒரே பிள்ளையாக இருப்பான். கல்யாணம் கூட சிறுவயதிலே நடந்து விடும். குரு, சுக்கிரனின் எதிரியாக இருந்தாலும் கூட, இவனுடன் சேர்ந்தால் கல்யாணம் நிலைபெற்றும் சந்தோஷத்துடனும் இருக்கும்.

**பூராடம் 2ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்**

நடுத்தரக் கல்வியைப் பெற்றவன். இவனுக்கு சகோதரர்கள் இருக்க மாட்டார்கள். உதவி செய்பவர்கள் யாருமில்லை. இவனுடைய சினேகிதர்கள் இவனை ஏமாற்றுவார்கள். லக்னமும் இதில் அமைந்தால் ஜாதகன் தன் 10 வயது வரை மனநோயும், உடல் நோயும் பீடித்தவனாக இருப்பான். தலையில் ஏற்பட்ட காயத்தின் தழும்பு பிரதானமாகத் தெரியும்.

**பூராடம் 2ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்**

ராகு, செவ்வாய், சனி மூவரும் இங்கு இருந்து, லக்னமும் அதில் அமைந்தால் ஜாதகன் நிச்சயமாய், விரை வீக்கத்தாலும், மூத்திரப்பை வியாதியாலும் கஷ்டப்படுவான்.

**பூராடம் 2ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்**

இந்த கேதுவுடன் குருவும் இருந்து, புதன் மூலம் அல்லது பூராடத்தில் இருந்தால், ஜாதகன் கூர்ந்த மதிபடைத்த அறிவாளி, பெரியவர்களிடம் மரியாதை உள்ளவன். 5 சகோதரர்களும், 3 சகோதரிகளும் உடையவன்.

இதில் குரு மட்டும் தனியாக யாருடைய பார்வையும் பெறாமல் இருந்தால் ஜாதகன் இரும்பு மெஷின்கள் செய்யும் தொழிற் சாலையில் பணி புரிவான்.

**பூராடம் 3ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்**

இவன் தைரியம் மிக்கவன். இந்த சூரியனை குரு பார்த்தால் இண்டஸ்ட்ரியல் துறையில் மிக உன்னத நிலையை அடைவான். அதே சமயத்தில் சைட் பிஸினஸூம் செய்வான். 35 லிருந்து 44 வது வயது வரையில் இவனுக்கு உன்னதமான காலமாகும்.

**பூராடம் 3ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்**

தாய் மாமன் உயிருக்கு ஆபத்து உண்டாகும். எல்லோருடனும் நல்ல முறையில் பழகுவான். அமைதியும் நிம்மதியான மனமும் கொண்டவன். உயர்ந்த கௌரவத்தைப் பெறுவான். நல்ல நிலையில் வாழ்வான். குறைந்த பக்ஷம் 2 குழந்தைகளாவது இருக்கும். 40 வயது வரை இவனிடம் வேண்டிய அளவு பணமிருக்கும். அதன் பிறகு எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டு பெரும்பாலான செல்வம் அழிந்து விடும். ஆதலால் இவன் தன் பிற்கால வயோதிக காலத்துக்காக பொருளை சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**பூராடம் 3ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்**

இந்த செவ்வாயை குரு பாத்திருந்தால் இவனுக்கு தீர்க்காயுள் உண்டாகும். திருத்தமான, தீர்மானமான குணம் கொண்டவன். உறவினர்களால் பெரிதும் விரும்பப்படுபவன். இவன் கீழ்மட்டத்திலிருந்து, படிப்படியாக மேல் நிலைக்கு உயருவான்.

**பூராடம் 3ல் உள்ள புதன் தரும் பலன்**

புதன் பூராடம் 1ல் கொடுக்கும் பலனையே இதற்கும் அனுபவிப்பார்கள். ஜாதகனுக்கு அனேக பெண்களிடம் தொடர்பு இருக்கும். அவர்களால் இவனது செல்வம் அழிந்து போண்டி ஆகிவிடுவான்.

**பூராடம் 3ல் உள்ள சுக்கிரன் தரும் பலன்**

இந்தச் சுக்கிரனை, சந்திரன் பார்த்தால், இவன் சிறந்த டாக்டராக ஆவான். நடுத்தரமான உயரம் உடையவன் இவன். பெண்கள் பெரும்பாலும் உத்தியோகத்தில் இருக்க மாட்டார்கள். இவர்கள் உயர் கல்வியைப் பெற்றிருந்தாலும் உத்தியோகமோ சுயசம்பாத்தியமோ இல்லாதவர்களாகவே இருப்பார்கள். ஆனால் இந்த பலன், சுக்கிரனை வேறு கிரகங்கள் எதுவும் பாராமல் இருந்தால்தான் நடக்கும்.

**பூராடம் 3ல் உள்ள சனி தரும் பலன்**

இந்தச்சனியை, செவ்வாய் பார்த்தால் ருமாடிக் நோய்கள் உண்டாகும். புதனுடன் இருந்தால் கம்யூனிகேஷன் டிபார்ட்மெண்டில் வேலை புரிவான். சந்தோஷமான வாழ்க்கை அமையும்.

**பூராடம் 3ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்**

அனாவசியமாக பிறர் விஷயங்களில் தலையிட்டு மூக்கை உடைத்துக்கொள்வான். அடிக்கடி துன்பங்களையும் தேவையற்ற பிரச்சினைகளையும் வரவழைத்துக் கொள்வான். அதனால் பல இக்கட்டுக்களை சமாளிக்க வேண்டியிருக்கும்.

**சுக்கிரன் 3ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்**

சுக்கிரன் சதய நட்சத்திரத்தில் இருந்தால், மனைவி மூலம் சொத்து சுகம் செல்வம் எல்லாம் சேரும். நல்ல டாக்டராக பிராக்டீஸ் நடத்துவான். 55 வயதுக்கு மேல் வெளிநாட்டுக்குப் போவான்.

**பூராடம் 4ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்**

ஜாதகனுக்கே கண்டம் உண்டு. இதில் சுபகிரகமும் கூட இருந்தால் தீர்க்காயுள் ஏற்படும். எப்படி இருந்த போதிலும் இவனுடைய முதல் வயதில் பேய், பிசாசு, காற்று, கருப்பு இவைகளால் பாதிக்கப்பட்டு உடல் நலம் கெடும்.

கிட்டத்தட்ட மரணத்துக்கு ஒப்பான நிலை ஏற்படும். இவன் ஆஷாட மாதத்தில் பஞ்சமி திதியில் பௌர்ணமி காலத்தில் வெள்ளிக்கிழமை இரவு ஆயில்ய நக்ஷத்திரத்தில் இறப்பான் என்று பழங்கால ஜோதிட ரிஷிகள் கூறியிருக்கிறார்கள்.

## பூராடம் 4ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்

தைரியம் கொண்டவன், அரசியலில் உயர்ந்த பொஸிஷனைப் பெறுவான். அனேக எதிரிகளை உடையவன். 52 வயது நடக்கையில் ஆயுதங்களால் கண்டம் ஏற்படும். குறைவான சந்ததியை உடையவன்.

## பூராடம் 4ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்

இந்தப் புதன், குருவுடன் சேர்ந்திருந்தால் ஜாதகன், சாதாரணமாக கவர்ண்மெண்ட் ஆபீசராக இருப்பான். அரசாங்க அலுவல் காரணமாக உலகம் முழுதும் பிரயாணம் செய்வான். தன்னுடைய அலுவலில் தன் 45 வயதில் சருக்கலை சந்திப்பான். 52வது வயதிலும் அதே போன்று பதவி இறக்கம் ஏற்படும்.

## பூராடம் 4ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்

பெருந்தன்மையான தாராள மனப்பான்மை உடையவன். மனதில் உள்ளதை ஒளிக்காமல் வெளிப்படையாகப் பேசும் சுபாவம் உள்ளவன், பணக்காரனாகவும், இரக்க குணம் உள்ளவனாகவும், பிறரிடம் அன்புள்ளவனாகவுமிருப்பான். தேவை உள்ள மனிதர்களை ஆதரித்து உதவுவான். தத்துவ மனம் கொண்டவன். பணம் பெறுவதற்காக தத்துவ உபதேசம் செய்யமாட்டான்.

## பூராடம் 4ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

இந்த சனி, செவ்வாயுடன் இருந்தால் கல்வியிலும், உத்தியோகத்திலும் தடைகள் ஏற்படும். நடுநடுவே

பிஸினஸ்ஸிலும் ஈடுபடுவான். 45 வயதிற்குப் பின்பே நிரந்தரமான நிலை ஏற்படும். பித்தப் பையில் கோளாறு ஏற்படும். அல்லது ருமாடிஸம் ஏற்படும்.

**பூராடம் 4ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்**

ஜாதகன் மிகவும் அழகுள்ளவன். செல்வாக்கு உள்ளவன். நல்ல குணமும், தருமகுணமும் உள்ளவன். நம்பிக்கைக்கு பாத்திரமானவன். கலை ஞானம் உள்ளவன். வெளித் தோற்றத்திற்கு பலசாலியாக தோற்றமளித்தாலும், உள்ளுக்குள் பலவீனமான ஆரோக்யத்தை உடையவன்.

**பூராடம் 4ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்**

அரசியல்வாதிகளுடன் நெருங்கிய பழக்கம் உள்ளவன். இந்தப் பழக்கத்தால் அதிகார பலமும், அத்தாரிடியும் பெறுவான். ஆனால் பணம் கிடைக்காது. இவன் அதிகம் படிக்காதவன். ஆனால் அதிகார பலத்துக்கு ஆசைப்படுவான். ஆடம்பரச் செலவுகள் செய்து தன்னை பிரபலமாகக் காட்டிக்கொள்வான். அதற்காகத் தான் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை விரயம் செய்வான். ஆனால் இதற்காகப் பதிலுக்கு எதையும் பெறமாட்டான்.

# அத்தியாயம் - 29

## *மகர லக்னத்தில் பிறந்தவர்கள் தன்மைகள்*

*(உத்திராடம் 2, 3, 4ம் பாதங்கள், திருவோணம், மற்றும் அவிட்டம் முதல் இரண்டு பாதம் முடிய)*

நிலை யின்றி திரிந்து வாழும் நிர்ணய முனை யனாகும்
கலை பல நன்று கற்கும் கருமமே கருதிச் செய்வான்
அலை மன மவுன முள்ளான் வழக்கறிந்துரைக்க வல்லான்
அலை ஏழு கடலும் கீர்த்தி வாய்த்திடும் மகரத்தானே. 185

ஒரு இடத்திலும் நிலையாமல் அலைவான். இரக்கமற்றவன். பல கலை கற்கும் கல்வியாளன். தன் காரியத்திலேயே கருத்தாய் இருக்கும் சுய காரியப்புலி. நல்ல வழக்கறிஞன். உலகெல்லாம் புகழும் கீர்த்தியுடையவன். தியாக புத்தியுடையவன். தான் தலைவன் என்ற நினைப்பை மக்களிடையே ஏற்படுத்துவதில் முனைப்பு உண்டு. அவன் அலைபாயும் மனத்தையும் மௌனமாக இருப்பவனு மாவான்.

இது 10வது ராசி, சர ராசி, பஞ்ச பூதத்தில் மண்ணைக் குறிக்கும் பெண் ராசி. செயல் திறம் அனுபவ ஞானம் இவற்றைக் குறிக்கும்.

குச்சி போன்ற சதைப் பற்றில்லாத நெட்டையான உருவம். நடை ஓட்டமாகவே இருக்கும். கன்னம் ஒட்டி கண் உட்குழிந்த தோற்றம், எளிதில் பிறரை நம்பாதவன். அழகிய மனைவியை உடையவன். பாலுணர்வு நிதானமாகத்தான் இருக்கும்.

**பெண்**

இந்தப் பெண் சிறந்த நிர்வாகி. சிறிது இரக்கமற்ற சுபாவமும் பழிவாங்கும் குணமும் உண்டு.

இந்த ராசிக்கு 7 சந்திரனுடையது. இந்த ராசிக்கு ஆண்களுக்கு யாராவது பெண் துணை இருந்துகொண்டே இருக்கும்.

மண்ணெண்ணை, எரிவாயு நிலக்கரி சுரங்கம் இரும்பு ஜவுளி பெண்கள் சம்பந்தமான பொருள் வியாபாரம், வழக்குரைக்கும் அட்வகேட் தொழிலுடையவனாகவும் இருப்பான். பொறியாளன். இன்ஷ்யூரன்ஸ் துறை முதலியவற்றிலும் தொழிலமையலாம்.

**சத்தியாசாரியார் மதப்படி மகர லக்கனத் தன்மை**

சிறிய திரண்டு நீண்ட முகம், கை,கால்கள் நீளமாக உடையவன். வாத தேஹமுள்ளவன். மான் போன்ற முகம், நிலையற்ற அலையும் மனமுள்ளவன். சில சமயம் சிறை வாசமடைபவன். தாழ்மையான குடும்பத்தையுடையவன். அதிகம் பொருளில்லாதவன், கஞ்சன்,ஸ்திரீ சந்ததிகளை உடையவன். பந்துக்களில்லாதவன், பல உடன் பிறப்புக்களை உடையவன். தன் திறமையால் பெரும் புள்ளிகளிடம் பொருள் சம்பாதிப்பவன்.

பட்டினி கிடந்து விரதமிருப்பவன். தன் அந்தஸ்துக்குக் குறைந்த மனைவியை அடைந்து அவளிடம் அதிக பிரியமுடன் வாழ்வான். பிறரை அதிகம் விரோதித்துக் கொள்பவன். சிறிது பயம் உள்ளவன். முழங்கால்களில் பலமில்லாதவன், நோயாளி.

ஆயுதம், அரசன், விஷம், கீழே விழல், பித்தாதிக்கம், அஜீர்ணம், வழிதவறல் போன்ற வகையில் ஏதாவதொன்றால் மரணம் நேரலாம்.

**பிருகு சம்மிதைப்படி மகர லக்ன பலன்**

இவன் உயர்ந்த நெட்டையான உடல் வாகுள்ளவன். பெரிய கண்கள் உள்ளவன். உக்கிரமான கோப சுபாவமுள்ளவன். சோம்பேறி, தன்மான குணமுள்ளவன். கபவாத சரீரமுள்ளவன். இவன் தன் மதம் சாதிக்கு புறம்பான காரியங்களை சிறிதும் வெட்கமின்றி செய்பவன். பயந்தாங்கொள்ளி, செலவாளி.

அதிக மக்கட் செல்வமுடையவன். புலவர்களில் சிங்கார ரசகவிதைகளிலும் பெண்களிடத்திலும் அதிகம் ஆசை உள்ளவன்.

இவன் வாழ்க்கையில் இளமையில் சுகப்படுபவன். இடைப்பகுதியில் துக்கம் கஷ்டங்களை அனுபவிப்பவன். 32 வயதுக்கு மேல் கடைசி காலம் வரை சுகமாக வாழ்பவன். 32, 33 வயதுக்கு மேல் பாக்யம் ஏற்படும் பூரணாயுளுடன் வாழ்பவன்.

இந்த லக்னத்திற்கு சுக்கிரன் புதன் சேர்க்கை நன்மை தரும். சந்திரன், செவ்வாய், குரு இவர்களுக்குப் பொல்லாதவர்கள்.

**பிற நூல்கள்**

இவர்கள் திரிலோக சஞ்சாரிகள். அலைந்துகொண்டே இருப்பர். சஞ்சல புத்தியுள்ளவர். பல துறைக்கல்வியும் சாதிக்கும் திறமையும் பெற்றவர். சினம் கொள்பவர், கர்வி, வாய்சாலகத் துஷ்டர் துர்த்தர் இவரே. பிருகு முனிவர் கருத்துப்படி இவர் படிப்பில் மந்தர். கஞ்சத்தனம் மிகுந்த ஈயாப்பதர், தான் பிறரை நம்பாதவர், சந்ததி விருத்தி உண்டு.

இணைந்த குச்சிபோல் எலும்புக் கூடிய சரீரமுள்ளவர். செம்பட்டை மயிர், பலகைப் பல், தொங்கும் கன்னம் உள்ளவர்கள். ஒடிசலான வயதுக்கதிகமான கிழத்தோற்றம் உள்ளவர். முகத்தில் மச்சம் உண்டு.

எல்லாம் கணக்காகவே இருப்பார்கள். ஒரு பலன் கருதியே இவர் பிறருக்கு உதவுவார். அரசு தரப்பு வேலைகள்

உண்டு. மிகவும் சந்தேகப் பிராணி. நண்பர்களுக்குத் துரோகம் பண்ணுபவர். சிடுமூஞ்சி. ஆரோக்கியக்குறை ஏதாவது இருந்து கொண்டிருக்கும். சனி நன்கு அமைந்தால் சிந்தனைத் தெளிவு தியாக புத்தி எல்லாம் உண்டு. தீர்க்க தரிசியாகவும் இருப்பர்.

அரசாங்க வேலை, தொழிற்சாலை, எண்ணை வள வாரியம், விவசாயம், தோட்ட வேலை முதலிய தொழில்கள் ஏற்படலாம்.

மூட்டு வலி, ரோமாட்டிசம் (கீல்வாதம்) காலை இழுத்து நடத்தல் போன்ற நோய்கள் இந்த லக்கினத்திற்கு ஏற்படலாம்.

3, 4, 5, 7, 8, 10, 12, 32, 37 ஆவது வயதுகளில் சுரம் மிகுந்த சன்னி, வாத பித்த ரோகங்களால் பாதிக்கப்படுபவர்கள். இதற்கு லக்னாதிபதி அட்டமாதிபதி ஆயுள்காரகன் இவர்கள் வலுத்தால் 80 வயதுவரை இவர்கள் வாழ்வார்கள்.

**இந்த லக்னத்திற்கு யோகம் தருபவர்கள்**

முழுவதும் பலன் தருபவர் - சுக்கிரன் ஒருவன் மட்டும்

சாதாரண சிறிது பலன் தருபவர் -

சுக்கிரன் + செவ்வாய்

சுக்கிரன் + சந்திரன்

புதன் + சனி

புதன் + செவ்வாய்

புதன் + சந்திரன்

**கோள்கள்**

சூரியன் - அஷ்டமாதிபன் - நடுநிலை உள்ளவன். சூரியனுக்கு அஷ்டமாதிபதி தோஷம் இல்லை என்பது. நூல்களின் கொள்கை.

சந்திரன் - 7ம் அதிபன். காரகன் சுபத்தை செய்பவன்

செவ்வாய் - 4, 11க்குடைய வகையில் அகாரகன். அதாவது கெட்டவன்

புதன் 6, 9க்குடையவன். பாக்கியாதியாயினும் 6க்குடையவன் என்ற வகையில் அசுபனே.

குரு 3, 12க்குடைய வகையில் அகாரகன். அதாவது அசுபன்.

சுக்கிரன் 5, 10க்குடைய வகையில் பூர்ண (யோக) காரகன்.

சனி - தன லக்கினாதிபதி என்ற வகையில் இவனும் காரகன் என்ற வகையில் நல்லவனே.

ஏற்றுக் கொள்ளப்பட்டபடி

பாபர் - செவ்வாய், சந்திரன், குரு

சுபர் - புதன், சுக்கிரன்

கிரக சேர்க்கையால் பலன் தருபவர்

சுக்கிரன் + புதன்

சுக்கிரன் யோகக்காரகன்

பாதகன் - செவ்வாய்

மாரகர் - சந்திரன் சூரியன்

**குறிப்பு:** 7,8க்குடைய வகையில் சந்திர சூரியர் மாரகர்கள். 11க்குடையவர் என்ற வகையில் 11ம் அதிபன் செவ்வாய் பாதகாதிபன்

9க்குடைய வகையில் புதன் சுபன். இவனே முழு யோகக்காரகன்.

இந்த லக்னத்திற்கு

அதிர்ஷ்ட நாட்கள் - திங்கள், வியாழன், வெள்ளி

அதிர்ஷ்ட நிறம் - நீலம், வெள்ளை, மஞ்சள்

அதிர்ஷ்ட ரத்னம் - நீலம்

இத்துடன் இரண்டாம் பாகம் முற்றும்.